சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரி)

பாகம்-2

வெளியீடு
சிவாசார்யர் அறக்கட்டளை
207/101, தம்பு செட்டி தெரு, சென்னை-1

உ

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரீ)

பாகம்-2

2009ம் ஆண்டின்
சைவாகம சிறப்புச் சொற்பொழிவுகள்

வெளியீடு
சிவாசார்யர் அறக்கட்டளை
சென்னை -1

தொகுப்பாசிரியர்-
ஆகமப்ரவீணர்.வியாகரணசிரோமணி
சைவாகமக்ஞசூடாமணி. சிவாகம அருட்செல்வர்

சிவஸ்ரீ வி.சோம சேகர சிவாசார்யர்

சைவாகமப் பேராசிரியர், முதல்வர்
சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை-1

சென்னை 1 தம்புசெட்டித்தெரு புது எண் 207ல் இயங்கிவரும் சைவாகம கலாசார வித்யாகேந்திரத்தில் சிவாசார்யர் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசார்யர் பவுண்டேஷன் இணைந்து மாதந்தோரும் நடத்திவந்த சிவாகம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் 2009ல் ஆண்டில் ஆகம அறிஞர்களால் அளிக்கப் பட்ட சிவாகம கட்டுரைகளைத் தொகுத்து லோகோபகாரகமாய் சென்னையில் 03.01.2010ல் நடத்தப்பட்ட சிவாகமவித்வத்சதஸ் மற்றும் சிவாகம கலாசாரதீபிகோத்ஸவத்தில் கட்டுரையாளர்களுக்கு சிவாகம வாசஸ்பதி எனும் விருதளித்துப் பாராட்டி இந்நூல் வெளியிடப்பட்டது.

CENTRE FOR SHAIVA STUDIES

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர்	:	ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரீ.(பாகம் 2) (சிவாகம கட்டுரைத் திரட்டு பாகம் 2)
நூலின் மொழி	:	தமிழ் மற்றும் சமஸ்கிருதம்
நூலின் எழுத்து	:	தமிழ் மற்றும் தேவநாகரி
நூலின் அளவு	:	8 ½ x 5 ¾
அச்சிட்டுள்ள பரப்பளவு	:	
நூலின் எண்ணிக்கை	:	100
வெளியீடு வரிசை எண்	:	4
நூலின் பதிப்பு எண்	:	முதற்பதிப்பு
தொகுப்பு ஆசிரியர் நூல் வடிவமைப்பு	:	சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யார்
நூல் உரிமை	:	சிவஸ்ரீ டி. எஸ். காளிதாஸ் சிவாசார்யார்
நூலின் பக்கங்கள்	:	138 பக்கங்கள்
வெளியீட்டு நாள்	:	03.01.2010
அச்சிட்டோர்	:	சௌமியா ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 14
கணிணி பதிவு அச்சகம்	:	ராஜம்ஸ் டிஜிட்டல் , சென்னை – 14
வெளியீடு	:	மேதா சக்ரிணீ கோஷ்டம்
தொகுத்த நிறுவனம்	:	சிவாசார்யர் அறக்கட்டளை
வெளியிடுவோர்	:	சிவஸ்ரீ தி.ஸா. ஸ்வாமி சதாசிவோம் சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ் சிவாசார்யர் சிவஸ்ரீ தி.ஸா. ஷண்முக சிவாசார்யர்
கிடைக்குமிடம்	:	சைவாகம கலாசார வித்யாகேந்திரம் 2வது மாடி, 207, தம்பு செட்டி தெரு, சென்னை – 600 001.
விலை	:	ரூ.200/-

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்

டாக்டர் சிவஸ்ரீ தி.ஷ. ஸாம்பமூர்த்தி சிவாசார்யர்

பொருளடக்கம்

1.	ஆசியுரை	1
2.	வாழ்த்துரை	2
3.	முன்னுரை	3
4.	மதிப்புரை	5
5.	கட்டுரையாளர்கள் அறிமுகம்	7
6.	2009 ஆம் ஆண்டு நிகழ்வுகள்	9
7.	லிங்க ஸ்தாபன ப்ரதிஷ்ட விவரணம்	11
8.	திரிபதார்த்த லக்ஷண விவரணம்	23
9.	சைவ சித்தாந்த முக்தி நிலை	47
10.	பிம்ப ஸம்ஸ்காரம்	77
11.	விமானாகிருதி விவரணம்	81
12.	சிவலிங்க தத்வ பாவனா விளக்கம்	113

உ
திருச்சிற்றம்பலம்

போன் : 04294-242056
செல் : 98430 42056
94434 52241

வேத சிவாகம சிரோமணி, வேள்வித்திலகம் திருமுறைப் பேரொளி

ஸ்ரீலஸ்ரீ ச. நடராஜ சுவாமிகள்

ஸ்ரீ மாணிக்கவாசகர் மடாலயம், கூனம்பட்டி ஆதீனம்
பல்லகவுண்டன்பாளையம்,(அ.நி), விஜயமங்கலம் 638 056, திருப்பூமாவட்டம்.

திருமடம் தேதி : 30.12.2009

ஆசியுரை

சிவாசார்யர் அறக்கட்டளை நிறுவனர் தலைவர் சிவஸ்ரீ காளிதாஸ் சிவாசார்யர் அவர்கட்கு திருமடத்திலிருந்து எழுதிக் கொண்ட ஆசிர்வாத ஸ்ரீமுகம். மற்றும் சென்னையில் சிவாசார்யர் அறக்கட்டளை ஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் பௌன்டேஷன் சார்பில் நடத்தப்படும் சிவாகம வித்வான்களைக் கொண்டு எல்லார்க்கும் பயன்படும் வகையாக மாதந்தோறும் சொற்பொழிவுக் கருத்தரங்கம் நடத்துவது அறிந்து மகிழ்ந்தோம். சிவாகமத்திற்காகவும் சிவாசார்ய சமூகத்திற்காகவும் தன்னையே அர்பணித்துக் கொண்டவர் ஸ்ரீ சாம்ப மூர்த்தி சிவாசார்யரவர்கள். அவர்கள் விட்டுச் சென்ற பணியை சிரமேற் கொண்டு அவர்தம் வாரிசுகளான குமாரர்கள் செவ்வனே செய்து வருவதும் சிவாகம சதஸ் நடத்தி வித்வான்களைப் பாராட்டி மலர் வெளியீடு செய்வதும் மிகவும் பாராட்டிற்குரியதாகும். சிவாகம சதஸ் விழா சிறப்புடன் நிகழபெறவும் மலர் வெளியீடு சிறப்பாக அமையவும் சிவாசார்யர் குடும்பம் அவர்தம் அறக்கட்டளை மேலும் உயர்ந்து விளங்கவும் எம் ஆன்மநாயகனாகிய பரம் பொருளின் திருவருளைச் சிந்தித்து ஆசிர்வதிக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்பஅன்பு
ஆசியுடன்

(ஒப்பம்) ச. நடராஜசுவாமிகள்.

உ

வாழ்த்துரை.

யாதேவீ ஸர்வ பூதேஷு மாத்ரு ரூபேண ஸம்ஸிதா|
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:||

சென்னை தம்புசெட்டித் தெருவில், கோயில்கொண்டு எழுந்தருளியிருந்து, தன்னை நாடிவரும் பக்தர்கள் அனைவருக்கும் அருள்பாலித்துவரும், சிவனுடைய அருட் சக்தியாகிய ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்தில் நீண்டநாட்களாக, பிரதான அரச்சகராக பணியாற்றியவரும், பக்தர்கள் அனைவருக்கும் ஸ்ரீ காளிகாம்பாளுடைய அருளாசியை வாரி வழங்கியவரும், ஸ்ரீ காளிகாம்பாளிடத்தில் அபரிமிதமான பக்தி கொண்டவரும், அனைத்து பக்தர்களுடைய இதயத்திலும் நீங்காது நிலைத்திருப்பவமான சிவஸ்ரீT.S.ஸாம்ப மூர்த்தி சிவாசார்யர்அவர்களுடைய நினைவை, நிறைவேற்றும் நோக்கத்துடன் தமது தந்தையாரிடம் அளவுகடந்தபக்தியும், அன்பும் கொண்டுள்ள அவர்களுடைய ஸத்புத்திரர்களாகிய சிவஸ்ரீ T.S ஸ்வாமி ஸதாசிவோம், சிவ ஸ்ரீ T.S. காளிதாஸ சிவாசார்யர், சிவஸ்ரீ T.S. ஷண்முக சிவாசார்யர் இவர்கள், பித்ரு வாக்ய பரிபாலனம் என்றமுறையில் அறக்கட்டளைகள் நிறுவி, உள்ளனர். அதன் மூலமாக சைவாகம கலாசார வித்யா கேந்திரம் என்ற பெயரில் ஆகமம், சில்பம் இவைகளைப் பயில்விப்பதற்கு ஓர் வித்யாபீடத்தையும், அதற்கு சைவாகமங்களிலும் சில்ப சாஸ்திரங்களிலும் நல்ல புலமைவாய்ந்த வியாகரண சிரோமணி, ஆகமப் ப்ரவீணர், முதலான விருதுகளைப் பெற்ற, நல்ல புலமைவாய்ந்த வி. சோம சேகர சிவாசார்யர் அவர்களைத் தலைமை ஆசிரியராக நியமித்து, சிறப்பான முறையில் நடத்தி வருவதோடு, மாதந்தோறும் ஒரு ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணி முதல் 5 மணி வரை சைவாகமங்களில் உள்ள நுட்பமான விஷயங்களை சைவாகம விற்பன்னர்களாகிய சிவாசார்யரைக்கொண்டு விரிவுரை ஆற்றச்செய்து ஆதிசைவமாணவர்களும் ஆன்மீகத்தில் பற்றுள்ள அனைத்துமக்களும், பயனடையவேண்டும் என்ற நோக்கத்தில், அதனை மலராக வெளியிட்டு வருவது மிகவும் மகிழ்ச்சிகரமாக உள்ளது. இத்தொண்டு இடையறாது தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று, வாழ்த்தி ஸர்வமங்கள ரூபிணியான காளிகாம்பாளுடைய திருவடிகளை வணங்கி பிரார்த்திக்கின்றேன்

இப்படிக்கு
சாஹித்யசிரோமணி.
சிவாகம பண்டிதர். ஆகமப்ரவீணர்.
V. சந்திரசேகர சிவாசார்யர்.
சென்னை.

உ

முன்னுரை

இக்ஷுகோதண்டபுஷ்பேஷுபாசாங்குசலஸத்கரீம்
ஸர்வ ஸம்பத்கரீம் தேவீம் வந்தே திரிபுரசுந்தரீம்.

உலகெலாமுள்ள உயிர்கள் உய்வித்திட அருள் மழை பொழியும் உலகேழும் பெற்ற அன்னை ஸ்ரீ காளிகாம்பாளின் கருணா கடாக்ஷவிசேஷத்தினாலும், எனதருட்தந்தையின் அருளாசியாலும் சென்னையில் மாதந்தோரும் சைவாகம சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்று வந்தது. சைவ சமயத்திற்கும், சிவாசார்ய சமூகத்திற்கும் செய்யும் தொண்டே சிவனுக்கு செய்யும் வழிபாடு என்பதை எனது தந்தை வாயிலாக உணர்ந்தேன். உலகில் பிரத்யக்ஷமாக அசையும் திருமேனி தாங்கியதோர் ஜங்கமலிங்கமாகவும் சிவனுக்கு சேவை செய்யும் திருக்கரமுடையோராகவும், முப்போதும் திருமேனி தீண்டும் சைவபாகவதாளாகவும், விளங்கிடும் சிவாசார்யர்களாயும் சைவாகம வல்லுனர்களாயும் உள்ள, சிவநேயச்-செல்வர்களைப் போற்றிப் பாராட்டிட விரும்பி சிவாசார்யர்களுக்கென ஓர் அறக்கட்டளையைத் துவக்கி தொண்டாற்றி வருவதில் உளமகிழ்கிறேன்.

மாதம்தோறும் ஒருநாள் இங்கு சிவாசார்யப் பெருமக்கள் நிகழ்த்திடும் சொற்பொழிவுகளைக் கேட்டு சைவாகமத்துறை நுட்பங்களையும் சிறப்புகளையும் கேட்டு வியப்பும் ஆர்வமும் பெற்றேன். ஆதலால் இவ்வரிய செய்திகள் பலருக்கும் வருங்காலத்திலும் பயன்படுமெனக்கருதி ஒளிப்பதிவுடன் சொற்பொழிவுகள் ஒலிப்பதிவும் செய்யப்பட்டது. பலரும், பாடசாலை மாணவர்களும் படித்துப் பயன் பெறவும், நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இயலாதவர்களின் கைத்தலத்தில் கனியாய்த் திகழவும், சொற்பொழிவுகள் வாய்மொழிப் பதிவோடு மட்டுமன்றிக் கையெழுத்துப்பிரதியாக அக்கருத்துக்கள் கட்டுரையாகவும் பெறப்பட்டது. அர்ச்சக சமூக நலன்கருதி ஞாயிற்றுக்கிழமையில் ஆலயசேவைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மதிய வேளையில் நிகழ்ச்சி அமைக்கப்பட்டது. ஆதிசைவ இளைஞர்களிடையே ஆர்வகுறைவும், பெரியோர்கள் முதியோர்களிடையே பேரார்வமும், ஆதரவும், பாராட்டுதலும் அவையில் காணப்பட்டது.

மாதந்தோறும் சிவாசார்யப் பெருமக்கள் தாம் ஆற்றிய சொற்பொழிவினை அவ்வப்பொழுது கட்டுரையாகவும் அளித்தனர். ஆதலால் இது நூலாக வடிவம் பெற பெரிதும் உதவியது. 2009-ம் இவ்வாண்டின் பன்னிரு மாதங்களில் சொற்பொழிவாற்றியவர்கள், சைவாகம அறிவொளியை பன்னிரு சூரியர்கள் போல் வெளியிட்டனர். இதில், தமிழகத்தில் வசிக்கும், சைவாகமங்களில் வல்லவர்களும், சைவாலய சைவத்தொண்டில் பிரசித்தி பெற்று விளங்கியவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர். கட்டுரையாளர்களில் பலர் சைவாகமங்களின் அரிய பல செய்திகளையும், தத்துவார்த்த விளக்கங்களையும் பல சிறுநூல்களாகவும், கட்டுரையாகவும் சமூகத்திற்கு அளித்து சைவத்தை வளர்த்த சான்றோர்கள் ஆவர். மேலும் பலர் சைவாகமங்களில் ஆய்வுப்பணிகளை மேற்கொண்டு முதுகலை முனைவர் பட்டம் பெற்ற அறிஞர்கள் ஆவர். இவர்களை சமூகத்தினரும், பலவித்வான்களும், பிரமுகர்களும் பாராட்டியுள்ளனர். இத்தகைய சிவஞான சைவசாஸ்திர வல்லுனர்கள் சொற்பொழிவில் கருத்துக்களை நன்றாகவும், அழுத்தம் திருத்தமாகவும், தக்கசான்றுகளுடனும் விளக்கி தங்களாற்றலை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் கற்றோர்க்கும், மற்றோர்க்கும் புரிந்திடுமாறு தாம் பேச எடுத்துக்கொண்ட

பொருளைப்பற்றி மிகமிகத் தெளிவாக பேசியும், எழுதியும் அளித்து உதவியுள்ளனர். சில பேச்சாளர்கள் ஆதீனங்களிலும், ஆய்வகங்களிலும், ஆலயங்களிலும் தொடர்பு உடையவர்களாயும், ஆய்வகங்களிலும், கல்லூரி, பாடசாலை முதலான குருகுலப் பயிலகங்களிலும் பணியாற்றியும், பயிற்சி அளித்தும் அனுபவம் மிக்கவர்களாக இவ்வாண்டில் விளங்கினார்கள்.

தற்போதைய சூழலில் மதச்சார்பற்ற அரசியலமைப்பாலும், அறநிலையத்துறையின் அர்ச்சக சமூக அணுகுமுறையாலும், குலத்தொழிலை வெறுத்துவரும் இளைஞர்களைத் தேற்றித் தெவிட்டாத சைவாகம அறிவியல் செய்திகளை சுவைபட உகந்தளித்து உதவிய பேச்சாளர்களை பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

சைவ உலகிற்கு அருந்தொண்டாற்றியவர்களும், தற்போது ஆற்றி வருபவர்களும், சைவாகமப் பேறிஞர்களும் அளித்த சைவாகம ஞானத்தெளிவு பெற உதவும் இக்கட்டுரைகளைத் தொகுத்து மலராக வெளியிடுவதில் உவகையும், பெருமிதமும் பெறுகிறேன். ஆண்டுதோறும் இது போலவே கட்டுரையும் மலரும் வெளிவரவும், சமூக ஆதரவும், சமயப்பயனும், ஏற்பட இறையருளை சிந்திப்போமாக.

இவ்வாண்டின் 2009-ன் சொற்பொழிவாளர்கள் யாவரும் எனது அன்பான வேண்டுகோளை ஏற்று சென்னையில் சைவாகம கலாசார வித்யாகேந்திரத்தின் சித்தாந்தப் ப்ரவசன கோட்டத்திற்கு முறையே தவறாது வருகை தந்து நிகழ்ச்சிகளைச் சிறப்பித்து நிகழ்த்தி உதவியமைக்கு அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாதந்தோறும் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்து நடத்தியும், கட்டுரைகளைத் தொகுத்து நூலாக அமைக்க முயற்சி மேற்கொண்டு உதவியும், இங்கு முதல்வர் பொறுப்பில் நற்தொண்டாற்றிக் கேந்திர பயிலகத்தை நன்முறையில் ஓராண்டாக நடத்தி, உதவிய திரு. வி. சோமசேகர சிவாசார்யார் அவர்களுக்கும், அவ்விதமே தட்டச்சு செய்தும், நிகழ்ச்சி ஏற்பாடுகளைச் செய்தும், ஆண்டு விழா மலர் அச்சிடும் பணியிலும் உதவிய திரு வே.சுப்பையா பிள்ளை அவர்களுக்கும், துணைபுரிந்த எனதாப்த நண்பர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாண்டின் சிவஞான மலரை எனதருட் தந்தைக்கு அர்ப்பணித்து அகமகிழ்கிறேன். இந்நூல் பலருக்கும் பயன் தரவும், கட்டுரையாசிரியர்கள் விரும்பும் பயனை விரைவில் பெறவும் எனது ஆத்மார்த்த இறைவியாகிய எனதன்னை ஸ்ரீ காளிகாம்பாள் திருவடிகளை வணங்கி வழிபடுகிறேன்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

இப்படிக்கு,
தி.ஸா. காளிதாஸ சிவாசார்யர்
சிவாசார்யர் அறக்கட்டளை, நிறுவனர் & தலைவர்
ஸ்ரீ காளிகாம்பாள் கோயில் அர்ச்சகர், சென்னை.

உ

மதிப்புரை

ஆசானுரூப பலதம் சரணாரவிந்த I
பாஜாமபார கருணார்ணவ பூர்ணசந்திரம் II
நாசாய ஸர்வ விபதாமபி நௌமி நித்யம் I
ஈசானகேசவபுவம் புவனைகநாதம் II

உலக உயிர்களனைத்திற்கும் மங்களத்தைச் செய்வதால் சிவமென்றழைக்கப்படும் பரம்பொருளான இறைவனே "பசுபதி" எனப்படுகிறார். பிரம்மா முதலாக தாவரம் வரையிலான அனைத்து உயிர்களும் பசுக்களாக இருப்பதாலும், அவைகளுக்குத் தலைவனாக இருப்பதாலும், "சிவன் பசுபதி" எனப்படுகிறார். எப்பொழுதும் இப்பசுக்களைப் பாதுகாப்பதாலும், அவர்களுடன் இணைந்து வினளயாடி மகிழ்வதாலும் அவற்றின் தலைவனாயிருத்தலாலும் பசுபதி சிவனே என்று "மஹாபாரதம்" கூறுகிறது. முக்கண்ணரான சிவனை வழிபடாது வாழ்தல் நன்றன்று என சிவாகமங்கள் கூறும். அச்சிவத்தை வழிபட்டு யாவரும் பிறவிப்பிணி நீங்கி பேரின்ப நிலைபெற சிவபூசை செய்து சிவஞானத்தை அடைய வேண்டும். நல்லறமாகிய சிவபூசைக்கு நிகராக வேறொரு அறம் மூவுலகிலும் இல்லை என்கிறது "அஜிதாகமம்".

இக்கலியுகத்தில் ஸகல ஜீவர்களும் மிகத்துக்கமுடையவர்களாயிருத்தலால் எல்லோருக்கும் தம்முடைய துக்கம் நீங்கிவிட வேண்டுமென்னும் விருப்பம் உண்டாகிறது. ஆனால் ஸம்ஸார துக்கம் என்பது "மந்திரௌஷதி" முதலியவற்றால் ஒரு சில கணம் / நாழிகை / மாசம் / வருஷம் முதலியனவாக, குறிப்பிடும் நியமிக்கப்பட்ட காலம் வரையிலேயே நீங்குகிறது. மீண்டும் வராதவாறு முற்றிலுமாக நீங்குவதில்லை. இது எதனால்? எனில், "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி தீரா நோய் தீர்த்து அருளவல்லான்" இறைவன் ஒருவனே.அந்த இறைவனான சிவனது ஞானமே நித்யானந்தம் அளிக்கவல்லதாகும். இதனை வேதாகமங்கள் தெளிவாக கூறியுள்ளன. "தமேவ்விதித்வா (அ) திமிருத்யுமேதி நாந்ய : பந்த்தா வித்யதே (அ) யநாய" அந்த ப்ரம்மத்தினையே அறிந்து மிருத்யுவைக் கடக்கின்றான். அதனைக் கடத்தற்கு வேறு வழியில்லை என்னும் யஜுர் வேதம், "ஞானமே மோக்ஷ மார்க்கம்" என்று கூறி இருக்கின்றது. அவ்வாறே சிவாகமங்களும் ஞானத்தாலேயே முக்தி கிட்டும் என்கிறது. ஸர்வதுக்க நிவிருத்தியும் பரமாநந்த ப்ராப்தியுமாகிய புருஷார்த்தங்களே சிவாகமங்களின் ப்ரயோஜனமாகும். பசுபதியை அறிவதே ஞானமாகும். "யேஷாமீசே பசுபதிப் பசூநாம் சதுஷ்பதர்முதசத்விபதாம்" என்றும், "நமோ விருக்ஷேப்ப்யோ ஹரிகேசேப்யப் பசூநாம்பதயே நம": என்றும், "உமாபதயே பசுபதயே நமோ நம": என்றும் யஜுர் வேதம் உலகில் உள்ள இருகாலுள்ள பறவை முதலானவையும் நாலுகாலுடைய விலங்குகளும், ஒரு காலுடைய மரம் செடி கொடித் தாவரங்களும் உய்யவேண்டி பசுபதியைத் தொழவேண்டும் என விதித்துள்ளது. சிவனுக்குத் தொண்டாற்றிடும் அர்ச்சகரின் திருக்கரம் சிவனைத் தீண்டுவதால் அக்கையே கடவுளெனவும், கடவுளினும் உயர்ந்தது, உலகிற்கு அருமருந்தாம் திருநீற்றைத் தருவது சிவஹஸ்தம் என வேதம்

"அயம் மே ஹஸ்தோ பகவான் அயம்மே பகவத்தர: I அயம்மே விச்வபேஷஜோயம் சிவாபிமர்சன": II என்பதால் முப்போதும் இறைவனின் திருமேனி தீண்டுபவர்களான ஆதிசைவ அர்ச்சகர் திருக்கரத்தினாலேயே திருநீற்றைப் பெற வேண்டும். தாமே எடுத்தல் கூடாதென சிவாகமமும் விதித்துள்ளதாலும், தமக்கும் அவர்களுக்கும் பேதமில்லை எனவும், தாமே குருக்கள் எனக்கூறியுள்ளதால், உலகத்தோர் துக்கமொழிதல் பொருட்டும், ஞானம் பெறுதல் பொருட்டும், தீக்ஷை

பெற வேண்டும். முப்பொருளுண்மையை சிவஞானத்தினை யாவரும் பெறச்செய்ய அப்பரம கருணாகரனாகிய பரமேச்வரனே இம்மண்ணுலகில், ஜங்கம-லிங்கமாய் விளங்கும் சிவாசார்யர்களை அதிஷ்டித்து இருந்து தீக்ஷை செய்து அருள்வதாக ஆகமங்கள் கூறும். இவ்விதமாக ஸர்வ துக்கநிவ்ருத்திக்கு சிவஞானமும், அதைப் பெற தீக்ஷையும் தேவையாம். இவ்வாறு குருவருள் இருந்தாலே உண்மையை உணர முடியும். சிவஞானம் பெற உதவும் ஒப்பற்ற ஒரே ஸாதனம் சிவபூஜை ஒன்றே. இதற்கு சிவாகம நூலறிவு தேவைப்படுகிறது. எனவே சிவாகமங்களின் கருத்துக்களை ஸாரமாகவும், சுருக்கமாகவும், தெளிவாகவும் பெற இதுபோன்ற சைவாகம சொற்பொழிவு நிகழ்ச்சிகள் உதவுவதுடன் அர்ச்சகர்கள் திருவாய்மொழியாக அறிவது உபதேசமே ஆகும்.

சிவனுருதாங்கிய சிவாசார்யர்கள் இந்த சென்னை சைவாகம கலாசார வித்யா கேந்திரத்தின் சித்தாந்தப்ரவசன கோஷ்டத்திற்கு நேரில் வந்திருந்து வழங்கிய கருத்துக்களை, 2009-ம் ஆண்டின் பன்னிரு மாத சொற்பொழிவுகளில் கட்டுரையாக பெருமுயற்சியுடன் அளித்துள்ளது, இக்காலத்திற்குத் தேவையானதாக சிவனருட்பயனாலமைந்த ஞானவேள்வியாகவே, எண்ணத்தக்கதாகிறது. இக்கட்டுரைகளைத் தொகுத்து நூலாய் வடிவமைத்ததில் பெருமிதமும், மகிழ்ச்சியும் பெறுகிறேன்.

ஆகம உத்யான மலர்களின் தேன்துளிகளால் நிறைந்த தேன்கூடாக விளங்குகின்றச் சொற்பொழிவுகளின் நூலானது, ஆகம சான்றோர்கள், பலரின் ஆகம நுட்பக் கருத்துக்களால், தக்க சான்றுகளால், ஆகம அறிவியல்மழை பொழிவால், நிறைந்து, போற்றுதற்கும், பயன்பெறுவதற்கும், ஏற்றதாக விளங்குகிறது. இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள், சைவ சமய மேன்மையை விளங்கிக்கொள்ளவும், சைவநெறிகளைப் பின்பற்றிடவும், சைவசாஸ்திர பரிபாலனத்திற்கும், ஆகம கலாசார தொடர் வளர்ச்சிக்கும் இம்மலர் பெரிதும் உதவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆதலால் சைவாகமங்களைப் பற்றி அறிய விரும்புவோருக்கும், பயிலும் மாணவர்களுக்கும், இக்கட்டுரைகள் சிறந்த கிடைத்தற்கரிய அறிவுப் பொக்கிஷமாகத் திகழுமென்பது திண்ணம்.

இதுபோன்ற சிவாகம அறிவொளி வழங்கும் ஞான தீபங்களாய், சிவஞானசூரிய, ஒளிக்கதிர்கள் போல், ஆண்டுதோறும் தொடர்ந்து பல்லாண்டு வெளிவந்திட வேண்டுமென, எனது இஷ்டதெய்வமான ஹரிஹரசுத சாஸ்தாவை உளமார ப்ரார்த்தித்து, வெளியிடும் நிறுவனத்தையும், இதில் திருப்பணியாற்றிய அன்பர்களையும் பாராட்டி மகிழ்கிறேன்.

இப்படிக்கு,
ஆகமப்ரவீணர் வியாகரணசிரோமணி
சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யர்
முதல்வர்,சைவாகமகலாசார வித்யாகேந்திரம்
சென்னை - 600 001.

சுபமஸ்து நித்யம்

2009 ம் ஆண்டின் பன்னிரு மாதத்தில் உரையாற்றி கட்டுரை வழங்கியோர்

கட்டுரையாளர் அறிமுகம்....

சைவசித்தாந்த ஆகமஸாகரம், சிவாகம ஞானபானு, சிவாகம ஆய்வாளர், சிவாகம பரீக்ஷாதிகாரி, காஞ்சீபுரம் சிவஸ்ரீ சாளுவ-க-ராஜப்பா சிவாசார்யர் (78) அவர்கள்

காஞ்சீபுரம் ஏகாம்பரஸ்வரர்கோயில் & கைலாசநாதர்கோயில் பரம்பரை ஸ்தானீகராகவும், சைவாகமங்களின் ஞானபாதஸாரத்தை வெளிநாடுகளில் எளியமுறையில் போதித்தவரும், இங்கு சைவநெறியை பரப்பிக் கொண்டிருப்பவராகவும் – சிவாகமக்கிரியைகளை மிக எளிய முறையில் மாணவர்கள் புரிந்த கொள்ளத்தக்கவகையில் பல சிறுபுத்தங்களை வெளியிட்டு சமுதாயத்திற்கு அர்ப்பணித்து இறைபணியாற்றி வருகிறார். பல கும்பாபிஷேகங்கள், சைவ தீக்ஷைகள் செய்து ஆதிசைவர்கள் நற்பணியாற்ற பெரிதும் உதவி வருபவரும் ஆவார்.

ஸாஹித்ய & மீமாம்ஸா விசாரதா, ஸாஹித்ய & மீமாம்ஸா சிரோமணி, சிவாகம ரத்னாகரம், சிவாகம பூஹணம். ஆகம ஆசிரியர் காஞ்சிபுரம் சிவஸ்ரீ Dr.s.உமாபதி சிவாசார்யர் (58) அவர்கள் M.A.,Ph.d.,

ஸ்ரீ காஞ்சி காமகோடிபீட வேதசிவாகம பாடச்சாலை முதல்வராகவும், அர்ச்சகர்கள் சேஷமநலசங்க ஆலோசகராகவும், பல மாணாக்கர்களை உருவாக்கி வருபவரும், சிவாகமங்களில் பல கோயில் சிவாகம ஸதஸ்களை, கும்பாபிஷேகங்கள், யாகங்கள் இவற்றை சிறந்த முறையில் நடத்தி வருபவரும், சைவசமயத்தொண்டாற்றி வருபவருமாவார். வெளிநாடுகளிலும் சைவநெறிகளை விளக்கி வருகிறார்.

ப்ரதிஷ்டா பூபதி, சிவாகம நிபுணர், சிவாகம ஞானி, சிவாகம சிந்தாமணி. திருக்கண்ணங்குடி சிவஸ்ரீ T.K.பாலமணி சிவாசார்யர் (60)அவர்கள்

திருக்கண்ணங்குடி ஸ்ரீ ஞானாம்பிகா ஆகமபாடசாலையின் முதல்வராகவும், சைவாகம & சாக்தாகமங்களின்படி பல மஹாயாகங்களை நடத்தியும், சைவசித்தாந்த சமயசொற்பொழிவுகளை நடத்தியும், பல கோயில் கும்பாபிஷேகங்களை தலைமை ஏற்று நடத்தி வருபவராகவும், சமயப் பணியாற்றி வருகிறார்.

சைவசித்தாந்த ப்ரவீணர் சைவாகம ஆராய்ச்சியாளர் பாண்டிச்சேரி

சிவத்திரு Dr.T.கணேசன் (40) அவர்கள் M.A.,Ph.d.,



புதுவை பிரெஞ்ச் பண்பாட்டுக் கழகத்தின் முதுநிலை ஆராய்ச்சியாளரும், பல கருத்தவைகளில் ஆய்வுகட்டுரைகளை வழங்கி, ஆகமகருத்துகளை போதித்துவருபவரும் , ஆய்வுப்பணி செய்து பல ஆகமநூல்கள் வெளிவர, பெரிதும் அரும்பணியாற்றி வருபவரும், பல சிறுநூல்களை வெளியிட்டு சமயத்தொண்டாற்றி வருபவருமாவார். சமயத்துறையின் பழம்பெரும்; அரிய ஓலைச்சுவடிகளைச் சேகரித்தும், ஆய்வு செய்தும், பாதுகாத்தும் நூலாக வெளிவரத் தொண்டாற்றி வருகிறார்.

ஆகம ப்ரவீணர், வியாகரன சிரோமணி, வியாகரண விசாரதா, சைவாகமக்ஞ சூடாமணி, சிவாகம ஸார்வபௌம, சிவாகம அருட்செல்வர்.சிவஸ்ரீ வி. சோம சேகர சிவாசார்யர் அவர்கள் (53) M.A.,

முதல்வர், சென்னை சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை

சென்னை மகரிஷிவேதாகமபாடசாலையின் முன்னாள் ஆகமபண்டிதரும், மகாபலிபுரம் அரசினர் கோயில்கட்டிடசிற்பக்கலைக்கல்லூரியின் முன்னாள் ஆகமவிரிவுரையாளரும், கும்பாபிஷேகங்கள், ஆகமகருத்தரங்குகள், விசேஷயாகங்கள் பலவற்றை பலமுறை தலைமை ஏற்று நிகழ்த்தியவரும், கனடாவில் இந்துக்கோயிலின் முன்னாள் தலைமை அர்ச்சகரும், பாடசாலைகளில் ஆண்டுதேர்வுகளின் பரீக்ஷாதிகாரியாக பணியாற்றியவரும், பல மாணவர்களை உருவாக்கியவரும், சைவநெறி தழைக்கத்தொண்டாற்றி வருபவரும், மாதாந்திர, சிவாகம, சிறப்புச்சொற்பொழிவு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தியும், பல சிறுவிளக்க நூல்களை வெளியிட்டும் வருபவர்.

வேதாந்த சிரோமணி, வேதாந்த விசாரதா, சைவாகம சூடாமணி

சிவஸ்ரீ Dr.T.S., ஷண்முக சிவாசார்யர் M.A .Ph.D அவர்கள்(36)

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்கோயிலின் ஆசாரியரும், ஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் பவுண்டேஷனின் நிறுவனர் மற்றும் தலைவரும், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், எளியமக்கள் வாழும் பகுதிகளுக்குச்சென்று, சைவசமய போதனைகளையும், நலத்திட்ட உதவிகளையும் செய்து வருபவரும், நலிவடைந்தோர்க்கு நல்வழிகாட்டிவருபவரும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும், பல ஆலயங்களில் கும்பாபிஷேகத்தை தலைமையேற்று நிகழ்த்தி வருபவராய், சமயவிழாக்களிலும், கருத்தரங்குகளிலும் சமயநெறிகளின் விளக்க விரிவுகளை நிகழ்த்தி, சமயச்சிறப்புகளை போதித்து சைவநெறி தழைக்கத் தொண்டாற்றி வருபவர்.

உ

குருவருள் துணை

சென்னை – 1ல், சைவாகம கலாசார வித்யாகேந்திரத்தில், நடைபெற்ற சைவாகம சிறப்புச்சொற்பொழிவுத் தொடர்நிகழ்ச்சிகளின் விவரம். சிவாகம வாசஸ்பதி எனும் விருது பெற்ற சிவாகமபண்டிதப்ரவர பேரறிஞர்கள்

2009 ஆம் ஆண்டு நிகழ்வுகள்

கூட்டத் தொடர் வரிசை எண்.	நடைபெற்ற தேதிகள்	சொற்பொழிவின் தலைப்புகள் & சொற்பொழிவாற்றியோர்
1-வது கூட்டம்	25-01-2009 ஞாயிறு	சைவாகம மாஹாத்மியம் திருமழிசை. சிவஸ்ரீ.T.S.வாகீச சிவாசார்யர், சென்னை.
2-வது கூட்டம்	15-02-2009 ஞாயிறு	ப்ராஸாத மந்திரலக்ஷண விவரணம். திருப்பனந்தாள். சிவஸ்ரீ. V.சந்திரசேகர சிவாசார்யர், சென்னை.
3-வது கூட்டம்	29-03-2009 ஞாயிறு	ஷடத்வா லக்ஷண விவரணம். மயிலாப்பூர். சிவஸ்ரீ.S.அருணசுந்தர சிவாசார்யர், சென்னை.
4-வது கூட்டம்	19-04-2009 ஞாயிறு	பஞ்சஸாதாக்ய லக்ஷண விவரணம். சென்னை. சிவஸ்ரீ. Dr.S.P.ஸபாரத்ன சிவாசார்யர்
5-வது கூட்டம்	17-05-2009 ஞாயிறு	ஆவாஹநாதி தசஸம்கார விவரணம். காரைக்கால். சிவஸ்ரீ.Dr. B..ஸர்வேச்வர சிவாசார்யர், கும்பகோணம்
6-வது கூட்டம்	14-06-2009 ஞாயிறு	ஆகமார்சன உபசார ப்ரபேத விவரணம் திருக்கோலக்கா. சிவஸ்ரீ.N.இராமநாத சிவாசார்யர், கும்பகோணம்
7-வது கூட்டம்	26-07-2009 ஞாயிறு	லிங்க ஸ்தாபன ப்ரதிஷ்டா விவரணம். காஞ்சீபுரம். சிவஸ்ரீ. சைவ K.ராஜப்பா சிவாசார்யர்,
8-வது கூட்டம்	30-08-2009 ஞாயிறு	திரிபதார்த்த லக்ஷண விவரணம். காஞ்சீபுரம். சிவஸ்ரீ. Dr.S.உமாபதீ சிவாசார்யர்.
9-வது கூட்டம்	20-09-2009 ஞாயிறு	ஸித்தாந்த முக்தி விவேசனம். பாண்டி. சிவஸ்ரீ. Dr.T. கணேசன், பிரெஞ்ச் பண்பாட்டுக் கழகம்.
10-வது கூட்டம்	04-10-2009 ஞாயிறு	பிம்ப ஸம்ஸ்கார விவரணம். திருகண்ணங்குடி. சிவஸ்ரீ. T. K. பாலமணி சிவாசார்யர்
11-வது கூட்டம்	08-11-2009 ஞாயிறு	விமானாகிருதி வக்ஷண விவரணம். சென்னை. சிவஸ்ரீ. V. ஸோமசேகர சிவாசார்யர், மகாபலிபுரம்.
12-வது கூட்டம்	13-12-2009 ஞாயிறு	சிவலிங்க தத்வபாவனா விவரணம் மன்னாடி. சிவஸ்ரீ. Dr. T. S. ஷண்முக சிவாசார்யர், சென்னை.



லிங்க ஸ்தாபன பிரதிஷ்டா விவரணம்

சைவ சித்தாந்த ஆகம ஸாகரம்
சிவாகம ஞானபானு சிவாகம பரீக்ஷாதிகாரி
சிவஸ்ரீ. சாளுவ க. ராஜப்பா சிவாசார்யர்
காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கைலாசநாதர் ஆலய ஸ்தானீகர்

அறிஞர்கள் நிரம்பிய இந்த அவையில் எனக்களிக்கப்பட்ட தலைப்பு "லிங்கஸ்தாபந ப்ரதிஷ்டா விவரணம்" என்பதாகும். பொதுவாக ஆகமங்களில் ஆவர்தம், அனாவர்தம், புனராவர்தம், அந்தரிதம் என 4 விதமான ப்ரதிஷ்டைகளைப் பற்றி சொல்லிய போதும், ப்ரதிஷ்டை என்பதற்கு, லிங்கமும் ஆவுடையாரும் (அ) பிம்பமும் பீடமும் நூதனமாக சேர்த்து வைத்து, உரிய நியமங்களுடன் கும்பாபிஷேகம் செய்வதே, ப்ரதிஷ்டை என்ற வாக்கியத்திற்கு தகுந்தபொருளாகும். கௌணமாக மற்றவைகளையும் ப்ரதிஷ்டை என்று சொல்லுவதும் உண்டு. ஸம்புரோக்ஷணம் என்று கூறுவதும் உண்டு. ஒரு கோயில் கட்ட வேண்டுமென்று தீர்மானிக்கும் போது, பூபரீக்ஷை, கர்ஷணம், முதல் ஆத்யேஷ்டகா விதிப்படியும், பேளாஸ்தாபந விதிப்படியும் செய்வதுடன் மூர்த்தி செய்வதற்கு சிலாசங்கிரஹணம் முதல் யாவும் செய்தே, அங்கு கோயில் அமைக்க வேண்டும். பாலஸ்தாபனம்:-எந்த இடத்தில் மூலாலயம் எந்தமூர்த்தியைப் பிரதானமாக கொண்டு செய்ய வேண்டுமோ, அந்த இடத்தருகில், ஒரு சிறிய கோயில் கட்டி, அங்கு பாலஸ்தாபந விதியில் கூறியபடி முதலில் ப்ரதிஷ்டை செய்ய வேண்டும். இதுதான் முதல் கும்பாபிஷேகமாகும் என்று - பாலஸ்தாபந விதியில் பூர்வ காமிகாகமத்தில் கூறப்படுகிறது.

த்ரியுகேந்திரிய ஷட்ஹஸ்தை: ஸப்த ஹஸ்தேந வா கிருஹம் I
யத்வா கரத்வயேநைவ மூலஸ்தானம் பிரகல்பயேத் II (பூர்வகாமிகம்)

பாலஸ்தாநம் விநா வித்வான் மூலஸ்தாநம் ந காரயேத்.

ஆத்ய பாலஸ்தாபனம் செய்யாமல் புதிய மூலஸ்தானத்தைச் செய்யக் கூடாது என்றும் அவ்வாறே பாலலிங்கம் இல்லாமல் மூலலிங்கம் முதலியவைகள் இல்லை என்றும் கூறப்படுவதால்,

"பால லிங்காதிஹீநம் ஸ்யாத் மூலலிங்காதிகம் நஹி"என்பதால்

பிம்பங்கள் முதலியவைகளுக்கும் இது பொருந்தும். இந்த விபாகம் கிராமத்தின் ஆரம்பத்திலேயே அல்லது கிராமம் நிர்ணயித்தம்பிறகும் என இரண்டு விதமாக உள்ளது. மேலும் காமிகத்தில் அங்கேயே அடுத்தவரியில்.

பால லிங்காதி ஹீநம் வா தத்யுக்தம் வா ஸமாசரேத்.

என்பதால் பாலலிங்கம் செய்யாமலும் அல்லது பாலஸ்தாபன முறைப்படியும் செய்யலாம் என ஒருவிகல்ப வாக்கியம் உள்ளது. பழமையான கோயில்களில் முறைப்படி பாலஸ்தாபனம் செய்தபின்னே முறைப்படி பெரிய ஆலயம் அமைத்து பூஜை செய்து கொண்டிருந்த பாலலிங்கத்திலிருந்தே கலாகர்ஷணம் செய்து கும்பாபிஷேகம் செய்வார்கள்.சில இடங்களில் இந்த விதிமுறை கடைபிடிக்கப்படாததற்கு பாலலிங்கம் இல்லாமலும் செய்யலாம் எனக்கூறிய வாக்கியத்தை அனுசரித்தும் அல்லது இம்மாதிரி விதி இருப்பது தெரியாமலும் செய்திருப்பார்கள்.

ஆவர்த்தப்ரதிஷ்டை என்பதற்கு, ஆத்யபாலாலயத்திலிருந்து சக்தியை மூலக்கோயிலில் மறுபடி நூதன லிங்கபீடபிம்பங்களுக்கு பிரதிஷ்டா விதிப் ப்ரகாரம் செய்வதே ஆவர்த்த பிரதிஷ்டை ஆவர்த்தம் என்பது இரண்டாம் முறையாக முதலாவதான பாலாலய மூர்த்தியின் சக்தியையே மறுபடி மூலாலயத்தில் தெரியாமலும் செய்திருப்பார்களா.

ஆவர்த்தப்ரதிஷ்டை என்பதற்கு, ஆத்யபாலாலயத்திலிருந்து சக்தியை மூலக்கோயிலில் மறுபடி நூதன லிங்கபீடபிம்பங்களுக்கு பிரதிஷ்டா விதிப் ப்ரகாரம் செய்வதே ஆவர்த்த பிரதிஷ்டை ஆவர்த்தம் என்பது இரண்டாம் முறையாக முதலாவதான பாலாலய மூர்த்தியின்சக்தியையே மறுபடி மூலாலயத்தில் உள்ள புதிய மூலலிங்க பிம்பங்களுக்கு முறைப்படி, ஆவாஹனவிதிப்படி பிரதிஷ்டை செய்து பூஜிப்பதே, இரண்டாம் முறை ப்ரதிஷ்டை என கூறுவதற்கே ஆவர்த ப்ரதிஷ்டை எனப்பெயர்.

மூலஸ்தானஸ்ய ஐசான்யாம் உத்தரே பூர்யாம்யயோ: I

ஆக்னேய்யா மிஷ்டதேசே வா குர்யாத் பாலக்ருஹம் குரு : II (காமிகாகமம்)

கட்டப் போகும் மூலஸ்தான கோயிலின் அமைப்பை மையமாக கொண்டு ஈசானம், வடக்கு, கிழக்கு, தெற்கு, அக்னிதிக், இவைகளில் குருவுக்கு இஷ்டமான இடத்தில் பாலாலயம் அமைக்க கூறியுள்ளது. கட்ட வேண்டிய மூலாலயத்தின் அளவைக் கொண்டு, பாலாலயம் அமைக்க கூறியுள்ளது.

ஏழு அங்குலம் ஆரம்பித்து இரண்டு இரண்டு அங்குலங்களாக வளர்த்து தருணாலயப்ரதிமைகள் ஒன்பது விதமாக கூறப்பட்டுள்ளது. இந்த பாலாலயத்திற்கும், தருணாலயம் என்ற பெயர் என கூறப்பட்டுள்ளதை கவனிக்க வேண்டும்.

ஸகலே ஸகளம் குர்யாத் நிஷ்களே சைவ நிஷ்களம் I என்கிற ஆகமவசனத்தின்படி,

ஸகளமூர்த்திகளான, அம்பாள், விநாயகர், சுப்ரமணியர் மற்றும் விஷ்ணு முதலிய பிம்பங்களுக்கும் அதே விதமாகவும், நிஷ்களமான லிங்கத்திற்கு அதே அமைப்புள்ள பாலலிங்கத்தைச் செய்ய வேண்டும். லிங்க அளவின்படி பீடம் (ஆவுடையார்) அமைக்க உலோகத்தாலும் கற்சிலையாகவும் பாலலிங்கம் விதிக்கப்பட்டிருக்கிறது.

க்ஷீரவ்ருக்ஷை: பலாசைர்வா வடோதும்பரபிப்பலை: I

மதூகபநசப்லக்ஷை: சால சந்தன காதிரை: II

ஸரலாமர வ்ருக்ஷாப்யாம் லிங்கபேரம் ஸமாசரேத்II (காமிகம்)

பாலுள்ளவையான பொரசு, அரசு, அத்தி, ஆலம், இலுப்பை, பாலா, தேக்கு, சந்தனம், சால், கருங்காலி, சரளம், தேவதாரு இவைகளால் லிங்க மூர்த்தியானது செய்யத்தக்கது.

ப்ராகேவ த்வாதசாப்தாத்து சாலனம் லிங்கபேரயோ: I

ததூர்த்வம் நேஷ்ட மந்யத்ரதத்ரைவஸ்தாப யேத்ஸுதீ : II

பாலலிங்கத்தை 12 வருடங்களுக்குள் மாற்றி மூலஸ்தானத்தில் சேர்ப்பதே ஏற்றமுறையாகும். அதற்குள் மூலஸ்தானமாகிய மூலாலயம் அமைக்காவிடின், அதற்கு லிங்கத்தை பிம்பத்தை அசைப்பது பொருத்தமாகாது என்பதால், அவ்விடமே மூலாலயமாகிவிடும். இங்கு தருணாலயத்தைப் பற்றி பேசும்போது மூலாலய த்வாரம் எவ்வாறு உள்ளதோ அவ்வாறே தருணாலய த்வாரமும் இருக்க வேண்டும்.

சுட்ட செங்கற்களாலோ (அ) சுண்ணாம்பிலோ, மண்ணினாலோ இருக்கும்போது அங்கு ரத்னந்யாஸம் ஆதாரசிலைகள் யாவும் இல்லை. பூசையை நித்யபலி வரையிலும் செய்யவேண்டும். நித்யோத்ஸவம் முதலானவைகள் ஆத்ய பாலாலயத்திலும் செய்ய வேண்டும். (அ) செய்யலாகாது என்பதாக விகல்பவாக்யம் உள்ளது. இதிலே த்வீதியமான தருணாலயம் பற்றி

த்விதீயே என சுலோகம் ஆரம்பித்து கூறப்பட்டுள்ளது.

ப்ரணம்ய தேவதேவேசம் கர்த்தாகர்ம விசக்ஷண: I

ஏகவத்ஸரமாரப்ய யாவத் ஸ்யாதத்வா தசாப்தகம் I

தேஷ்வந்தரே நவீக்ருத்ய புனஸ் ஸம்ஸ்தாபயாம்யா ம்யஹம் II எனும் வசனத்தால் மூலாலயத்தில் ஜீர்ணம் முதலியவைகளைப்போக்கிட மூலஸ்தானத்தில் உள்ள இறைவனை இவ்வாறு ப்ரார்த்தித்து, ஒரு வருடம் முதல் 12 வருடம் வரை உள்ள காலத்திற்குள் ஜீர்ணமான ஆலயத்தை புதுப்பித்து மறுபடியும் இங்கேயே தங்களை ஸ்தபாநம் செய்கிறோம் என கூறும் வாக்யத்தினால் புனராவர்தனம் பற்றியும் இந்த பாலாலயவிதியிலேயே கூறப்பட்டுள்ளது.

பிரதிஷ்டை:-இந்த காமிகாமத்தில் 64வது படலமாக லிங்கப்ரதிஷ்டாவிதிபடலத்தில், பூர்வத்திலே கூறப்பட்ட விதிப்ரகாரம், இந்த ஆவர்தப்ரதிஷ்டைக்குரிய காலம் கூறப்படுகிறது.

யமாச்லேஷாக்நி ரூபாணி ச்ரவிஷ்டாஸார்ப வாருணம் I

ஜ்யேஷ்டா ச த்ரீனி பூர்வாணிநைருதஞ்சைவவர்ஜயேத் II

சேஷாஸ்து திதயோ தூநி சுபாஸ்தாபன கர்மணி II

பரணி - கிருத்திகை - ஆயில்யம் - அவிட்டம் - சதயம் - கேட்டை - பூரம் - பூராடம் - பூராட்டாதி இவைகள் மட்டும் ஆத்ய ப்ரதிஷ்டைக்கு கூடாது. சதுர்த்தி - அஷ்டமி - அமாவாசை இவைகள் மட்டும் கூடாது. செவ்வாய், சனி கூடாது. ஆனால் சுபயோகங்களோடு கூடின் தகும். சரராசி மட்டும் கூடாது. மற்றவை முன்கூறப்பட்டவைகள். பொதுவாக, கால விதிபடலத்தில் உள்ள விஷயங்களும், இந்த நூதன லிங்கபீடப்ரதிஷ்டையான ஆவர்தத்திற்குரிய வித்தியாசமாக கூறப்பட்டுள்ளது. இதிலே த்வீதியமான தருணாலயம் பற்றி கூறப்பட்டுள்ளது.

நால்வகை கும்பாபிஷேகம்:

ஸம்ப்ரோக்ஷன விதிம்வக்ஷ்யே ஸர்வதோஷநிக்ருந்தனம் II(உத்தரகாமிகம் சம்புரோக்ஷண-விதிபக்கம்150)

என ஸ்லோகம் ஆரம்பித்து ஆவர்தம், அநாவர்தம், புனராவர்தம், அந்தரிதம் என நான்கு விதமான கும்பாபிஷேகங்களைப் பற்றி கூறியுள்ளது. ப்ரோக்ஷணம் என்று கூறியதால் எப்போதும் கும்பதீர்த்தத்தை அபிஷேகத்திற்குமுன்சிறிது ப்ரோக்ஷணம் செய்த பிறகே அபிஷேகம் செய்வார்கள் என அறிக.

1.மூலபாலாலயத்திலிருந்து புதியதாக கட்டிய கோயிலில் வேறு புதியலிங்கத்தில் (பிம்பத்தில்) ஸ்தாபித்து கும்பாபிஷேகம் புரிவதற்கே ஆவர்தம் என பெயர். (இங்கு பூர்வகாமிகத்திலுள்ள விஷயமே கூறியுள்ளது.)

2. பதிதர்களால், பாதகர்களால், மூர்த்தியானது தொடப்பட்டாலும், சண்டாளர்கள், அன்னியர்களால் இவ்வாறே தீண்டப்பட்டாலும் ஒரு மாதத்திற்கு மேல்பூஜைகள் நின்றுவிட்டாலும், தளவரிசை பிளவுபட்டாலும் லிங்கம், பீடம் இவைகளில் அசைவு ஏற்பட்டாலும் அங்கு ஸ்வாமியை அப்போதே கலாகர்ஷணம் செய்து குறைகளைச் சரிபடுத்தி பின்பு உடன் கும்பாபிஷேகம் புரிவதற்கு அனாவர்தம் என பெயர்.

3. ஆலயத்தில் விமானம் ஜீர்ணமானாலும் அஷ்டபந்தனம் செய்து நீண்டநாளாகி ஜீர்ணமானாலும் மூலாலயமூர்த்தியை கலாகர்ஷணம்செய்து வேறுதருணாலயத்தில் வேறுபிம்பங்களில் (பாலாலயுலக்ஷணத்தில் கூறியதைப் போல) மூலாலயம் சரி செய்யும் வரை ஸ்தாபித்து பிறகு மூலாலயம் சரி செய்தவுடன் மறுபடி மூலாலய மூர்த்தியை மறுபடி ஸ்தாபித்து கும்பாபிஷேகம் செய்தல் புனராவர்தன பிரதிஷ்டையாகும்.

4. உலோக மூர்த்திகளில், சக்தியின் ஆயுதங்களில் வெடிப்பு ஏற்பட்டாலும், வர்ணம் மாறுபட்டாலும், (ஸுதா) அங்கம் உபாங்கங்கம் குறைவு ஏற்பட்டாலும், தோல், ஆடை குறைவு ஏற்பட்டாலும், பத்மபீடமின்றி இருந்தாலும் பீடத்தில் அஷ்டபந்தனம் விடுபட்டு இருந்தாலும் எப்போதும் உடனேசெய்யப்படுவது அந்தரிதம் எனக்கூறப்பட்டுள்ளது.

ஆவர்தன ப்ரதிஷ்டையில் கலாகர்ஷணம் முடிந்து ஸ்வாமி யாகசாலைக்கு போகும்போது யாத்ரா ஹோமம் (க்ஷணகாஷ்ட முக்ஷர்த்த காலங்களைப்பற்றிய) உண்டு. ஆவர்தப்ரதிஷ்டையின் போது மாதம், பக்ஷம், திதி, நட்சத்திரம் முதலானவைகள் யாவும் லிங்க ஸம்ஸ்தாபநத்தின் போது கவனித்து செய்ய வேண்டும்.

அனாவர்த்த பிரதிஷ்டைக்குமேற்படி திதி, நட்சத்திரம் யாவும் பார்க்க தேவையில்லை. உடனே செய்ய வேண்டியிருப்பின் மற்றபடி கும்பாபிஷேக விதிப்படி ஹோமம், பிராயசித்தம் யாவும் உண்டு. ஆவர்த்த பிரதிஷ்டையில் உள்ள அனைத்து விஷயங்களும் கீழ்கண்ட விஷயங்கள் தவிர (பிம்பத்தை சரிசெய்வது, - ஜலாதிவாஸம், சயநாதிவாஸம்.). புனராவர்த்திலும் அனைத்தும் ஆவர்தம் மாதிரி மூலஸ்தானத்திலிருந்து தருணாலயம் சென்ற ஜீவசக்தி மறுபடி மூலஸ்தானத்திற்கே பிரகாசத்துடன் செல்வது.

நயனோன்மீலநம், ஜலாதிவாஸம், சயநம் இவை யாவும் இல்லாது, மூர்த்தியை யாரும் தொடாமலிருக்கும்படி, வஸ்த்ரத்தால்மூடி, அங்கு சரிசெய்ய வேண்டிய சுவர் - தளவரிசைப்பணிகள் யாவும் சரி செய்து கும்பத்தில் ந்யாஸம் ஹோமம் ஸ்நபநம் யாவும் செய்ய வேண்டும்.

இதேமாதிரி உள்ளவைகளை, மற்ற ஆகமங்களில் உள்ளதைப் பார்ப்போம் (அந்தரித ப்ரதிஷ்டைக்கும் உள்ள விஷயம்)

பூர்வகாரணத்தில் பாலஸ்தாபந விதிப்படி:-

பால பிம்பத்திற்கு ரத்னந்யாஸம் செய்க. ஆதாரசிலை தேவையில்லை. ஆத்ய பாலாலய லிங்கத்திற்கு ப்ரம்மசூத்ரம் கிடையாது. மூலாலயம் நிச்சயித்த பின்பே ஆத்ய பாலாலயம் செய்க. இரண்டாவது பாலாலயத்தில் மாதம், பட்சம் யாவும் பார்க்க தேவையில்லை. (உடன் செய்யக் கூடியது.) வெள்ளத்தினாலோ, யானையின் உராய்வுநாலோ (முட்டுவதாலோ) க்ஷேத்ரம் (ஆலயம்) ஜீர்ணமானாலோ அந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் ஆலயம் அமைக்கவும், ஆதாரசிலை, முதலில்பூசித்த சிலைகள் ஜீர்ணமானால், ஜீர்ணமானலிங்கம் (பிம்பம்) இவைகளை தியாகம் செய்து, புதிய லிங்கம் அமைத்திட. ஜீர்ணலிங்கத்தை சிவிகையிலோ, ரதத்திலோ மரியாதையுடன் வைத்து சமுத்ரத்திலே விடவேண்டும். மரத்தினாலான மூர்த்தி ஜீர்ணம் ஆனால் சைவ அக்னியில் போட்டு பஸ்மமாக்கப்படவேண்டும்.

எந்த த்ரவ்யத்தினால் ஆலயம் இருந்ததோ, எந்த அளவில் முன்பு இருந்ததோ, மறுபடி புதியதாக அமைக்கும்போது அதே த்ரவ்யத்தினால் அதே ஆக்ருதி (அளவு)யினால் அமைக்க வேண்டும். மரம், செங்கற்கள் இவைகளாலானதாகில் தகுதியுள்ளதை உத்தாரணம் செய்யும்போது சேர்த்து செய்யலாம் தகுதியற்றதைத் தள்ளலாம்.அளவு குறைவாகவுள்ள ஆலயத்தின் அமைப்பை, ஜீர்ணோத்தாரணத்தின்போது சாஸ்த்ர முறைப்படிகூடுதலாக்கி அதிகமாக செய்யலாம். ஏற்கனவே இருந்த அளவைவிட குறைவாக செய்யக்கூடாது. உயர்ந்ததாக செய்வது சுபத்தை தரும். ஆவுடையார் மூலை உடைந்திருந்தாலோ, க்ருதவாரி சேதமடைந்திருந்தாலோ ஜீர்ண உத்தாரண சமயத்தில் வேறு ஆவுடையார் செய்க. ஆவுடையாரை மண்வெட்டியால் தனியாக எடுக்க வேண்டும். லிங்கத்தை எடுப்பதுபோல் வ்ருஷபத்தைக்கொண்டு உத்தாரணம் செய்யக் கூடாது.

சிலையில் சிரசு, தோள், கால்கள் இரண்டாகி குறைவுபட்டால் அந்த பிம்பத்தை முற்றிலுமாக த்யாகம் செய்து, ஜீரணமான அந்த பொருளாலேயே, அதே அளவில் பிம்பம் செய்யப்பட வேண்டும். புருவ ரேகை (கற்சிலையில்), கண்ரேகை, முகத்தின் ரேகை, மூக்கு இவைகளில் தேய்ந்து போயிருந்தால், அந்த ப்ரதிமையையே நீக்கி வர்ஜிக்க வேண்டும். அதை ஆற்றில் (அ) சமுத்திரத்தில் விட்டுவிட வேண்டும். இனி உத்தரகாரணத்தில் கூறியுள்ளதைப் பார்ப்போம். சுக்ல, மன்மத, விரோதி, கீலகம், விஷீ துர்முகி இந்த 6வருடங்களில் மட்டும் புதிய ஆவர்த பிரதிஷ்டை கிடையாது. எப்பொழுதும் ஆஷாடம் (ஆடி) மார்கழி, புரட்டாசி, மாசி இவை 4 மாதங்களும் கூடாது.பிரதிஷ்டையானது சித்திரையில் செய்யப்படுவது சம்பத்தைத் தரும். இவ்வாறே பயனானது முறையே வைகாசியில் - வியாதி நாசம், ஆனியில் - சர்வசித்தி, ஆவணியில் - மோக்ஷ ப்ராப்தி, ஐப்பசியில் - கர்மாவின்புண்யபலன், கார்த்திகையில் - கிராம வளர்ச்சி, தையில் - நீண்ட ஆயுள், பங்குனியில் - சத்ரு நாசம் என்றும் சுக்ல பக்ஷம் - விஷேசம், மத்யமம் - க்ருஷ்ணபக்ஷம் என்றும் அறியலாம். ப்ரதமை, சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, அமாவாசை, சதுர்த்தசி இவைகள் விலக்கத்தக்கன. த்விதியை - சர்வசம்பத், த்ருதீயை - லோக வசியம், பஞ்சமி - ரோகநாசநம், ஸப்தமி - கிராமவிருத்தி, தசமி - நீண்ட ஆயுள், ஏகாதசி - அஷ்ட ஐஸ்வர்யம், த்வாதசி - சத்ரு நாசம், பௌணர்மி - நீண்டகால வாழ்வு இவற்றை தரும்.

ஆலயத்திற்கு நீண்டநாள் சாந்நித்யம்: செவ்வாய், சனி - நாசம், ஞாயிறு - சுகம், தரும். சோமவாரம் - ஸௌபாக்யம், புதன் - சுகம் தரும், வியாழன் - ப்ரஜைகள் வ்ருத்தி, வெள்ளி - நீண்ட ஆயுள்.ஏற்படும்

1.அஸ்வதியில் -கிராம அபிவிருத்தியும் இவ்வாறே, 2.பரணீ - ம்ருத்யு (சீக்கிரம்)அழிவு, 3.கிருத்திகை -பொருள் அழிவு, 4.ரோஹிணி - சுகப்ரதம், 5.மிருகசீர்ஷம் - ப்ரஜாவ்ருத்தி, 6.திருவாதிரை - ஸர்வநாசனம், 7.புனர்வசு - பாபநாசம், 8.புஷ்யம் - சாந்தி கிடைக்கும். 9.ஆயில்யம் - சர்வநாசம், 10.மகம் - ப்ரஜைகள் அழிவு,11.பூரம் - மாத்ருறா(தாயை அழிக்கும்), 12.உத்திரம் - சுகம் தரும்,13.உறஸ்தம் - ஆயுள்வளர்ச்சி, 14.சித்திரை - சத்ரு நாசம், 15.ஸ்வாதி - ராஜசன்மானம், 16.விசாகம் - கர்மஸத்பலம், 17.அனுஷம் - பிம்பவ்ருத்தி, 18.கேட்டை - ஜேஷ்ட நாசம்(மூத்தவன் அழிவு), 19.மூலம் - பிம்பநாசம்(சிலைஅழிவு), 20.பூர்வாஷாடம் - சத்ரு அழிவு, 21.உத்தராடம் - வளர்ச்சி, 22.திருவோணம் - மோக்ஷம்(முக்தி தரும்), 23.அவிட்டம் - தார நாசம்(மனைவி அழிவு), 24.சதயம் - ம்ருத்யுநாசம் தரும், 25.பூரட்டாதி - ப்ரஜாநாசம், 26.உத்தரட்டாதி - ஸம்பத், 27.ரேவதி - வாக்சித்திதரும், 28.மேஷம்- கார்யசித்தி, 29.ரிஷபம் - ஸௌபாக்யம், 30.மிதுனம் - கார்ய நாசம், 31.கடகம் - மக்கள் சோபையுடன், 32.சிம்மம் - நற்கர்ம பலன், 33.கன்யா - குல வளர்ச்சி, 34.தனுசு -ஞானம் தரும், 35.மகரம் - மானக்குறைவு, 36.கும்பம் - சத்ருநாசம், 37.மீனம் - எல்லா சுகங்களையும் தரும். இனி யோகங்கள் - கரணங்கள் யாவும் கூறப்படுகின்றன. இவ்வளவு விபரமாக மற்ற ஆகமங்களில் சொல்லப்படவில்லை. இவையாவும் நூதன ஆவர்த்த ப்ரதிஷ்டைக்கே ஆகும். மற்ற ஆகமங்களில் - ஜீர்ணோத்தாரம் முதலியவைகள் சில நஷத்ரங்கள் சில வாரங்களில் பலன் சிறிது மாறுபட்டிருக்கும். லிங்க ஸ்தாபநம், கர்பக்ருஹ மத்தியில் சொல்லியிருக்கிறது. கௌரியும் - மத்தியில் ஸ்தாபிக்க சொல்லியுள்ளது. இது உத்தம விஷயம். கர்ப க்ருஹத்தின் மத்தியிலிருந்து 5 பாகம் செய்து அதில் 4வது பாகத்தில் பிம்ப ஸ்தாபநம் கூறியுள்ளது. பிம்பம் கூட மத்தியில் ஸ்தாபிக்க சொல்லியுள்ளது. சங்கட பக்ஷத்தில் - பிம்பம் 4வது பாகத்தில் அமைக்க கூறியுள்ளது. சிற்சில ஆகமங்களில் வேறு விதமாகவும் பிம்ப ஸ்தாபநம் கூறியுள்ளதையும் கவனிக்க வேண்டும்.

அஷ்டபந்தன விதி (உத்தர காரணாகமத்தில்)

அஷ்டபந்தனம் பற்றி கூறுகையில், போகம், மோக்ஷம், ஆயுள், ஆரோக்கியம் இவைகள் சித்திப்பதற்காக அஷ்டபந்தனம் செய்ய வேண்டும் என்கிறது.மேலும் ஒவ்வொரு திக்கிலும் அஷ்டபந்தனம் குறைந்தால் தீய பலனகள் கூறப்படுவதாவது முறையே கிழக்கில் - க்ராமத்தில் வியாதி, ஆக்னேயம் - அபமிருத்யு (திடீர் மரணங்கள்) தெற்கு - ஞான குறைவு, நிருதியில் - ப்ரஜைகளின் நாசம், மேற்கு - அநாவ்ருஷ்டி (மழையின்மை) வாயுவில் - பிராமணர்களுக்கு வியாதி,வடக்கில் - 4ஆம் வருண்த்தார்களுக்கு பாபம், ஈசானத்தில் - க்ருமிகளால் மக்களுக்கு கெடுதல் (வைரஸ்)முதலியவை காலையில் , மத்யானத்தில் , சாயங்காலம் , அர்த்தசாமம் ஆகிய எந்த சமயமாயினும், அதனைப் பார்த்தவுடன் உடனே இறைவன் சக்தியை கும்பத்தில் ஆவாஹிக்க வேண்டும். நட்சத்திரம், திதி, வாரம், மாதம், வருடம் இவையாவும் பார்க்கத் தேவையில்லை. உடன் அக்கும்பத்தை யாகமண்டபத்தில் வைத்து, ஸத்யோங்குரம் செய்து, (உடன் அங்குரார்பணம்) - வாஸ்து சாந்தி முதலியவையாவும் செய்து கும்பத்தில் சிவனை பூஜிக்க, 9 நாள், 7 நாள், 5 நாள், 3 நாள் மாலையும், காலையும்பூசை ஹோமம் செய்யவும், இதில் சண்ட பூஜை தேவையில்லை. நித்யோத்ஸவம் - நித்யாக்னிகார்யம் கிடையாது. யாகசாலையில், கண்ணாடியில் அபிஷேகம் செய்து , யாவும் அகோரமந்திரத்தைக் கூறி ஜபித்து பின் குறையுள்ள இடத்தில் அஷ்டபந்தனம் சேர்த்துப் பூரணம் செய்க.

வ்ருஷபீ, வீரபத்ரீ ச கரிணீ, இந்துமதி.ததா.I

உலிநீ, மாதவீ சைவரமணீ வாமினீ ததா. என்று அஷ்டபந்தனஎட்டு அதிதேவதைகளின்II

மந்திரங்களைக் கூறி அஷ்டபந்தனத்தைச் சுற்றி ந்யாஸம் செய்ய வேண்டும். (இதனால் அஷ்டபந்தனம் சிவாசாரியார்கள் சாற்ற வேண்டும் என தெரிகிறது. முற்காலத்தில் அஷ்டபந்தன ஆசாரியர் என்று ஒருவரை உதவிக்கு வைத்துக் கொள்ளுவார்கள். பந்தனம் போடும் போது லிங்கமோபிம்பமோ அசைந்து, அசைவு ஏற்பட்டால் சாந்தி கும்ப தீர்த்த ப்ரோக்ஷணம், கும்பாபிஷேகத்தில் உள்ளபடி யாகம் தத்வார்ச்சனை, ஸ்பர்ஸாகுதி, தத்வஹோமம் யாவும் உண்டு. ஸ்வாமியை மறுபடி மூலஸ்தானத்தில் சேர்க்கும் போது கூடுமானவரை நல்லவர்கள் மட்டுமே ,பார்க்க வேண்டும் என்கிறது ஆகமம். மற்றொரு அஷ்டபந்தன விதி முறையானது,இதற்கு நல்லநாள், தோஷமுள்ள நாள், நட்சத்ரம், திதி, வாரம் யாவும் நீக்கிப் பார்க்கத் தேவையில்லை. உடன் கடத்தில் ஆவாஹனம் செய்யச் சொல்லியதுடன், த்ரவ்யம் இல்லாவிடினும், வேற்றரசர்கள் பயத்தினால் முறைப்படி ஏதும் செய்ய முடியாதபோதும் கூட ஒரு வருடத்திற்கு தோஷமாகாது. ஒரு வருடத்திற்கு மேல் கடந்து விட்டால் எல்லா மாதத்திலும் அஷ்டபந்தனம் செய்யலாம். எல்லா வாரத்திலும், எல்லா நட்சத்திரத்திலும் செய்யலாம். நட்சத்திரத்தில் மட்டும் ஜீவன், குருடு இவைகள் நீக்கி மற்ற நட்சத்திரத்தில் செய்யவும். ஆனால் குரு அஸ்தமயன காலத்தில் செய்ய கூடாது. சுக்ராஸ்தமன காலத்தில் மனுஷ்யகர்மாவான சௌளம் முதலானவை என்பதால், (உபநயநம்முதலானவை) கூடாது. ஆனால் சிவனுடைய கர்மாவில் (அஷ்டபந்தன கும்பாபிஷேகம்) ப்ரதிஷ்டை என்பதால், அந்தரித, புனராவர்த்தன ப்ரதிஷ்டை, உத்ஸவம் யாவும் சுக்ராஸ்தமனத்திலும் செய்யலாம். சங்கு ஸ்தாபநம், கர்ஷணம், நூதன க்ராமநிர்மாணம், ரதம்செய்தல், யாவும் சுக்ர அஸ்தமன தோஷம் பார்த்து அது இல்லாத காலத்தில் செய்யலாம்.

அந்தரித ப்ரதிஷ்டையின் பகுதி விவரம்:- ஆலயம் சங்கடபக்ஷத்தில் ஜீர்ணமாயின், மூர்த்தியை ஒரு மாதம் வரையில் கும்பத்திலும், இரண்டு மாதம் வரை கத்தியிலும், மூன்று மாதம்

சூலத்திலும், 6 மாதம் சித்ர படத்திலும் பாலாலயம் செய்து விதிப்படி பூஜிக்க வேண்டும். அப்படி பூஜிக்கும் போது அந்த தாரு பிம்பம் பழுதடைந்தாலும், துண்டாக(பிளவு படினும்) தேசத்தில் மஹாமாரி, ஜ்வரம், க்ராம ஜனங்களுக்கும் அரசனுக்கும் பீடை நாசம் ஏற்படும். அந்த தோஷம் போவதற்காக ப்ரஹரசாந்தி செய்து, தினம் 15 நாள் சாந்தி ஹோமம் செய்து, வேறு பிம்பம் செய்க என்கிறது. இதனால் மறுபாலபிம்பம் செய்யலாம் எனத் தெரிகிறது.

கணேசர், அம்பாள், ஸ்கந்தர், ஸோமாஸ்கந்தர் முதலிய மூர்த்திகளுக்கு இதேவிதி முறை என்றும், ஸோமாஸ்கந்த மூர்த்தியை ஸ்நபநாபிஷேகம் செய்து, அந்த இடத்தில் இருந்து மாற்றி மஹாமண்டபத்திலோ, சுக்ர மண்டபத்திலோ வைத்து ஸ்நபநா அபிஷேகம் செய்து நித்யபூஜை மாத்திரம் செய்க. விசேஷபூஜை கூடாது. விக்னேச்வரர் கௌரீ முதலான மூலபேரங்கள், விமானத்தில் பழுதடைந்தாலும், கும்பத்தில் மூர்த்தி சக்தியை ஆவாகித்து முறைப்படி ஹோமங்கள் செய்க. மூர்த்தியை எடுத்து வேறொரு இடத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். அந்த கடத்தினால் அந்த மூர்த்திக்கு அபிஷேகம் செய்து நித்திய பூஜை மாத்திரம் செய்ய வேண்டும். தினந்தோறும் பத்து கும்பங்கள் வைத்து சாந்தி ஹோமம், அஸ்த்ர மந்திர ஜபங்கள் செய்து, தினந்தோறும் அந்த கும்பங்களால் அபிஷேகம் செய்ய வேண்டும். இவ்வாறு ஒரு காலம், இரண்டு காலம், மூன்று காலம் அபிஷேகம் செய்து ஆலயம் பழுது பார்க்கப் பட்டபின், மறு யாகம் செய்து, முன் கூறிய விதிப்படி அபிஷேகம் செய்ய வேண்டும். எந்த சமயத்தில் ஆலயம் சரியாகிறதோ அந்த க்ஷணமே அந்த மூர்த்தியை அந்த இடத்தில் ஸ்தாபித்து பூஜிக்க வேண்டும். மாச சூன்யம், பட்ட சூன்யம், வார சூன்யம், துர்தினம், கெட்ட நட்சத்திரம் என தள்ளி போடாமல் உடனடியாக மூர்த்தியை பழைய இடத்தில் ஸ்பாதித்து பூஜிக்க வேண்டும். பழுதடைந்ததை சரி செய்ததால் (முன் சொன்னபடி) தோஷம் ஆகாது.

அம்சுமான் ஆகமத்தில் ஸம்ப்ரோக்ஷண விதி

ஆவர்தம் முதலாவது, அனாவர்தம் இரண்டாவது, புனராவர்த்தம் மூன்றாவது, அந்தரிதம் நான்காவது என பட்டியலிட்டு, வரிசைப்படுத்திக் காண்பிக்கிறது. கர்ஷணம் முதல் ப்ரதிஷ்டை வரை செய்வது ஆவர்தம் எனத் தெளிவாகக் கூறுகிறது. மற்றவைகளில் ஆத்ய பாலாலயம் பற்றி கூறி அதிலிருந்து மூலாலயம் செல்வதே ஆவர்தம் என கூறுகிறது.. ஆனால் இதில்தான் கர்ஷணம் முதல் என கூறுவதால் பூமிபரீக்ஷை, சங்குஸ்தாபநம், கர்பபேளாஸ்தாபநம் சிலாசங்கிரஹணம், அனைத்தையும் நினைவுபடுத்தும்வண்ணம் கர்ஷணாதி என்ற பதம் வசனத்தில் உள்ளது.

ப்ராயச்சித்தம் முதல் யாவும் அனாவர்தம் என ஒரே வரியில் கூறியுள்ளது. ப்ரத்யங்கம் உபாங்கம் இவற்றில் குறை ஏற்பட்டாலும், பிம்பம் சித்ரபீடம் இவற்றில் குறை ஏற்பட்டாலும், தளவரிசை பிளவு ஏற்பட்டாலும், ஆவுடையாரின் பத்மபீடத்தில் பழுதடைந்தாலும், ஆயுதங்களில் குறை ஏற்பட்டாலும், ப்ரோக்ஷண விதிப்படி செய்வது அந்தரிதம் எனவும், புனராவர்தனம் (இரண்டாம் முறை ஆவர்தநம்) என கூறப்பட்டுள்ளது. ப்ராஸாதம் விழுந்தாலும், லிங்கமானது வெடித்தாலும், லிங்கத்தின் சக்தியை நன்றாக (கும்பத்தில்) ஆவாஹநம் செய்து பாலபிம்பத்தில் சேர்த்துவிட்டு ஆலயம் முன்னிருந்ததைப் போல் அனைத்து முறைப்படி ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும் என்கிறது அம்சுமாகமம். இவ்வாறு செய்வதில் பெரிய அளவில் செய்வது பற்றியும், சாதாரண அளவில் செய்வது பற்றியும், கூறுகையில் மனதில் திருப்தியாகும் வண்ணம்செய்க. ஜீரணம் ஏற்பட்டவுடன் மூலபிம்பத்திலிருந்து சக்தியை முறைப்படி பாலாலயம் அமைத்து, சேர்த்த பின்பு ,மூலஸ்தானத்தில் கூடு அமைத்து அதில் உள்ள மூர்த்தியை கூட்டுக்குள் உள்ள கிளியைப்

போல் பார்த்து கொள்ள வேண்டும். விமான சக்தியையும் கடத்தில் யோஜித்து, பாலலிங்கத்தில் உள்ள விமானத்தில், யோஜிக்க அங்குள்ள மூலலிங்கத்தில் சக்தியையும், விமானசக்தியையும், பக்ஷியைப்போல் (கூண்டுக்குள் இருக்கும்) பாவித்து போற்றி பாதுகாக்க வேண்டும். லிங்கபஞ்சரம் (லிங்க கூடு) இவைகளை பாலலிங்கத்தில் உள்ள மரக்கூண்டு விமானத்தில் யோஜித்து ரக்ஷிக்க வேண்டும். அதனால் கிளிக் கூண்டு எனப்பெயர் ஆகும். அந்தணர்கள் மூலம் சுபயோகம், காலம் இவைகளை அனுசரித்து பெருத்த அளவில் செய்க. மனம் நிறைந்த அளவுச் சிற்பியை கொண்டு உத்தரணம் செய்யவும். (மூலஸ்தானத்தில்) நித்ய பூஜை இல்லாதிருந்தால், அனைத்து கர்மாக்களும் பயனற்று போய்விடும். அதனால் மிகவும் ப்ரயாசை எடுத்துக் கொண்டு ஆலயம் நன்றாக அமைக்கவும், சிற்பிகார்யம் முடிந்தவுடன் (அவருக்கு செய்ய வேண்டிய மரியாதைகளை செய்து அனுப்பிவிட்டு) மண்டபம், கர்பகிருஹம், ப்ராகாரம், பரிவார ஆலயம், மடப்பள்ளி, ஆலய விமானம், பலிபீடம் இவைகள் அனைத்தையும் சுத்திக்காக மார்ஜனம், புண்யாஹப் ப்ரோக்ஷணம் செய்து, எட்டு திக்கிலும் வாஸ்துபர்யக்னீகரணம் செய்து (வாஸ்து சாந்தியின் அந்த பஸ்மத்தை விஸர்ஜனம் செய்துவிட்டு லிங்கத்தின் பீடாக்ருதியை ஒட்டி (விருத்தம் (அ) சதுரஸ்ரம்) பிரதானயாக குண்டம் கற்பித்து முறைப்படி ப்ரோக்ஷணம் செய்க. இந்த படலத்திலேயே ரக்ஷோக்ன ஹோமம், அங்குரார்பணம் யாவும் விபரமாக கூறப்பட்டுள்ளது. ஸ்நபந விதி, த்ரவ்யங்கள் யாவும் மிகச் சிறப்பாக கூறப்பட்டுள்ளது.

ஜீர்ணமானதை சரிசெய்ய, சிற்பி ஸ்பர்ஸம் (விமானம் முதலிய) இடங்களில் ஏற்பட்டவுடன், நித்ய பூஜைக்கு விரோதமாகும். ஆதலால் தினம் நித்ய பூஜையை முடித்தபின் சிற்பி கார்யம் ஆரம்பிக்க வேண்டும். விமானம் சரிசெய்யும் வரை பிரதிதினம் சாந்தி ஹோமம் ஸ்நபனம் யாவும் செய்யப்பட வேண்டும். ஸ்வயம்புவாதி லிங்கங்களுக்கு ஒரே மூலப்பொருளினால் ஆலயம் அமைக்க வேண்டும். அதாவது கருங்கல் என்றால் ஆத்யேஷ்டகா முதல் ஸ்தூபி வரை செய்ய வேண்டும். செங்கல், சுதை (மண்) எதுவானாலும் அடி முதல் ஸ்தூபி வரை ஒரேத்ரவ்யமே உபயோகப்படுத்தப்பட வேண்டும். ஜீர்ணமாயின் அதேதிரவ்யத்தைக் கொண்டு சரிசெய்ய வேண்டும். வேறு த்ரவ்யம் கலந்தால் ராஜா, ப்ரஜைகள் யாவருக்கும் தீங்கு நேரிடும். நதி முதலியவைகளால் ஆலயம் சேதமடைந்தால் அதனை 100 தண்டம் அளவு தள்ளி வேறு இடத்தில், முன்பு இருந்த ரூபத்திலேயே ஆலயம் அமைக்க. மாறுபாடாக செய்யின் கர்தாவுக்கு தீங்கு நேரிடும். இவை அனைத்தும் அந்தரிதம் மற்றும் புனராவர்த்தனத்தின் விதிபடலத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது.

இனி குமாரதந்திரம் நூலில் ஸம்ப்ரோக்ஷண விதியைப் பற்றி காண்போம்.

ஆவர்தம் பூனராவர்தம் அனாவர்தம் ச கௌசிக.

ப்ரோக்ஷணம் த்ரிவிதம் ப்ரோக்தம் தத்தத்பேதமதசீருனு (குமாரதந்திரம்)

என ஆரம்பிக்கிறது. இங்கு ஆவர்தம், புனராவர்தம், அனாவர்தம் என்று மூன்று கூறியுள்ளது.

முதலில் செய்த பாலாலயத்திலிருந்து மூலபேரத்தில் பிரதிஷ்டை செய்வது ஆவர்தம் என்றும், மற்ற ஆகமங்களில் கூறியபடி ப்ராஸாதம் லிங்கம் பிம்பம் ஜீர்ணமடைந்திருப்பின் உடன் இரண்டாவது பாலாலய விதிப்படி சக்தியை பாலாலயத்தில் வைத்து குறைகள் யாவும் சரிசெய்தபின் அதே மூலாலயத்தில் திரும்ப சக்தியை ஸ்தாபித்து பூஜைகள் யாவும் செய்வது புனராவர்தம் எனவும், பிரதிமை, பீடம் பின்னமானாலும் சுதை வேலை குறைவுப்பட்டாலும், ப்ரத்யங்கம், உபாங்கம் குறையுள்ளதாகிவிட்டாலும் ப்ரமாதத்தினால் (கவனக்குறைவு) விழுந்தாலும், திருடர், சண்டாளர், நாத்திகர் இவர்கள் மூர்த்தியைத் தொட்டாலும், பிறப்பு, இறப்பு தீட்டு ஆலயவளாகத்தில் ஏற்பட்டாலும், எட்டு நாட்களுக்கு மேல் 100 நாட்கள் வரை பூஜை

இல்லாதிருந்தாலும், அனாவர்த்தம் முறையில் ஸம்ப்ரோக்ஷணம்,மற்றும் சாந்திஸ்நபநம் செய்து பின்பு பூஜிக்க வேண்டும். யாத்ரா ஹோமத்துடன் கூடியது, ஆவர்தப் ப்ரதிஷ்டையாகும். திதி, நக்ஷத்திரம், வாரம், யோகம் யாவையும் பார்க்காமல் உடன் செய்வது அனாவர்தம். முதலில் ஸ்தாம்பித்த மூர்த்தியையே மறுபடியும் பிரதிஷ்டா விதிப்ரகாரம் ஸ்தாபநம் செய்வது தோஷம் ஆகும். ஆனால் ஸம்ப்ரோக்ஷணம் சொல்லப்பட்டுள்ள. ஜலாதி வாஸம், நயனோன்மீலனம், சயனம் முதலியன இல்லாது செய்தல் வேண்டும். ஸம்ப்ரோக்ஷணம் மட்டும் அவசியமாகும். மேற்கூறிய தோஷங்கள் ஏற்பட்டால் உடன் கடத்தில் ஆவாஹித்து பூஜிக்க வேண்டும். ஏழு நாட்கள் வரை தொடர்ந்து கும்பகத்தில் பூஜை செய்க. அதற்குமேல் காலம் தேவைப்பட்டால் பாலாலயம் அமைத்துப், பிறகு மூலாலயத்தில் முறைப்படி சேர்ப்பதேமுறையாகும். இதிலேயே அனாவர்தம், புனராவர்தனம் இரண்டும் அமைந்துள்ளது.

இனி சூக்ஷ்மாரகமம் நூலில் ஜீர்ணோத்தார விதியைப் பற்றி காண்போம்.பக்கம்143ல்

லிங்கத்திலோ, பிண்டிகையிலோ, பிரதிமையிலோ, ஆலயத்திலோ, தருணாலயலிங்கத்திலோ, பரிவாராலயங்களிலோ, ப்ராகாரத்திலோ மற்றவைகளிலோ ஜீர்ணோத்தாரம் செய்ய கூடிய இடங்களில் உடனேஉத்தரணத்தைச் (செப்பனிட்டு மேம்படுத்துவதை) செய்யாவிடின் அந்த இடத்தை விட்டு தெய்வ சக்தியானது வேறு இடத்திற்கு சூரியமண்டலத்திற்குச் சென்று விடும். எப்படி ஜீர்ணமான துணிகளை நாம் விட்டு விடுகிறோமோ, அதைப்போல் தேவதைகள் அதனை விட்டு உடன் அங்கிருந்து அகன்றுவிடும். அதைப் பார்த்து, வேதாளங்கள், பிசாசுகள், ப்ரம்மராட்சதர்கள், சூன்யமான அந்த வெற்று இடத்தை ஆக்ரமித்துக் கொள்கிறார்கள். மாமிசம் எடுக்கும் பொருட்டு பட்சிகள் கூடுவது போல கூடிவிடுகிறது. அதைப் பார்த்த தேவதைகள் உபமண்டலத்தை அடைந்து சாபம் இடுகிறார்கள். இதனால் ராஜா, ராஷ்ட்ரங்களுக்கும், மந்திரிகளுக்கும், கிராமத்திற்கும், துர்பிட்சம், மரணம் முதலியவை ஏற்படும். பூஜிப்பவர்களையும், நாயைப் போற்றுபவனுக்கு் நாயினாலேயே நாசம் என்பது போல் நாசம் செய்யும். அதனால் ஆகமநெறி அறிந்தவர்களைக் கொண்டு உத்தாரணம் செய்வது மிகவும் அவசியமாகிறது. பாலலிங்க ஸ்தாபந முறைப்படி பாலலிங்கம் தயார் செய்து பூஜிக்கவும். ஏழு நாள்வரை கும்பத்தில் ஆவாஹனம் செய்து பூஜிப்பது உத்தமம் எனவும், பதினைந்து நாட்கள் வரை பூஜிப்பது மத்யமம் எனவும், ஒரு மாதம் வரை அதமம் எனவும் கூறுகிறது.

பிரதிதினம் புதியஜலத்தை நிரப்பி முன்புபோல் பூஜிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதால், பூசித்த கும்பத்தைக் காரணாகமத்தில் கூறியதைப்போல், அபிஷேகம் செய்து விடவேண்டும் என அறிக. பாலபிம்பத்தில் ஸ்வாமியை ஆவாஹனம் செய்து விமானத்தில் உள்ள தேவதைகளையும், பரிவார ஆவரண தேவதைகளையும் அங்கேயே சேர்த்திட வேண்டும். ஆலயம் லிங்கம் யாவும் சரி செய்யும் வரை நித்யபூஜைகள் யாவும் தருணாலயத்தில் நடைபெற வேண்டும். மனிதர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கங்களில் (பாணத்தில்) அரை உளுந்து அளவு குறைவு ஏற்பட்டாலும், ப்ரம்மபாகத்தில் 4 உளுந்து அளவு, விஷ்ணு பாகத்தில் 3 உளுந்து அளவு குறைவு ஏற்பட்டாலும் தோஷமாகாது. சொல்லிய அளவிற்கு மேல் குறை ஏற்படின் நிவாரணம் செய்தே பூஜிக்க வேண்டும். கணங்களால் ப்ரதிஷ்டைச் செய்யப்பட்ட காணவ லிங்கங்களில் ஒரு உளுந்து முதல் 10 உளுந்து அளவு வரை குறைவு ஏற்பட்டாலும் தவறில்லை. அதற்கு மேலானால் ஜீர்ணோதார விதிப்படி செய்யவும். மானுஷ லிங்கத்தில் பீடத்தில் குறை ஏற்பட்டால் அவ்வாறே செய்க. பீடத்தில் குறை ஏற்பட்டால் அதை நீக்கி வேறு புதிய பீடம் லிங்கத்தை அனுசரித்து செய்ய வேண்டும். சுவாயம்புவம் முதலியவைகளில் ஜீர்ணம் ஏற்பட்டால் ஸகளமூர்த்திகள் போல பட்டபந்தங்களால் அவைகளை (ஸ்வரணம்/வெள்ளி) சுற்றி கவசம் மாதிரி போட்டுபூஜிக்க வேண்டும்.

வாமதேவ பத்தியில் உள்ள பிரதிஷ்டை வகை விவரங்களைக் காண்போம்.

நான்கு விதமான பிரதிஷ்டைகள் உள்ளன என கூறும் வாமதேவ பத்ததி ஆசிரியர், காமிகாகம விதியில் உள்ளபடி எனவும் கூறுகிறார். ஆனால் ஆவர்தம், புனராவர்தம், அனாவர்தம், அந்தரிதம் என மாறுதலாக நான்கு விதமானவைகள் பற்றி கூறுகிறார். எந்த கிராமத்தில், தேவாலயம், லிங்கம் இவைகள் இல்லாதிருப்பின் அந்த இடத்தில் ஆலயம், லிங்கம் இவைகளை பிரதிஷ்டை செய்து வைப்பதற்கே அனாவர்தம் என பெயர் கூறுகிறார். சமுத்திரத்தினாலோ, நதிகளால், வனமிருகங்களால்,லிங்கம் அல்லது ஆலயம் சேதமடைந்தாலோ அந்த லிங்கம் ஆலயம் வேறு இடத்தில் பிரதிஷ்டை செய்வதற்கே ஆவர்தம் என பெயர் கூறுகிறார். இதில் மற்ற மூலாகமங்களுக்கும் இதற்கும் கூற்றில் வேறுபாடு தெரிகிறது. மற்றைய ஆகமங்களில் ஆத்ய பாலாலயத்திலிருந்து மூலாலயம் சேர்ப்பதே ஆவர்தம் எனப்படும். நதி முதலியவைகளால் சேதமடைந்த ஆலயத்தை விட்டு நூறு தண்டம் தள்ளி ஆலயம் லிங்கம் பிரதிஷ்டிப்பதற்கே அனாவர்தம் எனப் பெயர். காமிகாமகத்தைக் கொண்டு சொல்வதாக சொல்லும் இவர் அதற்கு விரோதமாகவே பொருள் சொல்கிறார். புனராவர்தம், அந்தரிதம் யாவும் மற்றைய ஆகமங்களில் உள்ளது போலவே இதிலும் கூறப்படுகிறது. அநாவர்தப் பிரதிஷ்டை என கூறியதில், சிலாசங்கிரஹணம் மிக அழகாக கூறப்படுகிறது. ஆசாரியரும், ஸ்தபதியும் சேர்ந்து ப்ராமணர்கள் ருத்விக்குகள் அனைவருடன் மங்கள வாத்தியங்களோடு சிலா சங்கிரஹணத்திற்காக சுபதினம், சுபலக்னத்தில் செல்ல வேண்டுமென்கிறார்.

சிலாசங்கிரஹணம்:-மலையருகே சென்று தகுந்ததான கல்லைப் பார்த்து, சிவமயமாக அந்த மலையை த்யானித்து, பிம்பத்திற்காக, மலையிலிருந்து சிலைக்காக கல்லை வெட்டி எடுக்கவேண்டும். அந்தக் கல்லில் சிவனை ஆவாஹணங்களால் பூஜித்து, பின்பு மேற்படி கல்லிலிருந்த சிவனை ஒரு கும்பத்தில் ஆவாஹணம் செய்து பூசிக்க வேண்டும். எந்த விதமான அளவு லிங்கம் செய்ய வேண்டும் என்பதை கர்த்தாவின் விருப்பபடி அவரது நட்சத்திரத்தின்படி, அந்த அளவுப் ப்ரமாணம்,உள்ளதாக மரத்தினால் ஒரு சிறிய பாலலிங்கம் ஒன்று முதலில் செய்ய வேண்டும். இவ்வாறு ஒரு சரலிங்கம் செய்து,மலையிலிருந்து கும்பத்தில் ஆவாஹணம் செய்த, அந்த அச்சிவனை சிலையிலிருந்து அந்த சரலிங்கத்தில் ஆவாஹணம் செய்து கொண்டு புதிய மரத்திலான அந்த சரலிங்கத்தைப் புறப்பாடாக காடுமலைபகுதியிலிருந்து தங்கள் வசிப்பிடத்திற்கு செல்ல வேண்டும். அங்கு உரிய ஓர்இடத்தில் வைத்து அந்த லிங்கத்தை கவனத்துடன் நித்திய பூசையை செய்து வரவேண்டும்.கொண்டு வந்த கற்சிலையை சிற்பி வசம் லிங்கம் செய்திட சேர்க்க வேண்டும். மரத்தினாலும் ஒரு லிங்கம் செய்து பூஜிக்க வேண்டும். அதுதான் பால லிங்கம் என்பது. பாலாலயத்தில் வைத்து, சரலிங்கமாக வைத்து பூஜிக்க வேண்டும். இதனால் தான் ஆத்யபாலாலயத்தில் ஆதார சிலையாவும் கிடையாது என்பது ஆகமத்தில் கூறப்படுகிறது. கொண்டு வந்த சரலிங்கத்திலிருந்து, கும்பத்தில் ஆவாஹணம் செய்து, கும்பத்திலிருந்து பால லிங்கத்தில் ஆவாஹணம் செய்து கும்பாபிஷேகம் செய்க. சதுஷ்டி கிரியைகளால் பாலலிங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்கிறார். இதன்பிறகு சிற்பி மூலலிங்கத்தை தயார் செய்தபின்பு பாலலிங்கத்திலிருந்து மூல லிங்கத்திற்கு சாஸ்வத ப்ரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டும். இதைத்தான் வாமதேவ பத்திக்காரர் அனைவரும் கூறுகிறார். இதற்கு அனாவர்த ப்ரதிஷ்டை என கூறுவது சரியா என யோசிக்க வேண்டும். ஏற்கனவே ஆவர்தம் என்பதற்கு இரண்டாம் முறை ப்ரதிஷ்டை செய்வதற்கே என

பொருள் பொருத்தமாகிறது. மேலும் பல ஆகமங்களில் இந்த ஆத்ய பாலலிங்கத்திலிருந்து மூல லிங்கத்திற்கு வருவதே ஆவர்தம் என கூறியுள்ளது. "கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம் ஆவர்தம்" என்று, சூக்ஷ்மாகமம் கூறியதை இங்கு கவனிக்கவும். புனராவத்தன ப்ரதிஷ்டையில் ஒரு விஷேசம் கூறப்பட்டுள்ளது. விமானம் ஸ்தூலலிங்கம் எனவும், சூக்ஷ்மலிங்கம் சதாசிவம் எனவும்கூறி, ஸ்தூலம் இல்லாது சூக்ஷ்மம் இல்லை. சூக்ஷ்மம் இல்லாத, ஸ்தூலம் இல்லை, அங்காங்கி பாவம் இரண்டுக்கும் உண்டு, எனக் கூறியதுடன், புனராவர்தனம் செய்யும் விஷயத்தில் ஸ்தூலம், சூக்ஷ்மம் இரண்டையும் சேர்த்து கலாகர்ஷணம் செய்து, பாலாலயம் செய்யச் சொல்லியுள்ளது. சில இடங்களில் விமானத்தை மட்டும் கலாகர்ஷணம் செய்துவிட்டு, அதன் கீழே உள்ள மூலபேரத்தில் நித்தியபூஜை யாவும் வழக்கம்போல் செய்யப்படுகிறது. முன்பு சொன்ன ஸ்தூலம், சூக்ஷ்மம் இரண்டையும் சேர்த்தே கலாகர்ஷணம் செய்ய வேண்டும் என்று சொல்லிய வாக்கியத்தால் விமானத்தை மட்டும் பாலாலயம் செய்து விட்டு மூலஸ்தானத்தில் உள்ளே பூஜை செய்துகொண்டு இருக்கும் போதே மேலே ஏறி சிற்பிகள் வேலை செய்வது சரி இல்லை என்பது தெளிவாகிறது. இரண்டையும் (விமானம், மூலவர்) சேர்த்து பாலாலயம் செய்த பிறகே சிற்பி காரியம் தொடங்க வேண்டும்.என்பதே பல ஆகமங்களில் முடிவான கருத்து ஆகும்.இதுவரை சிவாக மங்களில் சிவலிங்க பிரதிஷ்டைவகை முறைகள் எடுத்து கூறப்பட்டது.சிவலிங்க வழிபாடு எல்லா பயனையும் அளிக்கவல்லது.அதனை ஆகமவிதிமுறைப்படியே செயவது மிக மிக அவசியமானதாகும்.இதன் பயன் விதிமுறைகளை முழுமையாக பின்பற்றுவதால் மட்டுமே நாட்டுமக்களுக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும் கிடைக்கும்.விதிமுறைகளைக் கைவிடுவதாலோ மீறுவதாலோ தீயபயன்கள் யாவர்க்குமே ஏற்படுமாதலால் சைவாகம நெறிகள் முற்றிலுமாக பின்பற்றவேண்டியவை ஆகம். மூவுலகிலும் ,சிவலிங்க பூசைக்கு நிகரானதோ இதை விட உயர்வானதோ வேறு ஒரு தர்ம புண்ணிய கிரியை இல்லை என உறுதிபடஆகமங்கள் தெரிவிக்கின்றன.எனவே சிவபுண்ணிய செயல்களின் பயனைப்பெற முயல்வோமாக. சைவ நீதி உலகெலாம் மேன்மை பெற பாதுகாப்போமாக. வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து இறைவனை சிந்தித்து வாழ்த்தி நிறைவு செய்கிறோம்.

லோகாஸ்ஸமஸ்தாஸ் சுகினோபவந்து.

சுபமஸ்து நித்யம்



த்ரிபதார்த லக்ஷண விவரணம்

ஸாஹித்ய & மீமாம்ஸா விசாரதா,
ஸாஹித்ய & மீமாம்ஸா சிரோமணி,
சிவாகம ரத்னாகரம், சிவாகம பூஷணம்.
ஆகம ஆசிரியர்
காஞ்சிபுரம் சிவஸ்ரீ Dr. S. உமாபதி சிவாசார்யர் M.A., Ph.D.,

ஆகமங்களில் த்ரிபதார்த லக்ஷண விவரணம் என்ற தலைப்பில் பேசுவதற்கு குருவருளும், திருவருளும் துணை செய்ய முயற்சிக்கிறேன்.

ஆகமம் என்பது 28 மூலாகமங்களாகவும், 207 உபாகமங்களாகவும், எம்பெருமான் சர்வேஸ்வரனால் அனுக்ரஹம் செய்யப்பட்டது. அவை ஒவ்வொன்றிலும், சர்யை, க்ரியை, யோகம், ஞானம் என்று நான்கு பாதங்கள் கூறப்பட்டுள்ளன.

சர்யாபாதம் :

சமயதீக்ஷை செய்து கொண்டு குரு சுஸ்ருஷை, புஜோபகரணங்களை தயார் செய்தல், எம்பெருமான் ஸர்வேஸ்வரன் இருக்கக்கூடிய ஆலயங்களில் உழவாரப்பணி முதலிய சேவைகளால் தூய்மை செய்தல் முதலானவைகளை கூறுவது சர்யா பாதமாகும்.

க்ரியாபாதம் :

விசேஷம், முதலான தீக்ஷைகளைப் பெற்றுக்கொண்டு ஆத்மார்த, பரார்த்த, பூஜைகளை செய்து கொண்டு தீக்ஷை முதலான விஷயங்களை, செய்பவைகளும் ஆலய நிர்மானங்கள், போன்றவைகளும் க்ரியாபாதத்தில் கூறப்பட்டுள்ளது.

யோகபாதம் :

யம, நியம, ப்ராணாயாம, ப்ரத்யாஹார, தாரண, த்யான, யோக, ஸமாதி, முதலான விஷயங்களைக் கூறுவது யோகபாதமாகும்.

ஞானபாதம் :

முன்சொன் மூன்று பாதங்களில் உள்ள கர்மாக்களை அனுஷ்டித்து அதன் பயனாக எம்பெருமான் ஸர்வேஸ்வரனுடைய திருவருளோடு பாசத்தை விட்டு விலகி பதியாகிய பரம்பொருளை அடைவதை

லக்ஷசணவிவரணம்” பற்றி சற்று சிந்திப்போம்.

த்ரிபதார்த லக்ஷணம் விவரணம் என்றால் என்ன?

த்ரிபத என்பதற்கு மூன்று சொற்கள் என்று பொருளாகிறது. அவை பதி, பசு, பாசம் என்பனவாகும். பதி, என்கிற பரசிவத்தைப் பற்றியும், பசு என்கிற ஆன்மாவைப் பற்றியும், பாசம் என்கிற மலத்தைப் பற்றியும் பொருள்படத்தெளிவாக உரைப்பதே “த்ரிபதார்த லக்ஷண விவரணம்” ஆகும்.

சுருக்கமாகச் சொன்னால், பசுவாகிய ஆன்மா பாசம் என்கின்ற மலத்தில் இருந்து விடுபட்டு பதியாகிய பரசிவத்தை அடைவதே இதன் மூலக்கருத்தாகும்.

இனி ஒவ்வொன்றையும் பற்றி விளக்கமாகப் பார்ப்போம்.

பதிலக்ஷணம்

“பதி” என்பது சிவபெருமானே அந்த பரம்பொருளுக்கு பல விதமான பெயர்களுண்டு அவைகள்

பரப்பிரம்ஹம், பரசிவம், பரமாத்மா, பரஞ்ஜ்யோதி மூலப்ரக்ருதி என்று அழைக்கின்றன.

அந்தபதிக்கு, ஸ்வாயம்புவாகமத்தில், “எண் குணத்தான்” என்று சொல்வதற்கு ஏற்ப எட்டு விதமான, பெயர்களை உடையவர் என்று கூறப்பட்டுள்ளன. அவை.

अप्रमेयमनिर्देश्यमनौपम्यमनामयम् ।
सूक्ष्मं सर्वगतं नित्यं ध्रुवमव्ययमीश्वरम् ॥

1. अप्रमेयम् - பாச ஞானத்தால் காணப்படமுடியாமை
2. अनिर्देश्यम् - குணம் குறிக்கோள் இல்லாமை
3. अनामयम् - அனாதிமலமின்மை

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

4. सूक्ष्मम् – ஊனகண்களால் காணப்படாமை
5. सर्वगम् – எங்கும் நிறைந்துள்ளமை
6. नित्यम् – காரணமில்லாமை
7. ध्रुवम् – அசைவற்ற தன்மை
8. अव्ययम् – அழிவற்ற தன்மை

என்று மேற்கூறிய எட்டு குணங்களையும் தன்னுள் அடக்கி அப்பாற்பட்டு விளங்குபவரும் ஈஸ்வரன் என்ற பெயருடன் விளங்குபவரும் சாந்தயதீத கலைக்கு அப்பாற்பட்டவரும் ஆனவர் "பதி" என்று அழைக்கப்படும் பரசிவன் ஆவார். இவரைப் பற்றி மேலும் வேறு பல நூல்களில்

1. वायव्ये –
अस्ति कश्चिदपर्यन्तरमणीय गुणाश्रयः ।
पतिर्विश्वस्य निर्माता पशुपाशविलक्षणः ॥

எல்லையற்ற விரும்பத்தக்க குணங்களுக்கு உறைவிடமானவரும்,பசு பாசங்களிலிருந்து வேறுபட்டவரும், உலகத்தைப் படைக்கின்றவருமான "பதி" ஒருவர் இருக்கிறார்.

2. पौष्करे –
अचेतनं जगद्विप्राश्चेतनप्रेरणं विना ।
प्रवृत्तौ वा निवृत्तौ वा न स्वतन्त्रं रथादिवत् ॥
येऽत्र प्रवर्तकः शक्तः स पतिः परिपठ्यते ।
विनादाध्यासितं विश्वं कर्तृपूर्वकम् ॥
कार्यत्वादानयोः सिद्धं कार्यं कुम्भआदिकं यथा ।

இவ்வுலகிற்கு கர்தா உள்ளாரா? இல்லையா? என்ற சந்தேஹம், எழும்போதும் கார்யத்திற்கு காரணமாக கர்தாவான "பதி""" விளங்குகிறார்.

உதாரணமாக

தேர், முதலிய உயிரற்ற பொருட்கள், உயிருள்ள பொருள் இன்றி தானாக இயங்குவதில்லை. அதுபோல் ஜடமான இவ்வுலகம் ஸசேதனமான பரம்பொருளின், தூண்டுதல் இல்லாமல் தானாக இயங்குவது இல்லை. ஆகையால், இவ்வுலக விஷயத்தில் எவர் ப்ரவர்தகரோ, அவரே

ஞானகிரியா சக்திகளை உடைய “பதி என்று சொல்லப்படுகிறார். மேலும், குடம் தண்ணீரை, தன்னுள் தாங்கும் ஆற்றல் கொண்டு இருந்தாலும் அதை செய்பவர் காரணமாக அமைகிறார். அதுபோல் இந்த ப்ரபஞ்சம் இயங்கிக் கொண்டு, இருந்தாலும், அதற்கு காரணமாக இதை படைத்த கர்தாவும், பதியுமான பரசிவனே.

3. मतङ्गे - एवं हि परतन्त्रत्वाज्जगतोऽस्याखिलस्य तु ।
प्रवृत्तिर्दृश्यते यस्मात् तस्मात् कर्ता महेश्वरः

“பரதந்திரமாக இவ்வுலகம் முழுவதும் இயங்குவதால் இதை இயக்குன்றவர் ஸ்ரீபரமேஸ்வரன் ஆவார்” என்று சொல்லப்படுகிறது.

4. இவ்வறாக உலகைக்காப்பதால் “पातीति पति” “பதி” என்று கூறப்படுகிறார் ஸ்ரீ பரமேஸ்வரன்.

இதுவரை லக்ஷண ப்ரமாணங்களால் வஸ்துஸித்தி என்ற நியாயத்தால் பதியைப் பற்றி பார்த்தோம். இப்பொழுது அசாதாரணமான தர்ம ருபமான லக்ஷணத்தைப் பார்ப்போம்.

पराख्यसूत्रे - दृक्क्रियात्मकमैश्वर्यं यस्य तद्धात्रपूर्वकम् ।
ईश्वरः सोऽत्र मन्तव्यः शक्तिद्वययुतः प्रभुः

இறைவன் தன்னிடமுள்ள ஞானசக்தியின் மூலமாக உலகிற்கு உதவி செய்ய நினைக்கிறார். க்ரியாசக்தியின் மூலமாக உதவி செய்கிறார்.

அப்படிப்பட்ட ஞானக்ரியா ஸ்வருபமான ஈஸ்வரத்தன்மை இயல்பாகவே யாருக்கு அமைந்ததோ அவரே “பதி” என்று கூறப்படுகிறது.

5. இவ்விடத்தில் சிறுவிளக்கம்:- பரமேஸ்வரன் ஸர்வதந்த்ரர், தனக்கு மேல் தலைவர் இல்லாதவர். இயல்பாகவே நிர்மலமான ஞானக்ரியா சக்திகளை உடையவர் என்று கூறப்படுகிறார்.

இருப்பினும் "சக்தியோடுக்கூடியவர்" என்று மட்டும் பொருள் சொன்னால், மலத்தில் அதிவ்யாப்தி வரக்கூடும். அதனால்தான் ஞான க்ரியா சக்திருபம் உடையவர் என்று கூறப்படுகிறது.

ஆகையால் மலபந்தமுள்ள ஆன்மாக்கள் இடத்தில் நிர்மலமான சக்தியில்லை. அதிவ்யாப்தியும் இல்லை அவ்வகையில் கூறுகையில் அனுக்ரஹத்தால் முக்தி அடைந்தவர்களிடமும் நிர்மலமான ஞான க்ரியாருபமான சக்தி இருப்பதால் அதிவ்யாப்தி ஆகும்.

ஆகவே தான் இறைவனிடத்தில் "இயல்பாக" நிர்மலமான ஞானக்ரியா சக்திகள் உள்ளன என்று உரைக்கப்படுகிறது.

முத்தான்மாக்களுக்கு சிவபெருமான், அனுக்ரஹம் இல்லாமல் இயற்கையாக, நிர்மலமான சக்கி, அமைவதில்லை.

६. எல்லாப் பொருளையும் ஒரு சேர அறியும் ஞானத்தாலும் எல்லாச் செயலையும் ஒரு சேர செய்யும் க்ரியையாலும், கர்தாவாக இருக்கும் தன்மை உருவத்தோடு தான் நிகழும். வேறு எவ்வாறும் நிகழாது என்று சந்தேஹம் வருகிறது.

அந்த உருவம் திருவருட்சக்தியே என்று மதங்கபாரமேஸ்வரத்தில் கூறப்பட்டுள்ளது.

मतङ्गे - अथ पत्युरधिष्ठानं स्वशक्तिकिरणात्मकम् ।
तस्यां दिवि सुदीप्तात्मा निष्कम्पोऽचलमूर्तिमान्

"பதி" என்று சொல்லப்படும் பரமேஸ்வரனுக்கு, எது எல்லா காரியங்களிலும், பரவி நிற்கிறதோ, அதுவே ஆதாரமானது. அது விசேஷ குணங்களோடு கூடிய ஸ்தானமாகச் சொல்லப்படுகிறது.

அந்த அதிஷ்டானமும் அவருக்கு வித்யேஸ்வரர் முதலானவர்க்குப் போல வேறுபட்டது அல்ல.

ஆனால், ஞானக்ரியா ரூபமான சக்தியே இவருக்கு அதிஷ்டானமாகும். எப்படி என்றால் சூரியனின் கிரணம் சுடுதலையும் விளக்குதலையும் செய்கின்றதோ, அவ்வாறே ஞானக்ரியா சக்திகளும் மல வலிமையை அழித்துச் சிவ ஞானத்தை விளங்கச் செய்கின்றன. அச்சக்திகளே பரமேஸ்வரனுக்கு, ஆதாரம் என்று உபசாரமாகச் சொல்லப்படுகின்றன.

अशरीरोह्यधिष्ठाता नात्मा मुक्तात्मवद्भवेत् ॥

ஒன்றை அதிஷ்டித்திருக்கின்ற "பதி" முக்தான்மாக்களைப் போல சரீரமற்றவனாக இருக்கமுடியாது என்ற அச்சத்தால் பதிசரீரத்துடன் கூடியவர் என்று வைஷ்ணவர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

அதனை விலக்குவதற்கு अचलमूर्तिमान् என்று பதியை குறிப்பிடுகிறார்.

ஜீவான்மா பரமான்மாக்களின் வடிவம், "சலம்" எனவும் "அசலம்" எனவும் இரண்டாம்.

அவற்றுள், "சலமானது தத்வ புவனங்களாகிய வடிவம் அசலமானது ஞானக்ரிய, தன்மை வாய்ந்த வடிவம். சிவபெருமான் அசல வடிவினனே புவன சம்பந்தமான வடிவானவன் இல்லை என்பது பொருள்.

मतङ्गे -
काष्ठा सैव परा सूक्ष्मा सर्वदिक्कमूर्तात्मिका ।
प्रध्वस्तावरणा शान्ता वस्तुमात्रातिलालसा ॥
आद्यन्तोपरता साध्वी मूर्तिस्त्विनोपचर्यते ।

पराकाष्ठा-முன் சொல்லப்பட்ட அசல மூர்த்தி ரூபமான சக்தியே எல்லாவற்றிற்கும் மேலானது.

இதனால் தத்வ புவனங்களாலாகிய வடிவமுடைய நம் போன்ற பசுக்களைக் காட்டிலும் மேம்பட்டவர் ஞானக்ரியா வடிவானவர் என்று சொல்லப்படுகிறது.

இவ்வாறாக எல்லாவற்றையும் அறியும் தன்மை, எல்லாவற்றையும் இயக்கும் தன்மை கொண்ட பரசிவனை அடைவதே "முக்தி" என்று கூறப்படுகிறது. ஆகவே முக்தி என்பது பரசிவனைக் காட்டிலும் உயர்ந்தது இல்லை. அவரை அடைவதே ஆகும்.

அப்படி பரசிவனைக் காட்டிலும் "மோக்ஷம்" சிறிது உயர்ந்தது, மிகவும் உயர்ந்தது என்று கூறினால் அதற்கு வரம்பு "மீறல்" என்று பெயர் வந்துவிடும். ஆகவே பரமேஸ்வரனைக் காட்டிலும் மோக்ஷத்திற்கு உயர்ந்த தன்மை இல்லை. பெயர் மாத்திரத்திலேயே அது வேறுபடுகிறது. அதில் எந்தக் குறையும் இல்லை.

सूक्ष्मा - பரமானுவைக் காட்டிலும் மிக நுண்ணியது. திசை, அனைத்தையும் கடந்து, எல்லாக் காரியங்களிலும் வியாபித்து இருப்பது.

ஆகவே பரசிவன், மட்டுமே சூக்ஷ்ம வடிவம் கொண்டவர். ஹிரண்ய கர்பர், முதலானவர்கள் ஸ்தூல வடிவமானவர்கள் என்று அறியப்படுகிறது.

सर्वदिक्का ''பதி"யின் உருவம் "எங்கும் வ்யாபித்திருப்பது" என்று பொருள். ஆகவே அவ்யாபக சரீரமுடைய பிரக்ருதியிலிருந்து உண்டான ப்ரத்யும்னன் முதலியவர்களை ஈஸ்வரனாக கூறுகின்ற வைஷ்ணவ வாதமும் மறுக்கப்படுகிறது.

अमृतात्मिका சிவத்தினர்க்கு ருபம், தன்மை உடையது. இச்சொல்லால் மீமாம்ஸகருக்கு ஸித்தமான புருஷேஸ்வர வாதமும் மறுக்கப்படுகிறது. மீமாம்ஸகர், கூறும் புருஷனின் வடிவு அழியும் தன்மை உள்ளது. அந்தப் புருஷனுக்கு புண்யம் முதலியவற்றை ஈட்டுவதில் மட்டுமே ஆற்றல் இருக்கிறது. தனுகரண புவனங்களைப் படைப்பதில் ஆற்றல் இல்லை. ஈஸ்வரத்தன்மை அவனிடத்தில் இல்லை.

प्रध्वस्तावरणा எல்லா பந்தங்களும் அற்றது. அனுக்ரஹ, திரோபாவங்களுக்கு பாசத்தன்மை உண்டு என்று கூறுபவர்களின் வாதம் மறுக்கப்படுகிறது.

ஸதாஸிவப் பெருமானுக்கு பாசபந்தம், இருக்குமென்றால் உலகை படைக்கும் தன்மை பொருந்தாது. அவ்வாறு பார்க்கையில், அனுக்ரஹதிரோபாவங்களுக்குப் பாசத்தன்மை ஒருபோதும் இல்லை. மாறுபட்ட அவ்விரண்டும், பாசங்கள் இல்லை. ஏனென்றால், அவை சிவ பெருமானின் கருணை நிறைந்த கார்ய விசேஷமாக இருக்கின்றன.

ஸ்ருஷ்டி, முதலானவை அனுமானத்தால் அவைகளுக்குப் பாசத்தன்மை இல்லை. ஆகையால் ஸதாஸிவப் பெருமானுக்குப் பசுத்தன்மையும் இல்லை என்று பொருள்படுகிறது.

शान्ता – பரசிவனின் மூர்த்தி விருப்பு வெறுப்பு இல்லாதது. அரசர் முதலியவர்களைப் போல் தம்மை ஆராதிப்பதால் இஷ்டப் பயன்களையும், வணங்காமையால் அநிஷ்டப் பயன்களையும் கொடுப்பவர் ஈஸ்வரர் என்று கூறுவோரின் வாதம் இதனால் மறுக்கப்படுகிறது.

பரமேஸ்வரனுடைய ஆராதனை ஜ்யோதிஷ்டோமயாகம் போல ச்ரேயஸ்ஸாதனமாகச் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டு இருந்தாலும், விசேஷமான மோக்ஷ பயனை தருதலால் பரமேஸ்வரனுக்கு அரசன் முதலியவர்களே, ஒப்புமை இல்லை என்று கூறப்படுகிறது.

அனதால்தான் अतिलालसा பதியின் தோற்றம் அளவில்லா கருணை உடையது என்று கூறப்படுகிறது.

உதாரணமாக

தந்தை விருப்பு வெறுப்பு இல்லாமல் புதல்வர்களை, எப்படிக் காக்கின்றாரோ, அதுபோல ஈஸ்வரன் உயிர்களை அவற்றின் பக்குவத்திற்கு ஏற்றமாதிரி காப்பாற்றுகிறார் என்று கூறப்படுகிறது.

பதியின் வடிவத்திற்கு லயம், போகம், முதலிய பேதம் இங்கு சொல்ல வேண்டியதில்லை.

வித்யேஸ்வரர், முக்த சிவர்களைப் போலவும், ப்ராவஹநித்யேஸ்வர வாதிகள் கூறுவது போல ஆத்யந்தம் உள்ளவர் என்று பதியைக் கூறலாம் என்றால் முடியாது.

आद्यन्तोपरता ஈசனின் உருவம், ஆதியும், அந்தமும் இல்லாதது என்று அர்த்தமாகிறது. எப்படி என்றால்? வித்யேஸ்வரர்களின் வடிவு ஆத்யந்தத்தோடு கூடியது, முக்த சிவர்களின் வடிவோ ஆதியோடு கூடியது. ப்ராவஹநித்யேஸ்வரர்களில் பக்ஷமும், சொல்வதற்கில்லை ஏன் என்றால் ஈஸ்வரத்தன்மை என்பது ஸ்வரூபத்தின் ப்ரகாசமே. அந்த ப்ரகாசம் ஒருபோதும் அழியாதது. அது அழியும் என்றால் ப்ரவாஸநித்யேஸ்வரர்களின் வாதம் ஏற்க தக்கது.

முக்தசிவர்கள் ஈஸ்வரனுக்கு ஸமமான தன்மையை அடைந்திருந்தாலும், வாசணாமலத்தினால் அவர்கள் பதி என்று கூறப்படுவதில்லை. ஏனென்றால் அவர்கள் மனிதர்களாக இருந்தபோது ப்ரயோஜனத்தை மனதில் கொண்டு ஈடுபடுகிறார்கள்.

प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते ।

என்கிற நியாயப்படி அவர்கள் ஈஸ்வரசமத்தை அடைந்தாலும் பதி என்று கூறப்படுவதில்லை.
அவ்வாறாகப் பார்க்கையில்

"साध्वी" என்ற பெயரில் "பதி" தனித்துத்தெரிகிறார்.

साध्वी = பதியின் ரூபம் என்றால் கருணைவடிவமான அருளுடையது என்று பொருள். தமக்குப்பயன் இல்லை என்றாலும் பிறரின் பயன்கருதி அருள்புரியும் தன்மை பதிக்கு உள்ளது. இதில் பிறரின் ப்ரயோஜனம் கருதி செய்வதால் தமக்கு பயனில்லை என்பது குற்றமாகாது. "பதி" ஞானமே வடிவானவர். என்று சொல்கிறோம் அப்படியிருக்கையில் சக்தி அதற்கு எப்படி வடிவமாகும்? என்று கேட்டால் வடிவம் என்பது உபசார வார்த்தையாக சொல்லப்படுகிறது. அது பதியிலிருந்து வேறுபட்டது இல்லை.

இதுவே ஸ்ரீமத் பௌஷ்கரத்தில் ज्ञानक्रिये शिवे प्रोक्ते सर्वार्थे निर्मले परे ।

ஆணவகர்ம மாயா ஸம்பந்தம் இல்லாததும், மேலானதும் எல்லாவற்றையும் அறிவதும், அனைத்தையும் செய்வதுமான ஞானக்ரியா சக்தியே வடிவம் என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து மந்தர மந்த்ரேஸ்வரர்களுக்கும், தீக்ஷையினால் பிந்து தத்துவத்திலும் சதாசிவதத்துவத்திலும் சேர்க்கப்பட்டுள்ள அவர்களுக்கு ஏற்பட்ட சரீரம் இவ்வாறு ஞானக்ரிய வடிவமான உபசாரமான சரீரமில்லை என்று தெளிவாகிறது. ஆகையால் அவர்களுக்கு இருப்பது சுத்தமாயா சம்பந்தமான சரீரமாகும்.

रत्नत्रये - बिन्दूपादानजन्येन तेषां बैन्दवमुच्यते ।
विद्याश्च विद्याधीशाश्च नादाख्यमधिदेवताः ॥
लयभोगाधिकारेण तनुभोगेन्द्रियाणि च ।

நாதாக்யதத்வத்தில் உள்ள "மந்திரர் வித்யேஸ்வரர்" ஆகியோருக்கு சுத்தமாயையால் ஆனபைந்தவ சரீரம் என்றும் லயபோக அதிகாரத்தோடு கூடியவர்கள் என்றும் "ரத்னத்ரயத்தில்" கூறப்பட்டுள்ளது. அவ்வாறே கிரணாகமத்தில்

शुद्धयोनिमयं तस्य वपुरुक्तमकल्मषम् ।

வித்யேஸ்வரருடயை சரீரம், மாயாமல கர்மமாக இல்லாமல் சுத்தமாயையை ஆதாரமாகக் கொண்டுள்ளது என்று கூறப்படுகிறது.

7. पौष्करे- साधकस्य तु लक्ष्यार्थं तस्य रूपमिदं स्मृतम् ।

ஸாதகனின் த்யான பூஜைக்காகவே சிவபெருமானுக்கு திருமேனி கூறப்பட்டுள்ளது.

तत्वप्रकाशेऽपि -
चिदचिदनुग्रहहेतो रूपाण्येतानि स प्रभुः कृत्वा ।
कुरुते चितामनुग्रहमनादि मलरुद्धशक्तीनाम् ॥

அந்த ப்ரபுவான சிவபெருமான் சித்துக்கும், ஜடமான பாசங்களுக்கும் அனுக்ரஹம் செய்வதற்காக ஸதாசிவம் முதலிய உருங்களைத் தாங்கி, அநாதியாகவே ஆணவமலத்தால் மறைக்கப்பட்ட சக்திகளை உடைய ஆன்மாக்களுக்கு அனுக்ரஹம் செய்கின்றார்.

किरणे- प्रोक्तः स निष्कलः स्थूलस्तथा सकल निष्कलः।
ईशस्सदाशिवः शान्त इति नाम्ना स्थितिस्त्विदं ॥
इच्छानुग्रह कर्तृत्वाल्लयभोगादि कारवान् ।
त्रिविधः कृत्यभेदेन कथितो नाम भेदतः॥

சிவபெருமான் நிஷ்களாவஸ்தையில் சாந்தர் என்றும் ஸகள நிஷ்களாவஸ்தையில் சதாசிவன் என்றும் ஸகளாவஸ்தையில் ஈஸ்வரன் என்றும் பெயரோடு விளங்குகிறார். அவரே அனுக்ரஹம், காத்தல், இச்சை, ஆகிய செயல்களில் மூன்று விதமாக பிரிகின்றார்.

இச்சையில் போக சிவன் என்றும், காத்தலில் அதிகாரசிவன் என்றும், அனுக்ரஹத்தில் லயசிவன் என்றும் கிரணாகமத்தில் கூறப்பட்டுள்ளது.

मतङ्गे- शान्त्यतीतं परं तत्त्वमविनाश्यं शिवात्मकम् ।
येनोन्मीलित सामर्थ्यात्पशवः शिवतां गताः॥
सदाशिवस्य देवस्य लयस्तत्त्वेऽतिनिष्कले ।
चतुर्मूर्तिमय शुभ्रं यत्तत्सकलनिष्कलम् ॥
अथाधिकारणः पत्युः क्रीडितः परमं यदम् ।
स्वतन्त्रस्यापि वक्तव्यं स्वभावस्य यतः पुरा ॥

உயிர்கள் மலங்களிலிருந்து விடுப்பட்ட எந்த சிவத்தையும் அடைகின்றனவோ, அந்த சிவ தத்துவம், சாந்த்யதீதமாயும், மேலானதாயும், சிவத்தன்மை பொருந்தியதாயும், உள்ளது. அந்த சிவ தத்துவத்திற்கு நிஷ்கள தத்துவம் என்று பெயர். அந்த இடத்தில் சிவபெருமான் "லயசிவன்" என்று சொல்லப்படுகிறார்.

சாந்தி முதலிய நான்கு கலைகள் ரூபமாயும், நிர்மலமாயும் ஸகல நிஷ்களத்வம் உள்ளது. அங்கு "போக சிவன்" என்று சிவத்திற்கு

பெயர் கூறப்படுகிறது. ஸகல த்வத்தில் அதிகாரசிவன் என்று சிவபெருமான் சொல்லப்படுகிறார்.

ஸ்வதந்தரமான சிவபெருமான் லய போக அதிகாரங்களால் பிரிந்து தெரிகிறார். ஆனால் உண்மையில் பிரிந்து இருப்பதில்லை. எப்படியென்றால், நடிகன் ஒருவன் பல வேஷத்தில் நடித்தாலும் தன் ஸ்வபாவத்தால் மாறுபடுவதில்லை. அதுபோல சிவபெருமான் பல தத்துவங்களில் பிரிந்து தெரிந்தாலும் அவர் ஒருவரே ஆவார்.

पौष्करे- लयभोगाधिकाराणां न भेदो वास्तवः शिवे।
किन्तु बिन्दोरणूनां च वास्तवा एव ते मताः॥ इति

லய, போக, அதிகாரம், என்கிற பேதம் சிவபெருமானுக்கு இல்லை. இருந்தாலும் பெயரளவில் கூறப்படுகிறது. ஆனால் இந்த லயபோக, அதிகாரங்கள் பிந்துவிற்கும், சுத்ததத்வத்தில் உள்ள அனுக்களுக்குமே உண்மையானவை என்று சொல்லப்படுகிறது.

மாறாததும், தூய்மையானதும், சிறந்ததுமான தத்வம் சிவ தத்வம் ஒன்றுதான். அதுதான் ஈசன், ஸதாசிவன் சாந்தன், என்ற பெயர்களால் வேறுபடுகிறது. இவ்வாறாகப் பதியைப்பற்றி பலவிதமான ஆதாரங்கள் கூறப்பட்டுள்ளன.

पशुलक्षणम् - पराख्यसूत्रे-
देहान्योऽनश्वरो व्यापी विभिन्नः समलोऽजडः।
स्वकर्मफलभुक्कर्ता किञ्चिज्ज्ञः सेश्वरः प्रभुः॥

आत्मा देहान्यः- ஆன்மா உடலில் இருந்து வேறுபடுகிறது. என்று சார்வாகர்கள் சொல்கிறார்கள். நான் இளைத்தேன் நான் பருத்தேன் என உடம்பிலேயே நான் என்ற உணர்வு காணப்படுவதால் ஆன்மா எனது உடல்தான் வேறு இல்லை என்று கூறிகிறார்கள்.

ஆனால் இது உண்மை இல்லை சரீரம் வேறு ஆன்மா வேறாகும் எப்படியென்றால்

ஒருவன் உடம்பில் உள்ள "கண்" முதலிய பொருள்கள் வேறு ஒருவரின் உடம்பில் பொருத்த முடிகிறது. அப்பொழுதும் ஆன்மா தன்

சொந்த சரீரத்திலேயே இருக்கிறது. அது வேறு ஒருவரின் சரீரத்திற்குச் செல்வதில்லை. இன்றைய விஞ்ஞான உலகத்தில் மனிதனின் உடலில் பலவிதமான அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. அதில் மனிதனின் உடலில் இரத்தம் சிறுநீரகம், ஈரல் என்று துவங்கி கடைசி பட்சமாக இதயத்தையும் மாற்றும் அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது.

ஆனால் மனிதனின், ஆன்மாவை மட்டும் மாற்ற இயலவில்லை. அது எங்கு இருக்கிறது என்று அறியமுடியவில்லை. ஆகவே ஆன்மா உடலிலிருந்து, வேறுபட்டு இருக்கிறது.

இருப்பினும் பாசபந்தத்தால் ஆன்மா உடலோடு சேருகிறது. அப்படி சேருகின்ற ஆத்மா, அதிலிருந்து பால்யம் யௌவனம், முதுமை போன்ற பருவங்களில் சரீரத்தின் கஷ்டம் சுகம் ஆகியவைகளை அனுபவிக்கிறது. கடைசியில் உடம்பு சவமாக எப்பொழுது ஆகிறதோ ஆத்மா, உடம்பிலிருந்து பிரிந்து விடுகிறது.

ஆகவே, இயல்பாக உயிரற்ற உடலுக்கு ஆத்மா உயிராக விளங்கினாலும், உடலின் சக்தி குறைந்த பிறகு உடலிலிருந்து பிரிவதால் "தேஹண்ய" உடலிலிருந்து வேறுபட்டது ஆத்மா என்று கூறப்படுகிறது.

ஆகையால் உடல் சம்பந்தப்பட்ட இந்த்ரியங்கள் ஆன்மா இல்லை என்று தெளிவாகிறது. மேலும்

வெளியில் இருக்கின்ற இந்த்ரியங்கள் மனதால், தூண்டப்பட்டு செயல்படுகின்றன.

உதாரணமாக,

கண்ணாடிகளில் தெரியும், பிம்பம், போல மனம், நினைத்தப் பதையே வாய் பேசுகிறது.

இவ்வாறாக அசேதனமான இந்த்ரியங்களுக்கு ஆத்மாவே தூண்டும் கருவியாக உள்ளது.

அவ்வாறே மதங்க பாரமேஸ்வரத்தில்

वागिन्द्रियेण स्पष्टेन मनसान्तरितेन तु ।
यः प्रपञ्चानुमानाख्यः सामान्यो व्यवहर्तृषु ॥
तेनानुमीयते ह्यात्मा दृक्दर्पणादिदर्शनात् ।

கண்ணால் பார்ப்பதால் கண்ணாடியில் அழகு அறியப்படுகிறது. பிறரின் மனதிலிருந்து வாக்கால் வெளிப்படும் வார்த்தை காதால் கேட்கப்படுகின்றது. சரீரம் தூங்குவதால் ஆத்மாவும், தூங்குகிறது. உடல் நடப்பதால் ஆத்மா சஞ்சாரம் செய்கிறது.

இவ்வாறாக வெளியிலுள்ள இந்த்ரியங்கள் வழியாக, ஆத்மாவானது அந்த செயல்களில் ஈடுபடுகிறது.

ஆகவே ஆத்மாவிற்கு சரீரத்தில் நுகரும் தன்மை உண்டு என்று கூறப்படுகிறது.

अनश्वरः - அழிவற்றவன்.

அதாவது, ஆன்மா ஒரு கணத்தில் அழிந்துவிட்டால் அதற்கு அனுபவம் இல்லாமல் போய்விடும். அது நல்வினை தீவினைகளை அறிவுப்பூர்வமாக செய்து, அதைப்பற்றி நினைத்து அதிலிருந்து விடுபட வேண்டிய சூழ்நிலையில் உள்ளதால் அது அழிவில்லா தன்மையுடன் திகழ்கிறது.

எங்கும் வ்யாபிப்பவன், व्यापी

ஆன்மாவில் வியாபிக்கும் தன்மை இல்லை என்றால், தன்னுடைய கர்மானுஷ்டானத்திற்காகவும், போகங்களுக்காகவும், காஸ்மீரதேசத்தில் உள்ளவன் தமிழ்நாட்டிற்கு வரமுடியாது.

அதே சமயம் ஆன்மா இல்லாத சரீரம் மட்டும் தமிழகத்திலிருந்து காஷ்மீர் தேசம் செல்ல முடியாது. ஆகவே சரீரத்தோடு கூடிய ஆத்மாதான் வ்யாபிக்கும்.

विभिन्नः - ஆன்மா பலவாறாக பிரியும் தன்மை கொண்டது. ஆன்மா, ஒரே வகையாக இருந்தால் ஒரே மாதிரி எல்லா ஆன்மாக்களுக்கும், மோக்ஷமே அடையும். அல்லது எல்லா ஆன்மாக்களும் ஒரே மாதிரி மீண்டும் மீண்டும் பிறக்கும் தன்மை கொண்டதாக இருக்கும்.

ஆனால் அப்படி இல்லாமல் ஆன்மாக்கள் தன்னுடைய புண்ய, பாபங்கள் ஆகியவற்றுக்கு ஏற்றமாதிரி போகத்தின் வழியாக தனித்தனியாக பிறந்து பல வகைகளாக மாறுகின்றன.

ஆகையால் ஆன்மா, பல வகையாக பிரியும் தன்மை கொண்டது என்று கூறப்படுகிறது. இதுவே "ஸ்ரீமத்பௌஷ்கரத்தில்"

यद्यभिन्नं तु सर्वेषां भोक्तुमिच्छैकदा भवेत् ।
भोक्तुमिच्छा यदैकस्य गन्तुमिच्छापरस्य च ॥
तथैवमस्माच्चैतन्यं भिन्नरूपमिति स्मृतम् ।

ஆன்மா ஒன்று என்றால் எல்லா ஆன்மாக்களுக்கும் ஒரே நேரத்தில் போகத்தில் இச்சை உண்டாக வேண்டும், அவ்வாறு உண்டாவது இல்லை. எந்த நேரத்தில் ஒரு ஆத்மா சுகம், அனுபவிக்க விரும்புகிறதோ, அதே நேரத்தில் வேறு ஆன்மா பிறவியை அறுத்து முக்தி அடைய விரும்புகிறது.

ஆகையால் ஆன்மா, பல வகைப்படும் என்று கூறப்படுகிறது.

மலத்துடன் கூடியவன். समलः

தர்மாத்ம, ரூபமான கன்மத்திற்கு வேறுபட்டதும், ராகத்திற்கும் காரணமாயும் இருக்கும். "அஞ்ஞானம்" மலம் என்று கூறப்படுகிறது. அப்படிப்பட்ட அஞ்ஞானம் என்கிற மலம், விஷ சக்தி போல ஆன்மாவின் அறிவை மறைக்கிறது. அதனால்தான்,

"இந்த ஆன்மா மலத்துடன் கூடியது" என்று கூறப்படுகிறது.

अजडः (ஜடமற்றவன்) சேதனத்தோடு கூடியவன் இயற்கையாக அறிவினால் செயல்படுபவன், அப்படி இல்லை என்றால் செயல்களில் ஈடுபடமுடியாது.

இந்த உடம்பில் ஆன்மாவானது, இருக்கிறது இந்த உடம்போ துணியைப் போல் ஜடமாக இருக்கிறது.

அப்படி இருக்கையில் ஆன்மாவே உடம்பை செயல்பட வைக்கிறது. ஆகையால் ஆன்மாவிற்கு ஜடமற்றவன் என்று பெயர் கூறப்படுகிறது. இதுதான் "பௌஷ்கரத்தில்"

प्रवर्तमानो देहादिश्चेतनाधिष्ठितः सदा ।
स्वतः प्रवृत्तिशून्यत्वाज्जडत्वेन पटादिवत् ॥
यस्तु प्रवर्तकस्सोऽयमात्मेति परिपठ्यते ।

என்று கூறப்பட்டுள்ளது.

स्वकर्मफलभुक् தன்னுடைய தர்மாதர்ம கர்மாக்களின் பயனை அனுபவிப்பவன்.

ஒரே காலத்தில் தொண்டு, உழவுத் தொழில், இவற்றில் ஈடுபட்ட இருவர்களில் ஒருவருக்கு நல்ல பயனும் மற்றொருவருக்கு பயனின்மையும் காணப்படுகிறது.

அவ்வாறே மற்றும் ஓரிடத்தில் ஒழுக்கம் உடைய இருப்பவர்களில் தொண்டில் ஈடுபட்டு ஒப்பான குணம் கொண்ட ஒருவருக்கு பூர்ணமான பலன் கிடைக்கிறது. மற்றவருக்கு பூர்ணபலன் கிடைப்பதில்லை. ஆகையால் பலனைக்கொண்டு நல்வினை தீவினை என்றும் கர்மாவே அதற்குக் காரணம் என்றும் நிச்சயிக்கப்படுகிறது.

पौष्करे -
उभयोः कृषिसाम्येऽपि कश्चिद्धान्यानि गच्छति ।

இரு உழவர்களுக்கும் உழவு, தண்ணீர் முதலிய கண்ணுக்குத் தெரிந்த காரணங்கள் சமமாக இருந்தாலும், ஒருவர் அதிகத் தான்யத்தை

பெறுகிறார். மற்றோர் மிகக் குறைந்த தான்யத்தையும் பெறமுடியவில்லை. ஆகையால் இந்தவிதமான மாறுபாடு அவர்களின் தர்ம-அதர்மரூபமான கன்மத்தினால் உண்டாகிறது.

இவ்வாறாக கர்மாவுக்கு ஏற்றமாதிரி பயன் அடையும் தன்மை பசுவான ஆன்மாவுக்கு உண்டு.

கர்மத்தில் ஈடுபடுபவன் உடம்பில் இந்திரியங்கள் இருந்தாலும் அவை தானாக இயங்குவதில்லை. ஆன்மாவின் தூண்டுதலால்தான் இயங்குகின்றன. ஆகவே செயல்களை இந்திரியங்கள் மூலமாக நடத்தும் ஆன்மாவே "கர்தா" என்று அழைக்கப்படுகிறது.

இதைத்தான் "பௌஷ்கரத்தில்"

तत्कर्ता पुरुषः प्रोक्तो न शरीरस्य कर्तृता ।
अचेतनं यतस्तस्मात् कर्तृत्वममृतं ततः ॥
कर्तृत्वं करणे सद्भिस्तथाप्यस्य प्रधानता ।
वृक्षच्छेदे यथा लोको न कुठार प्रशंसति ॥

விணைக்கு ஆன்மாவே கர்தா சரிரத்திற்கு கர்தாவாகும் தன்மை இல்லை ஏனென்றால் சரீரம் அசேதனமானது ஆகவே சேதனமான ஆன்மாக்களிடத்திலேயே கர்தாவாகும் தன்மை உள்ளது.

எப்படி என்றால் மரத்தை வெட்டியது கோடரியாக இருந்தாலும் அதற்கு பெயர் ஏற்படாது. அதை வெட்டிய மனிதனையே "வெட்டினான்" என்று கூறுவார்கள். அதுபோல ஆன்மாவே கர்தா என்று சொல்லப்படுகிறது.

किञ्चिज्ञः – சிற்றறிவு உடையவன்

सेश्वरः – இயக்குகின்ற ஈஸ்வரனோடு கூடியவன்
ஸாங்கியத்தின் கொள்கை போல
ஆன்மா ஸ்வாதந்திரம் அற்றவன்
என்று பொருள்.

पशुः – ஆணவ மலத்தோடு கூடியவன்.

பசு என்று அழைக்கப்படுகிறான்

ஆனால் சிவஞானத்தால் முக்தி அடைந்தவர்களுக்கு ஆணவம் கிடையாது. படைப்பு முதலான பஞ்சக்ருத்யங்கள் இல்லாததால் ஈஸ்வரத்தன்மை இல்லை ஆனால் ஈஸ்வரனுக்கு சமமான நிலை முக்தான்மாக்களுக்கு உண்டு.

இதைத்தான் பௌஷ்கரத்தில் -

पशुः पशुत्व संयोगान्न मुक्तः पशुरुच्यते

"ஆணவமலத்தோடு கூடியிருப்பதால் ஆன்மா பசுவென்று சொல்லப்படுகிறான். பாசங்களிலிருந்து விடுபட்ட "முக்தான்மா" பசுவென்று சொல்லப்படுவது இல்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

மேலும் ஆன்மா விஞ்ஞானகலர், பிரளயகளர், ஸகலர் என மூன்று வகையாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் முறையே ஒருமலம் இருமலம் மும்மலம் உடையவர் ஆவர்.

முக்தான்மாக்கள் கலாதி ஸம்பந்தம் இல்லாமல் இருந்தாலும் ஞானக்கிரியைகளோடு கூடியவராகவும் ஈஸ்வரனுக்கு வேறுபட்டவராகவும் இருப்பவர்கள் அறிவுமயமானவர்களாகவும், சிவபெருமானைப் போலவே இருப்பார்கள் என்று கூறப்படுகிறது.

पाशलक्षणम् - सूत्रम् - 20

अज्ञानादिमलः पुंसां पशुत्वं परिकीर्तितम् ।
तुषकम्बुकवत् ज्ञेयं मायावपाङ्कुरस्य तत् ॥

ஞானக்ரியா ருபமான ஒளியை மறைப்பதால் "மலம்" என்பது பெயர். அநாதியாக உள்ளது மலம். மலம் என்பது மறைப்பு என்பதின் பர்யாயச் சொல்லாகும். எதற்கு தொடக்கம் காணப்படுவதில்லையோ அது "அநாதி" நல்ல சமையல்காரன் நல்ல அறிவு உடையவன் என்ற சொல்லில் அடைமொழியாக "நல்ல" என்ற சொல் போல, அறிவை மறைக்கின்ற அஞ்ஞான ருபமான மலத்திற்கு "அநாதி" அடை மொழியாகவுள்ளது.

“அநாதி” என்ற சொல்லால் மறைக்கும் செயலில் சம்பந்தமுடைய ஆன்மாவிற்கு அநாதித் தன்மை கூறப்பட்டுள்ளது. இம்மலம் ஆன்மாக்களுக்குப் பாசத்வம் என்று கூறப்படுகிறது.

மல இலக்கணத்தைக் கூறும்பொழுது “த்ருஷ்டாந்தம்” “உமித விடுபோல” என்று கூறப்படுகிறது.

மலருபமான சேறுமயமாகிய உமிபோல அறியத்தக்கது என்று சொல்லும் போது அதனுடைய மலத்திற்கும் அனாதித்தன்மை உள்ளது என்றதாகும்.

எவ்வாறெனில், உமியானது நெல் விதைகளின் முளைக்கும் சக்திக்கு தேவையானதுபோல சிவனருளால் மாயையின் கலாதி கார்யங்களுக்கு ஆணவம் தேவைப்படும்.

எந்த உயிர் ஆணவமலத்தோடு கூடியதோ அந்த உயிரின் பொருட்டு மாயை ஆகிய கலாதி கார்யங்களை உண்டு பண்ணுகிறது.

நெல்லில் உமிபோல், உயிரில் மலமானது இருக்கிறது. மாயையிலும் கலை முதலான அங்குரம் தோன்றுகிறது என்று வேற்றுமைப்பட்ட அதிக காரணத்தை உடையதாயிருப்பதால் “ஏகாதிகரண த்ருஷ்டாந்த” ஆகாது.

அப்படியே ஆனாலும் இது காரண காரியத்தை மாத்திரம் காட்டிக்கொடுக்கப்பட்ட திருஷ்டாந்தமாகும் இங்கு உமிதிருஷ்டாந்திரத்தால் வேறு சாஸ்த்திரங்களில் கூறப்பட்ட “செம்பிற் களிம்பு” போல என்ற திருஷ்டாந்தமும் உபலக்ஷணமாகும்.

श्रीमन्मतङ्गे - ताम्रकालिकावद् योगात् सहजः परिकीर्तितः।

ஆன்மாவிற்கு ஆணவமலமானது செம்பில் உள்ள களிம்பு போலச் சேர்ந்து இருப்பதால் ஸஹஜமலம் என்று கூறப்படுகிறது.

அதாவது செம்பில் உள்ள களிம்பானது ரஸகுளிகையால் மட்டுமே நன்றாக நீக்கமுடியும். அதுபோல் "ஆணவமலத்தின் சக்தியானது சிவ தீக்ஷையால் மட்டுமே 'குன்றிப்போகிறது' என்று கண்ணுக்கு எட்டிய அளவில் உதாரணம் கூறப்படுகிறது.

இந்த ஆணவமலத்திற்கு பர்யாயப் பெயர்கள் "ம்ருகேந்த்ராகமத்தில்" கூறப்பட்டுள்ளது. அவை –

पशुत्व पशुनीहारमृत्युमूर्च्छामलाञ्जनैः।
अविद्यावृत्तिरुग्ग्लानि पापमूलक्षयादिभिः॥

பசுத்துவம், பசு, நீவாரம், ம்ருத்யு மூர்ச்சாமலம், அஞ்சணம், அவித்யை, ஆவ்ருதி, ருக், க்லாணி, பாபமுலம், க்ஷயம், என்பவையாகும்.

மலம், அக்ஞானம், தமஸ், அறியாமை, அவித்யை என்று மலத்தின் வேறு பெயர்கள் ஸுப்ரபேத ஆகமத்தில் கூறப்பட்டு உள்ளன.

तदेकं सर्वभूतानामनादि निबिडं महत्।
प्रत्यात्मस्थ स्वकालान्तापायि शक्तिसमूहवत्॥

இந்த சூத்திரத்தில் "ஆன்மாக்களுக்கு" என்று பஹீவசனத்தில் சொல்லி இருப்பதாலும் "மலம் ஒன்றே" பதினான்கு வகைப்பட்ட ப்ராணிகளுக்கும் ஞானகிரியைகளைத் தடுக்கின்ற பல சக்திவடிவாக இருக்கிறது என்று அறிய முடிகிறது.

अनादि – இந்த மலம், மாயீயபந்தம் போல வந்து சேருவது அல்ல. கூடவே இருப்பதால் அனாதி என்று கூறப்படுகிறது.

निबिडम् - பிரிக்க முடியாதது. வியாபகமான ஆன்மாவை மறைப்பதால் பெரியது. மலம் ஒன்றே என்றாலும் தனது சக்தியால் பலரிடத்தில் பரவி இருக்கிறது. அது ஒரே சக்தி உள்ளதாக இருந்தால் ஒருவர் முக்தி அடையும் போது அனைவரும் முக்தி அடைவார்கள்.

ஆகவே அது எல்லோரிடத்திலிருந்தும் ஒரே நேரத்தில் பிரித்துஎடுக்க முடியாததால் निविडम् போதிக்க முடியாதது என்று கூறப்படுகிறது.

ஆனால் அப்படிப்பட்ட மலத்தை தீக்ஷாகாலத்தில் ஆன்மாவின் பக்குவத்திற்கு ஏற்றமாதிரி ஒருவரிடத்தில் மட்டும் நீக்க முடிகிறது. இதைத்தான் "தத்துவ த்ரய" நிர்ணயத்தில்

आवृक्तयो विभिन्नाः प्रत्यात्मानं च तद् गुणाविशाः ।

மல சக்திகள் பல வகைப்பட்டதால் ஒருவருடைய தீக்ஷையில் பரிபாகத்தில் ஒரு சக்தியானது அழிக்கப்படுகிறது. அந்த சக்தியால் மறைக்கப்பட்ட ஆன்மாவுக்குத்தான் மோக்ஷம் அனைவருக்கும் இல்லை என்று கூறப்பட்டு இருக்கின்றது.

இவ்வாறு இருக்கும் "மலம்" ஒன்றாக இருந்தாலும் அதனிடத்தில் உள்ள மறைக்கும் சக்தி பலவாக இருப்பதால் மறைக்கப்பட்ட ஆன்மாக்களுக்கும் பலவாகும். ஆகவே ஓர் ஆன்மாமுக்தி அடைகிற பொழுது அனைவருக்கும் முக்தி ஏற்படாது என்று தெளிவாகிறது.

குடத்தில் உள் இருப்பது அனுமானத்தால் மட்டுமே அறிய முடிகிறது. அதுபோல மோக்ஷம் முதலிய செயலுக்கு ஏற்ற மாதிரி ஆணவமலம் விளக்கப்படுகிறது.

मतङ्गे - तस्माद् द्वयं मलो माया सदा दीपान्धकारवत् ।
द्वयोः स्वभावभेदश्च व्याख्यातमिदं मुने ॥

மாயை ப்ரகாசம் போலவும், மலம் மறைப்பு போலவும் இருக்கின்றன. அதனால் மாயையும் மலமும் விளக்கும் இருட்டும் போல இருக்கின்றன. மலத்தின் காரியமான

மோஹம் முதலியவை ஏழு வகைப்படும் அவை.

मतङ्गे -
मोहो मदश्च रागश्च विषादः शोष एव च ।
वैचित्र्य चैव हर्षश्च सप्तैते सहजा मलाः ॥

மோஹம், மதம், ராகம், விஷாதம், சோஷம், வைசித்ர்யம், ஹர்ஷம் என்ற இந்த ஏழும் ஸஹஜமலங்கள் எனப்படும். இவற்றின் இலக்கணம் மதங்க பாரமேஸ்வரம் முதலியவற்றில் காண்க.

மலத்தின் சக்திகள் ஸ்வாந்தரமாகத் தடுக்கவில்லை நீங்கவும் இல்லை. ஆனால் அவை சிவ பெருமானின் திரோதான சக்தி வசப்பட்டே செயல்படுகின்றன.

அந்தத் திரோதான சக்தியும் பாசம் என்று வார்த்தைக்காகச் சொல்லப்படுகிறது என்று சூத்திரத்தில் விளக்கப்படுகிறது.

तासां माहेश्वरी शक्तिः सर्वानुग्राहिका शिवा।
धर्मानुवर्तनादेव पाश इत्युपचर्यते ॥

மலசக்திகள் செய்வதுபோல் சிவபெருமானின் "திரோதானசக்தியும்" ஞான கிரியைகளைத் தடுப்பதால் பாசம் என்று வாக்கியத்திற்காகச் சொல்லப்படுகிறது.

ஆனால் திரோதானத்திற்கு பாசத்தன்மை இல்லை ஏனென்றால், திரோதான சக்தி எல்லா ஆன்மாக்களுக்கும் அருள் புரிவதையே இயல்பாகக் கொண்டது. மங்களத்தை கொடுக்கக் கூடியது. அதனாலேயே அதற்கு பாசத்தன்மை இல்லை என்று கூறப்படுகிறது.

ஆன்மாக்களுக்கு மலபரிபாகம் ஏற்படும் வரைதான் திரோதானம் தன்னுடைய மறைக்கும் செயலை செய்கிறது. அதன்பிறகு ஆன்மாக்களுக்கு நல்வழியைக் காட்டி அனுக்கிரஹம் செய்கிறது.

ஈஸ்வரனுடைய சக்தி மலபக்குவம் அடையும் வரையில் இதில் அசுத்தாகவுள்ள மும்மலங்களின் காரியங்களை அனுக்கிரஹம் செய்து ஆன்மாக்களுக்கு சித்தன்மையையும் மறைக்கிறது. பக்குவமடைந்த பிறகு உயிர்களுக்கு அனுக்கிரஹம் செய்கிறது. ஆதலால் அசேதனமான

ஆன்மாக்களுக்கும் அனுக்கிரஹம் செய்வதால் "பதி சக்தி" எல்லோருக்கும் அனுக்கிரஹம் செய்வது என்பது முடிந்த முடிவு ஆகும்.

முடிவுரை :

உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் எம்பெருமான் ஸர்வேஸ்வரனை அடைவதற்காகவே படைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட ஜீவராசிகள் தன்னுடன் சேர்ந்த பாச மலத்தால் கட்டப்பட்டவைகளாக பிறவிப் பெருங்கடலில் மூழ்கி தன்னுடைய கர்மாக்களுக்கு ஏற்றார்போல மனிதப்பிறவியை அடைகின்றன.

அவ்வாறாக மனிதனாகப் பிறந்த பின்னரே அந்த ஆன்மாவிற்கு "குரு" என்று ஒருவர் அமைகிறார். அந்த மனிதன் குருவிடத்திலும் பரமேஸ்வர் இடத்திலும் செலுத்தும் பக்திற்கும் ஏற்றார்மாதிரி அவனின் பக்குவம் பரீக்ஷிக்கப்படுகிறது.

அவனிடமுள்ள பக்குவத்திற்கு ஏற்றார் போல அவனுக்கு தீக்ஷை கள் செய்து வைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட தீக்ஷைகளில் அத்வசுத்தி முதலிய க்ரியைகளால் அவனிடம் உள்ள மல சக்திகள் பொசுக்கப்படுகின்றன.

அதன் பிறகு அவன் குருவினிடத்திலும் சிவபெருமானிடத்திலும் விஸ்வாசமான பக்தியுடன் செய்யும் பூஜை முதலியவைகளால் சிவஞானம் பெற்று கடைசியில் முக்தான்மாவாக மாறுகிறான்.

இதையே சிவஞான போத சூத்திரத்தில்

शिवेनैक्यं गतः सिद्धः तदधीनस्ववृत्तिकः ।
मलमायाद्यसंस्पृष्टो भवति स्वानुभूतिमान् ॥

சிவபெருமானோடு இரண்டரக் கலந்து பிறவிக் கடலிலிருந்து முக்தி அடைய தயார் ஆனவர். அந்தப் பரசிவத்திற்காக கீழ்படிதலே தன்னுடைய செயலாகக் கொண்டவராக मलमायाद्यसंस्पृष्टः स्वानुभूतिमान्भाति। ஆணவம் கன்வம் மாயைகளிலிருந்து விடுப்பட்டவராக சிவானந்த பரமசுகத்தை அனுபவிப்பராக ஆகிறார்.

இவ்வாறாக எப்பொழுதும் சிவ சிந்தனையுடன் இருக்கும் ஆன்மா மலபாசம் அற்றதாக மாறி பதியை அடைந்து மீண்டும் பிறப்பதில்லை.

மலபாசத்தால் கட்டப்பட்டு பிறவிப் பெருங்கடலில் நீந்தும் ஆன்மாக்கள் மஹாப்ரளய காலத்தில் பரசிவனிடத்தில் சேருகின்றன. ஆனால் ப்ரபஞ்சஸ்ருஷ்டி காலத்தில்

முன் ஜென்ம நல்வினையை தீவினைக்கு ஏற்ற மாதிரி உலகில் பிறக்கின்றன. ஆகையால், "பசுவாகிய" ஆன்மாவிற்கு "பாசமென்னும்" மலத்தை விட்டு விலகி ''பதி'' என்று உரைக்கப்படும் பரம்பொருளை அடைவதே பிறவி எடுத்ததின் குறிக்கோளாகும்.

சைவசித்தாந்த முக்திநிலை

தி. கணேசன்

சைவாகமம் மற்றும் சைவசித்தாந்த ஆராய்ச்சியாளர்

French Institute, Pondicherry

- முகவுரை

பாரத நாட்டில் தோன்றிய அனைத்துச் சமயங்களும் இவ்வுலக வாழ்வினின்றும் நீங்கி ஒரு நிலையான பேரானந்தத்தை மனிதன் அடையவேண்டும் என்னும் நோக்கத்திலேயே பற்பல வழிகளைப் போதிக்கின்றன. பாரதநாட்டுச் சமயங்கள்,-வேதங்கள் உபநிஷத்துக்கள் தத்துவ விளக்கத்தின் அடிப்படையில் தோன்றிய மதங்களான நியாயம் முதலான சாத்திரங்களின் முக்திநிலைக் கோட்பாடுகள்

- சைவசித்தாந்தம்- ஆகமங்கள், அதன் அடிப்படையில் தோன்றிய சைவசித்தாந்தத் தத்துவக்கோட்பாடுகள், ஏனைய மதங்கள் மற்றும் சமயங்களின் முத்திக் கொள்கைகள் சைவ அடிப்படையில் பொருந்தாமை: ஸத்யோஜ்யோதி தொடங்கி எல்லா சைவ ஆசாரியர்கள் தங்கள் நூல்களில் இதைப் பற்றிப் பலவாறாக ஆராய்ந்த செய்திகள் (நூல்கள்: மோக்ஷகாரிகா, பரமோக்ஷநிராஸகாரிகா, நரேச்வரபரீக்ஷா, மிருகேந்த்ராகமம், விருத்தி, தீபிகா, மதங்கபாரமேசுவாராகம், முதலியன, . . .)

- சைவசித்தாந்தத்தின் முத்திநிலை விளக்கம்:முதலாம் நிலை (Phase I) பெரும்பாமை சிவஸமவாதம், அஜிதாகமம், ரௌரவாகமம் முதலியவற்றில் கூறப்படும் கொள்கை,

ஞானாமிர்தம் முதலிய பண்டைய சாத்திரங்களின் கருத்து,

மெய்கண்டபரம்பரையும், அதன் வழிநூல்கள்,

நிகமஞானதேசிகர், சிவாக்ரயோகி, குருஞானசம்பந்தர், வெள்ளி யம்பலவாணர், ஞானபிரகாசர், முதலியோர்,

முடிவில் சிவஞான சுவாமிகள்

முன்னுரை:

வேதங்களில் ஸம்ஹிதாபாகங்களில் பெரும்பான்மையான மந்திரங்கள் சுவர்க்க மனிதன் அடையப் போகும் சுகங்களையும் நீண்டநாட்கள் இவ்வுலகத்தில் வாழ்வதையுமே ஒரு பெரும் பேறாகக் கருதுகின்றன. அதற்காக அக்னிஷ்டோமம் முதலான யாகங்களைச் செய்யுமாறு மனிதனைத் தூண்டுகின்றன.

“अग्निष्टोमेन स्वर्गकामो यजेत” முதலான வாக்கியங்கள் அதற்கு உதாரணம்.

எனினும், இவ்வுலகமும் அதில் மனிதனின் வாழ்வும் நிலையற்றவை; அதிலிருந்து மனிதன் என்றும் அழியாத நிலைபேறான ஒரு வாழ்வை அடைய முயல்கிறான் என்று ஐதரேய ஆரண்யக மந்திரம் கூறுகின்றது:

पुरुषे त्वेवाविस्तरामात्मा । स हि ज्ञानेन सम्पन्नतमः । मर्त्येनामृतत्वमीप्सति ।

“மனிதன் பிரஜ்ஞானம் என்னும் ஒரு ஒப்பற்ற சாதனத்தைப் பெற்றுள்ளான்; அந்த ஞானத்தின் மூலம் அவன் அழிவற்றதாகிய அமிருத நிலையை அடைவதற்கு விரும்புகிறான்” என்பதே அதன்

கருத்து. பிற்காலத்தில் பெரும்பான்மையான உபநிஷத்துக்களில் அமிர்தநிலையான மோக்ஷத்தைப் பற்றியும் அதை அடையும் வழிமுறைகளும் உலகில் வேறெந்த நூல்களிலும் காணக் கிடைக்காத அளவிற்கு மிக நுணுக்கமாகவும், ஆழமாகவும் ஆராயப்பட்டுள்ளன என்பதை நோக்கும்போது நாம் மனதில் பூரிப்பும் பெருமிதமும் அடைகிறோம். மோக்ஷமெனும் இந்தக் கொள்கை பாரதநாடு உலகுக்களித்த ஒரு கொடை. இந்தக் கருத்து உபநிஷத்துக்களில் தொடங்கி நியாய வைசேஷிகம், ஸாங்கியம், யோகம், வேதாந்தச் சமயத்தின் உட்பிரிவுகள், சைவசமயத்தின் பல உட்பிரிவுகள்,, வைணவம், மற்றும் அவைதிக மதங்கள் என்றழைக்கப்படும் பௌத்தம், ஜைனம் முதலான அனைத்துச் சமயங்களிலும் ஒரு முக்கிய அடிப்படைக் கொள்கையாக உருவெடுத்து ஒவ்வொரு சமயமும் அதனதன் கொள்கைகளுக்கேற்றவாறு மோக்ஷநிலையைப் பற்றி ஆழ்ந்து ஆராய்ந்து வெளிப்படுத்துகின்றது.

சைவசித்தாந்தத்தின் மோக்ஷத்தைப் பற்றி ஆராயப் புகுமுன் மற்ற சமயங்களின் மோக்ஷநிலை என்ன என்பதைச் சற்று சுருக்கமாகக் காண்பது நலம் பயக்கும். அது சைவத்தின் மோக்ஷக் கொள்கை மற்ற சமயங்களினின்றும் எவ்வாறு வேறுபடுகிறது என்பதையும், சைவசித்தாந்தம் விளக்கும் கொள்கை எவ்விதத்தில் சிறப்பானது என்பதையும் நன்கு புலப்படுத்தும். மிருகேந்திராகமத்தின் வித்தியாபாதத்தொடக்கத்திலும், அதற்கு நாராயணகண்டரியற்றிய விரிவான உரையிலும், ஸத்யோஜ்யோதி ஆசாரியர் இயற்றிய பரமோக்ஷநிராஸகாரிகை, மோக்ஷகாரிகை ஆகியவற்றிலும், நமக்குக் கிடைக்காத அவருடைய மற்றொரு நூலான ரௌரவவிருத்திவிவேகம் என்னும் ரௌரவாகம உரையிலும், பிற்காலத்தில் திரிலோசனசிவாசாரியார் இயற்றிய ஸித்தாந்தஸமுச்சயம் என்னும்

இதுவரை அச்சாகாத நூலிலும், சிவாக்ரயோகிகளின் சிவஞானபோத பாஷ்யத்திலும் மெய்கண்ட சாத்திரநூல்களான சிவஞானசித்தியார் பரபக்கத்திலும், உமாபதிசிவாசாரியாரின் சங்கற்பநிராகரணம், மற்றும் 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மறைஞானசம்பந்தரியற்றிய சங்கற்பநிராகரணம் என்னும் நூலிலும், இம்முறையே கையாளப்படுகிறது. எனினும், ஸத்யோஜ்யோதி சிவாசாரியாரின் நூல்கள் முதலானவற்றில் பௌத்தம், ஆர்ஹதம் ஸாங்கியம், பூர்வமீமாம்ஸை, நியாய வைசேஷிகம், பாஞ்சராத்திரம் முதலிய புறச்சமயங்களும், சைவத்தின் உட்பிரிவுகளான பாசுபதம், காபாலிகம், முதலியவையும் மறுக்கப்படுகின்றன; ஆனால், சங்கற்பநிராகரணத்தில் வேதாந்தமதத்தின் பிரிவுகளான மாயாவாதமெனப்படும் சங்கரரின் அத்வைதவேதாந்தமும், சிவாத்வைதமென்று தவறாக அழைக்கப்படும் , கண்டரின் சிவவிசிஷ்டாத்வைதமும் (அதை நிமித்தகாரணபரிணாம வாத மெனச் சைவசாத்திரத்தார் அழைப்பர்), மறுக்கப்படுகின்றன; மேலும், ஸத்யோஜ்யோதிசிவாசாரியார், இராமகண்டர், மற்றும் அவர்கள் வழிவந்த அகோரசிவாசாரியார் போன்றோர் நன்கு திறம்பட நிறுவிய சிவஸமவாதமும் முற்றிலும் மறுக்கப்படுகிறது என்பதும் நாம் மனதில் கொள்ளவேண்டிய செய்தி. இதைக் கூறுவதன் நோக்கம் யாதெனில், சைவசித்தாந்தத்தின் மோக்ஷக் கொள்கையானது ஒரு புடைத்தாய், பலநூற்றாண்டுகளில் தோன்றிய எல்லா ஆசிரியர் களாலும் ஒரே கருத்தாய் அமையவில்லை; அதில் பல கருத்து வேறு பாடுகளும், நுணுக்கங்களும் உள்ளன என்பதை அறிஞர்கள் தெளிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே.

இனி, மோக்ஷக் கொள்கையைப் பற்றி நன்கு அறிந்துணர வேண்டுவதற்கு இன்றியமையாததாக வேண்டப்படும் முப்பொருள்

களைப் பற்றிய அடிப்படைக் கருத்துக்களைச் சுருக்கமாக ஆராய்வோம்.

சைவசித்தாந்தம் அடிப்படையாகக் கொள்வது பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்கள்; இவை த்ரிபதார்த்தம் என சாத்திரங்களில் கூறப்படும்.

शैवागमेषु मुख्यं पतिपशुपाशा इति वमात् ऽितयम् ।

तऽ पतिः शिव उक्तः पशवो ह्यणवोऽर्थपञ्चकं पाशः ।।

என்பது போஜதேவரின் தத்துவப்பிரகாசம் 5 ஆம் காரிகை.

எல்லா உலகங்களையும் படைத்து, காத்து, முடிவில் தன்னுள்ளேயே அடக்கிக் கொள்ளும் சிவபெருமான் ஒருவரே அனைத்துலகங்களுக்கும் ஒப்பற்ற ஒரே தலைவர்; அவரைப் பதி--தலைவன் என ஆகமங்கள் கூறும். அப்பதியின் முக்கிய இலக்கணங்களாவன: அவர் எப்போதும் தொடக்கமில் காலம் தொட்டு பாசங்களால் கட்டப்படாமல் சுத்தராய் முத்தராய் இருப்பவர்; தனக்கே உரித்தான என்றும் நீங்காது நிலைபெற்ற மலங்களற்ற அளவு கடந்த அறிவும் ஆற்றலும் உடையவர்;

स्वभावसिद्धनित्यनिर्मलनिरतिशयार्थज्ञानवियाशक्तियुक्तः ।

என்று அகோரசிவாசாரியார் தத்துவப்பிரகாசம் 6 ஆம் பாடலில் விளக்குகிறார். சிவபெருமானுடைய அறிவாற்றல் பிரத்தியக்ஷம், அநுமானம் போன்ற எந்தக் காரணத்தினாலும் உண்டுபண்ணப் பட்டதன்று; அது முக்காலத்திலும் தானாகவே பிரகாசிக்கக் கூடியது என்பதைக் கீழ்க்கண்டவாறு மிருகேந்திராகமம் விளக்குகிறது:

नाध्यक्षं नापि तल्लैङ्गं न शाव्दमपि शाङ्करम् ।

ज्ञानमाभाति विमलं सर्वदा सर्ववस्तुषु ।। (विद्यापाद, 5: 16)

சிவபெருமான் உருவமற்றவர் எனினும் ஈசானம் முதலான ஐந்துமந்திரங்களையே தனக்கு உருவமாக உடையவர். பக்தர்கள் தன்னை வழிபட்டுய்யும் பொருட்டு மந்திரங்களையே தனக்கு உருவமாகக் கொண்டவர்:

साधकस्य तु लक्ष्यार्थं तस्य रूपमुदाहृतम् ।

என்று பௌஷ்கராகமம் கூறும். உலகத்தைத் தோற்றுவித்தல், அதை நிலைபெறச்செய்தல், முடிவில் தன்னுள்ளேயே அனைத்தையும் அடக்கிக்கொள்ளுதல், பசுக்களாகிய ஜீவர்களின் உண்மைச் சொரூபத்தை மறைத்தல், முடிவில் சக்திநிபாதம் பெற்ற பசுக்களுக்கு அருளுதல் ஆகிய ஐவகைத் தொழில்களைச் சிவபெருமான் எப்போதும் இடையறாது ஆற்றிக்கொண்டேயிருக்கிறார். தனது உண்மைச் சொருபநிலையில் எவ்வித உருவமும் இலாதவராயினும், அத்தொழில்களுக்கு ஈசானம் முதலிய ஐந்து மந்திரங்களே சக்திகளாக அமைகின்றன. எனவே தான் அவை அப்பெருமானுக்கு உருவமாகத் திகழ்கின்றன என்று மிருகேந்தி ராகமத்தின் கூற்று.

वपुषोऽविद्यमानत्वाद्यद्यत्कृत्यं करोति सः ।

तऽ तऽास्य तत्कर्तृवपुषानुकृतं वपुः ।।

மேலும், ஸ்வாயம்புவாகமம் கூறுவதாவது:

अूम ेयमविदेँयमनौपम्यमनामयम ् ।

सूक्ष्मं सर्वगतं नित्यं ि्वमव्ययमीँश्वरम ् ।।

சிவபெருமான் மேற்கூறிய எல்லாக் குணங்களும் பொருந்திய ஒருவராக இருப்பதால் அவரை எவ்வுலகிலும் எவருக்கும் ஒப்பிட முடியாது; எனவே ஒப்பற்ற ஒரு பரம் பொருளான அவருடைய குணநலன்களை வேறெந்த தேவர்களிடமும் காண இயலாது.

பதியாகிய சிவபெருமான் அனைத்து உயிர்களுள்ளும் மற்றும் உயிரற்ற பொருள்களுள்ளும் மிகச் சூக்குமமாக பூவில் தேனைப் போலும், எள்ளினுள் எண்ணெயைப் போலும் நீக்கமற நிறைந்திருக்கிறார்; அவ்வவற்றின் உயிர்ச் சக்தியாக இருந்து அவற்றை இயக்குகிறார். என்று சிந்தியாகமம் மிக அழகாகக் கூறுகிறது.

पुष्पेषु मधुवज्ज्ञेयः तिलेषु तैलवत्तथा ।

देहेषु ाणवत ाणः शिवः सदाशिवस्य तु ।।

அஜிதாகமம் இன்னும் ஒருபடி மேலே சென்று “கற்றவர்களும் நியாயம் வைசேஷிகம் முதலான தத்துவ அறிஞர்களும், பைரவம், பாசுபதம் முதலான சமயத்தவர்களும் தனது அறிவாற்றலால் சோதித்து இவ்வுலகில் என்றுமழியாத நிலைபெற்ற பொருளாய்த் தத்துவமென்று எதைக் கூறுகிறார்களோ அது சிவபெருமான் ஒருவரே; வேறெவருமல்லர்” என்று ஆணித்தரமாய் கோஷமிடுகிறது:

भैरवे च तथान्येषु पशुपाशुपतादिषु ।

अष्टादशपुराणेषु षडङ्गेष्वपरेषु च ।

योगशास्त्रेषु सर्वेषु न्यायवैशेषिकादिषु ।

यैर्यैर्यद्यत् परीक्ष्यैव तत्त्वमित्युच्यते बुधैः ।

तत्तत् स एव देवेशः शिवसंज्ञः सनातनः ।

சூக்குமமாய் அனைத்துயிர்களுள்ளும் நிறைந்து அவற்றை இயக்குபவராக இருப்பினும் அவர் இவை எல்லாவற்றையும் கடந்த கடவுள்; உயிர்களின் இன்பதுன்பங்களாலோ, அல்லது பாவபுண்ணியங்களாலோ அவர் சிறிதும் தீண்டப்படாதவர். அது எதைப் போலெனின், காந்தமானது இரும்பைத் தனது சன்னிதி மாத்திரத்தாலேயே அசையச் செய்வது போலாகும்.

இக்கருத்தையே சிவஞானபோதம்,

अन्यः सन् व्याप्तितोऽनन्यः कर्ता कर्मानुसारतः । (सूऽ, 2)

विदन्त्यक्षाणि पुंसार्थान् न स्वयं सोऽपि शम्भुना ।

तद्वाकारी शिवश्चेन्न कान्तोऽयोवत् स तं नयेत् ।। (सूऽ 5)

அவையே தானே யாய்இரு வினையில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே. (சிவஞானபோதம், 2)

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே. (சிவஞானபோதம், 5)

எனவும் உறுதியாகக் கூறுகின்றன.

உயிர்களின் பாவபுண்ணியங்களுக்கேற்ப அவற்றிற்கு உடல், கருவிகரணங்கள், இன்பதுன்பங்களைத் துய்ப்பதற்கேற்ற இவ்வுலகம் ஆகியவற்றைப் பெருமான் எவ்வித விருப்பு வெறுப்புமின்றி சிருஷ்டி செய்து தருகிறார். அவர் ஒரு தந்தையைப் போல் தனது மக்களைக் காக்கிறார் என்று பட்டராமகண்டர் தன்னுடைய மதங்கபாரமேசுவராகம உரையில் கூறுவது சிறப்பு வாய்ந்தது:

रागद्वेषाभावेऽपि पितेव पुत्रादीन् योग्यतानुसारेण सर्वं जगत् पाति ।

அவர் மாயை என்னும் ஜடப் பொருளைக் கொண்டு இவ்வுலகைத் தோற்றுவிக்கிறார். மாயை உலகிற்கு உபாதானகாரணமாகவும், அதை இயக்கிச் செயல்படுத்தும் சிவபெருமான் நிமித்தகாரணமாகவும் சைவாகமங்களில் கூறப்படுகின்றனர். இவ்வெல்லாச் செயல்களையும் சிவபெருமான் தன்னின் வேறற்ற என்றும் அகலாத சக்தியைக் கொண்டு செய்கிறார். எந்தச் செயலும் அதற்குரிய கருவிகரணங்களைக் கொண்டே நிகழும்; சிவபெருமானது அனைத்துச் செயல்களும் அவ்வாறே நிகழ்கின்றன.

तस्यास्ति करणं येन दृष्टा नाकरणा कृतिः ।

என மிருகேந்திராகமம் கூறுகிறது. அச்சக்தியை பெருமானுடைய 'ஆணை'-ஆஜ்ஞா--என்று சிவஞானபோதம் மிக அழகாகக் கூறுகிறது. சிவசக்தியானது அறிவுடைய பொருள்; சித்சொருபனான சிவபெருமானது சக்தி உயிரற்ற ஜடமாக ஒருபோதும் இருக்கமுடியாது. சைவசித்தாந்தத்தின் இந்த முக்கியக் கொள்கை அத்வைதவேதாந்தத்தினின்றும் முற்றிலும் மாறுபட்டது என்பதை அறிஞர்கள் உணரலாம்.

சுவேதாசுவதரோபநிஷத் இக்கருத்தை மிக அழகாகவும் எளிதாகவும் எடுத்துரைக்கின்றது:

परास्य शक्तिर्विविधैव ौ ूयते स्वाभिविकी ज्ञानवलविया च ।

சிவபெருமானுடைய சக்தியானது ஞானம் மற்றும் கிரியை என இரு பெரும் பகுதியை ஒருசேர உடையது எனச் சைவாகமங்கள் கூறும் கருத்தை மேற்படி உபநிஷத் மந்திரம் நன்கு எடுத்துரைக்கிறது.

சக்தி ஒன்றேயாயினும் அதன் காரியவேறுபாட்டால் ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி என மூவகையாகவும், பின்னும் சிவபெருமானின் கட்டளைக்குட்பட்டு மாயா காரியமாகிய உலகங்களைப் படைத்தல், காத்தல் முதலான காரியங்களை இயற்றும் பிரம்மா, விஷ்ணு, மஹேசுவரன், முதலான தேவர்களின் சக்தியாக வாணி, லக்ஷ்மி, பார்வதி முதலான பேதங்களையும் அடையும். சிவபெருமான் எவ்வெவ்வுருவங்களை எடுக்கிறாரோ அவ்வவ்வுருவங்களை சக்தியும் எடுத்து அவருடைய எல்லாச் செயல்களுக்கும் துணை நிற்கிறாள் என்னும் கருத்தைச் சிவஞானசித்தியார் மிக எளிதாகவும் அழகாகவும் கீழ்க்காணும் வரிகளில் எடுத்துரைக்கிறது:

சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மனிதா னாகி

ஒத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி யாகி

வைத்துறும் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தி யாகும்

எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்.
(சிவஞானசித்தியார், 165)

வாமர், ஜ்யேஷ்டர், காலர், கலவிகரணர் முதலான சிவபெருமானின் இதர உருவங்களுக்கேற்றவாறும் சக்தியானவள் வாமா, ஜ்யேஷ்டா,

காளி, கலவிகரணி, பலவிகரணி முதலிய உருவங்களில் இருக்கிறாள் என்னும் கருத்தை ஸித்தாந்தஸாராவளி, வித்தியாபாதம் 4 ஆம் சுலோக உரையில் காணலாம். இதையே ரௌரவாகம வித்தியாபாதம், 2 ஆம் படலம், 9 ஆம் சுலோகத்தில் शक्त्यष्टकसमन्वितः என்று காண்கிறோம். இச்சாசக்தியின் துணையால் உலகைப் படைக்கத் திருவுள்ளம் கொண்டு அதை கிரியாசக்தியின் வாயிலாக நிறைவேற்றுகிறார் பெருமான் என்பதை ரௌரவாகமம் विद्याराजाधिराजेशो जगद्भ्रमयतीच्छया । என்று கூறுவதைக் காணலாம்.

உலகைப் படைத்தல், காத்தல், பசுக்களுக்கு அருளுதல் முதலான சிவபெருமானின் அனைத்துச் செயல்களும் பெருமானின் கருணையாகிய சக்தியின் வாயிலாகவும், சக்தியால் தூண்டப்பட்டும் தான் செய்யப்படுகின்றன என்று ரத்தினதிரயம் என்னும் நூல் கூறுகிறது. அது மட்டுமின்றி, பசுக்கள் செய்யும் ஒவ்வொரு செயலுக்குப் பின்னும் சிவபெருமானின் கருணைத் திறம் அடங்கியுள்ளது; கண் முதலான புலன்கள் தாமாக எந்த ஒரு பொருளையும் சென்றடையாமல் மனதின் தூண்டுகோலால் இயக்கப்பட்டுப் பொருள்களை நுகர்கின்றன. அதைப் போன்று ஆன்மாவும் தானாக எதையும் அறியாமல் பேரறிவு படைத்த சிவபெருமானால் ஒவ்வொரு செயலிலும் தூண்டி இயக்கப்பட்டு அதை அறிகிறது, நுகர்கிறது. எனவே, கருணைக்கடலான சிவபெருமானின் துணையின்றி எதையும் செய்ய இயலாத ஆன்மாவின் தன்மையையும், எம்பெருமானின் கருணைத் திறத்தையும் எடுத்துரைக்கப் போந்த சிவஞானபோதம், 11 ஆம் சூத்திரம் கூறுவதாவது:

காணும் கண்ணுக்குக் காட்டுமுளம்போல்

காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்

அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

இக்கருத்தையும் முதன்முதலில் விரித்து விளக்கிய பெருமை சிவஞானபோதத்தையே சாரும்.

இவ்வாறாக ஆகமங்களிலும், அதன் அடிப்படையில் எழுந்த சைவசாத்திரநூல்களிலும் பதியாகிய சிவபெருமானின் முக்கியமான சில அடிப்படைக் குணங்களும் அவருடைய தன்மைகளும் எடுத்துரைக்கப்படுகின்றன.

பதியெனும் ஒரு பரம்பொருள் உள்ளது என்னும் செய்தியைச் சில ஆகமங்கள் தருக்கமுறையிலும் நிறுவுகின்றன. எடுத்துக்காட்டாக, பௌஷ்கராகமத்தில் இம்முறை பின்பற்றப்படுவதை நாம் காணலாம்.

भगवन् कथितः संयक् पदार्थः पतिसंज्ञितः ।

ृमाण ैरपि वक्तव्यो युक्तिवोध्या हि साधवः ।।

அவ்வாறே, நியாயசாத்திர அடிப்படையில் தருக்கமுறையில் பௌஷ்கராகாமம், ஸ்வாயம்புவாகமம், மற்றும் சிவஞானபோதம் முதலானவற்றில் உலகிற்கெல்லாம் ஒரே காரணகர்த்தாவாகிய சிவபெருமான் உள்ளார் என்பது நிறுவப்படுவதை நாம் காண்கிறோம்.

நாம் காணும் இவ்வுலகில் எல்லாப் பொருள்களும் பிருதிவீ முதலான ஐம்பூதங்களாலான தொகுப்பே; அவை ஒவ்வொறும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சிலகாலம் இருந்து பின்னர் அழிகின்றன. என்வே, அவை தாமாகவே உற்பத்தியாகவில்லை. குடம் முதலிய பொருட்களைப் படைப்பவன் ஒருவன் வேண்டும். அவ்வாறே, பரந்த இவ்வுலகமானது

அனைத்தையும் அறிந்த பேராற்றல் மிக்க ஒருவனால் படைக்கப்பட்டு, பின் முடிவில் அழிகிறது. அத்தகைய ஒப்பற்ற ஒரே தலைவன் சிவபெருமானே; சிற்றறிவு படைத்த மனிதர்களோ அளவான சக்தியை மட்டுமே கொண்ட வேறெந்த தெய்வமோ இச்செயல்களைச் செய்யும் ஆற்றல் கொண்டன அல்ல என்பன முக்கியமான வாதங்கள். மேற்கூறிய சில ஆகமங்கள் இவ்வாறான தருக்கமுறையைக் கூறினாலும் அத்தருக்கத்தையே அடிப்படை யாகவும், சிவபெருமான் தான் கர்த்தா என்னும் கருத்தையும் மிக ஆழமாக ஆராய்ந்து, நிறுவிய பெருமை சிவஞானபோதநூலையும் அதற்குப் பல ஆசாரியர்கள் வரைந்த சிறப்பான உரைகளையுமே சாரும்.

நாம் காணும் இவ்வுலகு குடம், துணி முதலியவற்றைப் போன்றதொரு காரியம் என்னும் கருத்தை, ‘உலகம் ஒரு உள் பொருளன்று; அது ஒவ்வொரு கணமும் தோன்றி மறையும் ஒரு சலனம்; ஒரு போதும் அது நிலைத்து நிற்கக் கூடியதன்று’ எனப் பலவாறாகப் பல நூற்றாண்டுகளாக வாதிட்டு வரும் பௌத்தர்களைத் தருக்கமுறையில் பல நியாயங்களைக் கூறி வென்று நிறுவிய பெருமை முதன்முதலில் நியாயசாத்திர வல்லுநர்களைச் சாரும். அக்கருத்தையே இன்னும் பலவாறாகவும் மிக விரிவாகவும் நுட்பமாகவும் ஆராய்ந்து சிவபெருமான் ஒருவரே உலகாகிய காரியத்தைப் படைத்த ஒரே கருத்தா என்னும் கருத்தை நிறுவிய மாண்பு சிவஞானபோதசாத்திரநூல்களைச் சேர்ந்தது என்றால் அது மிகையன்று.

स्त्रीपुंनपुंसकादित्वाज्जगतः कार्यदर्शनात् ।

अस्ति कर्ता स हृत्वैतत् सृजत्यस्मात् प्रभुर्हरः ।।

மெய்கண்டாரும் அதையே

அவனவளதுவெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியேயொடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனாற் புலவர்

எனப் பகர்கிறார்.

பிருஹஸ்பதி என்னும் மிகப் பழமையான சைவ ஆசாரியர் கூறுவதாவது: 'தோன்றி மறையும் இவ்வுலகம், அதில் பிறந்து வளர்ந்து இன்பதுன்பங்களைத் துய்க்கும் எண்ணற்ற ஆன்மாக்கள், அவர்கள் ஒவ்வொருவரும் அனுபவிப்பதற்கான உடல், புலன்கள், உலகியல் சாதனங்கள் ஆகியவற்றைப் பற்றிய மிக மிக நுணுக்கமான அறிவு படைத்த ஒருவன் இல்லையேல் இவ்வுலகம் தோன்றிச் செயல்பட இயலாது. அப்படிப்பட்ட பேராற்றல் கொண்டவரே சிவபெருமான்' என மிக அழுத்தமாகக் கூறுகிறார்:

भवभोक्तृभोगसाधनतदुपादानादि यो जानाति ।

तमृते भवेन्नहीदं पुंकर्माशयविपाकज्ञम् ।।

அவ்வாறே நரேசுவரபரீக்ஷா நூலில் ஸத்யோஜ்யோதியும் கூறுவதாவது:

तत्त्वादिभुवनान्तं तु कलादिक्ष्मान्तमीरितम् ।

शैवैः कार्यं हि तज्जातं कुम्भवन्न स्वभावतः ।।

उपादानादि तस्येष्टं विमतिः कर्तृकारके ।

अतः स साध्यतेऽस्माभिस्तत्कर्ता शङ्करः स्फुटम् ।। (2: 2-3)

• பசு

அடுத்ததாகப் பசுவாகிய ஆன்மாவைப்பற்றிச் சிறிது நோக்குவோம்.

1. உடல், மனம் முதலியவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டது ஆன்மா.
2. என்றுமழியாத அறிவுடைப் பொருள்.
3. எங்கும் நிறைந்த ஒன்று.
4. மற்ற ஆன்மாக்களினின்றும் வேறுபட்டது.
5. அநாதிகாலம் தொட்டே மலத்தினால் மறைக்கப்பட்டிருப்பது.
6. தன்னுடைய கருமங்களின் பயனை நுகர்வது.
7. செயல்களைச் செய்யும் ஆற்றல் உடையது.
8. சிற்றறிவும் சிறிய அளவில் செயல் திறனும் கொண்டது.
9. எப்போதும் பதியாகிய சிவபெருமானின் ஆளுகைக்குட்பட்டது.

देहान्योऽनश्वरो व्यापी विभिन्नः समलोऽजडः ।

स्वकर्मफलभुक्कर्ता किंचिज्ज्ञः सेश्वरः भ ुः ।।

என்று பராக்கியாகமம் பசுக்களாகிய ஆன்மாக்களின் நிலையைத் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆன்மாவிற்கு எப்போதும் அறிவும் ஆற்றலும் அதை விட்டு நீங்காமல் உள்ளன என்று மிருகேந்திராகமம் கூறுகிறது

चैतन्यं दृक्क्रियारूपं तदस्त्यात्मनि सर्वदा ।

கிரணாகமக் கூற்றுப்படி ஆன்மாக்கள் கேவலம் என்னும் நிலையில் எவ்விதச் செயலும் குணமும் இன்றியும், ஸகல நிலை எனப்பட்ட

உலகில் பிறந்து வாழும் நிலையில் மாயை எனப்படும் மும்மலங்களுள் ஒன்றின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது. அது தனது கரும வினைக்கீடாக அவற்றின் பயன்களை நுகர்வதற்கான உபாயத்தை எப்போதும் சிந்தித்துக்கொண்டிருக்கிறது.

पशुर्नित्यो ह्यमूर्तोऽज्ञो निष्क्रियो निर्गुणोऽभ ुः ।

व्यापी मायोदरान्तःस्थो भोगोपायविचिन्तकः ।।

இக்கருத்தையே மிக எளிதாக அறிவுறுத்துகிறது தனக்கே உரிய கம்பீர நிலையில் ஞானாமிர்தம் என்னும் 12 ஆம் நூற்றாண்டுச் சைவ நூல்:

கலை முதலாய நிலைமலி தத்துவத்
துலைவில் கட்டிவ னுறலென் பின்னர்
மாயா வுதர மரீஇயோ னெங்கணும்

மாயாவுதரம் என்னும் சொல்லாட்சி அப்படியே கிரணாகமத்தைப் பின்பற்றயமைந்துள்ளமை இங்கு கூர்ந்து நோக்கத்தக்கது.

ஸத்யோஜ்யோதிசிவாசாசாரியார் இயற்றிய நரேசுவரபரீக்ஷா என்னும் நூலில் பசுவாகிய ஆன்மாவின் முக்கிய குணங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

ज्ञाता कर्ता च वोधेन वुद्धा वोध्यं वत 'ते ।

व ृत्तिफलभोक्ता च यः पुमानुच्यतेऽऽ सः ।।

நியாய வைசேஷிக மதத்தோர் கொண்டவாறு ஆன்மாவின் உண்மை அநுமானத்தின் வாயிலாகவோ, ஸாங்கிய மதத்தோர் கொண்டமுறையில் 'ஆன்மாவிற்கு அறிவு மட்டுமே உள்ளது,

செயல்திறன் இல்லை என்றோ சைவசித்தாந்தம் கொள்ளுவதில்லை. ஆன்மாவிற்கு அறிவும் ஆற்றலும் எப்போதும் நீங்காது அமைந்துள்ளன; அவன் கர்த்தா: வினைகளையும் அவற்றின் பயன்களையும் நுகரும் போக்தா. அவற்றின் மூலம் அவன் தன்னுடைய முயற்சியினால் கருமவினைகளின் பயன்களை நுகர்கிறான்.

இக்கருத்துக்களையே வலியுறுத்தி ஸத்யோஜ்யோதி கூறுவதாவது:,

कृतं मया करोमीदं करिष्यामीति वोधतः ।

वेदूमाण्यतश्चाणोः कर्तृत्वशक्तित्रिकालगा ।। (நரேசுவரபரீக்ஷா, 1: 56)

முன்னர் கூறியவாறு,தருக்கரீதியிலும் ஆன்மாவின் உண்மையைச் சிவஞானபோதம் நிறுவுவதை அதன் மூன்றாம் சூத்திரத்தில் நாம் காண்கிறோம்:

नेतितो ममतोऽकादक्षोपरतिवोधतः ।

स्वापे निर्भोगतो वोधे वोद्धृत्वादस्त्यणुस्तनौ ।।

என்றும்,

உளதிலதென்றலின் எனதுடலென்றலின்

ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்

உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்

மாயா இயந்திர தநுவினுள் ஆன்மா.

என்பன அவை.

ஆன்மாவின் சிற்றறிவும், செயல்திறனில் குறுகிய தன்மையும், அவற்றால் மாயா காரியங்களாகிய உலகில் இன்பதுன்பங்களை நுகர்வதும் அதற்கு இயற்கையாகவோ, முக்காலத்திலும் அமைந்த ஒன்றோ அல்ல. மூலமலம் என்றும், ஆணவமலமென்றும் அழைக்கப்படும் மலத்தின் மறைப்பினால் அதன் பேராற்றலும் பேரறிவும் மறைப்புண்டு தன்னை ஒரு சிற்றறிவினனாக நினைந்து அவ்வாறு செயல்படுவதனால் அவன் துன்புறுகிறான். ஆன்மாக்கள் கணக்கற்றவை; ஒவ்வொன்றும் தனித்தனியே வேறுபட்டு நிற்பன: நரேசுவரபரீக்ஷா எனும் நூலில் அதன் காரணத்தையும் விளக்குகிறார்:

एकस्मिन्नेव काले यत् तिलिङ्ग सुखादयः ।

विभिन्ना उपलभ्यन्ते तेनाणुर्भिन्न इष्यते ।।

- பாசம்

மூன்றாவதாகிய பாசம் எனப்படுவது முன்னர் கூறிய ஆணவமலம், ஆன்மா எண்ணிறந்த முற்பிறவிகளில் செய்த கருமங்களின் தொகுப்பு, ஜடமானதும், ஈசுவரனால் தொழிற்படுத்தப்பட்டு அதனால் ஐம்பூதங்களின் தொகுப்பானதும் பொதுவானதுமான இந்த உலகம், ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய கருமவினைக்கீடாக உடல், புலன்கள், மனம் முதலிய கருவிகள் ஆகியவற்றை உண்டாக்கும் மாயை ஆகிய மூன்றையும் கொண்டது பாசம் என வழங்கப்படுகிறது: இம்மூன்றும் ஆன்மாவின் சித் சக்தி மற்றும் கிரியாசக்தி ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி, தன்னை ஒரு சிற்றறிவினனாகவும், செயல்திறன் அற்றவனாகவும் நினைக்கச் செய்வது இப்பாசமாகும்.

- இதர சமயங்களின் மோக்ஷக் கொள்கைகள்

1. நியாய வைசேஷிகம்

दुःखजन्मप्रवृत्तिदोषमिथ्याज्ञानानामुत्तरोत्तरापाये तदनन्तरापायादपवर्गः ।

என்பது கௌதமமுனிவரின் நியாயசூத்திரம், 1:1:2

அபவர்கமெனப்படும் முக்தியானது எவ்வித துக்கமுமின்றி இருப்பது; அவ்வாறு இருத்தல் வேண்டின் பிறப்பு இறப்பு ஆகிய இரண்டுமற்ற நிலையை அடைய வேண்டும். பிறப்பிறப்பிற்குக் காரணமாயிருப்பது ஆன்மாவின் தர்மம், அதர்மம் ஆகிய வினைகள்; அதுவே பிரவிருத்தி எனப்படுகிறது. செயல்களுக்குக் காரணமாயிருப்பது மனிதனின் விருப்பு (இராகம்), வெறுப்பு (துவேஷம்) மற்றும் நல்லது கெட்டது எனப் பகுத்து அறியாதிருக்கும் நிலை. இது மோஹம் எனப்படுவது. எனவே, எவ்விதச் செயலுமின்றி இருக்கவேண்டு மானால் மேற்கூறிய மூன்றுமற்று இருக்கவேண்டும். இவை எல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பது ஆன்மாவின் அறிவின்மை; அந்நிலையில் தான் விருப்பு வெறுப்புகளுடன் எவ்விதத் தொடர்பும் அற்றவன் என்பதை உணருவதில்லை. எனவே அறிவின்மை (மித்யாஞானம்) நீங்கினால் மேற்கூறிய அனைத்தும் ஒவ்வொன்றாக நீங்கி கைவல்யம் எனும் மோக்ஷநிலையை அடையலாம். உலக வாழ்வு என்பது கற்றறிந்த சான்றோர்களுக்குத் துக்கமே; அதைத் தவிர வேறொன்றுமில்லை. ஆதலின், மோக்ஷநிலையானது அதற்கு மாறாகத் துன்பமென்பதே இல்லாதநிலை என்பது நியாய வைசேஷிகர்களின் தலையாய கொள்கை. அந்நிலையில் ஆன்மா வானது தனது அனைத்துக் குணங்களினின்றும் நீங்கி இருக்கும்; வாத்ஸ்யாயனர் போன்ற ஆசாரியர்கள் மோக்ஷநிலையில் ஆன்மா எவ்வித

இன்பத்தையும் அனுபவிப்பதில்லை எனக் கூறுகிறனர். நியாயஸாரம் முதலான நூல்களை இயற்றியவரும் சைவக் கொள்கைகளைக் கொண்டவருமான பாஸர்வஜ்ஞர் என்னும் ஆசாரியர் பரமாத்மாவான சிவபெருமானிடம் எல்லையற்ற பக்தி கொண்டு தியானம் மேற்கொண்டால் சிவபெருமானை நேரில் கண்டு பெருமானின் திருவருளால் எல்லாவற்றுக்கும் மேலான சுகமான நிலையை அடையலாம் எனக் கூறுகிறார்.

यदा चर्मवदाकाशं वेष्टयिष्यन्ति मानवाः ।

तदा शिवमविज्ञाय दुःखस्यान्तो भविष्यति ।।

என்னும் சுவேதாசுவதரோபநிஷத் மந்திரத்தை இவ்விடத்தில் அவர் மேற்கோளாகக் காட்டுவதும் சிவபெருமானின் கருணையின் மஹிமையை அவர் போன்றோர் உணர்ந்திருப்பதற்குச் சான்று.

- ஸாங்கியயோகத் தத்துவக்கோட்பாட்டில் மோக்ஷத்தின் நிலை

புருஷன் எனப்படும் ஜீவனையும், ஜடப்பொருள்கள் அனைத்துக்கும் காரணமான பிரகிருதி என்னும் இரு தத்துவங்களுள், ஆன்மா புருஷன் எனப்படுகிறான்; அதற்கு சைதன்யம் எனப்படும் அறிவுத் திறன் மட்டுமே உண்டு. உலகவாழ்வில் பிரகிருதியின் விளைவுகளான அஹங்காரம், புத்தி மற்றும் ஜடமாகிய உலகம் இவை அனைத்தினின்றும் தான் வேறுபட்டவன் என அறியாது அவற்றையெல்லாம் தானும் தன்னுடையன என்றும் நினைப்பதால் சம்சாரத்தில் உழல்கிறான். அதற்குக் காரணம் அவித்யை எனப்படும் அஞ்ஞானமே. எனவே விவேகஞானத்தால் புருஷன் தான் பிரகிருதியினின்றும் முற்றிலும் வேறுபட்டவன் என்பதை நன்கு

உணர்தலே மோக்ஷம். அந்நிலையில் அவன் சம்சாரதுக்கத்தைக் கடந்து தன்னுடைய முழு அறிவுத்திறனையும் உணர்கிறான்.

- பூருவமீமாம்ஸை மதத்தில் சம்சாரதுக்கத்திற்குக் காரணமானவையும், பூதவுடலைக் கொடுப்பதுமான தர்மம், அதர்மம் ஆகியவற்றினின்றும் நீங்கிய ஆன்மா மோக்ஷத்தை அடைகிறது எனக் கொள்ளப்படுகிறது. அந்நிலையில் ஆன்மாவிற்கு எவ்விதக் குணமுமில்லை. குமாரிலபட்டர் மோக்ஷநிலையில் ஆன்மா எவ்வித ஆனந்தத்தையும் அநுபவிப்பதில்லை எனத் திட்டவட்டமாகக் கூறுகிறார். ஏனெனில், ஆனந்தாநுபவம் உண்டென்றால் அது சுவர்க்க அநுபவத்திற்கொப்பானதாகிவிடும்; விடவே, மோக்ஷமும் சுவர்க்கத்தைப் போல நிலையற்றதாகும்.

- அத்வைதம் முதலிய வேதாந்த மதங்களின் மோக்ஷக் கொள்கை

சங்கரர் நிறுவிய அத்வைத வேதாந்தமதத்தில் பிரம்மம் ஒன்றே எக்காலத்திலும் அழியாத உள்பொருள்; பிரம்மத்தினின்றும் தனித்து உணரும் இந்த ஆன்மா, ஜடமாகிய உலகம் இவையிரண்டும் மாயை; அவை இல்பொருள்கள்; உலகம் என்பதாகிய தனிப்பொருள் பிரம்மத்தினின்றும் வேறுபட்ட ஒன்று இருப்பதாக ஆன்மா உணர்வதே அதன் துக்கத்திற்குக் காரணம். இவை அனைத்தும் மித்தியை எனப்படும் இல்பொருளே என்றும், தான் பிரம்மமே என்பதையும் உணர்ந்த நிலையே மோக்ஷமாகும்.

- சைவசித்தாந்தத்தின் ஆரம்பநிலையில் மோக்ஷக் கொள்கை

சைவசித்தாந்த ஆசாரியர்கள், அவர்களியற்றிய நுல்கள், அவற்றின் வாயிலாகச் சித்தாந்தம் வளர்ந்தவிதம் ஆகியவற்றை நோக்குங்கால் அதன் வளர்ச்சி இரு பெரும் பிரிவாகத் தெரிகிறது: ஸ்வாயம்புவம், ரௌரவம், கிரணம் மதங்கமாரமேசுவரம், மிருகேந்திரம், முதலிய

ஆகமங்களுக்கு உரைகளையும், அவற்றின் அடிப்படையில் சைவசித்தாந்தத்தின் தத்துவக்கோட்பாடுகளை வரையறை செய்து சித்தாந்தத்தை நிறுவியது முதல் கட்டம்; அவ்வாறு வரையறை செய்யுங்கால் ஏனைய சமயங்களான நியாயவைசேஷிகம், பௌத்தம் முதலான அனைத்துச் சமயங்களின் பெரும்பாலான அடிப்படைக் கொள்கைகளை நன்கு ஆய்ந்து, முடிவில் மோக்ஷத்தைப் பற்றிய அவ்வச்சமயங்களின் கொள்கைகளில் உள்ள முரண்பாடுகளை எல்லாம் பட்டியலிட்டு, அவற்றின் பொருந்தாமையையும், ஆகம அடிப்படையிலும் யுக்திக்கும் அவற்றின் முரண்பாடுகளையும் எடுத்துக் கூறி சைவசித்தாந்த ஆகமங்களில் விளக்கியும் ஒருவாறு மறைமுகமாகவும் எடுத்துரைக்கப்பட்ட மோக்ஷக் கொள்கைகளைத் தருக்கரீதியில் நிறுவினர் ஸத்யோஜ்யோதி, நாராயணகண்டர், இராமகண்டர் போன்ற மிகப் பழங்காலத்திய ஆசாரியர்கள். மோக்ஷக் கொள்கைகளை ஆய்வதற்கென்றே மோக்ஷகாரிகை, பரமோக்ஷ நிராஸ காரிகை என்னும் இரு முக்கிய நூல்களை ஸத்யோஜ்யோதி யாத்துள்ளது அக்கொள்கைக்கு அப்பெருமகனார் அளித்த முக்கியத் துவத்தைப் பறைசாற்றுகிறது.

தத்வஸங்க்ரஹம் என்னும் சிறிய நூலில் ஸத்யோஜ்யோதி கூறுவதாவது: சைவசிதாந்தத்தில் மோக்ஷத்தின் நிலை யாதெனில் அது இருவகைப்படும்: மந்திரம் முதலானவற்றுக்கும் வித்தியேசுவரர்களாகிய அனந்தர் முதலானோருக்கும் தலைவனாக இருத்தல் அபரமுக்தி யெனப்படுவது.

அதற்கும் மேலாக சிவபெருமானுடன் எல்லாவிதத்திலும் சமமாக அனைத்து ஞானக்கிரியா சக்திகளையும் கொண்டிருப்பது பரமுக்தி எனப்படும்.

विद्याविद्येशत्वं चापरमुक्तिः परेह शिवसमता ।

மோக்ஷகாரிகா எனும் நூலில் மேலும் அவர் கூறுகிறார்: மோக்ஷமென்பது மலம் முதலான அனைத்துப் பாசக் கட்டுகளினின்றும் அறவே நீங்கி எல்லையற்ற ஞானமும், செயலாற்றும் சக்தியும் பெற்றிருத்தல்:

मलादिपाशविच्छित्तिः सर्वज्ञानवियोद्भवः ।
मोक्षः . . .

ஸத்யோஜ்யோதி சிவாசாரியார் தம்முடைய நரேச்வரபரீக்ஷா நூலின் இறுதியில் ஏனைய மதங்களான பௌத்தம், வைசேஷிகம், ஆர்ஹதம், பாஞ்சராத்ரம், வேதாந்தம் முதலியவற்றில் ஒன்றைவிட மற்றொன்று சிறப்பு வாய்ந்ததாகக் கூறப்படும் மோக்ஷக் கொள்கைகள் யாவற்றையும் விடச் சைவசித்தாந்தத்தின்ம் கொள்கையே நனி சாலச் சிறந்தது என கோஷமிடுவது இங்கு நோக்கத்தக்கது.

सर्वमुक्त्युत्तमा गीता शिवता शिवशासने ।

फलेभ्यश्चापि सर्वेभ्यो विज्ञेया साधिकाधिका ।।

ஸர்வஜ்ஞுத்வம் என்னும் அளவிறந்த பேரறிவு, ,ஸர்வசக்தத்வம் என்னும் எல்லையற்ற பேராற்றல் ஆகிய இரண்டையும் கொண்ட சைவமுக்தியைத் தவிர சிறப்பு வாய்ந்த வேறொரு முக்திநிலை இருக்கக்கூடுமோ என இராமகடதர் தனது மதங்கபாரமேசுவர உரையில் கேட்கிறார்:

न हि सर्वज्ञत्वसर्वकर्तृत्वाप्त ेरन्यः ूकष ः सम्भवति ।

மிருகேந்திராகமம் சைவசித்தாந்தமுக்திநிலையின் சிறப்பைக் கீழ்க் கண்டவாறு கூறுகிறது:

शैवे सिद्धो भाति मूर्ध्नीतरेषां

ரௌரவாகமத்தில் சற்று வேறுவிதமாக முக்திநிலை விளக்கப்படுவதை இங்கு நாம் காணவேண்டும்.

जले जलं यथा

எனவே மேற்கண்டவாறு ஆராயுங்கால் ஆரம்பநிலையில் பெரும்பான்மையான ஆகமங்களும், அவற்றின் விளக்கங்களையும் உரைகளையும் வகுத்த ஸத்யோஜ்யோதி தொடங்கி அகோரசிவா சாரியார் ஈறான மிகச் சிறப்பு வாய்ந்த சைவ ஆசாரியர்கள் சைவ சித்தாந்தத்தின் முக்திநிலையாகக் கொண்டிருந்தது சிவபெருமா னுடன் எல்லாவிதத்திலும் சமமாக அனைத்து அறிவு பேராற்றல் களைக் கொண்டிருத்தலாகிய சிவசமவாதமே என அறிகிறோம்.

அடுத்து, தமிழ்நாட்டில் 11-12 ஆம் நூற்றாண்டுகள் தொடங்கி திருக்களிற்றுப்படியார், முதலான அநுபூதி நூல்களிலும், சிவஞானபோதம் எனும் மிகச் சிறியதும் கருத்தாழத்தில் அளவற்றதுமான நூலிலும், அந்நூலுக்கு எழுந்த உரைகளான சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் போன்ற 13, 14 ஆம் நூற்றாண்டு நூல்களிலும் சைவசித்தாந்த முக்திநிலை சற்றே வேறுவிதமாக விளக்கப்படுவதைக் காண்கிறோம். இக்காலகட்டத்தில் பெரும்பான்மையான நூல்கள் சிவஞான போத அடிப்படையிலோ, அல்லது அதன் உரை வடிவிலோ அமைந்துள்ளது மனதில் கொள்ள வேண்டும். எனவே சைவசித்தாந்தத்தின் இக்காலத்தை சிவஞானபோதபரம்பரை என்றே நாம் கூறலாம்.

இப்பரம்பரையும், நூற்கருத்துக்களும் மூன்று பெரும் நூல் தொகுதியின் அடிப்படையில் வளர்ந்து வந்துள்ளமையும் நோக்கத்தக்கது. அவை முறையே:

1. திருஞானசம்பந்தர் போன்ற நாயன்மார்களின் தேவாரத் திருமுறைகள்
2. வேதங்களின் தலை (சிரம்) எனப்படும் உபநிஷத்துக்கள், அவற்றிலும் குறிப்பாக, சுவேதாச்வதரம், அதர்வசிரம் முதலான சைவ உபநிஷத்துக்கள்
3. சைவ ஆகமங்கள்

சைவசித்தாந்த ஆரம்பநிலையில் தோன்றிய ஆசாரியர்களான ஸத்யோஜ்யோதி போன்றோர்க்கு சிவாகமங்களைத் தவிர ஏனைய நூல்கள் பெரும்பாலும் பிரமாணமாகக் கொள்ளப்படவில்லை என்பதும் நினைவு கூரத்தக்கது.

சிவஞானபோதபரம்பரையில் சிவஞானபோதத்தின் எட்டாம் சூத்திரம் முதன்முதலில் முக்திநிலையை விளக்குகிறது. அது,

ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அன்னியமின்மையின் அரன் கழல் செலுமே.

என்பதாகும்.

அரனாகிய சிவபெருமானின் கழலிணைகளை ஆன்மா சென்றடைவதே முக்தி; அது எவ்வாறெனின் அங்கு அநன்யம் எனப்படும் வேறற்ற தன்மையில் சிவபெருமானுடன் ஒன்றுதலே. மேலும் நாம் இங்கு நோக்கவேண்டியது யாதெனின் , சிவபெருமானுடன் ஆன்மா அன்னியமின்றி இருந்தாலும் பெருமானின்

திருவடியில் ஒன்றி அவருக்குக் கீழ்ப்பட்டிருத்தலேயாம்; அதற்காகத் தான் அரன் கழல் செல்லுதல் முக்தி எனப்படுகிறது. சிவஸமவாதம் இங்கு முற்றிலும் மறுக்கப்பட்டு, முக்தியில் எப்போதும் சிவபெருமானின் திருவடி நீழலில் அடங்கியிருத்தலே வேண்டப் படுகிறது.

வடமொழிச் சிவஞானபோதத்திலும் இக்கருத்தே,

मुत्त्वैतान् गुरुणानन्यो धन्यः प्नोति तत्पदम् ।

வலியுறுத்தப்படுகிறது.

சிவனடியைச் சேரும் முத்தி செப்புவது இங்கு யாமே

என்று சிவஞானசித்தியாரில் காண்கிறோம்.

மன்னும் அருள் குருவாகி வந்து அவரின் நீக்கி

மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன் .

என்று மேலும் இதே கருத்து சிறப்பாக விளக்கப்படுகிறது அந்நூலில்.

முக்திநிலையில் அரனடியில் அடங்கிய ஆன்மா, பேரறிவில் திளைத்து, ஆனந்தப் பெருவெள்ளத்தில் துய்க்கிறது:

வைத்து ஆண்டு மலம் கழுவி ஞானவாரி

மடுத்து ஆனந்தம் பொழிந்து . . .

முத்தாந்தப்பாதமலர்க்கீழ் வைப்பன் . . .

எனவே, சிற்றறிவும், குறுகிய சக்தியும் தன்னுடைய இயல்பு அன்று என்னும் அறிவு பெற்று, தானும் சிவபெருமானைப் போல் பேரறிவும், பேராற்றலும் பொருந்தியவன் என்று நன்குணர்ந்து, பெருமானின் அருட்சக்தியினால் உண்மை ஞானம் கைவரப் பெற்று ஆன்மா

முடிவில் சிவபெருமானைப் போலவே விளங்கும் என்றும் சித்தியாரில் காண்கிறோம்.

கண்ணுதல் தன் நிறைவு தனில் கலந்து காயம்

கழிந்தக்கால் எங்குமாய்க்கருது அரன்போல் நிற்பன் .

அந்நிலையில் சிவபெருமானின் வியாப்தியில் வேறறக் கலந்து எங்குமாய் வியாபித்திருப்பன் எனவும் ஆசிரியர் கூறுகிறார்.

நெருப்பானது பழுக்கக் காய்ச்சிய இரும்பை முழுவதும் வியாபித்து அதனினும் வேறற்ற தன்மையில் இருப்பதுபோல் சிவபெருமானின் வியாப்தியில் அடங்குகிறது முக்தி அடைந்த ஆன்மா:

. . . சிவன் உளத்தே தோன்றித்
தீ இரும்பைச் செய்வதுபோல் சீவன் தன்னைப்
பந்தனையை அறுத்துத் தான் ஆக்கித் தன் உருவப்
பரப்பெல்லாங்கொடுபோந்து . . .

சிவபெருமான் தன்னுடைய கருணை திறத்தினால் பாசங்களெல்லாம் நீங்கிய ஆன்மாவைத் தானாகவே ஆக்குகிறான். இது கிட்டத்தட்ட சிவசமவாதம் போல் தோன்றுகிறது.

சிவப்பிரகாச ஆசிரியரான உமாபதிசிவம் முக்திநிலையை ஒருவித பேதாபேதநிலையென வருணிக்கிறார்:

. . . இருள் வெளிபோல் பேதமும் சொற்பொருள் போல்
பேதாபேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்தினால் விளைவதாய் உடல் உயிர் கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும் அத்துவிதமாகும்
சிறப்பினதாய் வேதாந்தத்தெளிவாம் சைவ
சித்தாந்தத்திறன் . . .

15 ஆம் நூற்றாண்டில் எழுந்த திருநெறிவிளக்கமெனும் நூலும் இதே கருத்தை

வேறற்றொன்றல்லா வத்துவிதமாயுயர் வேதாந்தத்தெளி

பொருளாய் . . .என விளக்குகிறது.

16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப் பெரும் புகழ் வாய்ந்த சைவ ஆசாரியரான மறைஞானசம்பந்தர் பரமோபதேசம் என்னும் சிறிய நூலில் முத்தி பெற்ற ஆன்மாக்கள் சிவானந்தத்தை அனுபவிப்பதில்லை; மாறாக ஆன்மாக்களுக்கே உரியதும், பெத்த நிலையில் விளக்கமுறாது இருந்ததுமான ஆன்மானந்தத்தையே ஆணவமலமறைப்பு நீங்குவதால் அனுபவிக்கின்றன என்னும் கருத்தை நிறுவுகிறார். இக்கருத்து தான் நான்மறைகள், பதினெண்புராணங்கள், இருபத்தெட்டு ஆகமங்கள் ஆகியவற்றின் துணிந்த முடிபு என்றும் அவர் அறுதியிட்டுக் கூறுகிறார்.

தம்முடைய ஐக்கியவியல் என்னும் சிறிய நூலில் சிவபெருமானுடன் முத்தியில் ஐக்கியமடைதலென்பது ஆதியும் அந்தமுமில்லாத வேறற்ற சமவாய நிலையில் இருத்தலேயாம் என உரைக்கிறார். இக்கருத்து இவருக்குமுன் வேறெவரும் கூறிலர். மேலும், அவருடைய சீடரான நிகமஞானதேசிகர் தமது சித்தியார் உரையிலும், வடமொழிச் சிவஞானபோதத்திற்குத் தாம் இயற்றிய சிவஞானபோதொபநியாஸம் எனும் உரையிலும், முக்திநிலையில் ஆன்மா சிவானந்தத்தை அநுபவியாது; அவ்வாறு கொள்ளுதல் எல்லா சாத்திரத்திற்கும் முரண்பாடு. தனக்கே உரிய ஆன்மானந்தத்தைத்தான் ஆன்மா அநுபவிக்கிரது என தருக்கரீதியி வாதிட்டு நிறுவுகிறார்.

அதே காலத்தில்வாழ்ந்த சிவாக்ரயோகிகள் இவை யாவற்றினின்றும் வேறுபட்டு, ஆன்மா தனக்கே உரிய நித்தியஞானானந்த நிலையை பாசத்தினால் கட்டுண்ட நிலையில் உணராமல், சிவபெருமானின்

அருளால் பாசம் நீங்கிய நிலையில் உணர்கிறது; பூதவுடல் நீங்கப் பெற்றபின்னர் சிவபெருமானுடன் தன்னுடைய சொரூபஞானத்தினால் வேறறக்கலந்து நிற்கிறது; உப்பானது நீரில் முழுவதும் கரைந்து அதனினும் வேறற்று இருப்பது இதற்கு ஒப்பாகக் கூறப்ப்படுகிறது.

முக்தி நிலையில் சிவபெருமானிடமிருந்து சற்றே பேதமான நிலையையுடைய அபேதநிலை எனக் குறிப்பிடுகிறார்: காற்று வீசாத நிலையில் அலைகள் அனைத்தும் ஒய்ந்து கடலுடன் ஒன்றாகக் கலந்து அடங்கியிருத்தலை அது ஒக்கும் என்பது அவரது கொள்கை:

किन्तु वाय्पगमे तरङ्गादीनां समु्रा इव अखण्डानन्दरूपे शिवे एकीभावेनावस्थानमपीत्याह . . . मुक्तावपि सत्येव ईषद्भेदेऽभेदः तत्पर्यायः तादात्म्यं वैशिष्ट्यमेवैक्यं ूकृ ते विवक्षितम् ।

சிவாக்ரயோகிகளின் இக்கருத்துக்கள் பெரும்பான்மை பிரம்மசூத்திரத்திற்கு ஒப்பற்ற சைவவேதாந்த அடிப்படையில் பாஷ்யம் இயற்றிய ,கண்டரின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் தெரிகிறது.

முடிவாக, 18 ஆம் நூற்றாண்டின் மிகப் புகழ்வாய்ந்த சைவ ஆசாரியரான சிவஞானசுவாமிகள் தம்முடைய சிவஞானமாபாடியத்தில் முக்திநிலையைச் சிவபெருமானுடன் அபேதநிலையில் இருத்தலே; ஆயினும், சற்று பேதத்துடன் ,கண்டர் கூறியவாறு விசிஷ்டாத்வைதநிலை என விளக்குகிறார்.

இதுகாறும் கூறியவற்றால் சைவசித்தாந்தத்தில் முக்தி நிலையானது முதலில் சிவசமவாதமாகவும், பின்னர் சிவஞானபோதபரம்பரையில் சற்று வேறாகவும், அதிலும் ஒவ்வொரு நூற்றாண்டில் தோன்றிய

ஆசாரியர்கள் தமக்கே உரிய நுணுக்கமான விளக்கங்களையும் தந்து மிகவும் வளப்படுத்தி விளக்கியுள்ளதை ஸ்தாலீபுலாக நியாயமாகச் சுருக்கமாகக் கண்டோம். இவற்றின் விரிவு மேலும் பல முக்கியநூல்களின் அடிப்படையில் விளக்கமாக வரையப்பட வேண்டும். சைவசித்தாந்தத்தில் நாம் கண்டவாறு இத்தகைய நுணுக்கமான வேறுபாடுகள் வேறெந்தச் சமயத்தத்துவத்திலும் இல்லையெனக் கூறலாம்.

ஸ்ரீஞானாம்பிகை துணை

பிம்ப ஸம்ஸ்காரம்

சிவாகம ஞானி,சிவாகம சிந்தாமணி
பிரதிஷ்டா பூபதி,சிவாகம நிபுணர்
சிவஸ்ரீ T.K. பாலாமணி சிவாச்சாரியார்
திருக்கண்ணங்குடி.

" ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க".

ஸ்ரீ காளிகாம்பாள் திருவருள் துணையினால், அம்பாள் ஸ்வருபமாகவே, நடமாடும் அன்னையாக, ஆசி புரிந்த, சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் கனவுகளை எல்லாம் நினைவாக்கி வரும் அவர்கள் குமாரர்கள், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் மற்றுமுள்ள யாவருக்கும் எனது முதற்கண் வணக்கம். நமஸ்காரம். மாதம் ஒருமுறை இங்கு ஒரு பெரிய ஆகம கருத்துச் சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்து, அது நடைபெறுவது அறிந்து மகிழ்ந்தோம் .எனக்கு இம்மாதம் கிடைத்த இவ்வாய்ப்பைக் கருதியும் மகிழ்ந்தோம்.

ஆகமமே உருவானவர் பரமேஸ்வரர். அவரால் சொல்லப்பட்ட ஆகமங்கள் வாயிலாக நாம் திருக்கோயில்களை அமைத்து திருஉருவம் பரதிஷ்டை செய்து, வழிபாடு நிகழ்த்தி இன்பம் பெறுகிறோம். திருக்கோயில்களில் இறைவனுடைய திருமேனியை பிம்பங்களாக உருவாக்கி பிரதிஷ்டை செய்ய வேண்டும். அப்படி பிரதிஷ்டை செய்ய விருக்கும் பிம்பங்களுக்கு ஸ்தபதியிடமிருந்து வந்தது முதல் கும்பாபிஷேத்திற்கு உட்பட்டதாகச் செய்யும் நிகழ்ச்சிக்கு பிம்ப ஸம்ஸ்காரம் எனலாம். அதைப்பற்றிய கிரியைகளைத் தான் இப்பொழுது நாம் கலந்துரையாடல் செய்ய இருக்கின்றோம்.

ஒரு பிம்பம் பூஜைக்காக நம்மிடம் வரும்போது, அந்த பிம்பத்தை,பூஜைக்குரிய பிம்பமாக்க நாம் அதற்கு பல சடங்குகள் செய்ய வேண்டும். முதலில் பிம்பத்தை ஒரு மண்டலத்திற்கு நெற்குவியலிலும் பிறகு ஒரு மண்டலத்திற்கு தண்ணீரிலும் வைக்க வேண்டும். பிரதிஷ்டை தினத்திற்கு முன்னதாக நல்ல நேரத்தில் மங்கள வாத்யங்களுடன் மேற்படி பிம்பத்தை எடுத்து வர வேண்டும். இதை கிராமப்ரதக்ஷிணம் என்ற முறையிலும் செய்வதுண்டு.

பின்னர் அந்த பிம்பத்திற்கு அஷ்டாதசக்ரியை, தத்வநியாசங்கள், யந்திர ஸ்தாபனம், இரத்னநியாசங்கள், அஷ்டபந்தன ஸமர்ப்பணம், ஸ்பர்ஸாகுதி, நாமகரணம், மந்திரஉபதேசம், கும்பாபிஷேகம் இப்படியாக மேற்சொன்ன கிரியைகளைச் செய்து பிம்பத்தை பூஜைக்குரிய பிம்பமாக மாற்ற வேண்டும்.

நயனோன் மீலனம்:- கண்திறத்தல், பிம்பத்திற்கு ஸ்தபதியார் கண் திறந்து கொடுத்திருப்பார். மேலும் மந்திரவத்தாக செய்ய வேண்டும். மூன்று கலசங்கள் வைத்து சூரியன், சந்திரன், அக்னி- வலது, இடது, நெற்றி- ஆகிய மூன்று கண்களுக்கு அதிதெய்வமாக உள்ளவர்களை பூஜித்து, நேத்திர மந்திரம் ஜெபம் செய்து, ஹோமகாரியங்கள் நிறைவு செய்ய, தங்க ஊசி, வெள்ளி ஊசி தர்பை ஆகியவற்றால் மூன்று கண்களையும் உன்மீலனம் செய்ய வேண்டும். பின்னர், மிக முக்கியமானதான நவத்வாரங்கள் திறத்தல். இது ஆகமத்தில் மட்டும்தான் உள்ளது. இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு மூக்குத் துவாரங்கள், வாய், பிராணன், அபானன் என்று சொல்லக் கூடியது ஒன்பது துவாரங்கள். "ஒன்றிலே ஒன்பது வாசல் வைத்தாய்" என்பது நாவுக்கரசர் வாக்கு. கண் திறந்த உடன் தச தர்ஸனம் மங்களப்

பொருட்களை காண்பித்தல். 1.கண்ணாடி 2. கோமாதா (கன்றுடன்) 3. பால்,தயிர் 4.தேன் 5.தானியங்கள் 6. பழங்கள் 7. கன்னிகை 8. சுமங்கலி 9.வேதம் படித்தவர் 10.யஜமானர்கள் மற்றும் பக்தர்கள் இப்படியாக தசவித தர்சனத்தோடு நயனோன்மீலனம் நிறைவு பெறுகிறது.

ஜலாதிவாசம்:- கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதா, சிந்து, காவேரி, முதலான புண்ணிய நதிகளை தண்ணீரில் ஆவாஹனம் செய்து, வருணசூக்தம் ஜபித்து, நாதஸ்வரத்தில் ஓடம் வாசிக்கவைத்து, பிம்பத்தை கழுத்து வரை தண்ணீரில் உரிய காலத்திற்கு வைத்து, தூபதீபம், நைவேந்தியம், கற்பூர நீராஜனம் முதலியவற்றை அளித்து நிறைவு செய்ய வேண்டும்.

தனதான்யாதி வாசம்:- செல்வபணக்குவியல், மற்றும் நெற்குவியலில் தனலெஷ்மி, தான்யலெஷ்மிகளை பூஜித்து, ஸ்ரீ சூக்தம் ஜபித்து, நாதஸ்வரத்தில் சாருகேசி,சஹானா இராகங்கள் வாசிக்கச் செய்து, பிம்பத்தின் மீது தான்யங்களையும், தனங்களையும் சேர்க்க வேண்டும். நிறைவாக மங்களஹாரத்தி கொடுத்து நிறைவு செய்ய வேண்டும்.

சய்யாரோஹணம் : - (இறைவனை யோக நித்திரையில் ஆழ்த்துதல்) இரத்தின கம்பளம் போன்ற நல்ல விரிப்பில் பிம்பத்தை வைத்து பூஜிக்க வேண்டும். நித்ராதேவி கும்பம் வைத்து பூஜிக்க வேண்டும். எட்டு திக்குகளிலும் இந்திராதிகளை பூஜித்து தூப-தீப-நைவேத்யம் கொடுக்க வேண்டும். ராத்ரீ சூக்தம் ஜெபித்து, நாதஸ்வரத்தில் நீலாம்பரி ராகம் வாசிக்க வைக்க வேண்டும். பின்னர், சற்று நேரம் அமைதி காத்து, பாக்ய சூக்தத்துடன், பூபாள ராகம் வாசிக்க, இறைவன் திருப்பள்ளிஎழுச்சி யானதாக பாவிக்க வேண்டும். பின்னர் மங்கள வாத்யங்கள், வேத கோஷங்களுடன் உரிய இடத்திற்கு (சன்னதிக்கு) பிம்பத்தை எழுந்தருளச்செய்து அங்கு அமர்த்த வேண்டும்.

இரத்ன ந்யாசம் மற்றும் யந்திர ஸ்தாபனம்:- பிம்பத்தை பீடத்தில் ஸ்தாபனம் செய்வதர்க்கு முன்னதாக செய்ய வேண்டியவைகள். ஆதார சிலையில் ஒன்பது துவாரங்கள் கூட 3, 3 அங்குலத்தில் யந்திர ஸ்தாபனம் செய்வதற்கு பதிவு ஏற்படுத்த வேண்டும். அதில் முறையே, 1. வஜ்ரம், 2. வைடூரியம், 3. மாணிக்கம், 4 ஸ்படிகம், 5. நீலம், 6. மரகதம், 7. முத்து,

8. பவளம், 9. கோமேதகம் என சொல்லக் கூடிய நவரத்தினங்களை மந்திரங்களோடு கூட பீடத்தில் சேர்க்க வேண்டும். அதற்கு மேல் ஒரு மண்டலம் பூஜை செய்த தங்க மற்றும் செப்பு தகடுகளை (யந்திரங்களை) ஸ்தாபனம் செய்ய வேண்டும். யந்திர ஸ்தாபனம் செய்த பீடத்தில் திருபந்தனம் (அதாவது) சர்க்கரை, வாழைப்பழம், சுண்ணாம்பு இவைகளை ஒன்று சேர்த்து பக்குவமான உடன் பீடத்தில் வைத்து பிம்பத்தை வைக்க வேண்டும். பிம்பத்திற்கு நான்கு புறங்களிலும் அஷ்டபந்தனம் என்று சொல்லக் கூடிய எண்வகை மூலிகை மருந்துகளைச் சாற்ற வேண்டும். அஷ்ட பந்தனம் செய்த பிம்பத்திற்கு சந்தனாதி தைலம் அல்லது நல்லெண்ணெய் சாற்ற வேண்டும். பின்னர் பிம்ப சுத்தி என்று சொல்லக் கூடிய மிக முக்கியமான நிகழ்ச்சி செய்ய வேண்டும். அதாவது ஐந்து கலசங்களை ஸ்தாபனம் செய்து முறையே, அஷ்ட மிருத்திகைகள் (எண்வகை மண்) 1.பஞ்சத்வக் (மரத்தோல்கள்) 2.பஞ்ச இரத்தினங்கள் (ஐவகை இரத்தினங்கள்) 3. ஐவகை பல்லவங்கள் (இலைத் தளிர்கள்) 4 ஐவகை தான்யங்கள் 5.ஐவகை கனிகள் இவைகளை நிரப்பி, பஞ்சாஸ்திரங்கள் எனப்படும் 1.சிவாஸ்த்திரம் 2.பாசுபதாஸ்த்திரம் 3.அகோராஸ்த்திரம் 4.பிரத்ங்கிராஸ்த்திரம்

5. க்ஷூரிகாஸ்த்திரம் இவைகளை பூஜித்து ஹோமம் செய்ய வேண்டும். பஞ்ச சாந்தி, கோஷசாந்தி, என்று சொல்லக்கூடிய மந்திரங்களை ஜபம் செய்ய வேண்டும்.

ரக்ஷாபந்தனம் :- பஞ்சாஸ்த்திர கும்ப ஜலங்களினால் பிம்பத்திற்கு காப்பு கட்டுதல். மஞ்சள் சூத்திரத்தில் அஷ்டமஹாநாகம் என்று சொல்லக்கூடிய சர்ப்பங்களை முறையே 1 அனந்தன் 2.வாசுகி 3.தட்கன் 4.கார்கோடகன் 5.சங்கபாலன் 6.குளிகன் 7.பத்மன் 8.மஹாபத்மன் என சொல்லக்கூடிய நாகங்களை பூஜித்து , வேதாதி சூக்தங்கள், ஆயுஷ்ய சூக்தம் முதலிய வற்றை ஜபம் செய்ய வேண்டும். ஜபம் செய்த பின்னர் மங்கள வாத்யங்களோடு கூட, பிம்பத்திற்கு ரக்ஷா பந்தனம் செய்ய வேண்டும். ரக்ஷா பந்தனம் செய்த பிம்பத்திற்கு தெய்வத் தன்மை பெறுவதற்கு பஞ்சாசன நியாசங்கள் செய்ய வேண்டும். ந்யாசம் என்பது தர்பையினால் மந்திரங்களோடு கூட ஒவ்வொரு ஸ்தானத்தையும் தொட்டுபூஜிக்க வேண்டும்.

அவை 1.தண்டபங்கிந்யாசம் 2. முண்டபங்கிந்யாசம் 3, வக்த்ரபங்கிந்யாசம் 4.கலாபங்கிந்யாசம், 5.அஷ்டத்ருசம்கலாந்யாசம் 6. அந்தர்மாத்ருகாந்யாசம் 7.பஹிர்மாத்ருகாந்யாசம் 8. ஸ்ரீகண்டந்யாசம் 9. ஆகமந்யாசம் 10. ஷடத்வந்யாசம் 11.மூலமந்திரந்யாசம் இவைகளை செய்ய வேண்டும். ந்யாசம் என்பது பிம்பத்தினுடைய அங்கங்களையும், உறுப்புகளையும் கூட தெய்வத் தன்மையாக்குவது. ஆகமங்கள் 28-ம் பரமேஸ்வரனுடைய ஒவ்வொரு அங்கங்களாக கூறப்படுகிறது. இதனை "ஆகமம் ஆகிநின்று அன்னிப்பான் தாள் வாழ்க" என்று சொல்லக்கூடிய மாணிக்க வாசகருடைய திருவாசகத்தினாலும் உணர முடிகின்றது. இப்படியாக ந்யாசங்கள் பல செய்து நாமகரணம் மற்றும் மந்திர உபதேசம் செய்ய வேண்டும்.

மந்திர உபதேசத்திற்கு முன்னதாக தத்வன்ந்யாசம், ஜீவன்ந்யாசம், மூர்த்தி ந்யாசம் செய்தல் வேண்டும். தத்வ ந்யாசம் என்பது பிம்பத்தை மூன்று பங்காக செய்து கொள்ள வேண்டும். முறையே, 1. ஆத்ம தத்வம், 2. வித்யாதத்வம், 3. சிவ தத்வம் இவைகளை ஆத்மதத்வத்தில் 24 தத்வங்களையும், வித்யாதத்வத்தில் 7 தத்வங்களையும், சிவ தத்வத்தில் 5தத்வங்களாகவும் மொத்தம் 36 தத்வங்கள். தத்வாதிபதிகள் 36 தத்வம் என்பது உறுப்புகளாகவும், அதிபதிகள் என்பது அவற்றை செயலாக்குபவர்களாகவும் உள்ளது.(மாதிரி-1) சக்ஷிஸ்தத்வம் என்பது கண்ணைக்குறிக்கின்றது. அதிபதி பிரகாசகன் ஒளியைத் தருபவர் என்பதாகும். இது போன்றது மற்றவையெல்லாம். 2. ஜீவ ந்யாசம் என்பது ப்ராண ப்ரதிஷ்டையைக் குறிக்கும். இது நூதன பிம்பங்களுக்கு அவசியம் செய்ய வேண்டியது. இதில் நவதூதிகா ந்யாசங்கள் உட்பட்டது. விவரம் வேண்டின் பின்னர் தெரிவிக்கப்படும். 3. மூர்த்தி ந்யாசம் இறைவன் எட்டு குணங்களோடு கூடிய காரணத்தினால் எண்குணத்தான் என்று சொல்லப்படுகின்றது. 1. ப்ருத்வி = மண் 2. அப்பு = நீர் 3. தேயு = நெருப்பு 4. வாயு = காற்று 5.ஆகாசம் - வெளி 6. சூரியன் - ஒளி (வெப்பம்)
7. சந்திரன் - தன்மை (தட்பம்) 8.யஜமானன் ---- ஆன்மா இந்த எண் மூர்த்திகளுக்கு அதிபதிகளாக உள்ளவர்களுக்கு மூர்த்தீஸ்வரர்கள் என்று பெயர். அவர்களையும், அவர்களுக்குரிய இடங்களில் பூஜிக்க வேண்டும். இந்த மூன்று ந்யாசங்களும் முடிந்து பிம்பத்திற்கு நாமகரணம் செய்து (பெயர் சூட்டுதல்) மந்திர உபதேசம் செய்ய வேண்டும். அந்த நேரத்தில் பிம்பத்திற்குரிய இறைவன் வித்யார்த்தியாகவும் (மாணவன்), உபதேசம் செய்கின்ற ஆச்சாரியர் குருவாகவும் (ஆசான்) விளங்குகிறார்கள்.

இப்படியாக பிம்பத்திற்கு செய்ய வேண்டிய அனைத்து சம்ஸ்கார விவரணங்களையும் சரிவர முறையே செய்து பூஜைக்குரிய பிம்பமாக மாற்றி, மஹாகும்பாபிஷேகம் செய்யும்போது, பிம்பம் தெய்வமாகிறது. தெய்வம் பேசுகின்றது. அத் தெய்வத்தின் அருளால் நாம் அனைவரும் இன்பமாக- வாழ்வோமாக.

சுபம்



உ

ஓம் நம: பரமாத்மனே

நமச்சிவாய சக்த்யைச பிந்தவே சாச்வதாயச।
குரவேச கணேசாய கார்த்திகேயாய தீமதே॥

கட்டுரையாளர்
ஆகம ப்ரவீணர். சைவாகமக்ஞ சூடாமணி
சிவாகம ஸார்பௌம. சிவாகம அருட்செல்வர்.
வியாகரண சிரோமணி. வியாகரன விசாரதா.
சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யர் M.A.,
சென்னை - 600 001.

விமானாகிருதி விவரணம்
(திருக்கோயில் வடிவமைப்பு விளக்கம்)

சிவனருட்பயனாக, சென்னையில் சிவாசார்யர்அறக்கட்டளையின், சைவாகம கலாசார வித்யா கேந்திரத்தில் 08-11-2009 அன்று நடைபெறுகிற சைவாகம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் ஆகம கருத்துகளை கட்டுரையாகஅளிப்பதை பாக்யமாக கருதுகிறேன். இக்கட்டுரை விமானாகிருதி விவரணம் என்ற தலைப்பில், இந்துசமய தெய்வத் திருக்கோயில்களின் வடிவமைப்பு விதிமுறைகளை விளக்குவதாகும். இதனைக் கண்ணுறும் மெய்யன்பர்களுக்கு முதற்கண் எனது வணக்கங்கள்.

ஆகமம் ஆகி நின்றண்ணிப்பான்றாள் வாழ்க

முன்னுரை :

ஆகமமும் ஆலயமும் : சிவம் என்பது சுத்தமானதும், மங்களத்தைத்தருவதுமான பரம்பொருள். சிவசம்பந்தம் உள்ளது சைவம். சைவம் என்பது மேன்மையான சமயம். சமயம் என்பது நல்வழி. சமயம் நல்லறத்தை போதிக்கிறது. நல்லறம் கூறும் முழு முதல் பொது நூல் வேதங்கள்! வேதங்களின் பொருளாகிய அறத்தை, நற்சமயநெறியாக, விளங்கிடக் கூறும், சைவசமயத்தின் முழு முதல் சிறப்பு நூல்கள், சைவாகமங்கள். ஆகமம் என்றால் ஆண்டவனால், ஆன்மாக்களை உய்வித்திட மலத்தை நீக்கி ஞானத்தை அடைவிக்க அருளப்பட்ட ஆன்மீக அறிவியல் நூல. இவற்றில், இறைவன், உயிர்கள், உலகம் முதலான மற்றவை இவை முப்பொருள்களாக விளக்கப்படுகின்றன. சைவாகமங்களில், உயிர்கள் இறைவனைஅடைய, நால்வகைமார்க்கங்கள், நான்குபாதபகுதிகளில் கூறப்படுகின்றன. இந்நால்வகை நெறிகளிலும், சிவனைவணங்கும் பூஜை எனும் கிரியை எனப்படுவதே ஸாரமாகவும், நித்தியகடமையாகவும் உள்ளது. அவற்றுள்ளும் சரியை மற்றும் கிரியை நெறிகளில் உள்ளோர்க்கு புறவழிபாடானது, கட்டாயமாக விதிக்கப்படுகிறது. புறவழிபாடு இருவகையாக வீட்டிலும், ஆலயத்திலும், செய்யத்தக்கது. ஆலயத்தில் செய்யப்படும் பூசையே தேசப்பொது நலனளிப்பதாம். ஆலயத்தில்மட்டுமே, யாவரும், யோகியர், ஞானியர் முதலானோரும், வழிபடவும், தொண்டுசெய்யவும் இயலும். ஆதலால், உயிர்கள் யாவும் விரும்பும், அறம், பொருள், இன்பம், வீடுபேறு எனும் நால்வகை பயனாகிய புருஷார்த்தங்களை, எளிதில் அனைவரும் பெற்றிட கோயில்கள் உதவுகின்றன. ஆதலால் ஔவைப்பிராட்டியும், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றனர். அத்தகைய கோயில்கள்,

பலவடிவங்களில் இப்பாரத நாட்டில் காணப்படுதலாலும், சைவத்தின் முதல் நூல் "சைவாகமம்" ஒன்றேயாதலாலும், அறிய வேண்டிய கோயில்களைப் பற்றிய "சைவாகம கருத்துக்களை" இனி காண்போம்.

<u>கருத்துரை :</u>

<u>"விமானாகிருதி" சொல் விளக்கம் :</u>

சிவாகம ஞான நூல்களையே "ஸ்தூல உடலாகவும்", மந்திரங்களையே "சூட்சும உருவாகவும்", கொண்டு அருள்பவன் "சிவன்". இதனை "தந்த்ராத்மக சரீரேண மந்த்ரமூர்த்தி மயேநது" என்றும் "ஸ்தூலலிங்கம் விமானம் ஸ்யாத்" என்றும், ஆகமம் கூறும். இவ்வசனத்தில் உள்ள "சரீரம், மூர்த்தி, லிங்கம்" ஆகிய இச்சொற்கள் விமானத்தைக் குறிப்பவை. விமானம் என்ற சமஸ்கிருத சொல்லுக்கு, சிறப்புஅளவுமுறையால் அமைக்கத்தக்க, வசிப்பிடம் அல்லது இருப்பிடம் என்பது பொருள். இதனை செந்தமிழில் இறைவன் குடியிருக்கும் "கோயில்" என்று கூறுவர். இச்சொல் (கோ+இல்=என) இருபகுதியாய் "கோ" என்பது தலைவனையும், "இல்" என்பது இல்லத்தையும் தெரிவிப்பதாய், மக்களின் தலைவனாகிய மன்னரின் இடமாகிய அரண்மனையையும், அவ்வாறே உயிர்களின்தலைவனாகிய, "பசுபதி" எனும் கடவுளின்திருமேனி எழுந்தருளியிருக்கும் இடங்களையும் குறிப்பதாகிறது. இச்-சொல்லானது பொதுவழக்கில் மனிதவசிப்பிடத்திற்கின்றி, தெய்வத்தின் இடத்தையே குறிப்பதாய் உள்ளது. கோயில்கள் யாவும் "ஆலயம்" என்ற பெயரில் குறிப்பிடப்படுகின்றன. இச்சொல் (ஆ+லயம் எனும் இருபகுதிகளால்) "ஆண்டவன்" சேர்ந்திருத்தலையும், "ஆன்மாக்கள் (ஒடுங்கி) லயித்து இருத்தலையும்", உணர்த்துவதாகும். எனவே ஆன்மாக்களெனப்படும் உயிர்கள், புனிதமெய்தி, ஆண்டவனுடன் ஒடுக்கம்பெறத்தக்க தெய்வத்திருமேனிப்பகுதியே "ஆலயம்" என அறியத்தக்கது. ஆலயம்என்பது பெருங்கோயிலைஉணர்த்துவதாம். ஆலயம், சைவாகமங்களில் பலபெயர்களால், இலக்கணங்களால் குறிப்பிடப்படுகிறது. அவற்றுள் ஒரு சொல் "விமானம்" என்பது. இது ஆறு உறுப்புகளுடன் கூடிய அமைப்பு உடையது. இது மரத்தினால் ஸ்தூபியுடன் செய்யப்பட்டு, வீட்டு பூஜைப் பகுதியில் நிலையானதாயும், கோயில் திருவிழாக்களில் எழுந்தருளி மூர்த்திகளுக்குவாஹனமாய் அசைக்கத்தக்கதாயும், அதிகமாக கையாளப்படுகிறது. ஆகமங்களில் பரார்த்தபூஜை எனப்படுகிற ஆலயபூஜையானது "விமானார்சனம்" எனப்படுகிறது. சிவனை பூசித்திடும் திருவுருவங்களில் "லிங்கமே" சிறந்ததாம். மந்திரமயமாய் அருள் நிறைந்த, லிங்கத்திருமேனிக்கு நிகராக விமானம் "ஸ்தூல லிங்கம்" எனப்படும். அத்தகைய விமானத்தின் ஆகிருதியே, "விமானாகிருதி" எனப்படுவது. "ஆகிருதி" என்ற சமஸ்கிருதச் சொல்லிற்குப் பிறசொற்களாக, "ரூபம், ஸ்வரூபம், ஆகாரம், மூர்த்தம்" என்பவையும், தமிழில் "உருவம், வடிவம், தோற்றம், அழகு, எழில், வனப்பு" ஆகியனவும் ஒரு பொருள் சொற்களாம். விமானம் என்ற சொல்லானது, வி+மானம் என்று பிரிந்து, "வி" என்பதால் = விசேஷமான அல்லது இணைந்ததான என்பதையும், "மானம்" என்பதால் = அளவு உடைய அல்லது சிறப்பளவு கொண்டது என்பதையும் உணர்த்தும். எனவே சிறப்பான அளவும், வடிவமைப்பும் கொண்டது "விமானம்" என்றும், விமானத்தின் உருவத் தோற்றமே "விமானாகிருதி" எனவும் அறியலாம். இக்கட்டுரையில், பொது இடத்தில் நிலையானகட்டிடமாக, இறைவனுக்காக, ஆறுஉறுப்புகளுடன், கல் அல்லது சுட்டக்கல்லால் தெய்வ வாஸ்துவில், கட்டி வடிவமைக்கப்படும், பெருங்கோயிலின் மூலாலய வடிவமைப்பே "விமானாகிருதி" எனக் கொள்ளப்பட்டு விளக்கப்படுகிறது.

கோயிலைக் குறிக்கும் பெயர்ச்சொற்கள்

தேவர்கள் மற்றும் மனிதர்களின் வசிப்பிடம் "ஆலயம்" எனப்படும். தேவர்களுக்கானது "தேவாலயம்" என்றும், மனிதர்களுக்கானது "நராலயம்" என்றும் விளக்கி அழைக்கத்தக்கது. இதுவே "சாலா" என்றும் பெயர் பெறும். இந்த வசிப்பிடமான சாலா என்பது வடிவத்தில் "சாலாகாரம், மாலிகாகரம்" என இருவகைப்படும். தரையில் மட்டும் அகலமாய் பரப்பளவு அதிகமாய் அமைப்பது "சாலா" எனப்படும். (எடுத்துக்காட்டு "தேவசாலா, நரசாலா, பாடசாலா, யாகசாலா, கோசாலா" முதலியன). "மாலிகாகரம்" என்பது, பல அடுக்குமாடிகளுடன், பலஅடுக்கான பூமிதலங்களுடன் விளங்குவது. இதுவே "மாடமாளிகை" என்று கூறப்படுகிறது. சைவாகமங்களில், வசிப்பிடம், உறைவிடம், இருப்பிடம், வீடு எனும் பொருள் உடையவைகளான, பல ஒரு பொருட் சொற்கள் கோயிலைக் குறிப்பவையாக அவ்வப்பொழுது குறிப்பிடப்பட்டு உள்ளன. அவைகள் 1) ப்ராஸாத[3]ம், 2) ஸத[3]னம், 3) ஸத்[3]ம, 4) [3]கிருஹம், 4. [4]தாமம், 5. நிகேதனம், 6) திவ்ய விமானம், 7) [4]பவனம், 8) ஹர்மியம், 9) வாஸம், 10) மந்திரம், 11) ஆலயம், 12) சாலா, 13) நிலயம், 14) [3]கேஹம், 15) வேச்ம, 16) ஆவாஸம், 17) ஆஸ்பதம், 18) ஆயதனம், 19) விசாலா, 20) மாலிகா, 21) க்ஷேத்ரம், 22) வாஸ்து, 23) மூலவாஸ்து, 24) விக்ரஹம், 25) ஸ்தூல லிங்கம், 26) வாஸ்துகம், 27) ஸௌதம், 28) [4]திஷ்னியம், 29) பதம், 30) லயம், 31) அக[3]ாரம், 32) உபவஸிதம், 33) ஸ்தானம், 34) நிவேசனகரம், 35) ஆச்ரயம், 36) ஆதாரம் ஆகியன. கோயிலின் பெயர்கள் சிலவற்றை மகுடாகமம் தொகுத்துக் குறிப்பிடுகிறது.

> தேவஸ்யாங்காநி பவனம் வக்ஷியே தல்லக்ஷணம் ச்ருணு.
> ப்ராஸாதம் ஸதனம் ஸத்ம கிருஹம் தாம நிகேதனம்.
> விமானம் பவனம் ஹர்ம்யம் வாஸோ மந்திர மாலயம்.
> நிலயம் சேதி விக்யாதம் தஸ்ய பர்யாய வாசகம் (மகுடாகமம்)

இவற்றுள் நம் தேசத்தில் பல இடத்தில் பலசொற்கள் மிகுதியாக கையாளப்பட்டு புகழ் பெற்றுள்ளன. அவற்றுள் "மந்திர், பவன், ஸதன், நிலையம்" ஆகியவை உத்தர பாரதத்திலும், "ஆலயம், விமானம், ஆயதனம், க்ஷேத்ரம்" ஆகியவை தக்ஷிணபாரதத்திலும் பிரசித்தியாம். இவற்றுள் கருத்தாழமிக்க, "ப்ராஸாதம், விமானம், மந்திரம், ஆலயம், ஹர்ம்யம்" என்பவை சிவாகமங்களில் அதிகம் குறிப்பிடப்படுகின்றன. ஓம் முதலான தெய்வமந்திரங்களின் ஒலிஅம்சமாகிய கலைகளின் வடிவில் பெருமுயற்சியால் வடிவாக அமைக்கப்படுதலால், இது "ப்ராஸாதம்" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுவது உத்தமம்.

கோயில் கட்டிடத்தின் தேவை : நமது தேசத்தை அறவழியிலாண்ட பலமன்னர்கள் பலகாலங்களில் பலவகையாக கோயில்களைக் கட்டிவைத்துள்ளனர். இக்கோயில்கள் பாரததேச கலாசாரங்களின் நினைவுச் சின்னங்களாகி, கட்டிட மற்றும் சிற்பக் கலைநயமும், மக்களைக் கவரும் வடிவழகும், வழிபாட்டு பக்திநெறி வளர்ந்திட ஏற்ற அமைப்பும் கொண்டுள்ளன. கோயில்களை ஏன் கட்டினார்கள்? என்று சற்று சிந்திக்கலாம்.

கோயிலானது சைவஸித்தாந்த உண்மைகளை உணர்த்துவதற்கும் ஸாதிப்பதற்கும் இடமாக விளங்குகிறது.கோயில்களில் நடைபெறும் நித்திய பூசை மற்றும் உத்ஸவங்களின் கிரியைகள்

சிவபெருமான் செய்யும் படைத்தல் முதலான ஐந்தொழில்களை விளக்குவன.ஐந்தொழில் விளக்கப்படுவதால் ஆகமமும் பொருள்களின் இயல்பு பெறப்படும்.

1) நமது உடம்பில் உள்ள உயிரானது உடம்பெங்கும் வியாபித்துஇருப்பினும் ஜாக்ராவஸ்தையிலே விசேஷித்து நிற்பது போலவும், 2) பசுவினிடத்தில் பாலானது உடலெங்கும் செறிந்து இருப்பினும் மற்றய இடங்களில் வெளிப்படாது மடியில் ஸ்பர்சித்த மாத்திரத்திலேயே அதனின்று தோன்றுதல் போலவும், 3) நிலத்தடியின் நீரானது பரவி இருப்பினும் கிணறு, ஆழ்குழாய் கிணறு வாயிலாக எளிதில் நமக்கு தெரிந்து பயன் தருதல் போலவும், 4) புலனுக்கு உட்படாத மின்சாரம், ஒருவடிவத்தில் ஒளிர்ந்து, இயங்கி, பயன்தருதல் போலவும், இந்துசமயத்தில் ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்ஜோதியாகிய இறைவன் எங்கும் நிறைந்தவராய் இருப்பினும் கோயில்களிலே "தயிரிலே நெய் போல்" விளங்கியும், "பிற- இடங்களில் பாலில் நெய் போல்" விளங்காதுநின்றும் அருள்செய்வார் என சமய நூல்கள் கூறி "கோயில் தத்துவத்தை" உணர்த்தியுள்ளன. ஆலய பூசையினால் தேசத்தின் மன்னனும், மக்களும் பயன்பெறுவர் என்பதாலும், அறநெறியே ஆண்ட அரசர்கள் தேசநலன் கருதியும், அனைத்துயிர்களின் பயன்கருதி கோயில்களை அமைத்துள்ளனர். வழிபாடு செய்ய இயலாத விலங்கு, பறவை, தாவரம் முதலான பல்உயிர்களும் பயன்பெற்றிடவே பொது இடத்தில் ஆலய வழிபாடு அவசியமாகிறது.

ஸர்வகஸ் ஸ ஸதாத்மஸ்தோ ஹ்யநாதி: பரமேச்வர :|.
யதஸ் ததந்தஸ் திதப் பும்ஸாம் புக்தி முக்தி ப்ரதச் சிவ: ||. என்கிறது ஆகமம்.

இத்தகைய ஆலய வழிபாட்டின் வாயிலாக, தேசத்திற்கு வளமும், தேச மக்களிடையே தெய்வ பக்தியும், அதனால் மனிதஇனத்தின் மனத்திடைமாசுகள், அகந்தை நீங்கப்பெற்று, மக்களிடையே ஒருமைப்பாடும், மனிதநேயமும், அன்பு நெறியில் நல்லொழுக்க கலாசாரமும் ஏற்படும் என்பதால் ஆன்றோர்கள் ஆலயத்தை அமைத்துக் காத்தனர்.அதில் மேலும் மக்களின் பாதுகாப்பிற்கும் ஆலயம் அவசியமாகிறது. கிராமம் முதலானவற்றை அமைத்து மக்கள் குடிபுகும் பொழுது, முதலில் முன்னதாக தேவர்களுக்கு கோயிலமைத்து ஸ்தாபிதம் செய்து பின்பே மக்கள் குடிபுகல் வேண்டும். இதனால் மக்களுக்கு ராக்ஷஸர் முதலான தீயசக்திகளின் தொல்லை ஏற்படாது என்கிறது சிவாகமம். இதனையே "தேவஸ்தானம், விநாபூர்வம், நதத்ர திவசம் வஸேத்" என்கிறது காமிகாகமம். தமிழ் மூதாட்டி ஔவையும், "கோயில் இல்லா ஊரில் குடியிறுத்தல் ஆகா" என்று கூறியிருக்கிறார். சிவதர்மோத்தரம் நூல் "திக் கிராம மசிவாலயம்" எனக் கூறி சிவாலயமில்லாத ஊர் பாழ்படும், வீண், நிந்திக்கத்தக்கது என்கிறது.இதனை

தேவஸ்தானம் விநா யத்ர ஏககாலம் ந வாஸயேத் |.
நித்யபூஜா விஹீநே து குருத்தாப் பீடாம் கரோதிஹி||.
தேவாநாம் பூஜனம் நித்யம் கிராம விருத்திகரம் பவேத் என்று ஆகமம் கூறுகிறது.

<u>ஆலய வழிபாட்டின் ஆன்மீக நோக்கம் :</u> - ஆன்மாக்களுக்கு சிவஞானம் ஸித்தித்திட ஆகமம் விதித்துள்ளது ஆலய வழிபாடு. பலவகை வழிபாட்டு முறைகள் இருப்பினும் யாவர்க்கும் ஏற்றது புறவழிபாடாகும். இது இருவகை. அவை கிருஹார்சனம் வீட்டு பூசை , விமானார்சனம் கோயில் பூசை என்பன. அனைவராலும் தனது குடும்பத்தினர் நலன்கருதி தன் வீட்டில் செய்யப்படுவதாகிய

ஆத்மார்த்த பூசை எனப்படுவதே வீட்டுப்பூஜை எனப்படும். சமயகுருக்களின்மூலமாக, உலகின் அனைத்துயிர்களும் நலம்பெறக்கருதி, வேண்டி பொதுஇடத்தில் பொதுவழிபாடாக செய்யப்படுவதாகிய பரார்த்தபூசையானதே கோயில்பூசை எனப்படும். வழிமுறைவழுவாது ஒருவர் செய்து முடிப்பது "பூசை" எனப்படுகிறது. அன்புநெறியில் பொருளை, பலரும் அர்ப்பணித்து வணங்குவது "வழிபாடு" எனப்படுகிறது. ஆலயவழிபாடு அனைவரின் அன்றாட பிறவிக்கடமைகளுள் ஒன்றாகும். உலகில் நமக்குள்ள, மன்னன், மனைவி, மக்கள், நண்பர் யாவரும் நமது உடலுக்கு மட்டுமே உதவிட வல்லமை உள்ளவர்கள். அவ்வாறு உதவி கிடைப்பதும் அரிது. இறைவன் ஒருவனே உயிருக்கு இம்மையிலும், மறுமையிலும் உதவக்கூடிய பரமாப்தநண்பன் ஆகிறார். ஆப்தனின் திருவாக்குக் கட்டளையானதால் "ஆகமநெறி" பின்பற்றத்தக்கதாகும். உயிர்கள் தாமே அனைத்தையும் செய்யும்திறனும், சுதந்திரமும் அற்றவைகள். எனவே அவற்றிற்கு யாவும் இறைவனருளாலேயே கிட்டும். ஆதலால் நன்றிக்கடமைப்பாடு உடையவர்களாய், தேவாதிதேவர்களே போற்றிடும் இறைவனை, நாமும்போற்றி வழிபட்டே பயன்பெற இயலும். வழிபாடாற்ற இயலாதவர்களுக்கும் சூழல் காரணத்தால் இயலாமல் உள்ளோர்க்கும், பிறஉயிர்களுக்கும், ஓரிடத்தில் ஒரு நெறிமுறையில் "பொதுவழிபாடு" நித்தமும் அவசியமாகிறது. பூசையினால் வானோர்கள் மகிழ்ந்து, வான்மழையை புவிக்கு வழங்கி, நம்மையும், நமது தேசத்தையும் வளம் பெறச்செய்வர். வழிபாடு இல்லையேல் யாவர்க்கும் தீங்கே. ஆதலால் பொய்யாமொழிப்புலவர் திருவள்ளுவரும் மழை பெற்றிட பூசையின் தேவையை குறிப்பிட்டு உள்ளார்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு" (குறள்).

என வாலறிவன் நற்றான்தொழுதலை குறிப்பிடுகிறார். ஆகமம் மனிதவாழ்க்கையை இறைவனோடு இணைந்தும், வாழ்க்கையின் உண்மைநிலையை உணர்ந்து, சிவனுக்கு இவ்வாழ்வை அர்பணித்து, வாழ்ந்து, பிறவிப்பயனெய்திட நன்நெறிகளைக் கூறியும், உயிர்களுக்கு உதவுகிறது. ஆகமங்களின் சரியைநெறி, மற்றும் கிரியை நெறி இவற்றில் ஆலயங்களின் தொண்டு, தெய்வதரிசனம்,தெய்வபூசை, இறைவழிபாடு, ஆகியன அவசியமாகிறது. அவ்வாறே ஞானபாதமான ஸன்மார்கத்திலும், யோகபாதமான ஸஹமார்கத்திலும்", அகத்தே வழிபாடும், புறத்தே ஆலயதரிசனமும் விதிக்கப்பட்டு உள்ளது. ஆதலால் ஆலயவழிபாட்டின் அவசியத்தை உணர்த்திடவே, சமயாசாரியர்களும் மற்றைய பல அடியார்களுடன் கூடி, ஆலய வழிபாட்டை மேற்க்கொண்டுள்ளனர்.

எனவே பேரானந்தப் பிறவாவீடுஅடைய, விரும்புவோர் யாவரும் முறையே ஆலயவழிபாடு முதலியவைகளைச் செய்து, உண்மையை விளங்கப்பெற வேண்டும். பின்னர் அவைகளையெல்லாம் அகத்தே கண்டு, ஞானபூசையைச் செய்தல் வேண்டும். புறத்தே உள்ள சிவாலயம் முதலியவை சிவயோக சாமர்த்தியமில்லாதவர்க்கு உண்மை விளங்க உபாயமாக வைக்கப்பட்டனவாம். இதனையே சிவஞான சித்தியார், எனும் நூல் பின்வருமாறு அருளியுள்ளது.

"திருக்கோயி லுள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்கும் சிவனுறை வணங்கே
உருக்கோலி மந்திரத்தாலே நிலையு மவர்க்கும்
உளனெங்கு மிலனிங்கு முளனென்பவர்க்கும்
இருப்பாய வடிவாகி யிந்தனத்தி னெரிபோல்
மந்திரத்தின் வந்துதித்தே யிருஞ்சுரபிக்கெங்கும்

உருக்காண வொண்ணாத பான்முலைப் பால்விம்மி

ஒழுகுவது போல்வெளிப் பட்டரருளுவ னன்பர்க்கே:

இத்தகைய புறப்பூசையைவிட விசேஷமானது என்றெண்ணி, ஞானிகள் "மானஸபூசையை" செய்வார்கள். அது நம்போன்றவர்களுக்கு எளிதன்று. ஆதலால் நாம் ஆலயவழிபாட்டை முதற்கண்கடைபிடித்துப், பின்பு இங்குள்ள ஈசன் அங்குள்ளான், அங்குள்ள ஈசன் இங்குள்ளான், அவனே எங்குமுள்ளான், என்ற உணர்வும், மனப்பக்குவமும் படிப்படியாக நமக்கு வந்தபின் ஆலய வழிபாடு நம்மையறியாமலேயே நம்மைவிட்டு அகலும். நாம் அதனை அகற்றுவதற்கு ஒருபோதும் தகுதியுடைவர்கள்அல்லர். சாதாரணமக்கள் அறிவுடையவர்கள் போல்நடித்து, ஆலயவழிபாடு செய்யும் மக்களை ஏளனஞ்செய்து வருவதைக்கண்டு, நாம் ஒருபோதும் ஆலயவழிபாட்டினை புறக்கணித்தல் கூடாது.

<u>ஆலய அமைப்பின் ஆதார நூல்கள்</u> அனைவரின் வழிப்பாட்டிற்கும் ஆதார அறநிலையமாகிய ஆலயங்களின் அமைப்பைப்பற்றி நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். கோயிலை வடிவமைப்பதில் பொதுநூலாக, தொழில்துறை-நூலாக, வாஸ்துசிற்பசாத்திரங்கள் உள்ளன. இருப்பினும் சைவாலயங்களை நிர்மாணம் செய்வதற்கு சமயச்சிறப்பு கூறும் சிவஞான நூலாகிய 28 சைவாகமங்களுக்கே முன்னுரிமை தந்து அவற்றையே பின்பற்ற வேண்டும். கோயில் பூசைவிஷயத்தில் அவற்றின் துணைநூல்களான 207 உபாகமங்களை சிறப்புவிதிகளுக்கென ஏற்கலாம். கட்டுமானத்தொழில் நுட்பத்திற்கும், வலுவூட்டலுக்கும்மட்டுமே. சிற்பசாஸ்திர நூல்களை ஏற்க வேண்டும். வடிவமைத்தல், வழிபாட்டு நெறிமுறை வசதிகள் விஷயத்தில் நூல்களுக்குள் கருத்துவேறுபடினும் சைவாகம முறைகூற்றையே, பின்பற்ற வேண்டுமெனவும் காமிகாகமம் பலவாறு வலியுறுத்திக் கூறுகிறது.

கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம் மூலேநைவ ஸமாசரேத் ।
க்ருதம் சேதுபபேதேந கர்தா பர்தா விநச்யதி.
கேவலம் யஜனம் ப்ரோக்தம் உபபேதைர் விசேக்ஷ: ।
ப்ரதிஷ்டாத்யம் து மூலைச்சேத் அஷ்டாவிம்சதீபிர்வரம் । (பூர்வாகாமிகம் 105)

மேலும் எந்த மூலாகம நூலை அனுசரித்து ஆலய அமைப்பு துவங்கியதோ, அதனாலேயே முடிக்கப்படவேண்டும். கூறப்படாத, மற்றும் விடுபட்டவிஷயத்திற்கு மட்டுமே பிறமூலாகம கருத்தை ஏற்கலாம். பலநூல்களின் கருத்துக்கலப்புடன் கோயில்அமைத்திடக்கூடாது என்கிறது. 28 சித்தாந்த நூல்களில் கூறப்படாத செய்திகளை, காருடம் முதலான பிறசைவநூலைப் பின்பற்றியும், அவற்றுள்ளும்கூறப்படாதவற்றை வாஸ்துசாஸ்திரத்தாலும் செய்தல் வேண்டும் என்கிறது காமிகம்.

ஸித்தாந்தே நோதிதம் சேத் து காருடாத்யம் ப்ரகிருஹ்யதாம் ।
தத்ராபி நோதிதம் சேத் து வாஸ்துசாஸ்த்ரம் ஸமாச்ரயேத் ।। (காமிகம்)

இக்கூற்றுகளால் ஆலய அமைப்புக்கும், மறுசீரமைப்புக்கும், மூலாகமத்திற்கே முன்னுரிமை தந்து, ஆகமங்களைக் கடைபிடித்தலே முறையென்று உணரலாம்.

ஆலய அமைப்பில் ஆகம அளவுகள்

ஆலயங்களை ஆகமவிதிமுறை இலக்கணப்படியே உரிய அளவுடன் அமைத்திட வேண்டும். ஆகமங்களில் அளவுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு உள்ளது. அளவுகளின் கொள்முறை, பலவகையாயினும், அடிப்படையாக, கோயிலமைப்புக்கு அளவுகோல் எனப்படும் தண்டம் என்ற பெயருள்ள அளவே ஏற்றது. ஆகமங்களில் அங்குல அளவு மூன்று வகை. அவை 1) மானாங்குலம், 2) மாத்ராங்குலம், 3) தேஹலப்தாங்குலம் என்பவை. இவற்றுள் கட்டிடவேலைக்குஉரிய மானாங்குலம் என்பது, 8 யவை என்கிற தானியஅளவு. எட்டுபரமானு ஒரு தேர்த்துளி, அதன் 8 கொண்டது ஒரு கேசாக்ரம் அதன் 8 அளவு ஒரு ஈர், அதன் 8 அளவு ஒரு பேன் அதன் 8 அளவு ஒருயவை, அதன் 8 அளவு ஒரு மானாங்குலம், அதன் 12 கொண்டது ஒரு தாலம், அதன் இரண்டு அளவு கொண்டது. அதாவது 24 மானாங்குலம் ஒரு கிஷ்கு எனும் முழு அளவு. மானாங்குலம் 12 கொண்டது, அவரவர் கைத்தலத்தாலமைவதான தாலமானம் அல்லது ஒரு முகஅளவு எனப்படும்.. இதுவே விதஸ்தி என்ற பெயர் கொண்ட ஒரு ஜான் அளவு ஆகும். மானாங்குலம் 25 கொண்டது. ப்ராஜாபத்யம் எனும் கைமுழ அளவாம். மானாங்குலம் 26 கொண்டது. தனுர்முஷ்டி என்றும், 27 அங்குலம் கொண்டது தனுர்கிருஹம் என்றும் பெயர் பெறும். இவ்வாறு ஹஸ்தமானம் என்ற கைமுழ அளவுகள், முறையே 24, 25, 26, 27 மானாங்குல அளவுகளால் நால்வகையாகும். முழ அளவினால் தனுர்கிரஹம் (4 முழம் கொண்டது) (1 தண்டம்/ 32 கிஷ்கு, 8 தண்டம் 1 ரஜ்ஜு என்கிற அளத்தலுக்கான கயிறுஅளவு ஆகும். 1000 தண்டஅளவு, 1 குரோசம், 2 குரோசஅளவு, 1 கவ்யூதி, 2 கவ்யூதிஅளவு, 1 காதகம், 4. காதக அளவு 1 யொஜனா, என அறியத்தக்க அளவுகளாம்.

ப்ராஸாதஸ்யது விஸ்தாரம் தஸ்யதண்டம் இஹோச்யதே । என சுப்ரபேதாதி சைவாகமங்கள் கூறுவதால் என தண்டமான அளவை அறிக. மேலும்செயல்களுக்குஏற்ப முழ அளவு கைக்கொள்ளப்படவேண்டுமென்கிறது. "சயனம் சாஸனம் சைவ கிஷ்கு மான வசாத்குரு"। சயனம், ஆஸனம், முதலியவற்றை கிஷ்கு முழ அளவினாலும், ப்ராஸாதம், ஸபை, சாலா, மௌளிகா, க்ருஹம், மண்டபம் முதலியவற்றை ப்ராஜாபத்ய முழத்தால் செய்க என்கிறது.

ப்ராஸாதாதீன் ஸபாம் சாலாம் மௌளிகா மண்டபம் கிருஹம் ।

ப்ராஜாபத்ய கரேணைவ காரயேத் து விசக்ஷண: ॥ (காரணாகமம்)

[1]அரண்மனை, [2]குளம், [3]அகழி, [4]ராஜமாளிகை, முதலியவற்றை தனுர்முஷ்டி முழத்தால் செய்க. ஆறுவெட்டுதல், சாலைபோடுதல், போன்றவைகளை தனுர்கிருஹமுழத்தால் செய்யத்தக்கதாக காரணாகமம் கூறுகிறது.

ப்ராஸாத மண்டபம் சைவ ப்ராகாரான் கோபுரானபி ।

கிரமாத் வக்ஷியேத்ர கண்யேஷுமானாங்குல விதாநத: ॥

கோயிலில் "ஒரு தண்டம்" என்றஅளவு, வெளிச்சுவர் இடைவெளி அகலஅளவே ஆகும். இதுவே ஆலய உறுப்புகளுக்கு ஏற்ப பலவாறு கொள்ளப்படுகிறது.

பாத விஷ்கம்பகம் யத் தத் தண்டம் சேதி ப்ரகீர்த்திதம் । (காரணாகமம்)

லிங்கம் பிரதிமை துவாரஸ்தம்பம், ஸ்தூபி, மற்றும் இவைகளின் துணைக்கருவிகளின்

உறுப்புகளை மானாங்குலத்தால் செய்க. மேலும் அளவுகள் பொதுவாக ஆறு வகைப்படும். அவை 1) மானம் உயர அளவு. 2) பிரமாணம் /குருக்களவு, 3) உன்மானம்/நீட்டலளவு, 4) உபமானம்/ இடைப்பட்ட அளவு, 5) பரிமானம்/சுற்றளவு, 6) லம்பமானம்/தொங்குநூல் அளவு என்பனவாகும். இவற்றில் இடைவெளி அளவாகிய உபமான அளவு சரியில்லையெனில் அது சில்பி மற்றும் தேசிகன் (ஆசார்யர்) இருவரையும் அழிக்கும் என காமிகாகமம் கூறுகிறது.அளவு முறையற்ற சிலையில் பிரதிஷ்டை செய்வதால் சிவாசார்யருக்கு தீங்கு ஏற்படுவதாலேயே சிலையை தேர்வு செய்யவும் விலக்கிடவும் ப்ரதிஷ்டை செய்திட மறுப்பதற்கும் ஆகமத்தில் ஆசார்யருக்கு அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது.எனவே சில்பியும் ஆசார்யரும் பொறுப்புடன் செய்வதேமுறை.

உபமான விஹீநேது சில்பிநம் ஹந்திதேசிகம் ।
ஸர்வ லக்ஷண ஸம்யுக்த மேதத் ஸர்வ ப்ரதாயகம் ।। (காமிகம்)

என்று அளவின் தேவையை எச்சரித்து வலியுறுத்துகிறது. ஆதலால் ஆலயம் லிங்கம், பிம்பம் எதுவாயினும் அளவுடன்இருத்தல்அவசியம். அளவுகளுக்கு ஆகமங்களில் ஆயாதி பொருத்தம் பார்க்கும் முறை கூறப்பட்டு உள்ளது. அளவு குறைந்தால் பெரு வியாதியும், அதிகமானால் எதிரிகளின் பெருக்கமும், தரித்தரமும் உண்டாகும் என்பதால் யாவும் அளவுடனிருத்தல் அவசியமாகிறது. உரிய அளவுடன் அமைக்கப்படுவதாலேயே கோயில் விமானம் என்று பெயர் பெறுகிறது.விமானத்தின் அகலம் என்பது வெளிபுற இருபக்ககால் புறஅளவே ஆகும்.அவ்வாறே விமான உயரம் என்பது உபானம்முதல் ஸ்தூபிவரையில் உள்ள அளவே ஆலய உயரஅளவாகும்.இவ்வாறே கருதிக்கணக்கிடவேண்டும்.

ஆகமங்களில் ஆலய வகை

சைவாகமங்களில் தேவாலயங்கள் பலவகையாக என கூறப்பட்டுள்ளன. ஆலயஅமைப்பின் நோக்கத்தால் "நிச்சித்ய மூல ஹர்மியம் து காரயேத் தருணாலயம்", [3]மூலாலயம் [1]பாலாலயம்,[2]தருணாலயம், , என்றும், அமைவிடத்தால், துருவாலயம், மூலப்ராஸாதம், பரிவாரலாயம், அங்காலயம், க்ராம தேவதாலயம், என்றும், ப்ராகார வடிவமைப்பு முறையால் மூவகையாகும்.அவை [1]ஏகப்ராகார ஆலயம், [2]த்ரிப்ராகாராலயம், [3]பஞ்சப்ராகாராலயம் எனப்படும்.

பஞ்ச ப்ராகார யுக்தம் வா த்ரிப்ராகார யுதம் துவா ।
ஏகப்ராகாரயுக்தம், வா கல்பயேத் கல்பவித்தம : ।। (காரணம்)
பரிவாரஸமாயுக்தம், ஸ்வப்ப்ரதான மிதிஸ் மிருதம் ।
இதரம்தத் விஹீனம் ஸ்யாத்"............ என்பதால் ஸ்வப்தானாலயம் மற்றவை என இருவகை ஆகும். தெய்வங்களின் அமைவிடத்தகுதிகளால் [1]ஸ்வதப்ரதான ஆலயம், [2]ஸஹஜாலயம், [3]ஸ்வதந்திராலயம், [4]அந்தராலயம், பாஹ்யாலயம், பராங்காலயம் என்றும், உபயோகத்தினால் யாகாலயம், பசனாலயம், த்ரவ்யாலயம், சயனாலயம் எனவும் பலவாறாக வகைப்படுத்தியும், இவையாவும் ஜாதி, சந்த, விகல்ப, ஆபாஸ விதிமுறைகளால் நால்வகை அளவும் வடிவம் உடையதாயும் கோயில்கள் கூறப்படுகின்றன. மூலப்பொருள்களால் "சைலஜம், தாருஜம், சுதாமயம், சுட்ட மண்கற்களாகிய "இஷ்டிகாமயம்" முதலானவையாம். ஆலயம் என்பது பல உறுப்புக் கட்டிடப் பகுதிகளை உள்ளடக்கிக் கூறப்படும் பெருங்கோயில் எனக்கொள்ளலாம். கோயில் முழுமைக்கும் விமானம் என்று பெயர் இருப்பினும், "விமானம் ப்ராஸாதம் ஹர்மியம்" என பெயரிட்டு கூறப்படுவது சிறப்பாகும். விசேஷமாக

மூலமூர்த்திக்கு அமைக்கப்படும், மூலாலய கருவறைமீது, தெய்வத்திற்குமேல் கட்டிமுடித்து, ஸ்தூபிகலசத்துடன் கூடியதாக ஆறுஅங்கங்களுடன் கூடியதாய் அமைவது தெய்வத் திருக்கோயிலாகிய விமானம் ஆகும். "ஷட்வர்க ஸஹிதம் குர்யாத் லக்ஷனேன ஸமன்விதம்" என்கிறது ஆகமம்.

<u>விமான பொதுஇலக்கணம்</u> :- இறைவனின் உறைவிடமான மூலக்கோயிலானது நன்றாக அளவும், அழகும், புனிதமும் கொண்டதாக இருத்தல் அவசியம். "தேஹோ தேவாலயப் புரோக்தோ ஜீவோ தேவஸ் ஸதாசிவ" என்பதனால், கோயில் இறைவனின் உடல் என்றும், இறைவன் அவ்வுடலில் இருந்து அருள்கிறான் என்றும் அறிய முடிகிறது. நம் உடல் எவ்வாறு உரிய அளவுகளுடன் இயக்கத்திற்கு ஏற்றவாறு வடிவம் கொண்டதாய், பல உறுப்புகளுடன் விளங்குகிறதோ, அவ்வாறே கோயிலும் உரிய அளவுகளுடன் கூடிய பல உறுப்புகளுடன், வழிபாடு, பூசை, உத்ஸவம், இவை செய்திட ஏற்றவகையில், தெய்வங்களின் தத்துவநிலை மற்றும் தரம் இவைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வடிவமைக்கப்பட வேண்டியது மிகமிக அவசியமாகிறது. எனவே, ஆகமங்களில் இவற்றின் இலக்கணம் "ப்ராஸாத லக்ஷண விதிபடலம்" என்ற பகுதியில் விரிவாக கூறப்படுகின்றன. அவற்றுள் முதலில் அனைத்து வகை விமானங்களுக்கும் பொதுவாக உள்ள ஒரு சில வடிவமைப்பு முறைகளைப் பற்றி காண்போம்.

தெய்வ மந்திரங்கள் யாவும் ஆறு அங்கங்களுடன் உச்சரிக்கப்படும். தெய்வ உருவங்கள் யாவும் ஷடத்வா எனும் ஆறு அம்சங்களால் நிறைந்தவை. எனவே திருமேனி அமைப்பின் முடிவில், பிரதிஷ்டைகிரியையில் அவை பொருந்தும் வகையில், பிராஸாதம், மந்திரம் என்று அதே பெயரிலும் கலைவடிவ கோயில் கட்டிடமும் ஆறு உறுப்புகளுடன் விளங்கும். அவை திருவடிப் பகுதி முதல் திருமுடிப் பகுதிவரையிலாக முறையே 1) அதிஷ்டானம், 2) பாதம், 3) பிரஸ்தரம், 4) கண்டம், 5) சிகரம், 6) ஸ்தூபி என்று பெயருடைய ஆறு உறுப்புகளாம். இவை ஆறும், விமானத்திற்கு உரிய முக்கிய அங்கங்கள் என்றும், வர்க்கம் அல்லது அம்சம் என்றும் குறிப்பிடப்படும் கோயில் உறுப்புகளாம். இந்த ப்ராஸாதஅங்கங்கள் (வர்கஉறுப்புகள்) ஒவ்வொன்றும், பல துணைஉறுப்புகளான உபாங்கங்களைக்கொண்டிருக்கும். அவையாவும் வடிவத்தை மாற்றுவதற்கும், உயரத்திற்கும், பலத்திற்கும், ஆலயதேவதையின் சக்திஅம்சங்களுக்கும் ஏற்றவாறு இருக்கும். இந்த ஆலயஆறங்கத்தையே விரிவாகவும், சுருக்கமாகவும், பல ஆகமங்களும், கட்டிடக்கலை, வாஸ்துசாஸ்திரநூல்களும், பலவாறாகப்பகுத்தும், பெயரிட்டும் விளக்குகின்றன. குறிப்பாக ஆகமங்கள் 16, 12, 8, 6 என்று எண்ணிக்கைகளில் விளக்கியுள்ளன. மேலும் இவை ஆறுஉறுப்புகளும் பலவகையாம். இவ்வாறு விமானத்தை ஆறங்கத்துடன் அமைத்திடுவதற்கு முன், தரைமட்டத்திலிருந்து முதலாவதாக உபபீடம் என்பதாகிய ஒரு கட்டிடவர்கத்தை அமைத்திடவேண்டும். இது இறைவனது இருக்கைப் பகுதியைச்சுற்றி இணைந்து, வலுவூட்டுவதாகவும் அமைக்கப்படும். இந்த அமைப்பு விமான உயரத்தைக் கூட்டிடவும், கட்டிடத்தை வெகுகாலம் பாதுகாக்கவும், கோயிலில் தரைமட்டத்தை உயர்த்தி, நீர் உட்புகாதவாறுபாதுகாக்கவும், சிற்பக்கலைநய வேலைப்பாடுகளால் அழகுபடுத்தவும் இது பெரிதும் உதவியாக விளங்குகிறது. இந்த உபபீடத்தின் மீது, மேற்கூறிய ஆறு வர்க்கங்களையும் முறையே கீழிருந்து மேலாக அமைத்தல் விமான பொது அமைப்பு முறையாகும்.கோயிலின் மைய அளவு கோட்டை அமைத்து சிறிது வடகிழக்கில் அதிகமாக்கி தென்கிழக்கில் சிறிது குறைத்தும் அழைத்திட வேண்டும்.இல்லையெனில் அனைத்தும் அழிவைத்தரும் என ஆகம நுட்பமறிந்து அழைத்தல் முறை.

விமான ஷடங்கபேதம் :- விமானத்தின் முழுத்தோற்றமும் பல அங்கங்களைக் கொண்டுள்ளன. சாலா இலக்கணத்தைக் கூறுகையில் இந்த விமானவர்க்க பகுதிகள் பல பெயரிலும், பலவடிவ வகையிலும் சிவாகமங்களில் குறிப்பிடப்பட்டு உள்ளன. ஆதலால் அவற்றை முதலில் அறிவது அவசியமாகும். விமான உறுப்புகளை ஒவ்வொன்றாகக் காண்போம்.

அதிஷ்டானம் ச பாதம் ச ப்ரஸ்தரம் கர்ணமேவச.

சிகரம் ஸ்தூபிகா சைவ சாலாங்க மிதி கத்யதே.(காகமம்).

உபபீடம் : விமான அமைவிடத்தில் தரையில் முதலில் அமைக்கப்படும் வர்க்கம் உபபீடம் ஆகும். பீடம் எனில் இருக்கையாகும். இது ஸ்ரீகரம், லளிதம், பத்ரம் என வடிவில் மூவகையும், அளவில் பலவகையுமாகும். உபபீடம் எனில், அப்பீடத்துடன் இணைந்து அதன் சுற்றிலும் அமைந்திருப்பது என்பது பொருள். உபபீடம் என்பது பூமி, ப்ரகிருதி, ஜன்மபூ, உபானம், பௌமம், குரம், சித்ரமானம் என்ற பெயர்களால் குறிப்பிடப்படும் வர்கமாகும். இது பலவகையாகும். இது பொதுவாக க்ஷுத்ரம், மத்யம், முக்யம் என்ற பெயரில் மூவகை. இதன் கண்டவர்க பகுதியில் யாளி வரிசை, பூத வரிசை, கஜ வரிசை, சிம்ம வரிசை என அலங்கரிப்புப் பணி நால்வகையாம். இது 16 உள்உறுப்புகளுடனோ 8 உறுப்புகளுடனோ வடிவம் பெறும். இந்த வர்க்கம் ஒருதள விமான உயரத்தில் 8ல் 1 பங்கு உயர முள்ளதாக அமைக்கப்படும்.

I. அதிஷ்டானம் : விமானத்தின் ஷட்வர்க்கங்களில் முதன்மையானது அதிஷ்டானம். அதிஷ்டானம் என்றசொல்லுக்கு இறைவன் விளங்கும் "இருக்கை" என்பது பொருள். சிலைகளில் எவ்வாறு பிரியாதவகையில், திருவடியுடன் இணைந்து ஸஹஜபீடம் விளங்குகிறதோ, அவ்வாறு விமானவடிவத்திற்கு உறைவிடமாவது என்பதுபொருள். இவ்வர்க்கத்தின் அளவுகளின் உயரமட்டத்திலேயே கருவறையின் உள்தரைப்பகுதி அதாவது லிங்காதி ஸ்தாபனம் செய்யும் பகுதி அமையும். இந்த வர்கமானது ஆகமங்களில் அதிஷ்டானம், மசூரகம், வஸ்து, ஆதாரம், தலம், தராதலம், வஸ்த்வாதாரம், குட்டிமம், ஆத்யங்கம், தராதரம் முதலான பெயர்களால் குறிப்பிடப்படும். வடிவத்தால் இது நான்கு வகைப்படும். பாதபந்தம், பத்மபந்தம், சாருபந்தம், பிரதிக்ரமம் எனபன. இதில் பாதபந்தம், பரத்யங்கம் என்றும், பத்மபந்தம் பட்டிகாங்கம் என்றும், சாருபந்தம் ப்ரதிசுந்தரம் என்றும், ப்ரதிக்ரமம் பத்மாச்ரயம், பத்மபுஷ்கரம் என்றும் வேலைபாடுகளால் பெயர்பெறும். இது உபானம், ஜகதீ, குமுதம், மேல்பட்டி, கண்டம், கீழ்பட்டி, மகாபட்டி என பல உறுப்புகளை உடையது. இந்தவர்கம் ஆலயதிருமேனிக்கு பீடமாக உள்ளதால், இதில் தாமரைமலர் வேலைப்பாடுகளை ஒவ்வொரு உள்உறுப்புகளுக்கும் மேலும் கீழுமாக அமைத்து மலர்களால் பூசிக்கப்பட்ட தெய்வபீடத்தைப் போன்று அமைத்திடுவர். இதுப் உயரஅளவின் பகுப்புமுறையால் வடிவமைப்பால் 64 வகை வடிவம்பெறும். இந்த வர்கம் விமானத்தின் வெளி அகலத்தில் 4-ல் 1 பங்கு உயரமுள்ளதாக அழகுற அமைக்கப்படும். இது 24 உள்உறுப்புகளுடன் அமைக்கப்படும்.

2. பாதவர்க்கம் : விமானஷடங்கத்தில் இரண்டாவது வர்க்கமாக உள்ளது பாதம் ஆகும். பாதம் என்று சொல்லுக்கு கால் உறுப்பு என்றும், தூண் என்றும், 4-ல் 1 பங்கு அளவு உடையது என்றும் பொருள் உண்டு. அவ்வாறே இப்பகுதி ஆலயமேனிக்கு காலாகவும், கட்டிடத்தில் தூண்களாக விளங்குவது. இதனை ஆகமங்கள் பாதம், ஸ்தாணு, ஸ்தூனம், தாருதலம், ஜங்கா, சரணம், அங்கிரிகம், ஸ்தம்பம்,

தலிபம், கம்பம் என்ற பெயர்களால் குறிப்பிடுகின்றன. இது பாதஜங்கா, தலஜங்கா, உபரிஜங்கா என மூவகையாம். பாதவர்க்கமானது பல்வேறு தோற்றங்களில் வேலைப்பாடுகளால் பலவகைப்படும். குறிப்பாக ஒன்பது வகையாகும். (1) வட்டமான தூண், ஸ்ரீகரபாதம், (2) 16 பட்டையுடையது, சந்திரகாந்தகம்பம் (3) 8 பட்டையுடையது, ஸௌமுக்யபாதம், (4) 4 பட்டையுடையது, ப்ரிய தர்சனபாதம் (5) 4 மற்றும் 8 பட்டையில் உள்ளது, சுபங்கரீபாதம், (6) சிம்மத்துடன் உள்ளது, சிம்மபாதம், (7) பூக்குடத்துடனுள்ளது, "கும்பபாதம்", (8) கும்பமற்றது, கும்பஹீநபாதம் 9) இலைக்கொடி, பூங்கொடிகளால் சுற்றியது, படர்ந்தது, பூங்கொடி வேலைஉடையது, "லதாமண்டிதபாதம்" என்பனவாகும். மண்டணம் எனில் அலங்கரித்தல் என்பதாகும். எனவே மண்டீ என்றழைப்பதுண்டு. உடலின் கால் போல் விளங்குதலால் இந்த உறுப்பு அதிக அளவிலும், சிறப்பு கைவேலைப்பாட்டுடனும், கலை நயத்துடனும் செய்து சிறப்பிக்கப்படும். இப்பாத வர்க்கம் அதிஷ்டானத்தில் இருமடங்கு உயரத்திலேயே அமைக்கப்படுவதாகும்.

யுகாச்ரம் வாத வ்ருத்தம் வா வஸ்வச்ரம்வா கலாச்ரகம் |
சரணாகிருதி ரேவம் ஸ்யாத் பித்தேப் பாதஸ்ய நிர்கம: || (ஆகமம்)

<u>3. பிரஸ்தர வர்க்கம் :</u> விமான ஷட்வர்கத்தில் மூன்றாம் உறுப்பானது, பிரஸ்தரவர்கம் :- பிரஸ்தரம் என்ற சொல்லுக்கு மேல்பரப்பு (மூடிடும் பகுதி) என்று பொருள். வீட்டினுள் மேலே தளம் கூரையால் மூடுவதுபோல் அமைப்பது. இப்பகுதி தோள்போல் விளங்குவதாம். இதனை ஆகமங்கள் ப்ரஸ்தரம், கோபானம், கபோதம், மஞ்சம், மார்ஜனம், நீவ்ரம் என்ற பெயர்களால் குறிப்பிடுகின்றன. இந்தஉறுப்பானது மிகச்சிறந்த, சிற்பசித்திர வேலைப்பாட்டுடனும், கலைநயத்துடன், ஸிம்ஹ, வியாள, கஜைர், புஷ்பைர், குர்யாத், அந்தரிதம், ததா (ஆகமம்) என்றபடி பலவாறு பயன்தரும் வகையிலும், முதல்மாடிதளம் போன்று, மழை நீர் வடிகால்கள், நிழல் தரும் கொடுங்கைகள், புறாக்கள்தங்குமாறு பொந்துகள், நிழல்தரும் பகுதிகள், போதிகை, வாஜனம், நீவ்ரவகை, நாசிகைகள் முதலானவற்றுடன் அழகுற அமைக்கப்படுவது ஆகும். இதன் உயரத்தை 16பங்கு, 20பங்கு எனபலவாறாக பகுப்புஅளவு முறைகளாலும், வடிவமைப்பாலும், இது பலவகைப்படும். இந்த வர்க்கமானது, பாத உயரத்தில் பாதி அளவு உயரம் உடையதாகும் என்கிறது சுப்ரபேதாகமம்.

<u>4. கண்ட வர்க்கம் :</u> விமானத்தில் ப்ரஸ்தர உயரத்தில் அதன் மீது அமைப்பது கண்டம். சாலங்களில் நான்காவது உறுப்பு கண்டம். இதனை கர்ணம் என்றும் கூறுவர். இப்பகுதி சாலாதேகத்தின் கழுத்துபோல் கருதப்படுவதால் கழுத்தைக்குறிக்கும் பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. இப்பகுதியானது கண்டம், கந்தரம், களம், க்ரீவம், சிரோதரம், கர்ணம், சுரோத்ரம்" முதலான பெயர்களால் குறிப்பிடப்படும். இது இருபகுதியாகும். கீழ் ஒரு கண்டமாகவேதீ என்பதாகும். இது உபக்ரீவம் என்றும், வேதி உபகண்டம் முதலான பெயர்களால் குறிப்பிடப்படும். இப்பகுதி பாதத்தின் பாதிஉயரத்தில் நான்குதிசையிலும் உள்ளடக்கமாக, சாலாகாரமாக, தெய்வப்பிரதிமைகளுடனும் கூடியதாய், வேதிகை, உத்தரம், வாஜனம், பலவகைகொடிகள், சிம்மம், வியாளம், மிருகம், பூதங்கள் இவற்றுடன் கூடிய பரிதியுடனும், கின்னரீமுகம் போன்ற சிரோமானத்தையும் உடையதாக வடிவமைக்கப்படும். இவ்வாறு வேலைப்பாடுகளால் பலவகைப்படும், சிறுவேதீ, பாத, ப்ரஸ்தரங்களை உடைய, தேவாலங்கார, தேவகோஷ்டங்களும், இக்கண்டப்பகுதியில் அமைக்கப்படும். கண்ட வர்க்கமானது, ப்ரஸ்தரவர்கத்தின் உயரத்தையே கொண்டதாக அமைக்கப்படும்.

5. சிகர வர்கம் : சாலாகாரத்தில் ஐந்தாம் உறுப்பாக உள்ளது "சிகரம்" ஆகும். இது ப்ராஸாததேஹத்தில் தலைப்பகுதியாகும். தலைஉச்சிப்பகுதியைக்குறிக்கும் பெயர்ச்சொற்களால் குறிக்கப்படும். இந்தவர்க்கத்தை சிரஸ், மூர்தா, சிகா, மௌளி, மஸ்தகம், சீர்ஷகம், சீர்ஷம், சிகரம், உத்தமாங்கம், வராங்கம் என்ற பெயர்களால் ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. இது கவிழ்ந்த ஆலய மணி போன்ற உருவம் ஆகிருதி உடையதாகும். இது வேதிகை, பலி, பத்மம், கும்பம், கண்டம், பாலி, முகுளம் முதலான பலதுணைஉறுப்புகளுடன் இலை, மலர்வகை, பூ, மாலை, தாமரைமலர் முதலான, பலவகை சித்திரவேலைப்பாடுகள் கொண்டதாகும். இதில் சிறப்பாக நான்கு திசையிலும், "மஹாநாசிகளும், நான்கு மூலைகளில் க்ஷுத்ரமெனும் சிறுநாசிகளும், வ்யாளி வடிவில், பிரபை, தோரணங்களுடன் அமைக்கப்பட்டு, மிகச்சிறப்பான தோற்றமுடையதாகும். சிகர வர்கமானது, ப்ரஸ்தரத்தின் இருமடங்கு அளவு உயரத்துடன் அமைவதாகும். இது மஞ்ஜரீ என்றும், அண்டமென்றும் பெயர் பெறும்.

6. ஸ்தூபி வர்கம் : விமானாங்கத்தில் ஆறாவதாக உள்ளது ஸ்தூபி ஆகும். இது சாலா தேகத்தின் மகுடம் ஆகும். தேவதாப்ரதிமைகளில் எவ்வாறு கிரீடம் உள்ளதோ, அவ்வாறு அமைவதாம். இது ஆகமங்களில் ஸ்தூபி, சூளிகா, மகுடம், ஸ்தூபிகா, கலசம், கடம், கீலம், சுளுகம், சிகாஸ்தூபி முதலிய பெயர்களால் குறிப்பிடப்படும். இதன் வடிவமைப்பு 16 உறுப்புகளுடன் 32 பங்கு செய்து, அடியிலிருந்து, அகலம் படிப்படியாக குறைந்து, முடிவில் மேல்முனையானது, மொட்டுபோல், ஒளிச்சுடர்போல், ஊசிபோல் உருவமுடையதாகும். இதில் பத்மம், கண்டம், மேல் இதழ், கும்பம், கீழ்தளம், கம்பம், கண்டம், பட்டிகா, மேல்பத்மம், பலகை, கீழ்பத்மம், தாமரை மொட்டு ஆகிய பல உபாங்கங்களுடன் கூடியது. கல்லினாலோ, உயர்தர பொன் முதலான உலோகத்தாலோசெய்து வலுவுறஸ்தூபிதண்டத்தைச் செய்து இதை வைத்து, மேலும் கட்டிமுடித்த பகுதியின், ஸ்தூபிதண்டத்தின்மேல், இந்த ஸ்தூபிகலசம் பொருத்தி வைக்கப்படும். இந்த ஸ்தூபியின் உயரமானது, ப்ரஸ்தரவர்க்க உயரத்தின் 4ல் 2 பங்கு உயரம், அல்லது 1 பங்கு உயரம் கொண்டிருப்பதாகும்.

7.பஞ்சரம் : பஞ்சரம் எனும் வர்கமானது ஆகமங்களில், பிரமாணபவனம், கர்ணம், பிராஸாதஸ்யாஷ்டகம், ஸபா, கூடம், சாயா, வலபி, பிரம்மத்வாரம், மத்யமண்டபம், கோஷ்டம், ருஜுவக்த்ரம், துவிஜாவாஸம், கிரீடம், சிம்மவக்த்ரகம், என்ற பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. இது ஒருநாஸிகையுடன், இடையிடையே, அமைக்கப்படுவதாகும்.

8.அளிந்தம்: இந்த வர்கமானது அந்தாரம் ஆத்யக்ரஹம் பரிமண்டனம், ஸாலிந்தம் என்ற பெயர்களால் கூறப்படும். இதனை அளிந்திரம் என்பர். கருவறையைச்சுற்றி வெளிப்பகுதியில் மிகச்சிறிய பகுதியாக சுவருடன்அமைப்பது அளிந்தமாகும்.

9.நாசிகள்: இந்த வர்கமானது மஹாநாசி, க்ஷுத்ரநாசி, அல்பநாசி என மூவகையாம்.இந்த நாசிவர்கம் பெரியயாளி சிம்மமுகத்துடன்வட்டப் பிரபை போல சிறப்பு வேலைப்பாடுகளுடன் முன்பக்கமாக வெளியில் வந்துள்ளவாறு அமைக்கப்படுவதால் இது கட்டிடத்தின் மூக்கு போல் விளங்குவதால் இப்பெயர் வந்துள்ளது.இதில் பூதமாலை முதலான பல்வகை சித்திர வேலைபாடுகளுடன் செய்யப்படும். மேற்கூறிய அதிஷ்டான, பாத கபோத கர்ண, சிகர ஸ்தூபிகளான ஆறு வர்கங்களும், அனைத்து விமானத்திற்கும்,

ஸாமான்ய இலக்கணமாகும். இவை நம் தேசத்தின் பலபகுதிகளில், அப்பகுதி நூல்களிலும், இவ்வாறே மனித உடலுறுப்புகளின் பெயர்களால் அந்தந்த மொழிகளிலும், சொல்வழக்கில் இன்றும் உள்ளது,என்பது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. இதில் ஸ்தூபியானது விமானவடிவமைப்புக்கு ஏற்ப பலஎண்ணிக்கையில் வரிசையாகவோ, எண்திசைகளிலுமோ அமைக்கப்படும்.

10.ப்ரணாளம் : கோமுகை எனப்படும் ப்ரணாளிகையானது, கிழக்கு அல்லது மேற்கு நோக்கிய கோயில்களில் வடக்கு நோக்கியதாயும், வடக்கு அல்லது தெற்கு நோக்குமாலயத்திற்கு கிழக்கு நோக்கியதாயும், பத்ம வர்க்கத்தில் வெளியில் முகம் உள்ளவாறு அமைக்க வேண்டும்.கருவறையிலிருந்து அபிஷேக நீர் வெளியேறும் நாடியாக இது உள்ளதால்.புனித நீர் வெளியேற்றுவதால் இது காளை முகம்சிங்கமுக வடிவில் அமைப்பு பெறும். 4பக்கவாயிலானால் வடகிழக்குமூலையை நோக்கியவாறும் இதனை அமைக்கலாம்.

11.துவாரதோரணம் : விமானத்தில், கருவறைநோக்கிடும் திசையில், தேவதைக்கு, தோரண வாயில் அமைக்கப்படும். உரிய திசையில், பாதவர்கதூண்களுக்கு நடுப்பகுதியில், தரை-மட்டத்திலிருந்து, ப்ரஸ்தரவர்க்கம்வரை வாயில்உயரம், கொள்ளத்தக்கது. வாயில் எனப்படும் துவாரம், உயரத்தில் பாதிஅகலமுடையதாய், அமைப்பது உத்தமதுவாரம் ஆகும். இவ்வாறு அகலத்தின் இருமடங்கு உயர முள்ளவாயில் எல்லாகோயிலுக்கும் பொதுவிதியாகும்.உபபீட அதிஷ்டானங்களின் வர்க உறுப்புப்பகுதிகளின் வேலைபாடுகள் வாசலருகே சேர்ந்து ஒரு சட்டத்தில் முடிவு பெறும் எனவே இதனை சட்டத்திலை என்பார்கள்.

வ்ருத்தே ருத்தர சீமாந்தம் த்வாரோத்ஸேத மிதிஸ்மிருதம்|.
விஸ்தாரம் து ததர்தம் ஸ்யாத் ஸர்வேஷுபவனேஷுச||.

வாயில் எனப்படுவது இருபக்கம், மற்றும் மேலும் கீழுமாக, நான்கு பக்கங்களில் நான்கு சிலைகளைப்பொருத்தி, அமைப்பது. இது துவாரம் எனப்படும். துவாராலங்காரம் என்பதே தோரண அமைப்பு முறையாகும். தோரணமானது வாயிலின் இருபக்கஅகலத்திலிருந்தும், மேற்புறத்திலிருந்தும் உரிய அகலஉயரத்தில், பலவகை கலைநயவேலைப்பாடுகளைக் கொண்டதாக, பெரிய தோற்றமுடையதாக, வாயிலைஅலங்கரிப்பதாகும். தோரணம் என்பது வாயில்களுக்கும், இடத்திற்கும் ஏற்ப மாறுபடும். விமான உறுப்பாகிய துவாரமானது, "[1]முகத்துவாரம், [2]சுத்தத்வாரம், [3]மணித்வாரம், [4]கம்பத்வாரம், [5]மஹாத்வாரம்" என வாயில்கள் ஐவகை. மேலும் "உபதுவாரம், க்ஷுத்ரத்வாரம்" என்பனவும் ஆகும். அவ்வாறே தோரண வடிவமைப்பானது. "[1]பத்ர தோரணம், [2]மகர தோரணம், [3]சித்ர தோரணம்" என மூவகைப்படும். விமானத்தின் பங்க்திமானத்தால் பக்தி அளவால் முன்புறம் அந்தராளத்தை அமைப்பர்.

12.தேவாலங்காரம் : விமானத்தின் ப்ரஸ்தரவர்கத்திலிருந்து கண்டவர்கத்தின் உயரஅளவு வரையில், உள்ளடக்கப்பகுதியானது, வ்ருஷபதலம் எனப் பெயர் பெறும். இந்த ப்ரஸ்தரத்தின் தளத்தின் மீது, நான்கு மூலைகளில் பூதத்தை இருகை கூப்பியவாறு அமைத்திடவேண்டும். இதனை மூலையில் அமைப்பதால் "கோடிபூதம்" எனக்குறிப்பிடுவர். மேலும் பூதத்தை அமர்ந்தநிலையில் மட்டுமே அமைத்திடவேண்டும்.

நான்கு மூலைகளிலும் அந்தந்த தெய்வத்திற்கு உரிய, ஏற்ற வாஹனத்தையோ,அனைத்திலும் தர்மவடிவமாகிய வ்ருஷபத்தையோ படுத்த நிலையில், இரண்டு விதமாக, சிலையாகவோ, சுதையாகவோ அமைத்திட வேண்டும். அப்பகுதியில் நான்கு திசையிலும், கண்டப்பகுதி உயரத்தில், பிரஸ்தராந்தசாலாவாக அமைக்கப்பட்ட பகுதியில் ,மஹாநாசிக்கு நேர் கீழ்பகுதியில், நான்கு திசைமூர்த்திகளை சிவாலயத்தில் முறையே கிழக்கில் கந்தன், தெற்கில் தக்ஷிணாமூர்த்தி, மேற்கில் விஷ்ணு அல்லது நரசிம்மர், வடக்கில் பிரம்மா ஆகியோரை அமைத்திட வேண்டும். மேற்குநோக்கிய சிவாலயமாகில், மேற்கில் கந்தனையும், கிழக்கில் விஷ்ணுவையும், அமைத்திடல் முறை. சாலாவிமான கூடப்பகுதிகளில் மேலும் கோபுரத்தை தாங்கிடும் தேவர்கள், சித்தர்கள், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், நாகர்கள், கின்னரர்கள், திவ்யமானுடர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், முனிவர்கள், சிவவிஷ்ணுக்களின் லீலா மூர்த்தங்கள் இவர்களையும், உரியபகுதிகளில் பிரதிமையாக சுதைச்சிற்பமாகஅமைத்து, அலங்கரிக்கும் முறையே விமான தேவாலங்கரணம் எனக்குறிப்படப்படும்.

<u>13.தேவகோஷ்ட விதி :</u> கூடங்களில் நாசிகையுடன் கூடியது கோஷ்டம் ஆகும். விமானத்தின் நான்கு திசையில் சுதையில் விளங்கும் மூர்த்திகளையே கீழ்பகுதியில், அதிஷ்டானவர்கத்தின்மேல் ப்ரஸ்தரவர்கத்தின்கீழ்பகுதியில், சுவரில், உள்ளடக்கி, மையப்பகுதியில், இருபாதத்திற்கு இடையில், சிறுமாடம் போல் அமைப்பது மாடக்கோயில் எனப்படும் தேவகோஷ்டம் ஆகும். இதனை "குஹாஸுதேவதா: ஸ்தாப்யா: ப்ராஸாதஸ்ய ஸமந்தத:" என்கிறது காமிகாகமம். இதில் உரிய தேவதைகளை ஸ்தாபித்து பூஜிக்கலாம். கோஷ்டமும் கோஷ்டதேவதைகளின் ஸ்தாபனமும் இன்றியும் கூட கோயில் அமைக்கலாம். இந்த கோட்டப்பகுதிகள், வெளிப்புறத்தில், பிரஸ்தரத்தின் கீழ்மட்டம்வரையில், சிறியஅளவில், விமான உருவ அமைப்பில் வடிவமைக்கப்படுதாகும். விமானத்தில் பிரஸ்தர உயரத்தில் கண்டஹர்மிய மானது வடிவமைக்கப்படும். இதில் முன்பாதி மட்டும் தெரிவதால் இது "கண்டஹர்மியம்" எனப்படும். இக்கோஷ்டம் கர்பகிருஹத்தின்,வாயில்திசை மட்டும் நீங்கிட, பிறபகுதிகளான பின்புறம் மற்றும் இருபக்கங்களுமாக, மூன்று கோஷ்டத்துடனோ, முன்புறம் அமைக்கப்படுகிற அர்த்தமண்டபத்தின், இருபக்கச்சுவர்களின் மையகோஷ்டங்கள் இரண்டையும் சேர்த்து, ஐந்து கோஷ்டத்துடனோ, அவ்வாறே அந்தராள முகமண்படத்தின் இருபக்க கோட்டத்துடன் கூடியதாக ஏழு கோஷ்டத்துடனோ கூடியதாக மூலாலயத்தை அமைக்கலாம். கோஷ்ட தேவதைகள் பலவாறாகவும், லீலா மூர்த்தங்களாகவும், மூலமூர்த்தியின் பேதங்களாகவும் நின்ற அல்லது அமர்ந்த நிலையில் அமைத்திடுவது முறையாகும்.

<u>விமான அமைப்பு வகை</u> :- விமானம் எனப் பெயர் பெற்ற "தேவசாலா" என்பது இருவகை அமைப்பு உடையது. "சாலாகாரம்" மற்றொன்று "மௌளிகாகாரம்" என்பது. "சாலாகாரம்" என்பது சுற்றிலும் அதிக பரப்பளவில் ப்ராகாரங்களுடன் அமைவது. "மௌளிகாகாரம்" என்பது அடுக்கடுக்காக பலதளங்களுடன் "கிரீடம்" போன்ற வடிவில் அமைக்கப்படுவது. விமானங்கள் "ஒரு தளம்" முதலாக, "12 தளம்" வரையிலோ அதிகபக்ஷமாக "16 தளம்" வரையிலோ ஆகமப்படி அமைக்கத்தக்கது. விமான கட்டிடம் வெளிப்புற வடிவத்தால் "[1]ஸர்வதோபத்ரம்", "[2]வர்தமானம்", "[3]ஸ்வஸ்திகம்", "[4]நந்தியாவர்தம்", "[5]சாருகம்" என்ற பெயர்களில் ஐந்து வகைப்படும். இவை ஐந்தும் ஒவ்வொன்றும் பதினாறுவகை வடிவமுடையவை. விமானஅமைப்பில் அளவுகளை

கைக்கொள்ளும்முறையால், "ஜாதி, சந்தம், விகல்பம், ஆபாஸம்" என நால்வகைப்படும். விமானவடிவமைப்பு பொதுவாக "[1]தண்டகம்". "[2]மௌளிகம்", "[3]ஸ்வஸ்திகம்", "[4]சதுர்முகம்" என்று நால்வகையாகும். இவை நான்கும் "ஜாதிசந்தாதி" 4 வகைகளால் பதினாறு வகையாகும். "சர்வதோபத்ர அலங்காரம்" பதினாறு வகையாக உள்ளது. "மாலாகாரம்" என்பது பூமாலை போன்ற வடிவத்தில் அமைப்புடையதால் "மாளிகாகிருதி அல்லது மாலிகாகாரம்" என்றும் பெயர் பெறும். இவ்வகை அமைப்பு அடுக்கடுக்காக, மதில்சுவருடன் அமைக்கப்படுவதால் இதனை "மாலிகைபத்தி" என்று கூறுவர். மாலிகாகிருதியானது நான்கு வகையாகும். அவை 1) சாலாமாலிகா, 2) சபாமாலிகா, 3) முண்ட-மாலிகா, 4) ஸ்ரோதமாலிகா என்பனவாம். [1]கூடசாலா என்பது கூம்புக்கூரை வடிவத்தில் உள்ள மூங்கில், தென்னை, பனைமர இலை, ஓலை, முதலியவற்றால் உச்சிமூடியதாக அமைந்தவை. "செப்பு தகடு" வேய்ந்தவைகள் "ப்ரபா" என பெயர் பெறும். [3]தூண்கள், பொதிகை, கொடுங்கை எனப்படும் பிரஸ்தரம், இவற்றை உடையதாக உச்சிதட்டையாகவோ, ஸ்தூபிவரையிலோ அமைப்பு உடையது "மண்டபம்" எனப்பெயர் பெறும். [4]மிகப்பெரிய சிகரப் பகுதியோடு கூடியது "ஹர்மியம்" எனப்படும். [5]பல அடுக்குதளம் உடையது "மாலாகாரம்" எனப்படும். [6]பாதம், கண்டம், சிகரம், ஸ்தூபி இவற்றுடன் கூடியது "மாளிகா" எனப்படும். [7]நாசிகா முகபட்டீ அம்சங்களை உடையது "சாலா" எனப்படும். [8]அதிஷ்டானம் முதலானஆறங்கத்துடன் கூடியதும், கருவறை, அந்தாரி, கண்டஹர்மியத்துடன் கூடியதும், கூடசாலா, பஞ்ஜரம், ஹஸ்திபிருஷ்டாபம் முதலிய விசேஷவடிவங்களுடனும், இந்திரசாலாதிகளுடனும், திலகம், க்ஷுத்ரநாசிகை இவற்றுடனும், கூறப்பட்டது வார தோரணத்துடனும், பிரம்மதுவாரபதாகை, முதலான அனைத்து சிறப்புப் பணிவகைகளைப் பெற்று விளங்குவதே "விமானம்" என்றும் பெயர் பெற்றதாகும். [9]மண்டபத்துள் மண்டபமாக உள்ளது "ரங்கம்" எனப்படும். மூலகூடத்துடனும் மற்றும் பலகூடங்களுடனும், "கசகிருஹத்துடனும்" கூடியது "ஸபை" எனப்படும். இவ்விதம் காமிகாதி ஆகமங்களில் வடிவங்களின் வேறுபாட்டால் கோயில் பல பெயரில் பலவகையில் காணப்படுகிறது.1தலவிமானத்தின் முழஅளவு 3முழம் முதல் 12 முழம் வரை 10 வகையாகும்.இருநிலைக்கு 5முதல14வரை10வகையும்.3தலத்திற்கு7முதல்16வரை 10 வகையும் இவ்வாறே 10வகையாக அளவுகள்12தலம் வரை ,17முதல்106 முழம்வரை 4 தலாதிகட்குமாக அளவுகள் கொள்ளவது முறை.சங்கீர்ண விமான அமைப்பு விதியானது யாதெனில் மேற்கூறியவற்றுள் விரும்பிய முழஅளவினால் கோயில் நீளத்தை சமசதுரம் அல்லது சமவட்டம் அகலத்தை விடகால் அரைமுக்கால்முழு பங்கு அதிகமாக இருமடங்கு நீளமுடையதாக நீள்சதுரம் அல்லது நீள்வட்டவடிவிலஅமைத்து கண்டவர்கத்தின் மேல் வேறுபட்ட மாறுபாடு உடைய உறுப்புகளைக்கொண்டுஅமைப்பதாகும்.விமான அகலத்திற்கு 17 பங்கு உயரமுள்ளதுசாந்திகவிமானம். விமான அகலத்தின் பாதி பங்கு உயரமுள்ளது பௌஷ்டிகவிமானம்.அகலத்தின் முக்கால் பங்கு உயரமுள்ளது ஜயதவிமானம்.கால்பங்கு உயரம் அதிகமுள்ளது அத்புதவிமானம். இருமடங்கு உயரம் உள்ளது. ஸர்வகாமிகம் என வகை விமானங்களை சிறப்பளவால் ஆகமம் விளக்கி உள்ளது.

விமான ஆகிருதி வகைகள் : "விமானம்" என்பது ஷடங்கத்துடன் கூடியதாய், பொதுவாக ஸாமான்ய லக்ஷணத்துடன், வடிவமைப்பால் மூன்று வகைப்படும். அவை [1]நாகரம், [2]திராவிடம், [3]வேஸரம்" என்பவை. இவையே அடிப்படை. இவற்றின் கலப்பால் "மிச்ரம்" எனப்படும் விமான வகை பலவகையாகும். உபானம் முதல் ஸ்தூபிவரை ஆறங்கமும் நாற்கோணவடிவம் உடையது, "நாகரவிமானம்" எனப்படும். விமானம்

கண்டவர்கத்திலிருந்து மேலே (பாதவர்கத்திலிருந்தோ) எட்டுபட்டையாக வடிவமுடையது, "திராவிட விமானமாகும்". [3]கண்டவர்கத்திலிருந்து வட்டவடிவில் அமைக்கப்படுவது "வேஸர விமானம்" எனப்படும். இவ்வாறு "மகுடாகமம்" கூறுகிறது. நாகரம் "புருஷமென்றும்", திராவிடம் "ஸ்திரீவிமானமென்றும்", வேஸரம் "நபும்ஸக விமானமென்றும்" கருதப்படும். மேலும் சதுர வடிவம் "நின்றநிலையாயும்", வட்டவடிவம் "அமர்ந்தநிலையாயும்", எண்கோணவடிவம் "படுத்தநிலையிலும்" கருதத்தக்கதாகும். நாகராதிகளின் பேதமாக ரௌரவோத்தர ஆகமமானது, விமான வகையை, அடி முதல் முடி வரையிலும் ஆறங்கமும் முறையே சதுரம், எட்டுபட்டை, வட்டமாக, இருப்பவை முறையே [1]நாகரம், [2]திராவிடம், [3]வேஸரம் என்று பெயர் பெறுவதாகவும், சதுரத்தின்மீது கண்டத்திலிருந்து எட்டுபட்டை வடிவுடையது [4]"நாகரதிராவிடம்" எனும் மிச்ரவிமானவகை என்றும், சதுரத்தின்மீது கண்டத்திலிருந்து மட்டும் வட்டவடிவமுள்ளது [5]"நாகரவேஸரம்" எனவும், உபாநாதியாக எட்டுபட்டையும், கண்டாதியாகவட்டவடிவமும் கொண்டது "திராவிட-வேஸரம்" என்றும், இந்த ஆறுவகை வடிவங்களும், பதினாறுவகையாகும். ஆதலால் வடிவத்தால் விமான வகை 96 என்கிறது "ரௌரவாகமம்". 96 லிங்க வகைகளை 96 பெயர்களுடனும், லிங்க சக்திகளை 96 பெயர்களுடனும், அவற்றிற்கு உரிய 96 வகைகளின் விமான வகையையும், மகுடாகமம் பகுத்துப், பட்டியலிட்டு விளக்கி உள்ளது. விரிவுக்கஞ்சி இங்கு விடப்படுகிறதுநாகராதி விமானங்கள் இப்பாரத தேச உட்பகுதிகளில், மாநிலங்களின் பண்டையதேசபெயர்களிலும் விமானவகைகள் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, கலிங்கதேசத்தின் தக்காண பீடபூமியாகிய, "ஒரிசா" முதலான பகுதிகளில் "காளிங்கவிமானமும்",விதர்ப தேசத்தில் "வராட விமானமும்", கேரளத்தில் "கூடசாலாவும்", கர்நாடகத்திலும், ஆந்திரத்திலும் பிறபகுதி எங்கும் "ஸர்வதோபத்ர விமானமும்" கூறப்பட்டு, அவ்வாறே இன்றும் அமைந்துமுள்ளன. பாரத தேச மலைகளின் பெயரிலும், வடிவிலும், ஹோம குண்டமாகிய, அக்னியாய தனத்தின் பலவடிங்களில் தேவயாதனமாகிய, விமானவடிவங்களும், அமைக்கப்படத்தக்கவையாக உள்ளன. இப்பாரத தேசம் முப்பெரும்பகுதியாக பகுக்கப்பட்டு, முறையே, 1) இமயம் முதல் விந்தியமலை வரையிலான சாத்வீக பூமியில் "நாகரத்தையும்" வடக்கில் விந்தியமலை முதல் தெற்கே கிருஷ்ணாநதி வரையிலான "தாமஸகுண பூமி" பகுதியில் "வேஸர விமானத்தையும்" கிருஷ்ணாநதி முதல் கன்யாகுமரி விரையிலான "ராஜஸ பூமி" பகுதியில், "திராவிட விமானத்தையும்" முக்குணஅடிப்படையில், மூவகைவிமானங்களை "காமிகாகமம்" விளக்குகிறது. "கைலாசம், மந்தரம், நிஷதம், மேருசந்தம்" முதலியன மஹாமலைவடிவ, விமானவகைகளாம். இவை அதிக எண்ணிக்கையிலான ஸ்தூபிகளுடனும், பலசிகரங்களுடனும் விளங்குவனவாம். சாலாகாரஅமைப்பில் தலைப்பகுதியான சிகரமானது குடைபோன்ற வடிவில் "சத்தராகிருதி" என்றும், கிரீடம் போன்ற வடிவில் "மௌளிகாகிருதி" என்றும், கூம்பாக கூரான கொட்டகை வடிவில் "கூடாகிருதி" என்றும் அவ்வாறே "ஸபாகிருதி, சிகராகிருதி, மண்டபாகிருதி" என்று பலவடிவங்களில் பெயர் பெறும். மேலும் அளிந்திரத்துடன் கூடியது அனர்பிதவிமானம் என்றும்,அளிந்திரமில்லாது அர்பிதவிமானம் என்றும் அமைப்பு முறையால் விமானம் இருவகையாகும். தெய்வங்களுக்குப் பிரியமான, விசேஷவிமானவகையும், ஏற்றதான வகைகளும் கூறப்படுகின்றன.

<u>தேவதையின் விமான வகை</u> :- ஸ்ரீ விநாயகருக்கு "நாகரம்" பொதுவாகவும், "ஹஸ்திப்ருஷ்ட விமானம்" சிறப்பானதாகவும் ஏற்றது. குகனுக்கு "குக்குடாண்டாகிருதி, ஸ்கந்தகாந்தம்" ஆகியவையும், சூரியன் கோயிலுக்கு "நந்தியாவர்த்த விமானமும்", "விஷ்ணுவுக்கு விஷ்ணுகாந்தம், மந்தரம், நிஷதம்"

முதலான பர்வதாகாரவிமானமும், துர்க்கைக்கு "ஸ்வஸ்திக" விமானமும், சாஸ்தாவிற்கு "ஹஸ்திபிருஷ்டம் மற்றும் கூடாகிருதியும்", சிவனுக்கு "ருத்ரகாந்தம், ஹஸ்திபிருஷ்டம், கைலாச காந்தம்" ஆகியவையும், சண்டேசருக்கு "ஸ்ரீகர விமானமும்", நடராஜருக்கு ஸபாகிருதி, ரங்காகிருதி, சாலா கிருதிகளும், ஸார்வ தேசிக விமானம், ஸர்வதோபத்ர விமானம் எல்லா தெய்வங்களுக்கும் எல்லா பகுதிக்கும், வ்ருஷபதேவருக்கு "சதுர்துவார மண்டபாகிருதியும்", கௌரிக்கு "மேரு கூடமும், சாலாகாரமும்" ஏற்ற விமானங்களாக கூறப்படுகின்றன. எல்லா பரிவார ஆலயங்களுக்கும், நந்தியாவர்தம் ஏற்றதாகும். "மண்டபாகிருதிகம் வாபி ஸபாகிருதி மதாபிவா I, நந்தியாவர்த்த விமானம் வாஸர்வேஷாம் து பிரகல்பயேத் II (காமிகம்). கருவரையைச்சுற்றி, வெளியில், மிகச்சிறியபகுதி சுவருடன் அமையும் "சாலாகாரம்" என்பது, சுற்றுச் சுவருடனோ சுவர் இன்றியோ உரியஷடங்கத்துடன் அமைத்திடுவர். ஒரு சாலாகாரத்திலேயே இருபுறமும் இருசாலாகாரத்தை பாதி அளவில் இணைத்து, நீண்டதாக-வடிவமைப்பது "ஸம்யுக்த சாலாகாரம்" ஆகும். இதனை சிற்பிகள் "சொருகு சாலை" எனக்கூறுவர். விமானம் அல்லது ராஜகோபுரங்களில், ஒவ்வொரு தளத்திற்கும், ஏறிச்செல்லத்தக்கதாய், அமைக்கப்படும் படிக்கட்டுகள் "சோபனம்" எனப்படும். சோபானவர்கமானது, வடிவமைப்பால் "[1]சங்கசோபானம், [2]வல்லீமண்டலம், [3]ஹஸ்திமண்டலம், [4]வாஜசோபானம், [5]விருத்திசோபானம், [6]சமகண்டகசோபானம்" முதலாக பல பெயர்களில் பல வடிவில் அமைப்புடையது.

<u>விமான கட்டிட அமைப்பு முறை</u> : - கோயில் கட்டிடத்தை அமைப்பதில் மூன்று பகுதி உள்ளது. முதலாவது "பத்திவிபாகம்" இதனை பத்திமானமுறை என்பர்.. இது அகல உயரங்களைப் பகுத்திடும் முறைஆகும். இரண்டாவது "கர்ப கிருஹவிதி" அதாவது உள்ளடக்கஅளவு மற்றும் "குகா" எனப்படும் கோஷ்டஉள்புறஅளவுகள் கொள்ளும் முறை. மூன்றாவது "பத்ரவிதி" அதாவது வெளியில் நீட்டிப்பு முறை இதில் முனை, பட்டைகள் என்று கூறப்படுகிற "அச்ரவிதி" (கோணவிதி) கூர்அமைப்பு மற்றும் வெளிப்புற அகலஉயர வேலைப்பாடுகளின் அமைப்புமுறையாகும். பதினாறு அல்லது பனிரெண்டு தலம்வரை அமைக்கத்தக்க, விமானம் மற்றும் ராஜகோபுரம், இவற்றில், ஒவ்வொருதலமும், அதன் ப்ரஸ்தர-வர்கத்தின் அகலத்தை, ஏழுபங்கு செய்து, அதில் ஒருபகுதியை குறைத்து, அந்த ஆறு பங்குஅளவில் உயரமுள்ளதாக ஒவ்வொரு தலமும் (பூமியும்) அமைக்கப்படுவது முறை ஆகும்.

<u>பெருங்கோயிலின் உறுப்புப் பகுதிகளின் விவரம்:-</u> : -

<u>1.முகாயாமம் :</u> பெருங்கோயிலின் மையப்பகுதியில் ப்ரதான தெய்வத்தின் "மூலாலயம்" அமையும். அந்த மூலாலயத்திற்கு எதிர்புறத்தில், மூலமூர்த்திநோக்கிடும் திசையில், முகப்பில் மட்டும் "ஆயாமம்" எனப்படுகிற நீளஅளவை அதிகப்படுத்தும் முறைக்கு "முகாயாமம்" என்று பெயர். இதனால் ஒவ்வொரு சுற்றுப்பகுதியிலும், முன்புறம் மட்டில் மண்டபத்துடன் நீட்டிக்கப்படுதலால் இது கோயில் பகுதியை நீள்சதுரவடிவாக்கும். ஆலயத்தின் அகலஅளவை ஒரு தண்டமாகக் கொண்டு, ஆலயத்தின் அகலம் அல்லது ப்ராகார அகலம் இவற்றிற்கு சமமான அகலஅளவை பின்புறம் மற்றும் இருபக்கங்கள்ஆக மூன்றிலும், முறையே அகலத்தில்பாதி, முக்கால், ஒருபங்கு, ஒன்றரைபங்கு வரை கூடுதலான, நீளஅளவை முன்புறத்தில் மட்டும் கொண்டதாக எல்லா ப்ராகாரத்திலும் அமைத்திடுவது "முகாயாம அமைப்பு முறை" ஆகும்.

ப்ரோக்தம் மஹாவ்ருதம் ஹர்மியம் விஸ்தாரம் து சதுர்விதம் I (ஆகமம்)

2. ப்ராகாரம் : மூலக்கோயிலைச் சுற்றி அமைந்திடும் பகுதிகள், சுற்று மதில் சுவர், ஆகியன "ப்ராகாரம்" எனப்படும். இப்பகுதி சாலாக்கள், ஆவரணம், ஆவ்ருதி என்ற பெயர்களால் குறிப்பிடப்படும். "ப்ராகாரம் பரித: குர்யாத் ப்ராஸாதஸ்ய ப்ரமாணத : |" என்கிறது (ஆகமம்). இது ஒன்று முதல் ஏழு ப்ராகாரம் வரையில் அமையலாம். மூலாலயத்தைச் சுற்றி உள்ள பகுதி முதல் ப்ராகாரமாகும். எனவே உள்ளிருந்து வெளிப்புற பிராகாரம் வரையில் ஏழு ப்ராகாரங்களும், முறையே முதலாவது பிராகாரம். "அந்தர் மண்டலம்", இரண்டாவது "அந்தர்ஹாரம்", மூன்றாவது "மத்யஹாரம்", நான்காவது "பாஹ்யஹாரம்" அல்லது "மர்யாதா", ஐந்தாவது "மர்யாதி பித்தி அல்லது மாஹமர்யாதா", ஆறாவது "ப்ராவேசிகம்", ஏழாவது "மஹாப்ரவேசிகம்" என்று முறையே பெயர் பெறுகின்றன. இவற்றில் 2 முதல் 4ம் ப்ராகாரம் வரை அடுக்குமாடி சுவராக மாளிகாகாரமாகவோ, கோபுராகாரமாகவோ" ப்ராகார சுற்றுமதில்சுவரானது ப்ரஸ்தரஉயரம் வரை அமைந்திடவேண்டும். பிராகாரங்கள் யாவும் மூலாலயத்தின் பாதவர்கவெளிப்புற அகலமாகிற, "கால்புறவாய்" எனும், அளவையே, ஒரு தண்டஅளவாகக் கொண்டு, முறையே அமைக்கத்தக்கன.

பூமௌ விந்யஸ்ய விஸ்தாரம் தஸ்ய தண்ட மிஹோச்யதே |
தண்டாத் தேந க்ருதம் யத்ர துவந்தர்மண்டல மேவஹி || (சுப்ரபேதாகமம்)

பிராகாரங்கள் முறையே, அரைதண்டம், 1 தண்டம், 2 தண்டம், 4 தண்டம், 7 தண்ட அளவுகள் உள்ளவையாக முதலாம் ப்ராகாரம் முதலாக ஐந்தாவது வரை, பஞ்ஜப்ராகாரம் அமைக்கத்தக்கன. ப்ராகாரங்கள் அனைத்திலும் மூலமூர்த்திக்கு முன்புறத்தில் மட்டும் தவறாமல் மண்டபம் அமைக்கப்படவேண்டும். இவை முகாயமபகுதியில் அமைவதால் இவற்றை முக்கியமான "முகயாம மண்டபங்கள்" என்பர். இம்மண்டபங்கள் அதிகஅளவு பயன்படுபவையாகும்.

3. மண்டபம் : தேவன் உறையும் மூலக்கருவறைப்பகுதிக்கு தேவ மண்டபம் என்று பெயர். "முகமண்டபம்" அல்லது "அர்தமண்டபம்" எனப்படுவது, கருவறைக்கு முன்புறத்தில் வாய்ப்பகுதியாக அமைவது ஆகும். இது கருவறை அகலத்திலேயே உள்ளதும் நீளத்தில் மட்டும் கூடுதலாக கருவறையின் பாதி, முக்கால், முழு பங்கு அளவுகளில் ஒன்று உள்ளதாக அமைவது ஆகும். மூலகர்பகிருஹத்திற்கும், இந்த முகமண்டபத்திற்கும், இடையில் சிறியஅளவில் நீளமுள்ளதாய், கால் பங்கு அல்லது அரைப்பங்கில் கருவறையை சுற்றும், சுற்றுப்பகுதியுடன் கூடியதாய், கருவறைமுன், சிறப்பாய்அமைவது. "அந்தராளம்" எனப் பெயர்பெறும். இரண்டாவது பிரகார சுற்றில் முன்புறம் நீராட்டலுக்கு ஏற்ற, "ஸ்நபனமண்டபம்" அமைக்கத்தக்கது ஆகும். 3வது சுற்றின் முன்புறத்தில் தெய்வங்களைக்கொண்டதான "மஹாமண்டபம்" அல்லது "தேவிமண்டபம், விருஷபதேவருக்கான "விருஷப மண்டபம்", பூஜையில் நாட்டியஉபசரிப்புக்கான, 4வது சுற்றின் முன் "நிருத்த மண்டபம்", 5வது சுற்றின் முன்புறத்தில் "சபாமண்டபம்" அல்லது யாவரும் வணங்கி தவம் செய்யத்தக்க "நமஸ்கார மண்டபம்", இதில் இறைவன் கொலுவிருக்கும், "தர்பார் மண்டபம்" என்கிற உற்சவகால விசேஷநிலையான, "ஆஸ்தான மண்டபம்" இடம் பெறும். 6-ல் "சேவா மண்டபம்", 7-ல் "ப்ரார்தனா மண்டபம்" என அமைத்திடல் முறை. இவற்றில் சுவரைஒட்டி அடுக்குமாடியாக அல்லது சாலை வடிவம் , மண்டப வடிவம். அல்லது சபைவடிவத்தில் கட்டப்படுவது, "ஆவ்ருத மண்டபம்" ஆகும். இந்த சூழ்ந்திருக்கும் ஆவ்ருத மண்டபப்பகுதியில், பரிவாரமாக அங்கலிங்கங்கள், மற்றும்

பக்தமூர்த்திகள் அமைக்கப்படும். மேலும் இப்பிராகாரங்களில், சுற்றிலும், ஆலயத்திற்கான மற்றும் பூஜைக்கான உபயோகப்பொருள்களுக்கும், மற்றும் செயல்களுக்குமாக பல பகுதிகளில் பலமண்டபங்களை, அமைப்பர். வேதம், ஆகமம், புராணம், சாத்திரம், சிற்பநடனக்கலைகள் இவற்றின் பயிற்சி மற்றும், செய்முறைப்பயிற்சி மண்டபங்களும் அமையத்தக்கனவாகும். மேலும் பயன்பாட்டிற்கு ஏற்றதான பலவகை சிறப்புமண்டபங்கள் ஆகமங்களில் கூறப்படுகின்றன. ஆகமங்களில் பொதுவாக ஆலயமண்டபங்கள் மண்டபங்கள் ஸ்தம்பம் அல்லது தூண் எனப்படுகிற கால்களின் எண்ணிக்கையால் பலபெயர்களைப் பெறுகின்றவையாகும். அதாவது முறையே, 4 கால்கள் கொண்டுள்ளது. "நந்தியாவர்த்தம்", 16தூண்கள் உள்ளது, "ஸ்ரீப்ரதிஷ்டிதம்", 20 தூண் உள்ளது "வீராஸன மண்டபம்". 32 காலுள்ளது, "ஜயபத்ர மண்டபம்". 36 காலுள்ளது, "மஹாநந்தியாவர்த்தம்". 64 காலுள்ளது, "மணிபத்ரம்". 100 கால் கொண்டது, "ஸ்ரீவிசாலம்". 1000 கால் கொண்டது. "ஸார்வதைவிகம் அல்லது ஸர்வதோபத்ரம்" எனவும் சிறப்புப் பெயர்களால் குறிப்பிடத்தக்கவையாம். பெருங்கோயிலின் இரண்டாவது அல்லது மூன்றாவது ப்ராகரங்களில் தென்கிழக்கில் "மடப்பள்ளி" எனப்படும் "பசனாலயமும்", 2ம் சுற்றில் வடகிழக்கில் "அபிஷேக தீர்த்தக் கிணறும்", வடகிழக்கு மற்றும் கிழக்குக்கு இடைவெளியில் (வாத்யம்) "இசைக்கருவி-களுக்கும்", தென்கிழக்கு மற்றும் கிழக்குக்கும் நடுவே "தனஸ்தானமும் (பொக்கிஷம் அறையும்) தென்கிழக்கு மற்றும் தெற்குக்கும் இடைவெளியில் "புஷ்ப மண்டபமும்" (பூ மாலை கட்டுமிடம்). தெற்கு மற்றும் தென்மேற்குக்கு இடையில் "ஸ்நாநதீர்த்த பொருள் வகையும்", தென்மேற்கு மற்றும் மேற்கு இடையில் "தர்மச்ரவண மண்டபமும்" (அறநெறி கேட்குமிடம்) மேற்கு மற்றும் வடமேற்குக்கு இடையில் "ஆயுத மண்டபம்" , வடமேற்கு மற்றும் வடக்குக்கு இடையில் "சயனாலயம்" எனப்படும் "பள்ளிஅறையும்", வடக்கு மற்றும் வடகிழக்குக்கு இடையில் யாகமண்டபம் எனும் வேள்விச்சாலையும் அமைக்கலாமென காரணாகமம் கூறுகிறது. இவ்வாறான பயன்பாட்டுக்கான பகுதிகளின் அமைப்புமுறை பிற ஆகமங்களில் மாறுபடும். மூன்றாம் ப்ராகரத்தில் வடக்கில் ஆஸ்தானமண்டபத்தை அமைக்கலாம். இவ்விதமாக சிவன் முதலான ஒரு தெய்வத்திற்கான "ஸ்வதப்ப்ரதான மூர்த்திக்கு" ஒரு தெய்வதன்னாட்சிக் தனிக்கோயில் முறையில் ஸ்வதந்திரதேவதா ஆலயம் அமைத்திடல் ஆகம முறையாகும்.

4.பரிவாரம் : மூலக்கோயிலைச் சுற்றிலும் உள்ள ப்ராகாரங்களில், பரிவாரகோயில்களை, மூலக்கோயிலை விட சிறியதாகவும், அதற்கென தனிபரிவாரமற்றதாகவும் தனித்தனியே, உரியதேவதைக்கேற்ப, அமைத்து பூசித்தல்முறை. மூலதெய்வத்திற்குஏற்ப, பரிவாரதெய்வங்களை முறைப்படுத்தி, ஆகமங்கள் கூறுகின்றன. எனவே, "சிவன், பார்வதி, கணபதி, ஷண்முகர், விஷ்ணு" முதலானோர்களுக்கு தனித்தனியே "ஸ்வதப்ப்ரதானாலயம்" அமைத்திடும் பொழுது, அவரவர்களுக்கு உரிய தேவதைகளை, பரிவாரமாக அமைத்து பூசித்திட வேண்டும். இத்தகைய பரிவாரதெய்வங்களின் எண்ணிக்கையும், அவற்றின் பெயர், அமைவிடம், விமானவகை ஆகியன ஆகமங்களில் பரிவாரவிதியில் கூறப்படும். பொதுவாக எந்ததெய்வம் பூசிக்கப்படினும் அதற்கென ஆலயம்அமைத்திடுகையில் எட்டு திசையிலும் எட்டு பரிவார தெய்வங்களும், வாயில்கள் தோறும் துவாரபாலகர்களும், அத்தெய்வத்தின் மற்றும் பக்தர்களின் தளபதியாக விளங்கி இருந்து வழிபாட்டுப்பயனைத்தருவதான, சிறப்புஅதிகாரம்பெற்றுள்ள பக்த சண்டிகேச்வரரும், கட்டாயமாக எல்லா தெய்வங்களுக்கும், பரிவாரமாக அமைக்கப்பட-வேண்டும். இவை ஆகமங்களில் "அஷ்டபரிவாரவிதி, ஷோடச பரிவார விதி" என பலவகையில் கூறப்படும். பரிவாரங்களின் எண்ணிக்கை முறையானது, ஆகமங்களில், 8 / 12 / 16 / 24 /

32 என ஐவகையாக பகுத்தும், இவையாவும் பலவகைகளில் அமைக்கத்தக்கதாகவும், கூறப்பட்டு உள்ளது. இவற்றின் அமைவிடமாக முதல் சுற்றான, I) முதல் பிராகாரமான அந்தர்மண்டலத்தில் சண்டேசர் ஒருவருக்கே தனி பரிவார ஆலயமும், 3 / 5 / 7 எண்ணிக்கை தேவகோஷ்டங்களில் இணைப்புக்கோயிலான துண்டுக்கோயில் எனப்படுகிற. கண்டஹர்மியங்களில் கோஷ்டதேவதைகளும், கருவறைச்சுவரை ஒட்டிய வெளிப்பகுதியில், எட்டு திக்கிலும் எட்டு வித்யேச்வர மூர்த்தீச பூஜைக்கான பலிபீடங்களும்" அமைக்கப்படும். இவை தவிர பிறதெய்வங்களை இங்கு அமைக்கக்கூடாது. "ப்ராகார பித்திஸம்யுக்தம் அந்தராளாச்ரிதம் துவா". எனும் ஆகமக்கூற்றால் 2ஆம் ப்ராகாரமாகிய, அந்தர்ஹாரையில்மட்டுமே, சுற்றுக்கோயில்வடிவாகவோ, மண்டபத்திலோ, அஷ்டபரிவாரங்கள் அமைக்கத்தக்கது. 3ம் ப்ராகாரப்பகுதியில் மதில்சுவருடன் இணைந்ததாக 12 அல்லது 16 என்ற எண்ணிக்கையில் பரிவாராலய தெய்வ அமைப்பு உரியதாகும். 4-ம் ப்ராகாரத்தில் 24 அல்லது 32 எண்ணிக்கையில், பரிவாரம் அமையலாம். 5-ல் பரிவார கோயிலகளின் அமைப்பு இல்லை இது பூந்தோட்டம் மற்றும் சிறப்புப்பயன்பாட்டிடம் ஆகும். துவாரபாலாதி பீடாந்தம் பரிவார மிதிஸ்மிருதம்" எனும் ஆகமவசனத்தால் பரிவாரம் என்பது, மூலாலயாத்தின் த்வாரபாலகர் முதலாக, அனைத்து ப்ராகாரங்களின் பூஜ்யதேவதைகளும், ஆலயகோபுரத்தின் வெளியேஅமையும், பைசாசபலிபீடம் வரையில் பூசைக்கு உள்ளவையாவும், "பரிவாரம்" என்றுகொள்ளத்தக்கது. நாலுதிசையிலும், நான்கு மூலைகளிலும் மதிலைஒட்டி அமைக்கப்படும். பரிவாரமூர்த்தியின் பார்வைநோக்கும், பரிவார ஆலயமுகத்வாரமும், மூலக்கோயிலை நோக்கியவாறு, உள்நோக்குடையதாக மட்டுமே அமைக்கப்பட வேண்டும் என்பது விதிமுறையாம். பரிவாரதெய்வங்களை பிம்பத்திலோ,இயலாத பொழுதில் பலி பீடத்திலோ வழிபடலாம். ஆதலால் பரிவாரதெய்வங்கள் பிம்பஸ்தா என்றும் பீடஸ்தா என இருவகைப்படும். வ்ருஷபம், சூலம், சண்டேசர், மஹாபீடம், கணபதி, நாகராஜர், பார்வதி, சிவசக்தி, துர்கை ஆகிய தேவதைகள், கோயிலில் எங்கும், எந்த பிராகரத்திலும், எத்திசைநோக்கிலும், எப்பகுதியிலும் இடம்பெறலாம் என்றும். இவர்களுக்குமட்டும் சிறப்புத்தகுதியால் விதிவிலக்கு என்றும் ஸ்ரீமத்காமிகாகமம் கூறுகிறது.

ஹர்ம்ய கோபுரகம் வாபி சாலாகிருதி ரதாபிவா|
மௌளிகா கிருதிகம் வாபி குர்யா தேவது கோபுரம் || - (காரணாகமம்)

<u>5.துவாரசோபா :</u> பிராஸாதத்தின் ஐந்துபிரகாரங்களிலும், தேவசன்னதிக்கு எதிர்புறம், மதில் சுவரில் சாலாகாரமாக ப்ரஸ்தரம்வரை, அதிகஅகலத்தில், வாயில்பகுதியில் அமைக்கப்படுவது துவாரசோபா எனப்படும். இது நிலை ஏதுமின்றி அமைவதாகும். இதனை குடவரை வாசல் என்பர். இவ்வாறாக அந்தர்மண்டலம் அந்தர்ஹாரை (முன்இருசுற்றும்) நீங்கலாக உள்ள எதிர்புறத்தில் மட்டில் 5 ப்ராகாரதுவாரத்தில் ஐந்து கோபுரங்களின் அமைவிடமாம். பிற மூன்று வெளிப்பிரகாரத்தில் ஒருதிசையில் எதிர்புறத்திலோ முன்னும்பின்னுமாக இருபுறத்திலோ, இருபக்கத்துடன் நான்குதிசையிலும் மற்றும் மையத்திலோ, பஞ்ச கோபுரத்திற்கான வாயில்களை அமைக்கலாம். இந்த 12 வகை வாயில்கள் யாவும் துவாரசோபையுடன் கல்ஹாரம் எனும் ப்ரஸ்தரவர்க தளம் உயரத்தில் பாதுகாப்புமதில்சுவர் நடுவிலோ, உள்ஒழுங்கிலோ, வெளிஒழுங்கிலோ, ப்ராகாரபித்தியுடன் (மதில்சுவருடன்) அமைக்கப்படுவனவாகும்., பலஅடுக்குதளம், துவாரத்துடன் அமையும், சாலாகாரவிமானமே "துவார கோபுரம்" எனப்படும். கோபுரம் என்பது வாயில் மீது மட்டுமே அமைவது ஆகும்.

6.பஞ்சகோபுரவிதி : ஆலயங்களில் கோபுரமானது, சன்னதி நோக்கிடும் திசையில், நடுப்ராகாரத்தின் வாயில்மீது "மத்யகோபுரம்" என்ற பெயரில் ஒன்றும், நான்கு திசையிலும் நான்கு வாயில் மீது "திசாகோபுரங்களும்" இவ்வாறாக 5 கோபுரங்களோ, மேலும் அடுத்த வெளிப் ப்ராகாரமகிய 4 மற்றும் 5ம் சுற்றிலும், நான்கு கோபுரத்துடன் சேர்ந்ததாக ஒன்பது கோபுரத்துடனோ பேராலயம் அமைக்கத்தக்கது.சிறப்பு மூர்த்திகளின் எதிரில் சிறப்பு கோபுரம்அமையும்.

"துவாரஸ்யைவ சதுர்த்திக்ஷுப்ராகாரேஷுப்ரகல்பயேத்" I (காரணகாமம்)

7.கோபுரம் : ஒருநிலை முதல் பனிரெண்டுநிலை வரையில் கோபுரத்தை அமைக்கலாம். மூலாலய வடிவமைப்புக்கு ஏற்ப, இதனை முடிவுசெய்து அமைக்கவேண்டும்., நிலைதோறும் முன்னும்பின்னும் வாயில்களுடனும், சோபானம் எனும் படிக்கட்டுகளுடனும், தலம்தோறும் சாலாகாரமாகவே, சாலா, பஞ்சரம், கர்ணம், கூடம், துவாரநாசிகளுடனும், தேவாலங்காரத்துடனும், கோபுரம் அமைக்கத்தக்கதாகும். ஐந்து ப்ராகாரத்திலுமாக இது முறையே, 1ல், துவார சோபா, 2ல், த்வாரசாலா, 3ல், துவார ப்ராசாதம், 4ல், துவார ஹர்மியம், 5ல், துவார கோபுரம் எனப்பெயர் பெறும். வெளியில் மூலசன்னதி திசையில் அமையும், கோபுரமே திருவடி நிலையில், உள்ள உத்தமமான "மஹாராஜகோபுரம்" எனப்பெயர் பெறும். இக்கோபுரங்கள்யாவும் பெரியதோரணவாயிலுடனும், பெரிய த்வாரபாலகர்கள், துவாரஹர்மியங்கள் எனப்படும் இருபக்க சிறுகோயில்களுடனும், கதவுகளுடனும், பாதுகாப்பாகவும், வலுவாகவும், அழகுற அமைக்கத்தக்கவை ஆகம் கோபுரப்ராகாரப் பகுதி வரையில் தெய்வகலாம்சம் நிறைந்து தெய்வத்தூலத்திருமேனியாக விளங்கும் கோபுரமே எல்லைப்பகுதியாகும்.

8.சிற்பபிரதிமை/சிலை :- ஆகமத்தில் தேவதாபிம்பங்கள் மற்றும் சிலைகள், பொதுவாக ஏழுவகையான நிலைகளில் அமையும். ஆலய கோபுரத்தில் தெய்வபிரதிமைகள், (பதுமைகள் / படிமங்கள்) யாவும், பலவாறு தெய்வபுராணலீலைகளுடன், தத்துவவிளக்கவடிவங்களில், அமைக்கத்தக்கவை. படிமங்கள் அமைப்பால் "1. ஸ்தானகம் / நின்ற நிலை, 2. ஆஸீனம் / அமர்ந்த நிலை, 3. சயிதம் / படுத்த நிலை, 4. யாநகம் / பயணிக்கும் நிலை திருக்கோலம், 5. கமனோன்முகம் /நடந்துவரும்நிலை, 6). நாட்டியோத்யதம் / நாட்டியநிலை, 7. பாவநாகாரம் / கருத்துவடிவ நிலை என்று ஏழுவகையாகும். கோபுரங்களின் வடிவமைப்பு 1) ஹர்ம்ய கோபுரம், 2) சாலகாரகோபுரம், 3) மௌளிகாகார கோபுரம் என மூவகையாகும்.

9.வ்ருஷபம் : ஆலய அமைப்பில் தெய்வங்களின் வாஹனம் அந்த தெய்வத்தின் எதிர்புறம் அமைக்கப்படவேண்டும். ஆகம சித்தாந்த முப்பொருளில் வாகனம் பசுத்தன்மையை உணர்த்தி, இறைவனை நோக்கி அது பயணிக்க இருப்பதாக, அடக்கமான வடிவில், "விருஷபம், சிம்மம், யானை, மூஷிகம், கருடன், அனுமன், பக்தன்" முதலானோரில் ஒன்று உரியது அமைக்கப்படுவது,முறை. இது ஜீவனானது பாசத்தை விட்டு விலகி, பசுவாகிய ஆன்மா, பதியாகிய இறைவனை, நோக்கி சென்று சேர இருப்பதை "வ்ருஷப" தேவரின் ஆலயம் மையநாடீ சூத்திரஅமைப்பு உணர்த்தும். இறைவன் தர்மத்தையேஇருக்கையாகவும், சம்ஹாரகால முடிவில் உடனிருந்து தாங்கிடும் தர்மரூப வாஹனமாக விருஷபத்தை உடையவன் என்பதை இது உணர்த்தும். எனவே தர்மஸ்தானமாக, அறநிலையமாகத் திகழும், கோயிலில், வ்ருஷபம் ஐந்து ப்ராகாரத்திலும், எதிர்புறத்தில் பஞ்சநந்திகளாகவும் மற்றும் விமானம், கோபுரம், மதில்சுவர் ப்ரஸ்தரம், மற்றது உச்சியிலும், எங்கும் நின்ற / அமர்ந்த / படுத்த / நிலைகளில், முறையறிந்து அமைக்கப்படுவது முறை. இது "மையப்ரம்ம சூத்திரத்தில்" அமையும். தெய்வம் நோக்கும் திசையிலமையும். எனவே ஆலயமையக்கோடு "வ்ருஷசூத்திரம்" எனப்படும். இது சுழுமுனை எனும் மனித உடலின் மைய நாடியை உணர்த்துவது.

10.கொடி மரம் : கோயில்கள் தெய்வங்கள் யாவும் தமது வாஹனத்தையே, அதாவது தர்மத்தையே, தெய்வங்கள் யாவும் கொடியில் கொண்டுள்ளன. சுழுமுனை எனும் நம் தேகமையநாடியையே, செயலாக்கத் தூணாக்கி, அதன்வாயிலாக ஜீவதேவயோகத்தையும், அதனால் பேரானந்தஅனுபூதியை ஏற்படுத்திடவும், அமைக்கப்படுவதே கொடிமரம் ஆகும். இது உத்ஸவகாலபயன்பாட்டிற்கு உரியது. இது, [1]கோயிலின் [2]வாயிலின் உயரம், [3]ப்ரஸ்தரஉயரம், [4]விமானத்தின் ஒவ்வொரு ப்ரதி தலஉயரம் என்று, பலவகை உயர எல்லைகளான உயரத்தில், உரிய மரவகையால், இறைவனைநோக்கியவாறும் மூலக்கோயிலின் விமானத்தைவிட, தாழ்ந்த உயரத்தில் இருக்குமாறும், அமைத்திடல் முறையாகும். இது ஒரு ஆலயமாகிய தேஹத்தில் உறுப்பாக நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாக, அவ்வப்பொழுது உத்ஸவகாலங்களுக்கு மட்டுமோ, அமைத்திடத்தக்கது. இதன் அமைவிடம் வ்ருஷபருக்கு முன்போ, பின்போ, பலிபீடத்திற்கு முன்போ, பின்போ, தனித்து 2 / 3 / 4ம் ப்ராகாரத்தின்நடுவிலோ, ப்ரதான தேவதையின் த்வஜஸ்தம்பம் அமைக்கத்தக்கது. கொடிமரம் சுழுமுனை முதலான நாடிகளாககருதப்படுவதால் எண்திசையிலும் அங்கத்வஜஸ்தம்பங்கள்8மாக ஆலயத்தின் பலபாகங்களிலும், பல எண்ணிக்கையிலும் முறையே இடம் பெறலாம். இது 1 / 3 / 5 / 7 / 9 என்ற பல எண்ணிக்கையில் அமைக்கப்படலாம்.உத்ஸவத்தில் 5நாட்களுக்குமேல் தொடரும் விழாவிற்கு கொடிமரம் அவசியமாகும்.கொடிமரம் இருந்தாலேயே உத்ஸவம் செய்தேயாக வேண்டுமென்பதில்லை.செய்தால் நன்று.

11.பலி பீடம் : கோயிலில் பலிபீடம் என்பது ஓர் முக்கியஅங்கமாகும். பலி என்றால் பூஜை என்பதும், பயனையும், வலிமையையும் அளிப்பது என்பதும் இதன் பொருளாம். பீடம் எனில் தெய்வங்களின் உறைவிடமான இருக்கை என்பதாகும். எனவே தெய்வத்தை எண்ணி உருவமின்றி பூசித்திட உதவும், உயர்ந்ததான, சிவலிங்கத்திற்கு இணையான, திவ்யரூபமுள்ளதே, பலிபீடம் ஆகும்.இதனையும் ஒரு சிவலிங்க வடிவமாக ஆகமம் கூறும்

"ஸ்தூலலிங்கம் விமானம் ஸ்யாத் சூட்சுமலிங்கம் ஸதாசிவம் |
பலிபீடம் [4]பத்ரலிங்கம் லிங்கத்ரய மிஹோச்யதே || (காமிகாகமம்)

எனவேதான் ஆணவாதி மலத்தை நீக்கி மங்களம்தருவது எனும்பொருள்பட இது "[4]பத்ரலிங்கம்" எனப்படுகிறது. பலிபீடவடித்தில் எந்த தெய்வத்தையும் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ இருத்தி, பூசித்தலால் இது பலிபீடம் என்று பெயர் பெறுகிறது. உண்மையில் இதுவும் ஓர் இறைமூர்த்தமே. இது தாமரைப்பூவடிவிலேயே பலவாறு அமைப்புகொண்டது. ஆதலால் பூஜைக்குரிய பத்மபீடமாகவும், பத்மமண்டலவடிவமாகவும், யந்திரத்தின் சக்ரவடிவமாகவும் இது விளங்குகிறது. இவ்வடிவம் மேருமலையைப்போல், அக்னிகுண்டத்தைப்போல், அமைக்கப்படுவதாகும். ஆதலால் பரிவார தெய்வங்களுக்கு முழுஉருவச்சிலையைவைப்பதற்க்குப் பதிலாக, ஒவ்வொரு ப்ராகாரத்திலும், நிலக்கீழ்திசை மற்றும் ஆகாயமேல்திசையுடன் கூடிய, கிழக்கு முதலான எட்டுதிசையுமாகிய பத்துதிசை நாயகர்களுக்குப் பத்துதிசையில் சுற்றிலுமோ, தேவைப்படும் தெய்வ உருவங்களுக்கு மட்டுமோ, இதுகோயிலில் அமைக்கத்தக்கது. நான்குபுறமும், கோபுரவாயிலுக்கு நேராக, ப்ராகாரஅகலத்தின நீளத்தின் நடுவிலும், வாஹனம் மற்றும் கொடிமரத்துக்கு பின்புறத்திலும்

முன்புறத்திலும் பலிபீடம் அமைக்கத்தக்கது. தெய்வம்நோக்கிடும் திசையின்நாயகனுக்கு உரிய பலிபீடமானது பிரதானமான பெரும் பீடத்திற்கு அருகில் எதிரிலேயே சிறுபீடமாக சன்னதி திசாபதிபீடம் அமைக்கத்தக்கது. இது தீட்சைசெய்து, பக்தர்களின் பாசத்தைக்களைந்திடும், பத்மமண்டல ஆகாரமாய், விளங்குவதால், முப்பொருளில் இது பஞ்சபூதபிரபஞ்சத்தை (உலகை) பாசத்தை குறிப்பதாய் விளங்கும் . இவ்விதமாக மூலலிங்கம், பதியெனவும், வ்ருஷபாதி வாஹனம் பசுஎனவும், பலிபீடம் பாசத்தை நீக்கும் சக்திவடிவம் எனவும் அறியலாம். இவ்வாறு முப்பொருளுண்மையை முக்தி முறையைசிவாகமமுறையில் உணர்த்துவதே, கோயில்கள் என்பது யாவராலும் உணரத்தக்கது. இதனையே திருமந்திரமும் கூறி விளக்கிஉள்ளது..

ஆயபதிதான் அருட் சிவலிங்கமாம்
ஆய பசுமடவேறன நிற்கும்,
ஆயபலி பீடமாகும் நற்பாசமாம்
ஆயவரனிலையாய்ந்து கொள்வார் கட்கே I (திருமூலரின் திருமந்திரம்).

<u>விமானாகிருதி பேத விவரணம்</u> : - 1. ஷடங்க விமானங்களில், கபோதவர்க்கத்தில் மூலைகளான கோணதேசத்தில், பூதகணம் மற்றும் விருஷபத்துடனும், நான்கு திசையிலும் நான்கு பெறும் நாசிகையுடனும், நான்குதிசாமூர்த்திகளுடனும் கூடியதாக, மூன்று கோஷ்டத்துடன் அமைக்கப்படுவது "விசாலம்" எனும் பெயருள்ள பொதுவான விமானவகையாகும். 2. அவ்வாறே கபோதவர்க்கத்தில் எட்டு திசையிலும் 8 நாசிகளுடன் கூடியதும், மண்டபத்தின் அனைத்து பாதங்களின் மீது உச்சியில் நாசிகை உள்ளதும், சிகரத்திலும், மூலைகளிலும் இவ்விதம் உள்ளது. "கைலாசகாந்தம்" என்ற பெயருள்ள விமான வகையாகும். 3. கோணங்களில் இருவிருஷபமுள்ளதும், சிகரத்தை 6ல் இரண்டரை பங்கு உயரமாகக்கொண்டதும், மூலைகளில் கர்ண கூடங்களுடன் கூடியதும் "ஸ்தூபிசாலகம்" எனப் பெயயருள்ள ஸதனமாகும். 4) நாலு மூலைகளிலும் ப்ரஸ்தரத்தின் மீது கர்ண கூடுகளும், 24 நாசிகளும், நான்கு திசைகளிலும், நான்கு சிகரங்களுடன் நடுவில் ஒரு சிகரமும் ஆக பஞ்சசிகரங்களும், மகாநாசி உயரத்தில் கோஷ்டங்களைக் கொண்டதும், சாலாயாமத்தின் மொத்தஉயரத்தில் 3ல் 2 பங்கினால், சிகரம் அமைந்து உள்ளதும், இருபக்கம் மற்றும் பின்புறம் இவற்றில், தோரணங்கள் அமைக்கப்பட்டதும், ஸர்வதேவதைக்கும் விருப்பமான, விசேஷமான, "ஸ்ர்வதோமுக விமானம்" என்ற பெயருடையது ஆகம். 5.தேவாலங்காரத்துடனும், தேவகோஷ்ட கூடத்துடனும், எட்டு நாசிகையுடன் கூடியுள்ள கபோதமும், நான்கு திசையில் பெரிய அளவில் நான்கு மஹா நாசியுடனும், நான்கு மூலையில் நான்கு சிறிய அளவிலான அனுநாசிகளுடனும் கூடியதும், அடுக்குதள அமைப்பின்றி, ஒரு தளமாக மட்டுமே அமைப்பு உடையதும், அனைத்து தேவதைக்கும் ஏற்ற "நந்தியாவர்த்த விமானம்" என்ற பெயருடையதாகும். 6.ப்ராஸாதத்தை ஏழு பங்கு செய்து பஞ்சரத்திற்கு ஒரு பங்கு அங்குலம் வைத்து, முன்பு போல் அதிஷ்டானாதிகள் ஆறையும், வட்டவடிவமான பாதங்களையும், தேவகோஷ்டங்களையும், கண்டவர்கத்தில் தேவாலங்காரத்தையும் கொண்டதாய், அமைப்புடையது "பாஞ்சால விமானம்" என்று பெயர் பெறும். 7. பௌமாதி உத்தரம் வரை எட்டாக பகுத்து, அதிஷ்டாணம் ஒரு பங்கு இரண்டு பங்கு பாத நீளம், முக்கால் பங்கு கபோதம், அரை பங்கு வேதிகையும், கண்டவர்கம் மூன்று பங்கும் சாலாகாரம் இரண்டு பங்கும் ஸ்தூபி ஒரு பங்கும் மூன்று ஸ்தூபிகளுடன் கூடியதும் குக்ஷிநாஸிகளுடன் கூடியது "ஸ்ரீவிசால விமானம்" என்று பெயர்பெறும். 8. ஷடங்கவிமானத்திலேயே, அதிஷ்டானத்தின்நடுவே, வேறொருஅதிஷ்டானத்தைச் சேர்ந்து செய்திருப்பதும், பாதவர்கத்தில் அதிகஎண்ணிக்கையில்

பலபாதங்களைக் கொண்டுள்ளதும், விசேஷநாசிகளை எட்டு திசையிலும் கொண்டு உள்ளதும், ஸர்வதேவதைகளுக்கும் விருப்பமானதுமான "விஷ்ணுகாந்தம்" எனப்பெயர்பெறும் விமானவகையாகும். 9. பௌமாதி ஸ்தூபி வரையில் ஷடங்கங்களும் நீள்வட்டவடிவமாக அமைத்து, முகப்பில் மட்டும் வாயிலுக்குமேல், பாதிசந்திரன் போன்று பட்டை முன்வருமாறும், பின்புறம் வட்டம் வருமாறும், யானையின் பின்புறம் போன்று பின்புறத்திலிருந்து தோன்றுவதும் முன்புறம் ஒருபெரிய மஹாநாசியும், சுற்றிலும் பலசிறுநாசிகளும், ஸகல தேவாலங்காரத்துடனும் கூடியதும், முன்னும்பின்னுமாக மையநேர்கோட்டில் சிகரத்தில் வரிசையாக ஐந்து அல்லது மூன்று கலசஸ்தூபிகளை உடையதும், முக்கோஷ்டம் உள்ளதாக அமைக்கப்படுவது, விநாயகர், சிவன், சாஸ்தா மூவருக்கும் மிகவும் பிரியமான சிறப்பான, "ஹஸ்திபிருஷ்டவிமானம்" எனப்பெயருடையதாம். இதனை கஜபிருஷ்டவிமானம், அல்லது தூங்கானைமாடக்கோயில் என்பர். இன்றும் இவ்வடிவவிமானம் பலகோயில்களில் அதிகமாக காணப்படுகிறது. 10. விமானங்களின் ஆறங்கங்களில், சிறப்பாக கபோதத்திற்குமேல், உபக்ரீவத்தையும், சிகரத்தையும், ஸ்தூபியையும் மாற்றி குக்குடஅண்டம் (கோழிமுட்டை) போல், நடுவிலுள்ள சிகரத்திலேயே, நாலுமூலை-களிலும், நாலுசிகரங்களுடன், பஞ்சசிரஸ் அல்லது பஞ்சஅண்டத்துடனோ, இவ்வாறே இருநிலையாக, நாலுமூலைகளிலும் இரண்டுசிகரத்துடன் எட்டுசிகரமும், நடுவில் ஒன்று உள்ளதுமாக ஒன்பது சிகரத்துடனும் நவாண்டமாகவும் இவ்வாறு பலசிகரங்களுடன் கட்டப்படுவது "சிரச்சந்தம்" என்றும், கோடுகளுடன் கூடியிருப்பது ரேகாபிராஸாதம் எனவும். இவ்வகை நடுவில் நாலு-பட்டையாகவோ வட்டமாகவோ அமைத்து, அதில் லதாகிருதி எனும் கொடிவேலை, அல்லது பூவேலையாக கோடுகள் உள்ளதாகவும், அமைக்கப்படும். இதன் சிகரவர்கமானது மஞ்ஜரி மற்றும் அண்டம் எனப்பெயர் பெறுவதால் இவ்வகையில் 1) ஏகாண்டம், 2) பஞ்சாண்டம், 3) நவாண்டம் என மூவகை விமான அமைப்புகள் உண்டு. மூலசிகரத்தை, நடுவிலுள்ளதை மட்டும் கொடிவேலையால் அலங்கரித்து, மற்றதை வட்டமாக அமைப்பதுட" ஒருமுறை, இது "மூலமஞ்ஜரி" எனும் பெயருள்ளது. பூங்கொத்துபோன்ற உருவஅமைப்பு கொண்டது மையசிகரமாகும். இத்தகைய பலவகை "ரேகாப்ராஸாதங்கள், ஒரிசா, குஜராத், மத்தியபிரதேசம், மற்றும் உத்திரபிரதேசம் இப்பகுதிகளில் அதிகம் காணப்படுகிறது. இது காவடிபோன்ற தோரணவாயிலமைப்பும் உடையதாகும். 11. விமான ஷடங்கங்களுடன், சாலாபோன்று, நீள்சதுர கருப்பக்கிரஹத்துடன் கூடியதாய், ப்ரஸ்தரத்தின் மீது கூம்புவடிவில், கூரைவேய்ந்தது போலும், உலோகத்தகடுகள் முதலானவற்றால் கூம்புவடிவில் கூடாகாரமாக அமைத்து, முன்புறம் விசேஷமகாநாசியும், நடுவில் ஸ்தூபியும், இருபக்கமும் கவாக்ஷம் என்னும் ஜன்னலுடன் கூடியதும், கர்பகிரஹ தூண்கள், வாஜனம், உத்தரம், கதளீகரணம் இவற்றுடனும், வெளியில் தொங்கும் நிலையில், சுகநாசியுடன் சாலாக்கள், கூடங்கள், நாசிகைகள், ஜாலகங்கள், பஞ்ஜரங்கள் இவற்றையும் சிறப்பாக சுகநாசிகையையும் கொண்டு உள்ளது "கூடசாலாகாரம்" எனப்படுகிற, கேரளாவில் காணப்படும் விமான வகையாகும்.தாமரைமலர் வேலைபாடு உடையது நளினகம் என்றும்.சுவஸ்திகம் போன்றும்,நாலுபட்டையாக உள்ளது.நந்தியாவர்தம் என்றும்,யானைகளுடன் ஸ்தம்பங்கள் உடையது கஜபாதம்.அவ்வாறே சிம்மபாத விமானம்,ரதாகிருதி எனும தேர் போன்ற முதலியன வாய் பலவாய்வடிவம் பெறும்.

<u>விமான வகை வடிவ அமைப்பு முறை</u> :- விமானஜாதிபேதங்கள் அடிப்படையில், விமானம் நாகரம் என்பது முற்றிலும் சதுர வடிவம் கொண்டுள்ளது ஆகும்.கண்டத்திருந்து மேலே எட்டு பட்டை

வடிவம் உடையது, திராவிடம் என்பது ஆகும். கண்டத்திலிருந்து வட்டமானது வேசரம் என்பதாக விமானம் மூவகையாகும். இவைகளின் சிறப்பு வகைகள் பல. 1) கைலாசம், 2) மந்தரம், 3) மேரு, 4) ஹிமவான், 5) நிஷதம், 6) நீலபர்வதம், 7) மாஹேந்திரம், 8) நளிநகம், 9) ப்ரளினகம், 10) நந்தியாவர்த்தம், 11) ஸ்ரீவர்த்தம், 12) பர்வதாகிருதி முதலானவை, அனைவருக்கும் ஏற்ற விமான வகைகளாகும். 4 சாலைகள், 4 கூடங்கள் கொண்டது [1]கைலாசம் எனப்படும். அவ்வாறே 4 சாலைகள் 8 கூடங்கள் கொண்டது [2]மந்தரம் எனப்படும். 8 சாலாக்கள் 8 கூடங்கள் கொண்டது [3]மேரு விமானம் எனப்படும், 8 சாலாக்கள் 8கூடத்துடன் 16 பஞ்ஜரங்களுடன் முழுப்ராசாத இலக்கணத்துடன் கூடியது [4]ஹிமவான் எனப்படும். 8சாலா மற்றும் 8 பஞ்ஜரத்துடன் அல்லது 16 பஞ்சரத்துடன் கூடசாலாக்களின்றி, அமைவது [5]நிஷதம் எனப்படும். 4 சாலாக்களுடன், வேதீ மற்றும் சோபானத்துடன் கூடியது நளினகம் எனப்படுகிற, [6]நீலபர்வதம் ஆகும். சிகரத்தை 4 பட்டையாகவும் 2 பக்கத்திலும் கோஷ்டங்களுடனும், பஞ்ஜரம் மற்றும் நாஸிகையுடன் கூடியதும், படிக்கட்டுகளை பக்கத்தில்உடையதும், ப்ரளிநகம் எனப்படுகிற [7]மாஹேந்திரம் எனப்படுவதாகும். 4 கூடம் 4 சாலா 4 பக்க நாசிகள் 1 பக்க முகநாசியும் 12 அனுநாசிகளும் 4 பக்க வரிசைப்படிக்கட்டுகளுடனும், ஒவ்வொருதலத்திலும் கொண்டுள்ளது [8]நந்தியாவர்த்தம் ஆகும். 4 கோஷ்டங்களும் 4மூலைகளில் கோணங்களில் அமைந்ததும் 4 நாசிகள், 18 அனுநாசிகள் ஆகியவற்றுடன் இலக்கணத்துடன் உள்ளதும். ஸ்ரீப்ரதம் / ஸ்ரீவர்த்தம் / [9]ச்ரியாவர்த்தம் என்ற புகழ்மிக்க பெயர்பெறும். கூடசாலாக்களுடன்கூடியதும், பஞ்ஜரம், நாஸிகா, வேதிகா, ஜாலகம், இவற்றுடன் கூடியதாக, ஒவ்வொருதலத்திலும் ஒரு பங்குவீதமாக, குறைந்ததாகச் செய்யப்படுவது [10]பர்வதாகிருதி எனப்படுகிற மலைபோன்ற வடிவமைப்பு கொண்ட விமானமாகும். இவ்விதமே நாகராதி மூன்று வடிவங்களின் கலப்புடன் கூடியவையாக, பலவகையாகவும் 96 வகையாகவும் விமானங்கள் வடிவமைப்பு கொண்டவையாகும்.

<u>விமானாகிருதி விசேஷபாவனை</u> :- ஆலயவடிவத்தில் கட்டிடப்பகுதிகள் யாவும், அங்கம், உபாங்கம், ப்ரத்யங்கம் என்று மூவகையாக,பல வகை உறுப்புகளை ஒவ்வொன்றும் பெற்று உள்ளவையாக, பெருங்கோயில் வடிவமைப்பு முழுவதும், கலைநயம்மிக்க, கண்ணுக்கு புலப்படுகிற, ஆன்மநலம் தருகிற, தெய்வத்திருமேனியாகும். இதுவரை கூறப்பட்ட, விமானம், மண்டபம், ப்ராகாரம், த்வாரம், கோபுரம் முதலானவை சைவஸித்தாந்தக்கொள்கைகளை நமக்கு உணர்த்திடுகிற அறநிலைகளாகும். கோயிலை தெய்வத் திருமேனியாக கருதியவாறு, தமக்குஏற்ற முறையில், சைவாகம தத்துவார்த்த பாவனைகளுடன், கோயிலுக்கு முறையேசென்று, வழிபாடாற்றினால் உயிர்கள் பயனடைவது உறுதி. ஐயம் கொள்ளத் தேவையில்லை என்கிறது ஆகமம்.

ப்ராஸாதம் தேஹ மித்யுக்தம், தேஹீ லிங்க மிதிஸ்மிரும் I
தேஹஹீநம் கிருதம் கர்ம தத் ஸர்வம் நிஷ்பலம் பவேத் II (அம்சுமதாகமம்)

அறநெறியில் செல்ல உதவுவது உடலே ஆகும். உடலற்று செய்வது பயனற்றது என்கிறது ஆகமம். "தேஹோ தேவாலயப் ப்ரோக்தோ தேவோ ஜீவஸ் ஸதாசிவ |": இக்கூற்றுகளால், கோயில் இறைவனது உடல் என்பதும், அதில் இருந்து அருளுகிற பரமாத்தமாவே அக்கோயிலின் ஜீவனே, இறைவன் என்றும், தத்துவ அடிப்படையிலே பக்தர்களால் கோயில்கட்டிடமானது மனதால் எப்போதும் கருதி பாவனை செய்யத்தக்கது. எனவே, இதனால் கோயிலை சுத்தமாக, குறைவற்றதாக, எப்போதும் வைத்திருப்பதும், சுத்தமானவர்களாலேயே ஆலய தொண்டும் தரிசனமும் செய்திட வேண்டுமென்பதும்

இங்கு உணரத்தக்கது. கோயிலை பக்தர்களின் (நமது) இடமாக கருதுவது தீங்குதருவதாகும். அவ்வாறு கருதுவோர் வவ்வாலாக பலதலைமுறைக்கு பிறப்பர் என்கிறது ஆகமம்.

பௌமாதி ஸ்தூபி பர்யந்தம் ஸ்தூலலிங்க மிதிஸ்மிருதம் । எனக்கூறி சூட்சுமாகமமானது ஆலயகட்டிடம் முழுவதையும் ஸ்தூலலிங்கமாக கூறுகிறது. ஆலய அமைப்பில், தெய்வசரீரத்தை விரித்துக்கூறும் முறை "சரீரபிரஸ்தாரம்" என்றும், இருதயத்தை (மனதை) விரித்துக் கோயிலாகக் கூறும் முறை "இருதய ப்ரஸ்தாரம்" என்றும் இருவகைப்படும்.

I. <u>சரீரப்ரஸ்தாரம்விளக்கம்:</u> ஒரு தெய்வத்தின் பேராலயமாகிற திருமேனியில்,கோயிலின் உறுப்புப்பகுதிகள் முறையே மூலாலய மூலதேவரின் கருவறையான, கர்பகிருஹம் என்பது தலைப்பகுதியாகவும், அர்த மண்டபம் என்பது கழுத்துப்பகுதியாகவும், ஸ்நபன மண்டபம் என்பது மார்புப்பகுதியாகவும், மஹா மண்டபம் என்பது நாபி பகுதியாகவும், நிருத்த மண்டபம் என்பது துடைப்பகுதியாகவும், "ஸபா மண்டபம் அல்லது ஆஸ்தான மண்டபம்" என்பது முழங்கால் பகுதியாகவும், "மஹாகோபுரம்" என்பது திருப்பாதப்பகுதியாகவும், ஆலயத்தின் சரீராகிருதியில் படுத்தநிலையில் முகாயாம மண்டபப் பகுதிகள் பாவிக்கத்தக்கவை. இதனை சிவாகமங்கள் கீழ்காணுமாறு கூறுகின்றன.

கர்பக்கிருஹம் சிரப் புரோக்தம் அர்தம் கண்டஸ்தலம் பவேத் ।
ஸ்நபனம் வக்ஷதேசம் ச மஹாமண்டப நாபிகம் ॥
நிருத்தமண்ட மூருஸ்யாத் ஆஸ்தானம் ஜங்கிகா பவேத் ।
மஹாகோபுர பாதம் ஸ்யாத், இத்யேவம் ரூப முச்யதே ॥ (காரணாகமம்)

1. காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீரமையவாட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே என்கிறது திருமுறை.
2. உடம்பெனும் மனையகத்து ள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய் யட்டி யுயிரெனும் திரிமயக்கி
யிடம்படு ஞானத்தீபா லெரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே. என்கிறது திருமுறை.

<u>ஆலய திவ்யதேஹ பாவனை :-</u> இவ்வாறே ஆலய புருஷவடிவமானது. அமர்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும் கூறப்பட்டுள்ளது. விமான கட்டிடத்திருப்பணியில், முதலில்வைக்கப்பட்ட "திருவடிக்கல்" (ஆத்யேஷ்டிகா) முதலாக, விமானஸ்தூபிகலசம் வரை நின்ற நிலையில் தேவாலயத்தின் தேகம் கூறப்படும். இதில் பாதசிலைபதிந்தபகுதி திருப்பாதமாயும், உபபீடப்பகுதி முழங்காலாகவும், அதிஷ்டானப்பகுதி துடையாகவும், கருவறைஉள்ளிட்ட பாதஉயரம்வரையிலான சுவர்பகுதி, வயிறுப்பகுதியாகவும், ப்ரஸ்தரப்பகுதி மார்பாகவும், உத்தரமாகிய வ்ருஷபதலமானது, தோள்பகுதியாகவும், தேவதாலங்காரத்துடன் கூடிய கண்டவர்கமானது கழுத்துப் பகுதியாயும், கருவறையின் சுவரில், வெளியே உள்ள பாதவர்கமாகிய தூண்கள்யாவும் கைகளாகவும், சிகரவர்கத்தின்

உச்சித்தாமரைப்பூ வேலைவரையிலானபகுதி, தலையாகவும், ஸ்தூபிகலசம் என்பது, மணிமகுடமாகவும், சுற்றுச்சுவர்பகுதி இடுப்புப்பகுதியாகவும், கர்ணவர்கம் காதுகளாகவும், நாசிகைவர்கம் மூக்குப்பகுதியாகவும், நான்கு திசாமூர்த்தங்கள் நான்குமுகமாகவும், கண்களாகவும், கோமுகை என்பது அபானபகுதியான குய்யஸ்தானமாகவும், கட்டிடத்துக்கற்கள், எலும்பாகவும், மண், சுதாசாந்து, கல்கமானவை உடலின் மாமிசபாகமாயும், சுதாபூச்சு வேலைப்பகுதி, உடற்தோலாகவும், சுற்று-ப்ராகாரசாலாக்கள் ஆடையாகவும், விமானஉச்சிக்கொடியானது திருமுடிச்சிகையாகவும், இதனை உச்சியில் வைக்கப்பட்ட 100தர்பைப்புல் வைத்து முடிந்திட்ட நீண்டகுஞ்சமானது சததர்பைக் கூர்ச்சமானது. கர்ணஸ்தூபிகள் சிகையாகவும், இவ்வாறு பரமபுருஷதேஹமாகவே விமானகட்டிடப்பகுதி முழுவதும் பக்தரின் மனதால் கருதத்தக்கது. இதனையே சிவாகமஸாரத் தமிழ்நூலான திருமந்திரமும் "உள்ளம்பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்று தெள்ளத்தெளிவுற விளக்கி உள்ளது. மனிதர்களின்வீடாகிய நராலயத்திற்கும், தேவாலயத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை முக்கியத்தை இத்தகைய தெய்வத் திருமேனியாக கருதும் மனோபாவனையே, உணர்த்துவதாக அறியத்தக்கது.

II.<u>ஹிருதய ப்ரஸ்தாரம் விளக்கம் : -</u>ஆலயத்தின் பகுதியான உறுப்புகள், அகக்கருவிகள்எனப்படும், 36 தத்வங்கள், நாடீசக்ரஸ்தானம், சப்ததாதுக்கள், பாஞ்சபௌதிகம்,, ஷடத்வம்பஞ்சகோசம், இவைகளைக் குறிப்பவையாய் விளங்குகின்றன. எவ்வாறு எனில்? ஆலயத்தின் முகாயாமப்பகுதிகளின்மண்டபங்கள், வெளிப்பிரகாரபகுதி, முதலாக, கருவறைவரையிலான உள்பகுதிவரை முறையே ஒவ்வொரு மண்டபப்பகுதியும், முறையே 1.மூலாதாரம், 2.ஸ்வாதிஷ்டானம், 3.மணிபூரகம், 4.அனாஹதம், 5.விசுத்தி, 6.ஆக்ஞை எனும் மனிததேகத்தின் ஆறு ஆதாரநிலை சக்ரஸ்தானங்களாகக் கருதி பாவிக்கத்தக்கன. விமானஉச்சிக்கல்லின் கமலப்பகுதியானது, தலை மீதுள்ள உன்மனிஸ்தானமாயும், ப்ரம்மரந்திரமாயும், ஸ்தூபிகலசமுனையானது தலை மீதுள்ள நிராதார நிலையான, த்வாதசாந்தம் எனும் சிதம்பரஸ்தானமாயும், மேலும் கோயிலின் நூற்றுக்கால் மற்றும் ஆயிரங்கால் மண்டபப் பகுதியானது, ஸஹஸ்ரதளகமல ப்ரம்மரந்திரமாகவும், கருவறையே உன்மனிஸ்தானமாயும், ஆலயத்தின் தீர்த்தக்குளமே, நம்மூளையின்மேல்புறத்திலுள்ள சத்யபுஷ்கரணியாயும், இவ்விதம் ஆலயம் முழுவதும்,தெய்வத்தின் தேகமாய்விளங்குவதாகவும், தெய்வதேகத்தையே குறிப்பதாயும் உள்ளதாக, மனதால் பாவனை செய்தல் ஆகம சமயநெறிமுறையாகும்.

<u>பஞ்சகோச பாவனா</u> விளக்கம் : பேராலயமானது ஏழுபிராகாரங்களின் அமைப்பால், பூராதிகளான ஏழு அண்டங்களான , ஏழு உலகப் பெயர்களையும் ஏழுவ்யாகிருதிகளையும், ஏழு தாதுக்கள் எனப்படுகிற, 1. ரத்தம், 2. ரசம், 3. மாமிசம், 4. மேதா, 5. எலும்பு, 6. மஜ்ஜை, 7. சுக்லம் என்பவற்றையும் குறிப்பது ஆகும். ஆலயத்தின் ஐந்து ப்ராகரங்களும், முறையே ஸ்தூலதேஹத்தின் [1]அன்னமயம், [2]ப்ராணமயம், [3]மனோமயம், [4]விக்ஞானமயம், [5]ஆனந்தமயம் என்பனவாகிய ஐவகை கோசங்களை (சட்டை அல்லது அட்டை போன்ற கவசம்) வெளியிலிருந்து உள்ளே மூலக்கருவறை வரையில், உரியதான ஐந்து சுற்றுப்பகுதியாக, ஒன்றுள்ஒன்றாக குறிப்பதாகும். மூன்று ப்ராகாரங்கள், வெளியிலிருந்து முறையே 1. ஸ்தூல தேகம், 2. சூக்ஷ்ம தேஹம், 3. காரண தேஹம் எனும் இவற்றை குறிப்பதாகும் ஒரு பிராகாரஆலயமாகில், அந்தப்பிராகாரமே இவைஅனைத்தையும் குறிப்பதாகும். இது இறைவன் பஞ்சகோசாந்தரஸ்திதர் (ஐங்கோசத்துள் இருப்பவர்) என்பதை உணர்த்துகிறது. தேவாலயமாகிற தேஹமே சக்தி என்றும்,

தேவனே ஜீவன் என்றும், தேஹத்தை இயக்கும் தேஹீ எனவும், உணர்ந்து உரியமுறையில் ஆலயத்தை பாவனைசெய்தல் முறையாகும்.இதுவே தேவாலயதத்வ பாவனா விதிமுறையாகும்.

<u>பஞ்ச கலாமய கல்பனம் : -</u> சிவாகமங்களின்படி நாம் காணும் பொருள் யாவும் "கலாமயம், பாஞ்ச பௌதிகம்" என பாவிக்கப்பட வேண்டியவை. உலகத்தோற்றத்தில் முறையே நாதம், பிந்து, கலைகள் தோன்றின. எனினும் ஒலி மற்றும் ஒளி வடிவங்களுக்குப் பிறப்பிடமாகத் திகழும் மூல முதல்காரணமானது பிந்து. இந்த பிந்துவிலிருந்து தோன்றியவை, சாந்தியதீதா முதலான ஐந்து கலைகள் . இவையே ஆகாசாதி பஞ்சபூதங்களாகத் திகழ்வன. நிவிருத்திகலா நிலமாயும், ப்ரதிஷ்டாகலா நீராயும், வித்யாகலா தீயாயும், சாந்திகலா காற்றாயும், சாந்தியதீதகலா ஆகாயமாயும் விளங்குவன. இப்பஞ்சகலைகள், பஞ்சபூதங்களை உள்ளடக்கியும், ஒடுக்கியும், வெளிப்படுத்திப்படைத்தும், அனைத்திற்கும் அடிப்படையாகி, யாவுமாய், பலவிததேஹமாய், விளங்குகின்றன. ஆதலால் இக்கலைகள் ஐந்தின்சோதனையால், உடல் புனிதமெய்தி, தெய்வீகத்தன்மைபெறும். அவ்வாறே, கோயிலும், சக்தியும் இந்த பஞ்சகலைவடிவமாகவும், பஞ்சபூதங்களின் தன்மையுடையதாயும், புலப்படும் தெய்வ ஸ்தூலதேஹமாயும், விளங்குகிறது. இதனை மகுடாகமம் விளக்கிக் கூறுகிறது.

ஆலயம் து கலாரூபம் ஸ்தூலதேஹம் ஸசக்திகம் |
அத்வஷ்டக ஷடங்காட்யம் பாஞ்ச பௌதிக ரூபகம் ||
ஸர்வதேவமயம் ஹர்மியம் ஸர்வ மந்திரா லயம் விது : || : (மகுடாகமம்)

இவ்ஐந்துகலைகளுக்குள் (1) தத்துவம் 36-ம் (அகக்கருவி), (2) புவனம் (உலகம்) 224ம், (3) வர்ணம் (எழுத்து) 50ம், (4) பதம் (ஆகமஸாரசொற்கள்) 81ம், (5) மந்திரம் (ஆகமமனு) 11ம் ஆகியவை ஐந்தும் உள்ளடங்கி உள்ளன. இவை ஐந்தும்,இவற்றின் உறைவிடமான ஐவகையான கலையுமாகிய இவை ஆறும் "ஷடத்வா" எனப்படும். அத்வா எனில் "பரவி நிற்கும் வழி" அல்லது "நிறைந்துள்ள இடம்" என்று பொருள். இவை ஆறுஅத்வாக்களுமே, பரம்பொருள் குடிகொண்டு அருள்புரியத் திருமேனியாகத் திகழ்கின்றன. இவற்றில் ஒலியாக நாதவடிவில் மந்திரம், பதம், வர்ணம் ஆகிய மூவகை அத்வாக்களும், ஒளியாக பிந்துவடிவில், புவனம், தத்துவம், கலை, ஆகிய மூவகைஅத்வாக்களும் சேர்ந்து, நாத மற்றும் பிந்து வடிவமான கோயிலான தெய்வத்திருமேனியாகின்றன. இவற்றை பிரதிஷ்டையின் போதுமந்திரித்தலால் கோயிலானது தெய்வத்தின் தூலத்திருமேனி-யாகிறது. விமானத்தின் ஷட்வர்க்கத்தில் இவை முறையே, அதிஷ்டானத்தில் புவனாத்வா, பாதத்தில் தத்வாத்வா, ப்ரஸ்தரத்தில் பதாத்வா, கண்டத்தில் வர்ணாத்வா, சிகரத்தில் மந்திராத்வா, கலசத்தில் கலாத்வா என்று விமானப்ரதிஷ்டையின்போது நியாஸமெனும் கிரியையால் மந்திரத்துப் பூஜிக்கப்படும். இதனால் இறைவனுடைய ஆறுவகை (ஷாட்குண்யங்களின்) சித்திகளும் கோயில்கட்டிடத்திற்கு ஏற்பட்டு, தரிசிப்போருக்குத் தெய்வீக அருள்தரும் தேவ சரீரமாகக் கோயில் திகழ்கிறது.இதனை ஆகமம் நன்கு தெளிவுபடுத்துகிறது.

மஹேச: ஸ ஷடத்வாத்மா தஸ்ய ப்ராண: ஸதாசிவ: |
பூஜயேத் தேவதேவேசம் கந்தபுஷ்பாதிபிர் ஹ்ருதா || (சிவாகமம்).

இவ்விதம் மந்திரித்து, ஸ்தாபித்து,பிரதிஷ்டைசெய்யப்பட்ட கோயிலில் செய்யப்படும் பூஜையே பயன்தரக்கூடியது. கோயில்வடிவமைப்பின்றி, புறவழிபாடு, அகவழிபாடு இரண்டுமே பயனற்றதாகும்.

பூசலார் நாயனாரும் கூட அகவழிபாட்டிலும் கோயில்அமைத்தது இங்கு நினைக்கத்தக்கது. எனவே ஆறு அத்வாக்களே கோயில் என்றுபாவித்தல் முறை. மேலும் நம் உடலில் இருக்கும், சதை, எலும்பு, போன்றவையும் இவைகளே. வர்ணாத்வா தோலாகவும், பதாத்வா தலை மற்றும் நரம்பாகவும், தத்வாத்வா இதயமாகவும், புவனாத்வா ரோமமாகவும், மந்திராத்வா குருதியாகவும், கலாத்வா சுக்லம், மஜ்ஜா, எலும்பு, முதலானவையாயும், அமைய, ஆலயஉருவம்யாவும் கலாத்வாரூபமாகி, விளங்குவதாக பாவிக்கத்தக்கது. இதனை ஆகமத்தால் அறியலாம்.

வர்ணாத்வா து த்வகாதார: பதாத்வா ச ஸிராஸ் ததா |
தத்வாத்வா ஹ்ருதயம் சைவ புவனாத்வாது ரோமகம் ||
மந்திராத்வா ருதிராதார: சுக்ல மஜ்ஜா ஸ்தி ரூபகம் |
கலாத்வா சைவ ஸர்வாங்கம் இத்தம் ஸாதாக்ய ரூபகம் ||(சைவாகமங்களில்)

இவ்வாறு ஸாதாக்யஸ்வரூபமாக தெய்வ விமானத்தை ஆசாரியர் பாவனைசெய்து அதில் தேவதையை பிரதிஷ்டைசெய்வதால், மட்டுமே பூஜையின்பூரணபயனைப் பெறஇயலும். இல்லையேல் வீண்செயல் என்று சுப்ரபேதாகமம் வலியுறுத்திக் கட்டளையிடுகிறது. "விமான ஸ்தாபனோபேத தாம்நி பூஜா பலப்ரதா | அக்ருதே பூஜிதே தாம்நி தத்ஸர்வம் நிஷ்பலம் பவேத் || (சுப்ரபேத ஆகமம்).

<u>சக்திமய பாவனை :</u> ஆலய ஒவ்வொரு பகுதியிலும், திவ்யதேவதாசக்திகள் நிலைபெறுமாறு மந்திரிக்கப்பட்டு, ப்ரதிஷ்டா எனும் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்படவேண்டும். இதனால் கோயில் அருள்தரும் திறனைப் பெறுகிறது. இதனை மகுடாகமம் விளக்குகிறது. அதாவது, கீழ்பகுதியிலிருந்து முறையே 16சக்திகள் கூறப்படுகின்றன. அவை 1. அதிஷ்டானத்தில் ஆதாரசக்தி, 2. உபானத்தில் ஆதிசக்தி, 3. ஜகதியில் கிரியாசக்தி, 4. பத்மத்தில் ஜியேஷ்டாசக்தி, 5. குமுதத்தில் குணசக்தி, 6. பட்டிகையில் ஸ்தானசக்தி, 7. பித்தியில் ரௌத்ரசக்தி, 8. ஸ்தம்பத்தில் பாலிகாசக்தி, 9. பாலிகையில் நந்திசக்தி 10. கம்பத்தில் மனோன்மணீசக்தி, 11. கபோதத்தில் மஹாசக்தி, 12. பூதமாலிகையில் காலசக்தி, 13. கண்டத்தில் ஞானசக்தி, 14. நாசிகையில் சாம்பவீசக்தி, 15. சிகரத்தில் கல்யாணீசக்தி, 16. ஸ்தூபியில் மஹேச்வரீசக்தி ஆகிய சக்திகளும், மற்றும் இவ்வர்கங்களின் உள்பகுதியான உபாங்கங்களிலும் 32 சக்திகளும் விளங்கிட ஸர்வசக்தி ஸ்வரூபமே விமானாகிருதி என்கிறது மகுடாகமம்.. இவ்வாறே அதிஷ்டானவர்க உட்பகுதிகளில் பத்துசக்திகளையும், ஸ்தம்பவர்கத்தில் பத்துசக்திகளையும், ப்ரஸ்ரத்தில் ஏழுசக்திகளையும், கண்டத்தில் ஒன்பது-சக்திகளையும், சிகரத்தில் ஒன்பதுசக்திகளையும், ஸ்தூபியில் ஒன்பதுசக்திகளையும் விரித்துக் கூறி, ஸ்தூபி வரையிலான விமானம், சக்திமயமான இறைவனது திருமேனியே எனவும் மகுடாகமம் விளக்கியுள்ளது.

ப்ரதமேஷ்டகாதி ஸ்தூப்யந்தம் சக்திரூபம் மஹேச்வர |
தஸ்மாத் சக்திமயம் ரூபம் மமரூபம் பரம் சுபம்||
இத்தம் சக்த்யாத்மகம் தாம புரோக்தம் ஸகளரூபகம் || (மகுடாகமம்)

ஆலய வழிபாட்டில் பக்தர்களில் சேவிக்குமிடம்:-ஸர்வசக்திகளின் வடிவமாக விமானம் விளங்கும். இவ்வாறு பூஜிக்கப்படுவதால், விமானாகிருதியானது தொலைவிலிருந்து கண்டு தொழுவோருக்கும்,

கருதும் பயனைத்தருவதாக ஆகிறது. இதனாலேயே ஆன்றோர்கள் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்றனர். கோயிலில் அவரவர் சமயநெறி நிலைக்கு ஏற்ற இடத்திலிருந்தே, தெய்வதரிசனத்தை செய்தல் ஆகமநெறிமுறையாகும். ஆதிசைவராகிய குருக்கள் கர்பகிருஹத்திலும், சிவதீக்ஷைபெற்ற வைதிகப்ராம்மணர்கள் அந்தராளத்திலும், வேதஅத்யாபகபிரமாணர்கள் அர்தமண்டபத்திலும், யாகம்செய்த யஜ்வாக்கள் மற்றும் தபஸ்விகள், சந்யாசிகள் ஆகியோர் முகமண்டபத்திலும், அரசர்கள் தோள்பகுதியான அம்சமண்டபத்திலும், வணிகர்கள் மஹாமண்டபத்திலும், தீக்ஷை பெற்றவர்களாகவும் நைஷ்டிகர்களாகவும் உள்ள நான்காம் வர்ணத்தார்கள் பஹிர்மண்டபத்திலும், தீக்ஷைபெற்ற சமயசூத்ரர்கள் நிருத்தமண்டபத்திலும், பிறஜாதியில் சைவதீக்ஷை பெற்றவர்கள் கோபுரவாயில் பகுதியிலும் நின்று தரிசனம் செய்யவேண்டியவர்கள் என்கிறது சுப்ரபேதாகமம். மற்றொருஆகமத்தில் ஆலயஉறுப்புகளில் பக்தர்களுக்கு இடம் கூறப்படுகிறது. அது சிவப்பிராமணருக்கு கருவறையும், வேதிய பிராமணர்களுக்கு கழுத்துப்பகுதியும், அரசருக்கு தொப்புள்பகுதியும், நிருத்தகர் வாத்யகர்கள் தொடைப்பகுதியிலும், வைச்யர்கள் முழங்காலிலும், சூத்ரர்கள் பாதப்பகுதியிலும் சேவிக்கும் உரிமை பெற்றுள்ளனர். வேதாகம வர்ணாச்ரமமுறையில், அவரவர்கள் தேவனுடலில் உதித்தபகுதியில் உரிமையோடு இருந்தும், வணங்கியும், அதன்பின்பு பதிஞானபக்குவநிலைக்கு ஏற்ப, முன்னேறி, இறைவன் அருகாமையை அடைந்திட நெறிமுறையே நின்று, காலப்போக்கில் பக்குவநிலை பெற வேண்டும். இவை ஒருபள்ளியில் பலவகுப்புகள் உள்ளவாறும், யாவரும்மேல்நிலையை எய்தக்கூடியவர்களே என்பது போன்றும் சைவசமயத்தில் தீட்சையால் எவரும் உயர்ஜாதித் தன்மையைநெறியே பெற்று, உயர்நிலையைப்பெற வேண்டுமென்பது ஆகம கருத்து இங்கு இயல்பானதே என்றும் இங்கு யாவரும் உணரத்தக்கது.

துவாரகவாடம் (வாயிற்கதவு அமைப்புவிதி) ஆலயத்தின் வாயில்கதவுகள் இரண்டு உடையதாக இருத்தல் வேண்டும்.இவை இரண்டும் இறைவனை மறைத்தும், காட்டியும், நின்றிடும், இறைவனது திரோதான சக்தியும், அனுக்ரஹ க்தியுமாக கருதி உணர வேண்டும். கருவறையில் கதவு கூடாது. கருவரையில் ஞானகிரியாரூப அருவநிலையில் அமையும் இது சக்திதுவாரம் எனப்படும், பெருஞ்சோதியாக சிவதாண்டவமூர்த்தியின் கோயிலில் உள்ள ஐவகையான சபைகளும் பஞ்சகோசங்களைக் குறிப்பவை. இவற்றுள் ஆனந்தமயகோசத்தில் சித்சபேசராக ஆனந்ததாண்டவமூர்த்தியாவனர் தியானிக்கத்தக்கவர். உட்புற வ்ருஷபம் மற்றும் பலிபீடத்தருகில் கோயிலில் பெரியகண்ணாடி அல்லது சூலத்தை நிலைநாட்டி அமைத்திருப்பது பாவிகள் மற்றும் பக்திஅற்ற நாத்திகர்களின் பார்வை, சிவனை அனுகாதிருக்கவே அமைக்கப்படுவது என்று அறிக. கடவுளின் திருவாசி எனும் பிரபையானது ப்ரணவரூபமாக பாவிக்கத்தக்கது. பிரபையின்றி பூசித்தலாகாது. இதுசிலையின் ஒரு துணை உறுப்பாகிய ஸாங்கமாகும். சிலைக்குரிய பொருளிலேயே சேர்த்து அச்சிலையின் பீடம் மற்றும் பிரபை அமைப்பது உத்தமம். தனித்தமைப்பது மத்யமம், உலோகத்தால் செய்து வைத்தல் கன்யஸம் ஆகும். பீடம், பிரபை, குடை மற்றும் கிரீடம் நான்கும் முக்கியம்என்பது, ஏனெனில்? தெய்வங்களுக்குஅரசனே பரமபதியாகிய கடவுள் என்பதாலும், இவை அரசனின் தகுதிச்சின்னங்கள் என்பதாலும் அவசியமாக இதனை அளித்துப் போற்றி வழிபட வேண்டும்.

முடிவுரை : கோயில் இறைவனின் உடலாக விளங்குவதால், கோயிலில் புனிதம், தூய்மை, இலக்கணம் ஆகியவை கெடாமலும், கோயிலில் பழுதுஏற்படின் உடனேயே அதனைச் செப்பனிட்டும், பாதுகாத்தல் அனைவரின் கடமையாகும். முற்கூறியவாறு ஆறங்கஆலயத்தை முறையே அமைப்பவர் அனைவரும் அனைத்துவகையான தவம், தானம், யாகம் இவற்றின் பயனை ஐயமின்றிஅடைவார்கள் என்கிறது மகுடாகமம். கோயிலமைப்பவர்கள் தேவர்கள்போற்றிட சிவலோகத்தில்வாழ்வார்கள் என்கிறது சுப்ரபேதாகமம்.புதிதாக, ஆலயம்அமைப்பவர் சத்புத்திரனையும், சிவஞானத்தையும் மறுபிறவியற்ற சிவசாயுஜ்ய முக்தியையும் அடைவாரென அம்சுமதாகமம் கூறுகிறது.கோயிலினால் பொதுமக்கள் யாவரும் சமயத்தின் தீட்சைகளையும் பெறுகிறார்கள்.சமயத்தின் தீட்சைபெறுவதனால் மட்டுமே இறையருளால் சிவஞானமும் அச் சிவஞானத்தால் மட்டுமே முக்தியையும் எவரும் பெற இயலுமென்பதே சைவசித்தாந்தமாகும்.இதனால் கோயிலில் ஒருவர் தாம் தேடிய பொருளினாலாவது சரீரமுயற்ச்சி யாலாவது பிரதிஷ்டையிறுதியான சிவபுண்ணியச் செயல்களால் தொண்டுசெய்தல் சமயதீட்சை என்றும், நித்திய மற்றும் நைமித்திக பூசை செய்வது விசேஷதீட்சை என்றும்,கோயிலின் திருவிழா செய்வது நிர்வான தீட்சை என்றும் கோயிலின் வாயிலாக மூவகை தீட்சைகளையும் பெறுவதாகவும் பெற இயலுமென்பதையும் காரணாகமம் கூறுகிறது.மக்கள் பயன்பெற கோயில் அவசியமாகிறது.

இவ்வாறு மக்களும், பிறஅனைத்துஉயிர்களும், இப்பிறவியில் இன்பத்தையும், பின்பு முக்தியையும், பெறஉதவிடும் கோயில்களை, உரியபாவனைகளுடன் சென்றணுகி, தரிசித்து, யாவரும் பயனுற, இக்கட்டுரை உதவும் எனநம்புகிறேன். இக்கட்டுரையை எழுதிட வாய்ப்பளித்த அன்பர்களுக்கும், இதனைஅச்சிட்டு வெளியிடும் நண்பர்களுக்கும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்து இக்கருத்துரையை நிறைவு செய்து வணங்குகிறேன்.

சுபமஸ்து நித்யம்



உ

"சிவலிங்க தத்வபாவனா விவரணம்"

வேதாந்த சிரோமணி,வேதாந்த விசாரதா
சைவாகம சூடாமணி
சிவஸ்ரீ Dr. T.S. ஷண்முக சிவாசார்யர் M.A., Ph.D.,

I. சிவாகமத்தில் சிவன்

முன்னுரை :

உலகெலாம் உள்ள உயிர்கள் யாவும் இம்மையிலும், மறுமையிலும் பேரின்பம் பெற்றிட நல்வழி கூறும் "ஞானநூல்களே சிவாகமங்கள்". சிவாகமங்கள் இறைவனை சிவம் என்றும் ,அதுவே பரம்பொருள் என்றும் விளக்குகின்றன. இப்பரம்பொருள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும். சத்சிதானந்த அருட்பெருஞ்சோதியாம், சிவம் எனும் பரம்பொருள், உருவமும், பெயரும், தொழிலும் அற்றது. அதற்கு உரிய இயற்பண்புகளால் இது சிவன், சம்பு, சங்கரன், பவன் என பல பெயர்களை பெறுகிறது. இப்பரம்பொருளானது எங்கும் இருந்து கொண்டே ஒன்றில் வெளிபட்டும் விளங்கும். இயல்பாகவே மிகவும் சுத்தமாக இருப்பதால் இது சிவம் எனப்படுகிறது. தானே மங்களமாக இருந்தவாறு, யாவருக்கும் மங்களத்தையே தருவதால் இது சிவம் என்றும், சம்பு என்றும், சங்கரன் என்றும் பெயர் பெறுகிறது. ஸர்வக்ஞதாதி ஆறுகுணங்களைக் கொண்டிருப்பதால் பகவானாக, பதியாக விளங்குகிறார்.

ஸர்வக்ஞ நித்யதிருப்திச்ச ததா அனாதி பிரபோதனி I
ஸ்வதந்திர சாப்யலுப்தாச ததா அனந்தாச சக்தய: II
சக்தியபிஸ் ஸம்யுதைச்சைவ ஷாட்குண்ய பரிபூரிதம் I (காரணாகமம்)

சிவாகமங்களில் மூன்று பொருள்கள் பதி, பசு, பாசம் என்பவை விளக்கப்படுகின்றன. இவற்றுள் பதி சிவனே ஆவார்.பதியின் தேவையை ஆகமம் விளக்குகிறது.

அசேதனம் ஜகத் விப்ரா: சேதன பிரேரகம் விநா I
பிரவிருத்தெளவா நிவிருத்தெளவா ந ஸ்வாதந்த்ரியம் ரதாதிவத் II
யஸ்து ப்ரவர்த்தகச் சக்த: ஸ பதி: பரிபட்யதே. (பௌஷ்கராகமம்)

வேறெந்த தெய்வமும் "பதி" சப்தவாச்யராக, பரமபதியாயும், பசுபதியாயும் ஆகாது. பசு எனப்படுவது ஸ்வதந்திரமற்ற பல்உயிர்கள். பாசம் எனப்படுவது உயிர்களிடமிருக்கும் இயல்பான மாசுகள், உடல்கள், உலகங்கள் முதலிய பிறஅனைத்துமாம். இவ்வுயிர்கள் மாசற்ற நிலையை எய்தினால் மட்டுமே இறைவனுக்கு நிகராக உயர்வுநிலை பெறஇயலும். உயிர்கள் மாசற சிவஞானம் பெற வேண்டும்.அந்த சிவஞானம் பெற சிவபூசை செய்திட வேண்டும். சிவபூஜை செய்திட லிங்கமும், மந்திரமும் முறையே குருவிடம் பெறவேண்டும். இதனைப் பெற சிவதீக்ஷை பெற வேண்டும். தீக்ஷைபெற ஸத்குருவைத் தேடி, நாடித் தொழவேண்டும். குருவருளால் சிவமந்திர ப்ராஸாத விளக்கம் பெற்று பூசைமுறை அறிந்து, சிவலிங்கத்தைத் தேர்ந்தெடுத்து ,சிவபூஜை செய்து, வினைகளை முற்றுபெறச் செய்து, ஞானத்தைப் பெற வேண்டும். சிவவழிபாட்டிற்கு லிங்கம் அவசியம்.

II சிவபூஜையில் சிவலிங்கம்

பரம்பொருளான பரமபதியான பரசிவத்தை நாம் பூசிக்கவேண்டுமெனில் முதலில் தேவைப்படுவது ஒரு இலக்காகிய ஒரு வடிவம், அதுவே மூர்த்தம். ஸ்வரூபம், லிங்கம் என்ற பெயர்களால் ஒரு பொருளின் உருவமே கூறப்படுகிறது. லிங்கமானது பொதுவாக மூவகை. நடேசாதி உருவமாய் உள்ளது

வ்யக்தலிங்கம். சிவலிங்கமானது வ்யகத்தாவ்யக்தலிங்கம். க்ஷணிகலிங்கம் மற்றும் தீபம் முதலானவை அவ்யக்த லிங்கம் என அறியலாம். சிவபூஜையில் பூஜைக்கு மட்டில் அவ்வப்பொழுது தயாரித்து, பூசித்து பின்பு கைவிடுவது க்ஷணிகலிங்கம் ஆகும். இது பலவகையாக, பொருள்களின் வடிவங்களில் அமையும். சிவலிங்கத்தையே சிறுஅளவில் தனக்கேற்ற அளவில் உலோகலிங்கம் ரத்னலிங்கம் சிலாலிங்கங்களாக செய்து அவற்றை மந்திரித்து ஏற்று பூசிப்பது சலலிங்கம் எனப்படும். இதில் இறைவன் எப்பொழுதும் இருப்பார். ஸ்திரலிங்கம் என்பது ஒரு இடத்தில் அசையாதவாறு நிலையானதாக அமைக்கப்பட்டது. இதனை துருவலிங்கம், ஸ்தாவரலிங்கம் என்பர், இவ்வகைலிங்கம் கோயில்களில் அமைந்திருப்பதாகும். பூஜைக்கு என சிவலிங்கவகைகளுள் ஒன்றை ஏற்று, அதில் உரிய மந்திரத்தால் உரியபொருள்களை உள்ளன்போடு அர்ப்பணிக்கும் செயலே பூசை எனப்படும். இறைவன் எங்குமிருப்பவன் எனக்குறிப்பிடின் எதுவும் தியானிக்க கருத இயலாது, புகழந்து கூறஇயலாது. எப்பொருளையும் அவருக்கு தரஇயலாது. எனவே பூஜையில் கொடுப்பவனும், ஏற்பவனுமாக இறைவன் ஒருருவில் தேவையாகிறபடியால் மந்திரத்தால் வெளிப்படுகிறான். இதனையே ஆகமங்கள் உருவமற்றவனான இறைவன் பக்தர்கள் பூஜைசெய்வதற்காகவும், தியானித்து மனதை ஒரு முகப்படுத்தி பயிற்சி பெறவும், குறிப்பிட்ட விதிமுறையால் குறிப்பிட்டகாலத்திற்கு உருவத்துள் உயிர்போன்று, உள்ளிருக்குமாறு வெளிப்பட்டு லிங்கபிரதிமாதிகளில் விளங்குகிறார் என்கிறது "தியானபூஜந ரூபஸ்தம் நிஷ்களம்து மகேச்வர:1"ம என மகுடாகமம்,மற்றும் தியான பூஜா நிமித்தம்ஹி நிஷ்களம் ஸகளே பவேத்" என காரணாகமம் கூறுகிறது. எனவே ஆகமத்தின்படி இறைவன் எங்கும் நிறைந்த வராய் அறியத்தக்கவர். ஸ்தூல மற்றும் சூக்ஷ்ம சரீரத்துள்ளே தியானிக்கத்தக்கவர். சிவலிங்கத்தின் நடுவே எண்ணி பூசிக்கத்தக்கவர். இதனை சிவபூஜாஸ்தவம் யயேஷ தேவோ மஹதோ மஹீயாந் அணோரணீயான் பவபீருபிஸ்ஸஹ ஞேயச்சிவஸ்ஸர்வகதஸ் சரீரேதியேயஸ் ஸபூஜ்யஸ் சிவலிங்கமத்யே.

III <u>லிங்கசப்த நிர்வசனம்</u>

லிங்கம் என்கிற சம்ஸ்கிருத சொல்லிற்கு சாதாரணமான பொதுவான பொருள். அடையாளம், சின்னம், இலக்கு என்பதாகும். இச்சொல் கல் முதலான பொருள்களால் செய்யப்பட்ட வழிபாட்டிற்கு உரிய அனைத்தையும் உணர்த்தும். மேலும் சின்னம் என்கிற இப்பொருள், ப்ரதிஷ்டைக்கு முன்பாக கல்லாக உள்ளபொழுது ஏற்புடையது. பிற்காலத்தில் பிரதிஷ்டைக்குப்பின்பு இதுவே சிவனாக வழிபடத்தக்கதாகும். இது இலக்காக சின்னமாக, இறைவன் வெளிப்பட ஓர் அடையாளமாக விளங்குகிறது எனலாம். இது சாமான்யப்ரகிருதி பாவனையில் பொருளாகும். இவற்றில் மந்திரநியாசத்தால் இறைகுடிகொண்டபின்பு அது சின்னமாக கருதத்தக்கதல்ல. எனவே, சிவாகம சிவபூஜைமுறையில் இந்த சின்னம் என்ற பாவனை போக்கப்பட்டு லிங்கம் இறைவனே, சிவனே என கருதப்படுகிறது. எனவே சிவாகமங்கள் லிங்கம் எனும் இச்சொல்லுக்கு பலவாறு சித்தாந்தக் கருத்தை உணர்த்தும் வடிவமாக உள்ளதால் இப்பெயர் என்றும், லிங்க உருவை பாவாகாரம் என்றும் கூறுகிறது.

லிங்கம் சின்னம் சரீரம் ச கத்யதே (அ)த்ர ஜநார்தனI
சரீரம் மந்த்ர ஏவஸ்யாத் சப்தப்ரம்மேதி சம்ஞித : II
சரீரம்ப்ரதமம் கிருத்வா வ்யக்தாவ் யக்தோபாயத்மகம் I
திரிவிதம் தத் ஸமாக்யாம் பூஜார்த்தம் தஸ்யநித்யசம்II - அஜிதாகமம்

லிங்காத் ஸர்வம் ஸமுத்பன்னம் லயம்தஸ்மின் ப்ரகீர்த்திதம் I
ஸ்ருஷ்டிஸம்ஹாரமேவோக்தம் லிங்கநாம்நாத்விஹோச்யதேII

என்ற வாதுளசுத்தாக்ய ஆகமவசனத்தின்படி ஆகமசாத்திரத்தில் லிங்கம் என்னும் சொல்லானது எது ஒன்றில் அனைத்தும் தோன்றி, முடிவில் அவையாவும் எதில் ஒடுங்குகிறதோ, அதனால் அது லிங்கமெனப்படுவதாகவும், இச்சொல் படைத்தலையும், நல்லொடுக்கமாகிற ஸம்ஹாரத்தையும் உணர்த்துகிற வடிவம் என்பதனையும் உணர்த்துவதாகவும் விளக்கப்படுகிறது. ஒடுக்கம் என்பது இயல்பாகவே காரணத்தில்தானே கார்யங்கள் ஒடுங்கும். எனவே அனைத்திற்கும் மூல முக்கிய முதல்காரணம் இச்சிவலிங்க உருவமேயாம். உலகம் கார்யமாக, செய்யப்பட்ட பொருளாக விளங்குவதால், இதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒருகாரணம் இருப்பது இயல்பு. அதுவே சுத்தமாயா எனும் பிந்துவாகும். இதிலிருந்துதான், கலா முதலானயாவும் தோன்றின. பிந்துவை நாதம் கலக்கிட யாவும் தோன்றின. எனவே, நாத பிந்து கலாதியாகவே தோன்றி ஒடுங்குவனவே யாவும் எனவே நாதமே லிங்கமாகவும், பிந்துவே பீடமாகவும், அறியதக்கது. பீடமற்ற லிங்கமானது ப்ரதிஷ்டைக்கும், பூஜைக்கும், பிரம்மதேவருக்கே் கூட தகுதியற்றதாகும் என்கிறது ஆகமம்.

நாதம்லிங்கமிதிக்ஞேயம் பிந்துப் பீடமுதாஹ்ருதம்.
நாதபிந்துயுதம் ரூபம் லிங்காகார மிதி ஸ்மிருதம்.

எனும் ஆகமகூற்றால் ஒலியும் ஒளியும் இணைந்த அற்புதமான சிறப்புவடிவமே ஆகமங்களில் லிங்கம் என்ற சொல்லுக்குப் பொருளாகும்.

லிங்க ஆகார விவரணம் : லிங்கத்தை ஸ்ருஷ்டி ஸ்திதி லயாத்மகமாகவும், ஜகன்மாதாபிதாக்களின் வடிவாயும் எண்ணுதல் வேண்டும். எனவே தான் இவ்வடிவம் உற்பத்தி மற்றும் ஒடுக்கத்திற்கு மூலகாரணமாகிறது. பஞ்சகிருத்யங்களுக்கு ஏற்ப பஞ்சசாதாக்ய பாவனை அவசியமாகிறது. படைத்தலின் பொருட்டு சிவசக்தி இணைந்ததாக மனதால் பாவித்தல் முறை.

லிங்கம் சிவஇதிஞேயம் பீடம்சக்தி ருதாஹ்ருதாI
யோநிலிங்க ப்ரகாரேண ஜகத் சிருஷ்டியர்த்தகாரணம் II
இத்தம் ஸதாசிவம் ரூபம் லிங்கபீட ஸமன்விதம் I
தத் ஸாதாக்யப்ரபாவஸ்து வர்ணிதம் நைவசக்ய்தேII

இத்தகைய சாதாக்ய மஹிமை அளப்பரியதாகும். பலவாறு பாவனை செய்யத்தக்கதான ஓரேவடிவம் லிங்க ஆகாரமாகும். செயல்படவேண்டுமாயின் சரீரம் தேவையாகிறது. சரீரம் எனில் உருவம் அமைகிறது. அவ்வாறு மானுஷ சிவலிங்கத்தில் கோடுகள்மூலம் ப்ரம்ம சூத்ரஅமைப்பால் உறுப்புகளை பாவிக்கலாம். லிங்கத்தின் அடிப்குதியே சரணமாயும் (பாதம்) லிங்கத்தின் முனையே முகமாகவும், பூஜாம் சமையப்ரம்ம சூத்திரத்தின் இருபக்கங்களும் நான்கு கைகளின்பகுதிகளும், சூத்திரத்தின் முடிவுப்பகுதி பின்புற புட்டமாயும், திவ்யமான மகேச்வர ரூபத்தை நான்கு கையுடன் பாவித்து, பிரம்மா முதலான தேவர்கள் யாவரும் ,அந்தந்த பகுதியிலிருந்து வெளிவந்ததாக மகுடாகமம் விளக்கி உள்ளது.

லிங்கரூபவிசேஷம்து சுருணுஷ்வேவம் மஹேச்வரI
லிங்கமூலம்து சரணௌ லிங்காக்ரம் முகமுச்யதேI
சூத்ரபார்ச்வௌ சதுர்பாகுர் சூத்ராந்தம்பிருஷ்டமுச்யதே II (மகுடாகமம்)

அதன்படி சிவனது படைப்புமுறையானது வலதுதோளிலிருந்து படைத்தலுக்கு பிரம்மாவும், இடதுதோளிலிருந்து காத்தலுக்கு விஷ்ணுவும், மூக்கிலிருந்து வாயுவும், காதிலிருந்து 10 திசைகளும்,

கைத்தலத்திலிருந்து கணேசரும், இதயத்திலிருந்து ஷண்முகரும், தொப்புளிலிருந்து பாஸ்கரரும், பின்பகுதியிலிருந்து இந்திரனும், கண்ணிலிருந்து அக்னியும், இடதுகண்ணிலிருந்து சந்திரனும், மார்பிலிருந்து யக்ஷர்களும், தேவர்களும், வலதுகண்ணிலிருந்து ருத்ரரும், கைமுனையிலிருந்து ஆயுதங்களும், நகங்களிலிருந்து சந்தியா தேவதைகளும், துடையிலிருந்து நாகங்களும், முழங்காலில் இருந்து ரிஷிகளும், பாதங்களில் இருந்து ஸகலதேவர்களும் சிவாகமங்களும் முறையே வெளிப்படுகின்றன, பின்பு அவையாவும் அதே இடத்தில் அவ்வாறே ஒடுங்குகின்றன. லிங்கத்தின் நடுவே ஸாதாக்ய பாவனையும், ஒடுக்க காலத்தில் சம்ஹாரகாலத்தின் லிங்கதாண்டவத்தையும் தியானித்து பஞ்சகிருத்யம், பஞ்சசாதாக்யம், பஞ்சதாண்டவம்ஆகிய பாவனைகளால், லிங்கமே தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணம் என்பதை சிவாகமங்கள் கூறியும் உள்ளதால் தெளிவுபெறலாம்.

லிங்கவகையில் ஸ்தாவரலிங்கம் : - சிவலிங்கமானது சலமென்றும், அசலமென்றும் இருவகை. சலம் என்பது அசைக்கத்தக்கது.அசலம் என்பது அசைக்கக்கூடாதது. இறை முறையே சலலிங்கமானது சரலிங்கம், ஜங்கமலிங்கம் எனப்படும் அசலலிங்கமானது அசரலிங்கம் அல்லது ஸ்தாவரலிங்கம் துருவலிங்கம் ஸ்திரலிங்கம் என பெயர் பெறும்.

லிங்கம்து த்விவதம் ப்ரோக்தம் சலா சல விபேதத: I
ஸ்தாவரம் ஜங்கமம் சைவ த்விவிதம் லிங்கமுச்யதே II (சிவாகமங்கள்)

இவற்றுள் உருவமாய் உள்ள நடேசர்தக்ஷிணேசர், உமேசர்முதலான மாஹேச்வர மூர்த்திகளும், பூஜை செய்யும் அர்ச்சகரும் ஜங்கமலிங்கம் எனப்படுவர். துருவலிங்கம், மூலலிங்கம் எனப்படுவதாக கோயில்களில் மூலஸ்தான கருவறை எனும் தேவமண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள, சிவலிங்கமே ஸ்தாவரலிங்கம் எனப்படும். தற்காலிக க்ஷணிகலிங்கத்தைவிட சலலிங்கம் விசேஷம். அனைத்தையும்விட ஸ்தாவரலிங்கமேவிசேஷமானதாகும். இது சிஷ்டலிங்கம், மானுஷலிங்கம் என இருவகை. மனிதனால் செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட லிங்கமானது மானுஷலிங்கம் எனப்படும். மற்ற சிறப்பு லிங்கவகைகள்,யாவும் சிஷ்டலிங்கவகையாகும். கோயிலில்காணப்படும் சிவலிங்கங்கள் யாவும் எட்டு வகையாகும். அவை 1.ஸ்வயும்பு, 2.தைவிகம், 3.தீய்வம், 4.காணவம், 5.ஆர்ஷகம், 6.ராக்ஷஸம், 7.பாணலிங்கம், 8.மானுஷலிங்கம் என்பனவாகும். மானுஷலிங்கத்தில் தவறாமல் பூஜாம்சத்தில்ப்ரம்மசூத்ரம் என்கிற கோடு பதிவு செய்யப்பட்டிருக்கும். மற்றதில் இருக்கலாம், இல்லாமலும் அமையலாம். எந்தலிங்கத்தைப் பூசிப்பதானாலும், முதலில் பஞ்சசுத்திகிரியை முடித்து, பின்பு மானச பூசையை செய்துமுடித்து, பின்பு மனத்து அகத்தே கண்டதையே வெளியில் லிங்கவகைகளில் கருதி பூசிப்பதே முறையாகும். அந்தர்யாகம் புராக்ருத்வா பாஹ்ய பூஜாமதாசரேத். ஜோதிலிங்கம் ஹிருதிஸ்தம யத் ததேவாப் யர்ச்யதே பஹி: II என்கிறது சிவாகமபத்ததி.ஆகவே உலக உயிர்களின் பொதுநலன் கருதி செய்யப்படும் ஆலயபூசையானது மிகஉயர்ந்த பூஜைமுறையாகும்.இது சிவாகமங்களின் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாத பகுதிகளிலும் தேர்ச்சி பெற்றவராலும், பயிறச்சி பெற்றவராலும்,ஆதிசைவ ஆசார்ய அர்ச்சகர்களால் மட்டுமே செய்யத்தக்க சிவயோக நெறியுடன் கூடிய அகக்கலையாக, மனோவாக்காயமுக்கரணங்களால், மந்திரக்கிரியாபாவனைகள் மூன்றையும் செய்யத்தக்க சிவாகமஸாரமுமாகிய உத்தமகிரியையுமாகிய "சிவபூஜை" ஆலயத்தில் மிகச்சிறப்பு உடையதாகும்.

தியான தியாத்ரு த்யேயஸ்வரூபம் : - ஆகம முறையில் ஆலயபூஜையில் சிவலிங்கத்தில் ஆசார்யர் ஆத்மபாவனையால் தாமும் சிவனாகிபின்பு தாமே சிவனை பூசித்தல் வேண்டும். "பஞ்சமந்த்ரதனுர்தேவ": எனும் ஆகம கூற்றால் ஈசானாதி ஐந்துப்ரம்மமந்திரங்களே இறைவனுக்கு வடிவமாகி உடலாக இருப்பதால், அம்மந்திரங்கள் 38 சக்திகளின் கலைகளாக உள்ளதால், இவைற்றை லிங்கத்தில் வைத்து மந்திரித்தலால் லிங்கம் பிம்பாதி தேகம் எதுவாயினும் அது மந்திரமயமேனியாகி "வித்யாதேஹம்" என்ற சிறப்புத் தகுதியைப் பெறுகிறது. எனவே இப்புனித மேனியிலே அப்புனிதரான இறைவன் உறைகிறான். அர்ச்சகர் சிவனாகிய பின்பு சிவனை அவர் அர்ச்சிப்பது எவ்வாறுமுறை? எனில், கொடுப்பவரும், தூய்மையால் சிவனே, ஆகிறார்.அதைப்பெறுபவரும் சுத்தத்தால் சிவம் எனப்படுகிற பரமசிவனே ஆவார். இதனை சிவாகமம் பூஜ்யபூஜகபாவனையால் இருநிலையில் பூசிக்கப்படுபவராயும் பூசிப்பவராயும் சிவனே விளங்குவதாக கூறும். சிவனே தாதா கொடுப்பன் சிவனே போக்தா எடுத்து காப்பவன் மேவது.

பூஜ்யபூஜகபாவேந த்விதா ஸ்திதசிவோகமிதி பாவயேது I என்றும்,

யாவந் ந தத்ஸமோ ஜாதஸ் தாவன் நாராதனே (அ)க்ஷமம் II என்றும் ஆகமபத்ததி கூறுவதால் இறைவனை இலக்குஉருவில் எவ்வகையில், எவ்வாறு தியானித்து, பூஜிக்கப்படுதல்முறையென்று அறிதல் அவசியமாகிறது. இனி அதனை விரிவாகக் காணலம்.

கருத்துரை : "த்யாத்ரு" என்பதால் அர்ச்சிப்பவரான, தியானித்திடும் பூஜகரும், "த்யேயஸ்வரூபம்" என்பதால் சிவலிங்க ஸாதாக்யஸ்வரூபமும் ,தியானம் என்பதால்அச்சாதாக்யத்துள் தியானிக்கப்படும் தேகீ எனப்படும் பரசிவம். பரஞ்சோதி ஆகிய ஆனந்ததாண்டவம் ஒன்றுள் ஒன்றாக பிந்து நாதஜோதிகளில் தியானித்தல் வேண்டும் என்பதையும் சிவாகமம் விளக்கியுள்ளது. இவை மூன்றையும் அகமவிதிமுறைப்படி சிவயோகநெறியில் பயிற்சி செய்து பழகிய, ஞானபாதத்தின் தத்வார்த்த பாவனைகளை மனதால்பாவிக்கும் பயிற்சி பெற்றவராக "தியாதா" எனும் அர்ச்சகர் இருத்தல் அவசியம். "அர்சகஸ் ஸ ஹரஸ் ஸாக்ஷாத்" என்பதால் அர்ச்சகர் பாவனைக்கு ஏற்ப சிவனானவர் விளங்குவார் என்கிறது ஆகமம். ஆதலால் சிவனை முறையே தியானித்து பூஜித்தல் முறையாகும். அவரது விருப்பத்திற்கு ஏற்ப தோன்றுபவர் சிவன். இதனை "யத்பாவம்தத்பவதி" என்றும் சிந்தாமணிரிவேச்வர என்றும் ஆகமம் கூறுகிறது.

சிவலிங்கத்தில் ஸகளஸ்வரூபம் : சிவமானது நிஷ்களம், ஸகளம், ஸகளநிஷ்களம் என மூன்று நிலைகளில் அருளும். இவற்றில் களம் என்றால் அவயவம் உடல் உறுப்பு என்று பொருள். எனவே உருவம் உறுப்புகள் சுட்டிக்காட்டுமாறு உள்ள நிலை "ஸகளநிலை". இது ரூபம், மூர்த்தம், ஸகுனம் எனப் பெயர் பெறும். உருவம் உறுப்பு இல்லாதது, "நிஷ்களநிலை". இது அரூபம், அமூர்த்தம், நிர்குணம் எனப் பெயர்பெறும். நம் கண்ணுக்குத் தெரிகிற ஒரு உருவத்துள், வேறு உருவில் எண்ணி வழிபடும் வகையில் தெரிவதும், தெரியாததுமாக, உருவமும், அருவமும் கலந்து இருத்தலால், சிவலிங்கம், கும்பம் சூலம் முதலானவை "ஸகளநிஷ்களம்" எனும் நிலையாம். இதுவே ரூபாரூபம், மூர்த்தாமூர்த்தம், குணாகுணம், குணாகுணஸ்வரூபஸ்தம் எனக்குறிப்பிடப்படும். இவ்வகையாக சிவலிங்கம் மூவகையாகவும், உரிய முறையில் பாவனை செய்து பூசிக்கத்தக்கது. எனவே சிவலிங்கத்திருமேனிக்கு "பாவாகாரம்" என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இச்சிவலிங்கம் ஸகளநிஷ்களமாய் உள்ள பொழுதில் இதில் ஸகளம் என்பது

எவ்வகையில் கருதத்தக்கது? எனில், லிங்கமானது சிவனாக ஆண்வடிவமாகவும், லிங்கபீடமானது சக்தியாக பெண்வடிவமாகவும் கருதி பூசிக்கத்தக்கது. இவற்றுள் லிங்கமும், பீடமும் நிஷ்களமாகவும், சக்தியும், சிவனும் ஸகளமாயும் தியானிக்கப்படவேண்டும். லிங்கத்திலிருந்தும், பீடத்திலிருந்தும், சிவனும் சக்தியும் வெளிப்பட்டுத் தோன்றுவர். கலைகள் அற்றது நிஷ்கள வடிவம். கலைகளுடன் கூடியது ஸகள வடிவம்., சன்யாசிகள் பிரம்மஞானியர், மந்த்ரிகள், ஞானியர், யோகிகள் இவர்களின் தியானத்திற்காகவும், பூஜையை ஏற்பதன் காரணமாகவும், சிவலிங்கமாகிற, ஸகளநிஷ்களமாகிய சிவலிங்கம் பாவாகாரமாக அறியத்தக்கது. இறைவனை சிவலிங்க வடிவில் மட்டுமே வழிபட வேண்டும். இதனை "பூஜ்யஸ்சிவலிங்கமத்யே" என்கிறது ஆகமம்.தெள்ளந்தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்" என்பார் திருமூலர். யோகியரானாலும், ஞானியரானாலும் அவரவர்களின் முறையில் அகப்பூசையில் சிவலிங்கத்து வடிவபாவனையை தமது இலக்காக்கி வழிபடுவதே ஆகமவிதிமுறையாகும். இதனை மகுடாகம வசனத்தால் நன்கு உணரலாம்.

லிங்கம்து பும்ஸ்துவ மேவம் ஸ்யாத் பீடம் ஸ்திரீ தத்வமேவச I
நிஷ்களௌ லிங்கபீடௌச ஸகளௌ சக்தி சாம்பவௌ II
நிஷகளாது கலாஹீநா ஸகளாது கலான்விதா I
யதீநாம் மந்த்ரிணாம் சைவ ஞானிநாம் சைவ யோகிநாம் I
தியான பூஜா நிமித்தார்த்தம் ஸ்மிருதம் ஸகலநிஷ்களம் I
லிங்கபீட ப்ரகாரேண தேவேசம் பூஜயேத் ஸதா I
ஏவம் சாக்தம் வ புக் கல்ப்ய தஸ்மின் பரமகாரணம் II (மகுடாகமம்)

<u>மூலலிங்கமும் முப்பால்வடிவமும் : -</u> சிவலிங்கத்தில் பூஜாம்சம் எனப்படுகிற தெரிகிற பாணமாகிற லிங்கப்பகுதியானது ஆணாகவும், ஜலம்விழும் பகுதியானகோமுகை எனப்படுவது (பிண்டிகை) பெண்ணாகவும், ஆதாரபீடம் அலியெனும் ஒன்றன்பாலாகவும், ஸ்திரீ பும் நபும்ஸகம் என்னும் முப்பாலும் கொண்டுள்ள முப்பகுதியை உடையது சிவலிங்கவடிவம் ஆகும். மேலும் சதுரவடிவ பீடமுள்ளது, நின்றது. என்றும் வட்டவடிவ பீடமுள்ளது அமர்ந்தது, என்றும் எட்டு பட்டைகள் உடையது படுத்தது சயனித்தது என்றும் உடல்களின் நிலைகளும் கூறப்படுகின்றன. மானுட உடலின் உறுப்புப்பகுதிகளாக லிங்கத்தின் பீட வடிவப்பகுதிகள் லிங்க பீடவர்கத்தில் முறையே கூறப்படுகின்றன.அவை உபானம் பாதுகையாகவும், ஜகதீ முழங்காலாகவும், குமுதவர்கம் வயிராகவும், கம்பவர்கம் கைகளாகவும், கண்டவர்கம் கழுத்தாகவும், அதரபட்டீ அதரமாகிய கீழ் உதடாகவும், மஹா-பட்டீவர்கம் நெற்றியாகவும், நெய்நீர் முதலியன வழிந்தோடும் பிண்டிகைவரை கேசாந்தபகுதியும்,லிங்கத்தில் மனதால் பாவிக்கத்தக்கது. அமர்ந்ததாயும், நாட்டியமாடுவதாயும், நிற்பதாயும், தூங்குவதாயும், இவ்விதமாக பலநிலைகளில் அவ்வப்பொழுது லிங்கத்துள் சிவனது திருமேனி விளங்கும். ஆயினும் பூஜை செய்திடும் பொழுது மட்டும் சுகாஸனத்தில் அமர்ந்திருப்பவராயும், மற்றய காலங்களில் முன்கூறியவற்றில் ஒரு நிலையில் அவரது விருப்பப்படியும் சிவஸ்வரூபம் இடம் பெற்று இருப்பதாக சிவலிங்கத்தில் சிவஸ்வரூம் பாவனை செய்யத்தக்கதாக சிவாகமம் கூறுகிறது. மேலும் விமானம் ஸ்தூலலிங்கத் திருமேனியாயும், மூலாலயத்து சிவலிங்கம் சூட்சுமலிங்கத் திருமேனியாயும், அதனுள்ளே கற்பிக்கப்படும் பஞ்சமந்திர மயமேனியானது காரணதேஹமாயும், சதாசிவரூம் வித்யாதேஹமாயும், நால்வகை சரீரங்கள், ஸ்தூல, சூட்சும, காரண, பர சரீரங்களாக பாவித்து, பகுத்து உணரத்தக்கவை. இவ்விதம் லிங்கம், பீடம் எனும் ஸகளநிஷ்களத்தினுள்சிவனையும் சக்தியையும் ஸகளநிலையில் மனதால் கருதி வழிபடுவது முறை.

லிங்க ஸகளத்தில் நிஷ்கள சிவம் : - ஸகலவிதமான மனோதத்துவ பாவனைகளுக்கும் ஒரே உறைவிடமாகத் திகழும் தனிப்பெறும் சிறப்பு பெற்றது பாவனாகிருதியான சிவலிங்கம்ஆகும். இது ஸகள நிஷ்கள வடிவாய் இருப்பினும், அதனுள் இறைவன் பஞ்சசாதாக்ய ஸ்வரூபங்களில், ஸதாசிவராகவும், மஹா ஸதாசிவராகவும், மேலும் பிரம்மா, விஷ்ணு, ருத்ரர், ஈச்வரர், சதாசிவர் ஆகிய ஐந்து தொழிலதிபர்களாக ஐவரும், ஐந்து அம்சங்களிலும் அதனுள் உருவமாக ஸகள வடிவாய் தியானித்து, பூசிக்கத்தக்கவர்கள். இவர்களில் சதாசிவரின் ஐந்துதலை மற்றும் பத்துகரங்களுடன் கூடிய சகளத்திருமேனியின் உள்ளே "சிவம்" எனப்படுவது நாதரூபமாய், ஜீவரூபமாய், நிஷ்களமாயும்,அச்சிவத்துள்ளேயும் ஆனந்தமயமாய் என்கின்றன. பரம்ஜோதியாய், சித்ஸபேசர் நிஷ்களத்துள்ளும் அதிசூட்சும நிஷ்களமாயும், பராபரமாய் நிற்பதாய் சிவயோக பாவனா முறையில் தியானித்து பூசித்தல் முறை.

ஞானஞேய பாவநா விதி: தேவர்கள் எப்பொழுதும் ஊனக்கண்ணிற்குப் பிரத்யக்ஷ நிலையில் புலப்படாதவாறு எப்பொழுதும் கண்களுக்கு அப்பாற்பட்டு பரோக்ஷமாக மறைந்திருப்பதையே விரும்புபவர்கள் என்பதனை "பரோக்ஷப் பிரியாஹி வஹி தேவா:" எனவேதம் கூறியுள்ளது. எனவே சிவாகமங்கள் ஊனக்கண்ணிற்குப் புலப்படாத பரம்பொருளை, ஞானக்கண் கொண்டே காணமுடியும். சிவஞானமே ஞானமாகும், மற்றவை பசுஞானமாகிற சாதாரண அறிவாகும். பதியை அறிவிப்பதே ஞானம், ஞானத்தால் அறியப்படுதலால் அப்பரம்பொருளே ஞேயம் எனப்படுகிறது. ஊனக்கண்ணால் அதாவது பசுவாக, பாசஸ மூகத்தோடு உள்ள உயிரினங்களில் உடலிந்திரியமாகிற மாசு உடையோரின் கண்ணுக்கு மாசுஇல்லாத பரசிவஸ்வரூபம் தெரியாது. அவ்வாறு மாசுடைய சாதாரண மனிதர் முதலான உயிரினங்களுக்குத் தெரியுமேயானால், அவ்வருவம் உயிரற்றதும் அழியக்கூடியதும் நிலையற்றதும் பரிமாண மாற்றம்பெறக்கூடியதாகவே இருக்கும். இறைவனுடைய திருவுருவத்திற்கு ஜடத்தன்மை இல்லாததால் அது ஜடத்திற்குப் புலப்படுவதில்லை. இறைவடிவம் சித்தானபடியால் ஞானத்தினால், அனுபவத்தினால் அறியத்தக்காக உள்ளது. உலகில் காணப்படாதவற்றை இல்லை என்றும்,அது இல்லாததே என்றும் அறிவற்றோர் கூறுவர். அவர்களும் கூட தமது உடலுள் உறைந்து வேறாய் உள்ள உயிரை ஏற்றே ஆக வேண்டும். இதனை சிவஞான போதம் நன்கு தெளிவுபடுத்தி உள்ளது ஒரு சூத்திரத்தில் அதாவது,

அதிருச்யம் சேத்அஸத்பாவ: திருச்யம்சேத் ஜடிமாபவேத் I

சம்போஸ் தத் வியதிரேகேண ஞேயம் ரூபம் விதுர் புதா : II என்கிறது.

எனவே, கடவுளின் இல்லாமையைப்போக்கிடவும், இருப்பதனைக்கண்டு பூசித்திடவும், சிவயோக நெறியில் மானுடப்பிறவியின் மனோபாவனையை சிவாகமங்கள் தெளிவுபடுத்தி விளக்குகின்றன. அதாவது ஒரு கல்லாலான லிங்கத்தில் அல்லது சிலையில் பூசையை செய்திடும் தருணத்தில் அந்தலிங்காதிவடிவத்தை ஜடத்தன்மையற்றதாக எப்படி பாவிப்பது? அவ்வடிவத்துள் சிவத்தை அதாவது ஞேயமாகிய சச்சிதானந்த பரபிரம்மத்தை நாம் எப்படிக் காண்பது? என்பது இங்கு மிகப்பெரிய தேவையான வியக்கத்தக்க வினாவாக யாவருக்கும் எழுவது இயற்கையே. கண்ணில் தெரிகிற ஒரு பொருளாலான ஒரு உருவமாகிற லிங்கம், பிம்பம் முதலானவற்றில் அதனை அப்பொருளின் தன்மை மற்றும் இயல்புக்கு மாறாக கண்ணுக்குத் தெரியாத ஞானமயபரப்பிரம்மமாக அதனை மனதால் கருதி பாவித்திடவேண்டும் என்பது சிந்தித்துப்பார்த்தால் யாவருக்கும் எளிதானது அல்ல என்பது விளங்கும். எனவே இத்தகைய

மனோபாவனையை நாம் பெறுவதற்கு ஒரு வழிமுறையும் குருமுகப்பயிற்சியும் இன்றியமையாததாகிறது.

உரிய வழிமுறையில், உரியவகையில், உள்ளத்தில் பாவனைசெய்து, பலமுறை வெகுகாலமாக பயிற்சி செய்து, பக்திரஸத்தில் லயித்தால் மட்டுமே, இது ஸாத்யமாக கைக்கூடும் என்பது உறுதி. பலரின் முன்பாகவும் பலவகை சூழ்நிலையிலும், ஆடும் பரதநாட்டியக் கலைஞருக்கு மட்டில் அவரதுமனோபாவமும், அங்க அபிநயமும், எவ்வாறு ஸாத்யமாகிறதோ, அவ்வாறே பூஜையின் பொழுது பயிற்சி பெற்றஅர்ச்சகருக்கு மட்டுமே இது ஸாத்யமாகும். இல்லையேல் வீணாண காட்சியே ஆகும் என்கிறது ஆகமம். இத்தகைய மனோபாவனையைப் பெற்றிடும் வழிமுறை பற்றி, சில எடுத்துக்காட்டுகளால் அறிய முயல்வோம். அதாவது காரியம் எனப்படும் மண்குடம், அல்லது கைத்தறித்துணி,அல்லது கைவேலைச்சிற்பம் முதலிய ஏதெனும் ஒரு செய்யப்பட்ட பொருளில் காரணம் எனப்படுகிற, அக்காரியத்திற்கு மூலப்பொருளாக இருந்த, முறையே மண், பருத்திநூல், கல் முதலானற்றின் தன்மையான மண்ணின் தன்மை குடத்திற்கும், வெண்மை மற்றும் மென்மை முதலான நூலின் தன்மை கைத்தறித் துணிக்கும், கடினம் முதலிய கல்லின் தன்மை கற்சிலைக்கும் முறையே காரணத்தன்மையாக வருகின்றது. இது யாவருக்கும் கண்கூடானது. அவ்வாறு காரணத்தில் காரியத்தன்மை வருவதில்லை.ஆதலால் இந்த எடுத்துக் காட்டினைப்போலவே இங்கு தார்ஷ்டாந்தத்திலும், சத்தியஞானாதிவடிவப் பிரமத்திற்கும், காரணத்தன்மை வருகின்றது. பிரம்மத்தில் ஆகாசாதி காரியத்தன்மையில்லை. ஆதலால் பரமார்த்தமாக ஆகாசாதிகள் (பஞ்சபூதங்கள்) இல்லாததாகவே பிரம்மத்திற்குக் காரணத்தன்மையுமில்லை என்பது பொருளாகும். ஆதலால் இவ்விசாரத்தினால் காரியத்தன்மை இல்லாததாக ஆவதால் காரணத்தன்மை பொய்யாகின்றது. இதனைச் சிவாகமம் "உதஸ்ருஸ்ய ப்ராகிருதம்பாவம் சிவோஹமிதி பாவயேத்I" என்றுகூறி பூஜகனுக்கு ஆத்மபாவனையில் கூறுவது போன்றே. பூசை செயலிலும் லிங்காகாரோ பமர்தேந பாவநே லிங்கதாம் த்யஜேத்" என்கிறது. மேலும் "ஞானேன ஞேயமாலோக்ய ஞானம் தத்பரிவர்ஜயேத்" என்று பாவிக்கும் முறையைக் கூறுகிறது. அவ்வாறே இறைவனை ஆவாஹணம் செய்யும்தருணத்தில், ஆகமநெறியில் ஆவாஹனவிதிமுறையான ஜீவநியாஸ விதிமுறையில் கூறப்படுவதாலும் நன்கு அறியலாம். அதாவது "ப்ராணப்ப்ரகிருதி யோகம் து ஞாத்வா ஸ்தாபன மாசரேத்.I வழிபாட்டில் உருவம், மூலப்பிரகிருதியும், மூலமந்திரம் பிராணனாகிய ஜீவனும் ஆகும். இது பிரகிருதி என்ற தத்துவமல்ல.இது மூலகாரணமானமாகும் இதனையே

கார்யே ஹிகாரணம் பச்யேத் பச்சாத் கார்யம் விஸர்ஜயேத் I

காரணத்வம் ததோ கச்சேத் அவசிஷ்டம் பவேந் முனி II என்கிறது ஆதிசங்கரரின பரோக்ஷானுபூதி எனும் நூல்.

இவ்வாறு பின்னர் காரியகாரணத் தன்மையின் நீக்கத்தில்தான், பூஜகன் வாக்கிற்கு எட்டாத பரிசுத்த வஸ்து (பிரம்மம்) எதுவோ அதுவாகின்றான். மண்குட எடுத்துக்காட்டினால் வேற்றுமை தோன்றாத வண்ணம் அடிக்கடி காணவேண்டும். இது சிவஞானஸாதன மற்றும் சிவதியானஸாதனப் பயிற்சியாகும் என்றறியலாம். இவ்விதத்தினால் மனதின்பாவனா விருத்தி பிரம்ம வடிவமாகின்றது. அதன்பின்பு சுத்த சித்தமுள்ளவர்க்குப் பிரம்மஆகார விருத்தி ஞானம் உதிக்கிறது. பிரம்மஸ்வருபம் என்பது தேஜோருபாதிகள்.

பாவிதம் தீவ்ரவேகேன யத்வஸ்து நிச்சயாத்மநா I

புமான்தத்ஹிபவேத் சீக்ரம் ஞேயம் ப்ரமர கீடவத் II என்பதால்

இவ்வாறு கார்யகாரண நிர்முக்தனாக ஆவதாக பரோக்ஷானுபூதி கூறுகிறது.

அதாவது உலகில் மனிதஇயல்பில், மனிதன் முதலில், காரணத்தை காரியமற்றதாக விசாரிக்க வேண்டும். மீண்டும் அக்காரணத்தைப் பொருத்திப் பார்த்து (அன்வயத்தால்) காரியத்திலும், நித்தியமாகக் காண்கிறான். அல்லது முதலில் காரியத்தில்காரணத்தைப் பார்த்துப் பின்னர் காரியத்தை நீக்கிவிடுக. இவ்வாறு காரியத்தை விடுவதால் காரணத்தன்மை தானே போய்விடுகிறது. இவ்வாறு கார்யகாரண தன்மைவிலகி விடுவதால் சச்சின்மாத்ரமாகிறது. மனிதன் அப்போது முனிவன் எனும் மனன சீலனாகிறான். இவ்வாறே கற்சிலையானது பூஜகனின் பாவனையில் சத்சித்மாத்ரமாகிய, பிரம்மஸ்வரூபமாகியே தோன்றுகிறது. எனவே "யத்பாவம் தத்பவதி" என்றும், "பாவயேத சின்மயம் விபும்" என்றும், "சிந்தாமணிரிவேச்வரர" என்றும் சிவாகமங்கள் லிங்கபாவணா விதி முறையை விளக்கி நாம் அச்சிவனைக் காணவும், தொடவும், பூசிக்கவும், தகுதி பெறும் உபாயத்தையும், முறையையும், தேவையையும் நமக்கு விளக்குகின்றன. சுத்ததன்மையே சிவம் எனப்படும். சுத்ததத்வாத்வ அத்வாக்களையும் கடந்தநிலையே இங்கு பரமசுத்தமெனக் கொள்ளத்தக்கது. இதனை பிராஸாத மந்திரோச்சாரண காலபாவனையில் ஷட்குண்யங்களுக்கும் அப்பால் பாவக்ஷயம அடைந்ததாய் சுத்தமாக விளங்குவதே சிவம் என்று பாவிக்க வேண்டும்.

<u>ஞானஸாதன ஸத்பாவனாவிருத்தி :</u> சிவபூஜையால் ஞானம் ஏற்படும். ஞானமே மோக்ஷம் தரும். ஞானமளிப்பதாலேயே சிவபூஜை அனைத்தைக்காட்டிலும் சிறப்புடையது. சிவபூசை எனும் கிரியையானது எவ்வாறு மிகப்பெரிய அரிய பயனைத்தருவதாக ஆகிறது? எனில், அதற்கு அர்ச்சகரின் மனோபாவனையே மூலகாரணம் ஆகும். மனம் வழிச்செல்லாமல் மனத்தை விரும்பும் வழியில் செலுத்தவல்லவனே மனிதனாவான். பலரும் இதனை செய்ய முயல்வதில்லை. யோகியரும்,ஞானியரும் செய்கிறார்கள். ஒரு மனிதனின் மனோவிருத்தியே (தொழில் / செயல் / மனோபாவனை) அவனுடைய பந்தம், மோக்ஷம் அவ்வாறே சுகம், துக்கம் இரண்டுக்கும் காரணமாக விளங்குகிறது. எனவே "மனத்துக்கண் மாசிலன் ஆதல்" எனும் திருவள்ளுவர் வாக்கின்படி மாசற்ற மனமுடையவானக சிவமனோபாவனை உடையவனாக இருத்தல் அவசியமாகிறது. யோகமாரக்கம், ஞானமாரக்கம் இரண்டிற்கும் மனோலயமே மிக முக்கியமாகும். மனமும், ஆன்மாவும் சேர்ந்தே பயிற்சி மேற்கொள்கிறது. முடிவில் மனதையும் தாண்டி ஆன்மா சென்று சிவத்தை அடைகிறது.

<u>மனத்தூய்மையும், மனோபாவனையும்:-</u> மன ஏவமனுஷ்யானாம் காரணம் பந்தமோக்ஷயோ:[
என்ற வசனத்திற்கு ஏற்ப மூலகாரணமாகத் திகழும் மனப்போக்கானது தூயநெறியில் சென்று தூயவனான சிவனைச் சேர்ந்திடச் செய்தலே நன்நெறியாகும். எனவே மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைவருக்கும் அவசியம். இதனை சிவாகமம் சௌசவிதியில் நாம் உள்ளும் புறமும் எவ்வளவுதான் தூய்மையாக வைத்திருப்பினும் மனத்தூய்மை ஏற்படாதவரை நமக்கு சுத்தி இல்லை என்று உறுதிபட "யாவத்துமனஸஸ்சுத்தி ஸ்தாவத் சுத்திருதீரிதா" என்று தெரிவித்துள்ளது. ஸ்ரீமத்வாதுளாகமம் "சுத்தத்வாத் சிவமுத்திஷ்டம்" என்றும், மகுடாகமம் "சுத்தத்வாத் சிவமித்யுக்தம்" என்றும் கூறி சுத்தமே சிவமாகும் என உறுதிபட விளக்குகின்றன. எனவே சுத்தமானால் மட்டுமே சிவத்தைக்காணவும், தொடவும், கூடவும் இயலுமென்பதே சித்தாந்த முடிவாம். எனவே பூஜாகிரியைகளுள் முதலாவதான ஆத்மசுத்தியால் சுத்தபாவனையை ஆன்மா பெறுகிறது. இவ்வாறு பரிசுத்தமாகிய ஜீவாத்மா, விமலராகிய சிவத்தை பாவித்தலால் மட்டுமே ,அதற்கு நிகராகி, தத்ஸமமாகி, சிவோஹம என்று அதாவது சிவனேநான்

என்ற பாவனையால் கீடபிரமரநியாயத்தால் தியானித்த தியேயரூபமாகவே த்யாத்ருரூபத்தை அடைகிறான் என்கிறது சிவாகமம். இதனை யாவன்நதத்ஸமோதாத: தாவன் ந ஆராதனேசக்ஷம:I எனக்கூறி தத்ஸமமாக ஆகாதவரை பூஜை செய்திட தகுதியற்றவன் எனக்கூறி இதன் அவசியத்தை உறுதிப்படுத்துகிறது ஆகமம்.

சிவலிங்காதிகளில் லிங்கபாவனை நீங்கப்பெற்றபின், அது சிவனே என்ற மனோபாவனா விருத்தியினால் பாவத்வம் எனப்படுகிற தன்மயத்வமாகிற சிவத்தன்மையை, அத்திருவுருவம் அதாவது அந்த லிங்கவடிவம் சிவனாகவே ஆகிவிடுகிறது. அதனை வெறும் கல்சிலை என்று கருதினால் அதுசிலையே, அதையே தெய்வம் என்று கருதினால் அதுவே தெய்வமாகத் திகழ்கிறது. எப்படி எண்ணி பாவிக்கப்படுகிறதோ அப்படியாகவே அது மாறிமாறித்தெரியும். எனவே தான் சிந்தித்தவாறே தோற்றமளித்திடும் சிந்தாமணி எனும் ரத்தினக்கல்லைப் போன்றது சிவம். என்பதனையே "யத்பாவம் தத்பவதி" என்கிறது சிவாகமம்.

யேந யேந ஹி ரூபேண ஸாதகஸ்: ஸம்ஸ்மரேத் ஸதா I
தஸ்ய தன்மயதாம் யாதி சிந்தாமணி ரிவேச்வர: II (பூர்வகாமிகமம் படலம் 4)

உலகில், அங்கு அதில் ஒன்றுமே இல்லை, என்ற அபாவவிருத்தி எனும் சூன்யவிருத்தியினால் சூன்யத்துவம் எனப்படும, இல்லாமை ஜடத்தன்மை உண்டாவது உலகப் பிரசித்தம். அதுபோலவே பிரம்மவிருத்தியினால் பூரணத்துவம் (முழுமை) உண்டாவது ஞானிகளிடத்தில் பிரசித்தம். ஆதலால் ஸத்பாவனைகளால் (இவ்விடத்தில் விருத்தி என்பது மனபாவனைச் செயல் என்று பொருள்). பூரணத்தன்மையைப் பெற அப்யசிக்க (பயிற்சி செய்ய) வேண்டும். இதனை பிரம்மஞானத்தின் அனுபூதி பற்றி பேசுகிறஅபரோக்ஷாநுபூதி எனும் நூல் விளக்குகிறது.

பாவவிருத்யா ஹி பாவத்துவம் சூந்யவிருத்யாஹி சூந்யதா I
பிரம்மவிருத்யாஹி பூர்ணத்வம் ததாபூர்ணத்வமப்யஸேத் II

இத்தகைய ஸத்பாவனா விருத்தியானது ஞானஸாதனம் மட்டுமோகாமல் சிவயோக தியான ஸாதனமுமாய் விளங்குவதையுமுணர்தல் நன்று.

எவர்கள் தனக்குள்ளே, ஜோதிர்லிங்கத்தில், இதயகமலத்தில், ஜீவனாகிற ஹம்ஸத்தில் பரப்ப்ரம்மத்தைத் தியானித்து ஸத்பாவனா விருத்தியைப் பயின்று அறிகின்றார்களோ அவ்வாறு அறிந்து எவர்கள் மேம்படச் செய்கின்றார்களோ, அவர்களே ஸத்புருஷர்கள், தன்யர்கள், மூவுலகிலும் பூஜிக்கப்படுபவர்கள். இவர்களே பிரம்மவாதிகள் ஆவர். இதனையே வேதம் பிரம்மவாதிகள் இறைவனை அனுபவிக்கின்றனர் என்கிறது ஆகமம். சிவபோகத்தை நித்யானந்தத்தை அனுபவிக்கின்றனர் என்கிறது. "ஸோச்னுதே ஸர்வாந் காமான்ஸஹ, பிரம்மணா விபச்சித்ஏதி" "பிரம்மவாதிநோவதந்தி" என்கிறது வேதம். நித்யானந்தாப்திலீன: பரசுகதயாலக்ஷ்யவான் சைவயோகீ "என்பர் ஆகமஅறிஞர்கள். பிரம்மாதி தேவர்களும், சனகாதி முனிவர்களும், சுகர் முதலான ரிஷிகளும் எப்பொழுதும் பிரம்மமயமான விருத்தியோடு இருப்பவர்கள், அப்யாஸத்தாலேயே இது சாத்தியமாயிற்கு. அதற்கு முயற்சி தேவை. அதுபோல் ஒரு சிவாசார்யர் அகமும், புறமும் பரஞ்சோதியை பிரம்மமாகக் கண்டுலயிக்கவும், வெளிப்புற ஒலிஒளி உணர்வுகளுக்கு இடம்கொடுக்காமல் அதற்கு ஆட்படாமல் ஆவாஹன காலத்தில் இலக்கு உருவத்தில் லிங்கபாவனையை விலக்கி, அச்சிவலிங்கத்தை பூஜ்ஸ்ரீபரமகுருவான ஸதாசிவமே என்று பாவிக்கவும் பயிற்சிசெய்து, சித்தி பெற்றிடல் வேண்டும்.

சிவலிங்கத்தில் ஸதாசிவம் : - இறைவனது நிலை சூட்சுமம் என்றும், ஸ்தூலமென்றும் இருவகை. ஸ்தூலம் கண்ணுக்குத் தெரியக்கூடியது. சூட்சுமம் கண்ணுக்குத் தெரியாதது, அதேசமயம் மறுக்கமுடியாதது. இதனை சிவாகமம் ஆலயத்தை ஸ்தூலலிங்கம், ஷடத்வகலாரூபம் என்றும், சிவலிங்கத்தை பஞ்சமந்திரசூட்சும ரூபம் என்றும் கூறுகிறது. விறகில் தீ போலும், தயிரில் நெய் போலும், இறைவன் ஸ்தூலமாய் வெளிபடாத நிலையிலும், வெளிப்பட்ட நிலையில் பரோசக்ஷமாய் மலரில் மணம் போலவும், இரும்பில் வலிமை போலவும், இறைவன் மறைந்தும், நிறைந்தும் இருப்பதாக சிவாகமங்கள் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகின்றன.

காஷ்டமத்யே யதா வன்னிர் ததி மத்யே யதாகிருதம் I

புஷ்பமத்யே யதா கந்தம் லிங்கமத்யே ஸதாசிவ: II காமிகம் பட 4

ஸகளமும் நிஷ்களமும் : அவயவங்களோடு கூடியது ஸகளம். அவயவமற்றது. நிஷ்களம் என அறியத்தக்கது. உடல் ஸகளம் என்றும், உயிர் நிஷ்களம் என்றும் உணரலாம். இவ்வாறே சிவலிங்கத்திருமேனி 38 கலைகளோடு கூடிய ஈசானாதி ஐந்து மந்திரவடிவமாகி சக்தியமயமாய் விளங்கும் திருமேனியே ஸதாசிவம் எனப்படும். இது ஸகளம் ஆகும். இதனுள் உயிர் போன்று ஜீவனாக ப்ராஸாதமாக, மூலமாக விளங்குவது சிவம் ஆகும். இது நிஷ்களம் ஆகும். தர்மம் ஸதாசிவம், என்றும் அதன் தர்மி சிவம் என்றும் அறியத்தக்கது ஆகும். இதனை சோமசம்பு பத்ததி சிவாசார்யரும் தெளிவாக குறிப்பிட்டு உள்ளார்.

அஷ்ட த்ரிம்சத் கலோபேதோ வ்யக்தமூர்திஸ் ஸதாசிவ: I

ஸகளஸ்து பவேத்ஏவம் அன்யதா நிஷ்களச் சிவ: II (ஸோமசம்பு பத்ததி).

சிவலிங்கமாகிற ஸகளத்தினுள் நிஷ்களமாகிற சிவமானது பூஜையில் ஆவாஹனத்தின் போது வெளிப்படுத்தப்படுகிறது, இங்கு உண்டாக்கப்படுவதோ, மாற்றப்படுவதோ இல்லை என அறியவும்.

சிவலிங்க பாவனாமுறை : அனைத்துக்கும் முதலான இருவஸ்துக்களின் வடிவமே லிங்கம். பஞ்சபூதங்களுள் மூலக்கருப்பொருளாகத் திகழ்வன இரண்டு. ஒன்று நிலம். இது தெரிவது, மற்றொன்று தெரியாதது. இது ஆகாயம் இவை இரண்டுமே மூலவஸ்துவாகும். நிலமாகிற வஸ்துவில் அமைவது வாஸ்து எனப்படுகிற ஆலயம் மற்றும் சிவலிங்கம் முதலானவை. விண்ணாகிய வஸ்துவில் தோன்றுவதே புலப்படாத ஓசை வடிவமான நாதமெனும் மந்திர ஒலியாகும். எனவே, நாதமே லிங்கமாகவும், ஆகாசமே சிவலிங்கமாகவும், பிந்துவே அல்லது பிருதிவியே லிங்கபீடமாகவும் பாவிக்கத்தக்கதாகும். இதனை ரௌரவாகமம் கூறும்

ஆகாசம் லிங்க மித்யாஹுர் பிருதுவீ தஸ்ய பீடிகா I

ஸர்வபூதாலயம் புரோக்தம் லயநாத் லிங்கமுச்யதே II

நாதம் லிங்கமிதிஞேயம் பிந்துப்பீடமுதாஹ்ருதம் I

நாதபிந்து யுதம் ரூபம் லிங்காகாரமிதி ஸ்மிருதம் II (உத்தரகாரணாகமம்)

இவ்வாறுயாவும் தோன்றியும், ஒடுங்கியும் இருந்திடும் இடமாவதால் இது லிங்கமெனப்படுவதாக ரௌரவாகமம் கூறுகிறது. மேலும் எல்லா பூதங்களும் எதில் ஒடுங்குகின்றனவோ அதுவே சூட்சும நிலையில் இருப்பதால் லிங்கம் எனப்படுவதாக கிரணாகமம் கூறுகிறது. அதாவது

லயம்கச்சந்தி பூதாநி ஸம்ஹாரே நிகிலான்யத: I
தேந லிங்கமிதி புரோக்தம் சூக்ஷ்மத்வாத் லிங்கமுச்யதே II

மேலும் லிங்க சப்தத்தில் உள்ள, லிங்கார முதல் அக்ஷரமானது லயம் எனப்படுகிற. அனைத்தின் ஒடுக்கத்தையும், ககார இரண்டாவது அக்ஷரமானது அனைத்தும் இதிலிருந்தே தோன்றுவதையும், உணர்த்துவதாக இவ்விருஎழுத்தின் சேர்க்கையால் லிங்கம் என்ற இச்சொல் கூறப்படுவதாகவும் ஸ்ருஷ்டி ஸம்ஹாரகாரமானதாகவும் விளக்குகிறது. லிங்கத்திலிருந்தே யாவும் தோன்றுகின்றன. யாவும் அதிலேயே ஒடுங்குகின்றன என்கிறது.

லிங்காரம் லயமித்யுக்தம் ககாரம் ஸ்ருஷ்டிருச்யதே I
லயநாத் உதயம் புரோக்தம் லிங்கசப்த மிதீரிதம் II
லிங்காத்ஸர்வம் ஸமுத்பன்னம் லயம் தஸ்மிந்பிரகீர்த்திதம் I
ஸ்ருஷ்டி ஸம்ஹார மெவோகத்தம் லிங்கநாம்நாது விஹோச்யதே II

தோற்றுவாயாகத் திகழ்கிறது என்றாலோ, படைத்தலைச் செய்கிறது என்றாலே, ஆண் பெண் வடிவ சேர்க்கை அவசியமாகிறது. எனவே உலகத்தாய் தந்தையர்களாக சிவசக்திகளையே சிவலிங்க ரூபமாக சிவாகமம் பாவித்திடுமாறு கூறுகிறது. லிங்கமே சிவன் என்றும், பீடமே சக்தி என்றும், இவர்கள் ஆண் பெண் வடிவினர்கள் என்றும், மலரில் மணம் போலும், எள்ளில் எண்ணை போலும், தெரியாமலும், தெரிந்தும், நிறைந்தும், இணைந்தும், எப்பொழுதும் உலகத்தாய் தந்தையர்களாய் இருப்பார்கள் என்கிறது சுப்ரபேதாகமம்.

பிரம்மாதி ஸ்தம்ப பர்யந்தம் சக்திபிருந்தாத் விநிஷ்கிருதம் I
சக்திர் மனோன்மநீ மாதா சிவஏவ பிதாகுருர் I
மனோன்மநீ சக்திரூபா பும்ரூபஸ் ஸ்யாத் சிவார்த்தகம் I
புஷ்பேஷு கந்தவத்ஞேயம் திலேஷு தைலவத் ததா I (சுப்ரபேதம்)

இவ்வுதாரணத்தில் மலரில் மணம் என்பது தெரிவதான மலரில், தெரியாத சிவஸ்வரூபம் மணம் போல் என அறியவும். மேலும் தெரிகிற பல லிங்கங்களிலும் பக்தியில் புலப்பட்டு வெளிப்படும் நிலையில் கண்ணுக்குத் தெரியும் எள் தானியத்தினுள் நிறைந்திருந்த மறைந்திருந்த எண்ணையானது முயற்சியால் வெளிப்படுதல் போன்று லிங்கத்தில் பரவி மறைந்துள்ள சிவன் மூலபிராஸாத மந்திர உச்சாரணத்தால், பெயரிட்டு அழைத்ததும், ஒருவன் உடனே வருதல் போன்று உடனே வெளிப்படுவதாக ஆகமகூற்றின்படி பாவித்தல் முறை. பூஜிக்கத்தக்க லிங்க வடிவத்தை அசைவது, அசையாதது என இருவகையாகப் பிரித்து, சிவாகமங்கள் ஸ்தாவரம், ஜங்கமம் என இருவகையாக விளக்கும். இச்சிவலிங்கமே முழுபிரபஞ்சத்திற்கும் பிறப்பிடமாய், தோற்றுவாயாக விளங்குது. இத்தகைய லிங்கத்தில், லிங்கபீடத்தை முறையே பிராணன் பிரகிருதி இவை இரண்டாகப் பாவித்து பொருத்துவதே ஸ்தாபனம் எனப்படும். சிவலிங்கத்தில் ஸ்தாபனம் எனப்படும் சிவபிரதிஷ்டாகாலத்தில் ஸதாசிவராகவே லிங்கத்தைக் கருதவேண்டும் என்கிறது சிவாகமம்.

ஸ்தாவரம் ஸங்கமம் சைவ ஜகத்யோநிம்சராசரம் I
லிங்கஸ்தாபன காலேது சிந்தயேத்து ஸதாசிவம் I
ஸ்தாவரம் ஜங்கமம் சைவ த்விவிதம் லிங்கமுச்யதோ II (பூர்வ காரணம் 9. சுப்ரபேதாகமம்

லிங்கத்தில் ஸதாசிவ சிந்தனை : - இவ்வாறு பிரதிஷ்டா காலத்திலிருந்து சூரிய சந்திரன் உள்ளவரை அச்சிவலிங்கத்தில் ஸதாசிவரையே பாவித்து பூசிக்க வேண்டும். "லிங்கமூர்த்தி ஸ்வரூபஸ்யமத்யே ஸாதாக்யமர்ச்சயேத் I (மகுடாகமம்). இதனை ஸாதாக்யபாவனை என்பர். அதாவது சதாசிவர் ஐந்து கலைகளாகிய மந்திரசக்திகளையே ஞானசக்தி மற்றும் கிரியாசக்தி இரண்டையுமே சூட்சும மற்றும் ஸ்தூல சரீரமாக உடையவர். ஆதலால் அந்த சக்திமயமான தேஹத்தின் ஐவகைக் கலைகளாலும், பஞ்சபிரம்மமாகி, பஞ்சகிருத்யங்கள் எனப்படுகிற. படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளுதல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்கிறார். இந்த ஐவகை சாந்தியதீதாதி கலைகளும் ஆகாயம் முதலான பஞ்சபூதங்களுக்கும் மூலகாரண ஸ்வரூபங்கள் ஆகும்.

பஞ்சஸாதாக்ய பாவனை : இந்த பஞ்சவிதஸாதாக்ய பாவனை முறைகளை சிவாகமங்கள் கூறியுள்ள போதிலும் சிறப்பாக மகுடாகமம் மற்றும் வாதுளாகமம் ஆகியன விரிவாக விளக்கிக் கூறுகின்றன. கட்டுரை விரியுமென்று அஞ்சி அவை பற்றி இங்கு சுருங்கக் காண்போம்.

1) சிவஸாதாக்யம், 2) அமூர்த்திஸாதாக்யம், 3) மூர்த்திஸாதாக்யம், 4) கர்த்ருஸாதாக்யம், 5) கன்மஸாதாக்யம் எனப்படுபவைகளாகும். இவற்றில் முதலாவதான சிவஸாதாக்யம். சிவத்தை நிஷ்களமாக லிங்கமாக பாவிப்பது. சிவனது நிஷ்கள இலக்கணங்களை பாவிப்பதாம். குறிப்பாக பரம்பிரம்மத்தின் தடஸ்தலக்ஷணம் எனலாம். இரண்டாவது அமூர்த்திஸாதாக்யம் என்பது உருவமற்ற நிலையில் ஸதாசிவனை அனாஹதசிவன் மற்றும் ஆகதசிவன் நிலையில் பாவித்தலாகும். மூன்றாவது மூர்த்திஸாதாக்யம் என்பது பஞ்சபிரம்ம பஞ்சகாரணேச்வரஸ்வரூபமாய் பாவித்தலாம். நான்காவது கர்த்ருஸாதாக்யம் ஜகத்கர்தாவாக உணர்ந்து பாவித்தலாகும். ஐந்தாவதான கன்மஸாதாக்யம் என்பது சிவசக்திச்சேர்க்கையால் உலகஉற்பத்திச்செயல் வடிவாக பாவித்தல் எனலாம். இவற்றின் விரிவை பிறகு காண்போம். இவ்வாறு சிவம், ஸதாசிவம், மஹேச்வரம் என்ற நிலைகளில் முறையே நிஷ்களமாயும், ஸகளநிஷ்களமாயும், ஸகளமாயும் மூன்று நிலைகளிலும், ஐந்தொழில் வடிவாயும், ஐந்துகலாமய வடிவாயும் விளங்குவதே பஞ்ச ஸாதாக்யமாகும். இது ஸதாசிவம் என்ற பெயருள்ள, 36 தத்வங்களுள் ஒன்றான ஸதாசிவதத்வம் இல்லை. இது சிவதத்வமூர்த்தி பிரபாவமாகும். மாத்ருகாசக்தி பீடத்தில் சூரியஸோமாக்னிகளின் மும்மண்டலங்களையும்கடந்து, வியாபித்திருக்கிறதும் தீப்பிழம்பாகஒளிரும் ஜோதிஸ்தம்பமாக விளங்குவதுமான ஸதாசிவத்தின் திருவுருவமாகிற தேஜோ மூர்த்தியை, பிருத்வீனின் தத்துவம் முதலாக ஈஸ்வரதத்வம் வரையிலாக ஓங்கி உயர்ந்து நிற்கும் ஒளித்தூண் போன்று, பாவனை செய்ய வேண்டும் என்று காமிகாகமம் விளக்குகிறது.

மண்டலத்ரிதயே ப்யுத்தாம் அனலஸ்தம் பஸந்நிபாம் I

மூர்த்திமீச்வர தத்வாந்தாம் லிங்கநாஹேது விந்யஸேத்II என்கிறது (பூர்வகாமிகம் படலம் 4)

"ஆவாஹயேத் ததோதேவம் மந்திரமூர்த்திமயம் சிவம் I (தீப்தாகமம்). சிவலிங்கத்தில் ஸதாசிவமே சிவனது மூர்த்தமாகும். ஸதாசிவ மூலமந்திரத்தை வித்யா தேஹமாகவும், 38 கலைகளுடன் கூடிய ஐந்து பிரம்மமந்திரங்களை திருமேனியாகவும், கொண்டது, ஸதாசிவரது ரூபம். இது தியானத்திற்கு மட்டுமே கூறப்படுகிறது. அச்சதாசிவரது உடலுக்குள் ஜீவனாகவும் பிரம்மமாகவும், தர்மியாகவும் உள்ளது, பரம்பொருளான சிவமேயாகும். இதனை காமிகாகமம் விளக்கும்.

ஹ்ருத் ஸம்புட மஜாதம் வை மூர்த்திமந்திர முதாஹ்ரும்I
ததைவ மூலஏவாயம் ஸாதாக்யம் மந்திரமுச் யதே I
விந்யஸேத் மூர்த்தி மத்யேது வித்யாதேஹம் ஸதாசிவம்I
ஆரோஹே சிவலிங்கஸ்ய சுத்தஸ்தானமயம் பிரபும் I
அஷ்ட த்ரிமசத்கலோபேதம் பிரம்மாங்க கிருதவிக்ரஹம் I
சதாசிவஸ்ய ரூபம் து தியானார்த்த மிஹ கத்யதே II (பூர்வகாமிகம் படலம் 4)

லிங்கத்தில் ஆவாஹன விஸர்ஜன காலபாவனைமுறை : - ஆவாஹன காலத்தில், சிவலிங்கமாகிற ஸதாசிவம் எனப்படுகிற. திய்வத்திருமேனியில் பைந்தவ தேஹத்தில், நாதபிரம்மமாக, பிராஸாதமந்திரரூபமாக, சிவம் வெளிப்பட்டுச் சென்றுவரும். மேலும் லிங்கத்தில் வெளிப்பட்டதால் அவரது எங்குமிருத்தலாகிற வியாபகத்தன்மை ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை. எவ்வாறெனில் விறகினுள் எங்கும் பரவி இருந்த உள்ள தீச்சூடானது கடையப்படுவதனால் எவ்வாறு ஓரிடத்தில் தீப்பொறியாக வெளிப்பட்டபிறகும் மேலும் மேலும் கட்டையில் வெளிப்படாது பரவியும் அழிவற்றும் இருஇடத்திலும் வெளிபடுவதற்கு உள்ளேயும், உள்ளும், புறமும் வெளிப்பட்டும் வெளிப்படாமலும் உள்ளதோ அவ்வாறே லிங்காதிகளின் திவ்யதேஹத்திலும் இறைவனது வெளிபாடு என அறிக. எவ்வாறு உலகில்உயிர் உடல் வாயிலாக தோன்றிவந்து செல்கிறதோ, அவ்வாறே இறைவன் ஐந்து மந்திரதனுவாயிலாக சென்று வருகிறார். இவ்விதம் சிவமானது உடலிடம் கொண்டதாயும், உடலிடம் கொள்ளாது எங்கும் நிறைந்ததாகவும் எப்போதும் விளங்கும் என்று காமிகாமம், லிங்கத்தில் சிவபாவனையை கூறுகிறது.

ஆமூலாக்ரஸ் ஸ்திதஸ்யாக்னே ர பிவியக்திர் யதா தரௌ I
தத்வதேகத்ர சித் வியக்கதிர் வியாபகஸ்ய நபாத்யதே I
யதாஆத்மனஸ் தனுத்வாரா ஸ் யாதாமிஹ கமாகமௌ I
தத்வத் மந்த்ரதனுத்வாரா சிவஸ்ய இஷ்டௌ கமாகமௌ I
அசிந்த்ய சக்தியுக்தத்வாத் வியாபகோ அவ்யாபகச்சஸ: II
ஸதனுர்தனுஹீநோவா ஸர்வ கிருத் ஸர்வகச்சிவ : I
ஏவம்பிந்துகதம் து ஈசம் ஹஸ்த புஷ்பகதம்ஸ்மரேத் I
தச்ச பிராணபதா கார்யம் நாட்யா ஜோதிஸ் ஸ்வரூபயா I
தஸ்மா தாதாய லிங்கஸ்தம் ஸ்தாபிந்யா விந்யஸேத்தநௌ I
யேந ஸாமர்த்தியதச் சம்போர் ஸ்வஸ்யஸ்வஸ்வாமிதா பவேத் II
(பூர்வகாமிகாகமம் படலம்4)

இவ்வாறு ஐந்து மந்திரங்களால் ஐந்து திருமுகத்துடன் கூடிய சக்திமயமான ஸதாசிவத்திருமேனியை லிங்கவடிவில் பாவனை செய்து அந்த ஸாதாசிவத்திருமேனியில், பரமகாரண பரபிரம்மமாகிய, பரசிவத்தை தியானித்து பூசித்தல் வேண்டும்.

ஏவம் வக்த்ராணி ஸம்பாவ்ய ரூபம் ஸாதாசிவம் யஜேத்I
ஏவம் சாக்தம் வபுர்கல்ப்ய தஸ்மின் பரமகாரணம் II

சதாசிவ மூர்த்தத்தினுள் தர்மியாக உள்ள பரம்பொருளான சிவம் என்பது நிஷ்களமானதால், எவ்வாறு பாவிக்கத்தக்கது எனில்? அழிவற்றதாயும், ஸத்யமானதாயும், ஞானம், ஆனந்தம், சுகம் இவற்றினுள்

இருப்பதாயும்எங்கும் வியாபித்திருப்பதாயும், எல்லா தத்வங்களையும் கடந்ததாய் அளவிட முடியாத-தாயும், ஒன்றோடும் ஒப்பிடமுடியாததாயும் இருப்பதாக பாவித்து அச்சிவனை சிறப்பு நிகழ்ச்சியாக ஸதாசிவர் எனப்படுகிற ஒரு உருவத்திருமேனியினுள் சிறப்பு ஆவாஹநகிரியையினால் வெளிப்படுத்த வேண்டும். இக்கிரியையில் லிங்கத்தில் சிவபாவனையை காமிகாகமம் விளக்குகிறது.

ஏவம் சாக்தம் வபுக்கல்ப்ய தஸ்மின் பரமகாரணம்
சிவம் வை சாச்வதம் ஸத்யம் ஞானானந்த சுகாத்மகம்
வியாபகம் ஸர்வதத்வா நாம் அப்ரமேய மனூபமம்.
வாச்ய வாசக ராஹித்யம் வாங்மனோதீத கோசரம்
வியக்தம் குர்யாத் விசேஷேன நிஷ்களம் ஸகளாத்மனி”

நிஷ்கள பரசிவத்தை ஸகளமாகிற லிங்கத்துள் வெளிப்படுத்துவதே ஆவாஹனம். அவ்வாறே பூஜைதியானம் செய்யும் காரணத்திற்காக வடிவத்துள் வெளிப்படுத்தப்பட்ட நிஷ்கள சிவத்தை ஸகளத்திருமேனியிலிருந்து விடுபட்டதாகவும் நிஷ்களத்தன்மையை முன்புபோல் திருமேனியுள் அடங்காது எங்கும் வெளியில் வியாபித்ததாகவும் சிவதத்துவப் பகுதியோடு,சேர்ந்ததாக கருதுவதே விஸார்ஸனத்தின் பாவனை முறையாகும். இவ்வாறு சிவலிங்கத்தில் சிவனது ஆவாஹனம், விஸர்ஸனம், எனும் இரு கிரியைகளின் விபாவனாகிரமம் நன்கு அறிந்து பாவித்து பூசித்தல் வேண்டும்.

ஹ்ருன்மந்த்ரானுகதம் மூலம் உச்சார்ய காரணோஜ்ஜிதம் I
ஸகளோபாதி நிர்முக்தம் யதா நிஷ்களதாம் கதம் I
சிவதத்வ விபாகேந சிந்தயேத்ஹ்ருத் ஸ்திதேசந சI
நிரபேக்ஷாவிஸர்கோ அயம் லிங்கே ஸாதாரனோமத : I பூர்வகாமிகமம்.

<u>லிங்கத்தில் சிவசக்திகளின் பாவனை முறை:</u> சிவலிங்கத்தில் சதாசிவரின் வித்யாதேஹத்தில் இதய கமலத்துள் தலை உச்சி துவாரம் வழியாக புகுந்து அமர்ந்த சிவரூபத்தை எவ்வாறு பாவித்திட வேண்டுமெனில்? மனதால் பிரணவத்தை உச்சரித்து மூலபிராஸாதத்தால் ஆவாஹித்தலின் போது, ஸர்வக்ஞாதி ஆறுகுணங்களுடன் கூடியதாகவும், ஸர்வோபாதிகளிலிருந்து விடுபட்டு விளங்குவதாகவும், அனைத்து காரணங்களுக்குமான மூலகாரணமாகவும், எவ்விதமாயும் வாதிட்டுக்கூற முடியாததாயும், அளவிடமுடியாதாயும், அழிவற்றதாயும், அனைத்தையும் தாங்கிக்காப்பதாயும், தலையானதாயும் சுத்தபிந்துவில் தோன்றியதாயும் தேசிகர் பாவித்து பூசித்திட வேண்டுமென்கிறது சுப்ரபேதாகமம்.

ப்ரவிஷ்டே ஹ்ருதயாக்ரேது சிவரூபம் விசிந்தயேத் I
ப்ரணவம் மனஸோச்சார்ய ஸர்வஞாதி குணைர்யுதம்
ஸர்வோபாதி விநிர்முக் தம் காரணாநாம்து காரணம்.
அதர்க்யம் மப்ரமேயம் ச த்ருதமவ்யய மீச்வரம்
பிந்தா வப் யுதிதம் த்யாயேத் ஸ்திரதீப் புரதஸ்திரேI
ஸதாசிவாத்ம மத்யஸ்தம் விந்தயஸேத் தேசிகோத்தம : I

சிவலிங்கத்தில் சக்தியானது பிந்து ரூபமாக பாவிக்கத்தக்கது. லிங்கத்து பீடத்தில் யோக சக்தியாயும், அருகில் ஜகன்மாதாவாகவும், விச்வயோநியாகவும், மனோன்மணீ எனும் திருநாமத்தோடு போகசக்தியாயும் விளங்குவது சக்தியாகும்.

வன்னேருஷ்ணவத் சக்திர் அவிநாபா விநீ விபோ : I

சக்திஹீநச் சிவோ நாஸ்தி சிவஹீநா நசக்திகாI

ஏதேஸமஸ்த தேவாச்ச சக்திசம்பு மயாஸ்மிருதா: II (சுப்ர பேதாகமம்)

சிவமும், சக்தியும் ஒருபோதும் எங்கும் எப்பொழுதும் பிரிந்திருக்காது. சூக்ஷ்மநிலையில் சேர்ந்தே இருப்பவையாக பாவிக்கத்தக்கது. சைவாகமத்தில் சக்தி என்பது சக்தி தத்வமாய் சூக்ஷ்மநாதத்தில் தோன்றி பிந்துவாகி நாதபிந்துகலா வாயிலாக உலகெங்கும் வியாபித்து இருப்பதாகும். அத்தகைய சக்தி சிவன் தூண்டுதலால் ஐந்தொழிலாற்றி அருள்தருவதாக பாவிக்கத்தக்கது. இதனை

சக்திதத்வம் விசேஷேன சூக்ஷ்ம நாதோத்பவம் ததாI

நாதே பிந்து ஸமுத்பன்னம் பிந்தௌ ஸாதாக்ய முச்யதேI

ஜகத் சக்திமயம் வித்யாத் சக்திம் பிரேரயிதா சிவ: II சுப்ரபேதம்

லிங்கபீடத்தின பாவனை சிவலிங்கத்தின் பீடமானது வட்டவடிவம், தாமரைவடிவம், நாற்கோணம், எட்டுபட்டை, ஷோடசாச்ரம், விஜயம், ஸ்தண்டிலம் என பலவடிவில் ஐந்து வகையாயும் எட்டு வகையாகவும் விளங்கும் என்கிறது ஆகமம்.

பத்மாக்யம் பத்ரபீடம் ச பீடம் ஸ்வாயம்புவம் ததாI

விஜயம் ஸ்தண்டிலம் சேதி ஸர்வலிங்கேஷு காரயேத்II

பத்ரா யதீச வஜ்ரீச திரிகோணா பரிமண்டலாI

வேதீ பத்மார்த சந்த்ரா ச ஸ்தண்டிலா விஹிதாஷ்டதா II (கிரணாகமம)

ஸ்ரீமத்கிரணாகமம் லிங்கபீடத்தை எட்டு வகையாக உருவம், பயன், பெயர்களுடன் விளக்குகிறது. நான்கு பட்டை வடிவுடையது பத்ரபீடமாம். இதுயோகமளிக்கும், மூன்று மேகலையுடையது யதீபீடமாம். இது கோமஹிஷிபிரதமாம். ஆறுபட்டையுள்ளது வஜ்ரீபீடமாகும், இது ஆயுளைத்தருவதாம். முக்கோண வடிவ பீடம் சிருங்காடகா பீடம் ஆகும், இது சக்ருக்னதம் எதிரியை மாய்ப்பது, முழு நிலவு போன்றது, பரிமண்டலாபீடம், இது தனதான்யமளிப்பதாகும். தாமரைப்பூ வடிவானது பத்மாபீடம் இது ஸௌபாக்யதாயினீ. பாதிசந்திரவடிவ பீடம் அர்த்தசந்திரா அல்லது கண்டசந்த்ரா என்பது ஆகும், இது மகப்பேறு அளிப்பதாம். இருமேகலையுள்ள பீடம் ஸ்தண்டிலா என்பது, இது எல்லா விருப்பங்களையும் அளிக்கவல்லது. பிண்டிகா என்பது ஸ்வயோனிஸ்தாவாக, ரத்னதாதுக்களுடன் செய்யப்படுவதாகும். பீடமில்லாத லிங்கத்தை ஒருபோதும் பூஜிக்கவோ, தியானிக்கவோ கூடாது. இதனால் சிவலிங்கத்தின் பீடத்தின் அவசியமும், சக்தியின் பிரியாநிலையும், வடிவமைப்பால் பலவகைப் பயன்களும் அறிந்து பாவிக்கத்தக்கது. லிங்கத்தை நாத வடிவாயும், பீடத்தை பிந்துவடிவாயும் இவை இரண்டுமே பிராணனும், பிரகிருதியும் ஆகும். லிங்கமே வித்யா தேஹமாகவும் அதுவே சதாசிவமாகவும், அத்திருமேனியுள்ளே ஜீவனாக த்வனியும் அத்துவனி எனும் உள்ஒலிக்குள், பரமாத்மாவும், அதனுள் பராத்பரமாகிய சிவமும் அதனுள் அதிசூக்ஷ்ம ஆனந்ததாண்டவேச்வரரும் தியானிக்கத்தக்கவர்கள். என்று மகுடாகமம் நமக்கு தெளிவாக்குகிறது.

பிந்துமத்யகதோ நாதோ நாதமத்ய கதோத்வனி : சிவம்

த்வனிமத்யகதச் சாத்மா சாந்தியதீதம் பரம்மஹத் I

சிவம் பராத்பரம் ப்ரமம் அப்ரமேயம் வநிந்திதம்

அநௌபம்யம் ச சூக்ஷ்மம்ச நித்யம் ஸர்வகதம் ப்ரபும்

என்று மகுடாகமம் நிர்குண நிஷ்கள பரசிவஸ்வரூபஇலக்கணத்தை விளக்குகிறது. சுத்த

தன்மையுடனேயே இருத்தலால் சிவம் என்படுகிறது என்றும், மேலானவற்றிற்கு எல்லாம். இதுவே மேலாக இருப்பதால் பராத்பரம் என்றும் பலபிரம்மங்களையும் எல்லாபிரம்மங்களுக்கும் மேலான பிரம்மமாயும் இதுவே விளங்குவதால் இதுவே பிரம்மம் என்றும், பிரம்மத்வாத் பிரம்மணத்வாச்ச பிரம்மமித்யபிதீயதே" அளவுப்பிரமாணங்களுக்கு அப்பாற்பட்டதாம் இருப்பதால் அப்ரமேயம் என்றும், இயல்பாகவே மலமற்றதாகவே உள்ளதால் அமலம் விமலம் அல்லது அநிந்திதம் என்றும், உவமையற்றதாய் விளங்குவதால் அனௌபம்யம் என்றும் ஒன்றோயகும். ஒப்பிட்டுக் கூறமுடியாததாக உள்ளதால் அஸாதிருச்யம் என்றும், பரமாகாசத்தையும் கடந்து நிற்பதால் சூக்ஷமம் என்றும், தனக்கென எதையும் காரணமாக கொண்டு இல்லாமையால் தோற்றமும் அழிவற்று என்றும் உள்ளதால் நித்யம் என்றும், எங்கும் எப்பொழுதும் நீக்கமற நிறைந்து பரவியுள்ளதால் வியாபீ என்றும் ஸர்வகதம் என்றும் அனைத்திற்கும் தலைவானகி அனைத்தையும் தனக்கு சொத்தாகக் கொண்டு பரமபதியாக விளங்குவதால் பிரபு என்றும் சைவாகமத்தில் பரம்பொருளான பரசிவம் பாவிக்கத்தக்கது. இதனைத் தெளிவாக மகுடாகமம் விளக்கியுள்ளது. பிராஸாதமந்திரமே சிவஞானம், மந்திரரூபியே சிவன், இது சப்தபிரம்மம். இதனை அஜிதாகமம் கூறுவதாவது :

மந்திரரூபீ மஹாதேவ: சிவ: பரமகாரணம் I
மந்த்ரம்ஸ்யாத் பரமம் ஞானம் மந்த்ரவாச்யச்ஸதாசிவ : II
வாச்யவாசக சம்பந்தோமந்திரஸ்யாஸ்யச திருச்யதேII
லிங்கம் சின்ஹம்சரீரம்ச கத்யதே அத்ர ஜநார்தனI
சரீரம் மந்திரஏவஸ்யாத் சப்தபிரம்மேதி சம்ஞித : I
சரீரம் பிரதமம் கிருத்வா வியக்தாவ்யக்தோ பயாத்மகம்
திரிவிதம் தத்அரஸ்ரேஷ்ட பூஜார்த்தம் தஸ்யநித்யச: I
பிரதிலிங்கஸ்திதம் மந்திரம் பிரதிஷ்டேதி பிரகீர்த்திதம் : I அஜிதாகமம்

எனவே, ஒவ்வொரு சிவலிங்கத்தோறும் வைக்கப்படும் மூலபிராஸாத மந்திரமே சப்த-பிரம்மமாகிற ஸதாசிவரின் ஜீவானகிற பதமஹம்ஸராகிய பரசிவமாகும். பூஜைக்காகவே லிங்கவடிவம். பாவாகாரமாக மிக உயர்ந்ததாக கூறப்பட்டு உள்ளதை அறியலாம். பூஜையாகிற தர்மாவிற்கு ஈசவடிவமாகத் திகழவதாலேயே லிங்கத்திற்கு கர்மேசரூபம் என்று வாதுளாகமம் சிறப்பித்துக் கூறும். பீடத்தில் லிங்கமும் லிங்கத்துள்ள ஸதாசிவமூர்த்தியும் அம்மூர்த்தியுள்ளே தத்வமும் தத்துவத்துள்ளே சிவமும், இவ்வாறாக அனைத்து தத்துவங்களுக்கும் அனைத்திற்கும் உறைவிடமாக ஆலயமாக விளங்குவதே சிவலிங்கம் என்கிறது வாதுளாகமம். சிவலிங்கத்து உள்ளே சிவபாவனா முறை

பிந்துமத்யகதோநாத: நாதமத்யேது மூர்த்தய :
மூர்த்திமத்யகதம் தத்வம் தத்வமத்ய கதச்சிவ:
ஏதத்சிவமயம் லிங்கம் ஸர்தத்வாலயம் விது:
லிங்கேது ஜாயதேஸர்வம் ஜகத்ஸ்தாவர ஜங்கமம்
தஸ்மாத்லிங்கம் சிசேஷேண கர்மரூபமுதாஹ்ருதம்
ஸர்வஞான மயம்தேவம் ஸர்வகாரண காரணம்
ஏவம்லிங்கம் துகர்மேசம் தியாயேத் ஸகளநிஷ்களம்
தேகஸ்தம் ஸகளம்ஞேயம் நிஷ்களம் தேஹவர்ஜிதம்
சிவமத்யகதம் நிருத்தம் நிருத்தமத்யே து சாந்தகம்
அதீதம் சாந்தமத்யே து சாந்த்ய தீதம் பராத்பரம் |

என்ற வாதுளசுத்தாக்ய வசனத்தால் சிவலிங்கத்தின் கர்மேசதத்வ பாவனாப்ரபாவமும், ஒன்றினுள் ஒன்றாக ஸதாசிவத்துள்ளும் நிருத்தம், சாந்தம், பரம், அதீதம், பராத்பரம், என்று மூன்று அருவநிலைகளும், பரசிவ பாவனா முறையும் நன்கு அறியமுடிகிறது. பீடமில்லாத லிங்கமானது பிரம்மனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதும் கூட பயன் தராது. அதில் சிவனது சாந்நித்யம் ஏற்படாது அதனால் லிங்கத்துடன் பீடத்தை அவசியம் சேர்த்து அமைத்து தேவராஸ் பிரதிஷ்டை செய்து பூசித்தல் வேண்டும், கிரியாசக்தி வடிவமான பீடத்தில் ஞானசக்திமயமான லிங்கத்தை ஸ்தாபித்து , பெருமுயற்சியால் பீடத்துடனே பூசித்துப் பயன்பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

பீடஹீநம் யதாலிங்கம் விதிநா அபி பிர்திஷ்டிதம்
ததா ந பலதம் தஸ்மாத் ஸான்நித்யம் நாதிகச்சதி I
தஸ்மாத் பீடம் பிரகர்த்தவ்யம் லிங்கேந ஸஹதேசிக : I
கிரியாசக்தியாத்மகே பீடே ஞானசக்தியாத் மகம்புத: I
லிங்கம் ஸம்ஸ்தாப்ய யத்நேந ஸபீடம் தத் ஸமர்ச்சயேத் II
லிங்கார்சனஸமோ நாஸ்தி தர்மோத்ர புவனத்ரயே II (அஜிதாகமம்)

சிவலிங்க பூசைக்கு வேறோன்றும் மூவுலகிலும் இல்லை எனக்கூறி லிங்கார்சன உயர்வை அஜிதாகம் விளக்குகிறது.

முடிவுரை : சிவப்பரம்பொருளை சிவாகமப்படி லிங்கவடிவில் மட்டுமே ஆராதிப்பது சிறப்புமிக்கதாகும். சைவாகமங்களின் நான்கு பாதங்களிலும் சிவலிங்க பூஜையாகிற கிரியையே முக்கியமானதாகும். பிறகிரியைகள் யாவுமே நேர்முகமாகவோ மறைமுகமாவோ துணைக்காரணமாகவோ சிவபூஜைக்கு அங்கமாக உள்ளவைகளே என அறியவும். அத்தகைய சிவலிங்க பூஜையை ஆகமவழிமுறையில் செய்திட திரிகரண சுத்தி அவசியம். திரிகரணமாகிய மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் முறையே பாவனை, மந்திரம், கிரியை மூன்றையும் சைவாகம முறையில் வெளிப்படுத்துவது அவசியம். ஆகம பூசையில் மந்திரமில்லாததாக கிரியை எதுவும் விதிக்கப்பட இல்லை. பாவனை இல்லாதாக மந்திரம், கிரியை, இரண்டுமில்லை. அனைத்திலும் பாவனையே மிக முக்கியமாகும். எனவே உரியமனோபாவனையுடன் செய்வதே உரியபயனைத்தரும். எத்தனையோ உருவங்கள் இறைவனுக்கு இருப்பினும் சிவலிங்க வடிவத்திற்கு நிகர் வேறு எதுவும் இல்லை. எனவே, லிங்கம் பலவடிவில், பலவகையில் விளங்கிடினும், அருட்பெருஞ்சோதிப்பிழம்பாக, தீச்சுடர்ரொளித்தூணாக முதலில் பாவித்து, அதனுள் பரம்பொருளின் நிர்குணமான நிஷ்களரூபத்தைத் தியானித்து, பூசித்தல் வேண்டும். இத்தகைய சிவலிங்க வடிவத்தின் பாவிக்கத்தக்க பிரபாவங்களைக் கூறுவது என்பது இயலாத ஒன்று. வாக்கிற்கும், மனதிற்கும் எட்டாத மகிமை உடையது சிவலிங்க வடிவமாகும். என்கிறது மகுடாகமம்.

இத்தம் ஸாதாசிவம் ரூபம் லிங்க பீடஸமன்விதம் I
தத் சாதாக்ய பிரபாவஸ்து வர்ணிதும் நைவ சக்யதே II (மகுடாகமம்)

யோகியரும், ஞானியரும், சிவநேய அடியார்களும் சிவலிங்க வடிவழகில் மனம் லயிக்கப்பெற்று, பூசித்துப் பயன்பெற்றனர். சிவலிங்க வடிவழகையும், அதன் மகிமையையும் சைவ சந்தான ஆசார்யரின் சுலோகக் கூற்றால் நாம் சிறப்பாக அறியமுடிகிறது.

நிராகாரம் ஜோதிர்மய மகலமத்யந்த மமலம் I
மஹாதீர்கம் ஸ்தூலம் நிரவயவம் அத்யந்த ருசிரம் I
மஹாநாதம் லிங்கம் சமதனமுனி த்யேய மதுலம் I
மநோமார்காதீதம் ஹரிவிதிநுதம் நௌமிஹ்ருதயேII

இதன் பொருள் உண்மையில் வடிவமற்றது, ஜோதிவடிவானது, பகுதிகள் அற்றது, மிகவுமதூய்மையானது, மாசற்றது, பாதாளாதி ஆகாயம் வரையிலாக மிகவும் உயர்ந்து நீளமானது, மிகவும்பருமனானது, உடல்உறுப்புகளற்றது, மிகவும் மனம் கவரக்கூடியது, மஹாநாதமாகிற ஓசையின் வடிவமாக விளங்குவது, ஆண், பெண், அலி எனும் முப்பாலின் வடிவமாய் சிவனது உறைவிடத்திற்குச் சின்னமாய் விளங்குவது. படைத்தல், காத்தல், ஒடுக்குதல், ஆகிய முத்தொழிலிற்கும் அடையாளத் தோற்றமாய், முப்பகுதியைக் கொண்டு உள்ளது, சாந்தியையே செல்வமாகக் கொண்ட முனிவர்களால் எப்போதும் தியானிக்கப்படுவது, ஒப்பற்றது, மனப்போக்கிற்கு எட்டாது கடந்து விளங்குவது, பிரம்மா விஷ்ணு முதலானோர்களால் வணங்கப்படுவதுமான சிவலிங்கத்தை இதயகமலத்தில் என்றும் வணங்குவோமாக என்பதாம். எனவே லிங்கபீட வடிவில் உலகத்தாய் தந்தையர்களான சிவசக்திகளை பூசித்தல் முறை. லிங்கஸ்வரூபமானது, அனைத்துலகின் பிண்டவடிவமாய், முப்பகுதியுடையதாய், பீடபிண்டிகையுடன் கூடியதாய், நிஷ்களமாய், தூய்மையான வெண்மை நிறத்தாய, மிகவும் அமைதியே வடிவானதாய். ஆறுவகை அத்வாக்களின் தத்வவடிவமாய் எங்கும் வியாபித்த பிரம்மத்தோடு விளங்குவதாய், மிகச்சிறந்த சிவஞானமே வடிவாக உடையதாய், மேலானதாய் பலதத்வரகஸ்யமாக விளங்குவதாய், சுகமானதாய், தேவர்களின் விளையாடும் மகிழ்விடமாய் நீரட்டலுக்கு உரியதாய், படைத்தலுக்கும், ஒடுக்கத்தலுக்கும், காரணமாய் விளங்குவதாய் லிங்க ரூபம் பாவிக்கத்தக்கதாக கூறப்படுகிறது.

பிண்டாகாரம் த்ரிகண்டம்து பீடபிண்டிகயான்விதம் I
நிஷ்களம் தவளம் சாந்தம் அத்வதத்வமயம் விபும் II
அதிஞானம் பரம் குஹ்யம் சுககிரீடாபிஷேசனம் I
ஸ்ருஷ்டி சம்ஹாரஹேதுத்வம் லிங்கரூப முதாஹ்ருதம் II (ஆகமத்தில்)

சிவலிங்கத்தினடியில் சுற்றுப்பகுதியில் மனோன்மனி சக்தியை கல்பித்து, அதன்மீது நடுவில் விளங்கும் அசையும், அல்லது அசையாத லிங்கத்தில் ஸதாசிவரை பூஜித்திடுமாறு சுப்ரபேதாகமம் கூறுகிறது.

லிங்கமூலபரீணாஹே கல்பயேத்து மனோன்மனீம்
தஸ்யோபரி ஸ்திதேலிங்கே சலேசைவம் ஸதாசிவம்

(சுப்ரபேதாகமம் படல 8ல் சுலோக10)

எனவே, பிண்டிகை எனும் லிங்கபீடத்தில் யோக சக்தியை "தாரிகா" எனப்பெயருடையவளாக மனோன்மணிதேவியையும் அதன் நடுவில், சிவனையும், மனதால் பாவித்து வணங்க வேண்டும்.மேலும் பிண்டிகையில், தேவியானவள் கோமுகை எனும் வருப்பாக திருமஞ்ஜனநீர்விழும் திசையில் தமது கால்களை நீட்டியவாறு வைத்துதமது மடியிலிருக்கும் சிவனைத்தழுவியவளாய் பாவிக்கத்தக்கவள்.தேவி தழுவக் குழைந்தருளும் கருணைக் கடலே கடவுள் என அறிக.

இக்கருத்தை- "தேவிசிர தக்ஷிண மதோத்வர சுபாதம்
கோமுகபதாந்த க்ருதவாரிபுஜ யுக்மம் I
யோநிகதமத்யபத சுஸ்தித சுலிங்கம்
ஸ்தாபித ஸதாசிவ மனோன்மநிஸ்வரூபம் I"
என்ற சைவா கம மரபுச்சுலோகத்தாலும் உணரலாம். மேலும்
உமாயை பகரூபிண்யை லிங்க ரூபசிவாயசI
சங்கராய நமஸ் துப்யம் இதி ஸ்துத்வா னுமோத்யசII என்று சைவாகம

பத்ததிஆசார்யரும், சிவசக்தி ஐக்யத்தை தியானித்திட உபதேசிக்கிறார். இங்கே சிவமும், சக்தியும் ஒருபோதும் பிரியாது என்றும், தீயும்சூடும் போல இருக்கும் என்பது, சைவசமய லிங்கத்தில் மட்டுமின்றி

சாக்த சமயத்தின் சாக்தலிங்கமான ஸ்ரீசக்ர மஹாமேருவிலும் கூட முக்கோணம் சக்தியெனவும், பிந்துசிவம் எனவும் பாவிக்கப்படவேண்டி இருப்பது இத்தருணத்தில் இங்கு உற்றுநோக்கிக் கருத்தில் கொள்ளத்தக்கதாகிறது. சைவத்தில் தேவிமடியில் சிவனும், சாக்தத்தில் காமேச்வர சிவனின் மடியில் லலிதாதிரிபுரசுந்தரியும் பிரியாது, சொல்லும் பொருளும் போல இணைந்து அருள்வதை கவனத்தில் கொள்ளலாம். எனவே தான் ஸ்ரீ சக்ரபிந்துவை சுற்றியுள்ள முக்கோண வடிவிலேயே சிவலிங்கத்திற்கும் பீடவகை கூறப்பட்டுள்ளதாலும் உணரலாம். பொதுவாக சிவலிங்கத்தில் சிவபெருமானை பகவானுக்கு உரிய ஆறுவகையான குணங்களை உடையவராக உருவமற்று பண்புகளாகி சத்சிதானந்த தேஜோரூபமாய் பாவித்தல் முறை.

ஸர்வக்ஞுதா திருப்தி ரனாதிபோத:
ஸ்வதந்த்ரதா நித்யமலுப்த சக்தி : I
அனந்தசக்தி ச்ச விபோர் விதிக்ஞா:
ஷடாஹு ரங்காநி மஹேச்வரஸ்ய II

1) எல்லாமறியும் தன்மை, 2) பூரணதிருப்தி, 3) அனாதியாகதாமேஅறியும் தன்மை, 4) சுதந்திரமாய் செயல்படுவது, 5) அழிவற்று என்றுமிருத்தல், 6) குறைவற்றதாயும் எண்ணற்றதாயும் உள்ள சக்தி உடைமை, ஆகியன பரசிவத்திற்கு உரிய இயல்புகளாகும். இவையே உருவநிலையில் உள்ள மகேசனுக்கு ஆறு உடலுறுப்புகளாக விளங்குவன என்கிறது ஆகமம். மேலும் எப்பொழுதும் சிவனிடத்தில் பத்து சிறப்புபண்புகள் உள்ளதாகவும் ஆகமம் விளக்குகிறது. [1]ஞானம், [2]வைராக்யம், [3]ஐச்வர்யம், [4]தவம், [5]ஸத்யம், [6]பெருமை, [7]தாங்குதல், [8]படைப்பாற்றல், [9]ஆத்மஸம் [10]போதம், வயிரை அதிஷ்டித்திருத்தல், அழிவற்றிருத்தல் ஆகியனவாம். இதனை

ஞானம், விராக தைச்வர்யம், தபஸ் ஸத்யம் க்ஷமாத்ருதி: I
ஸ்ரஷ்ட்ருத்வ மாத்மஸம்போ தோ ஹ் தீஷ்டாத்ருத்வமேவச I
அவ்யயாநி தசைதானி நித்யம் திஷ்டந்தி சங்கரே I (சிவகாமம்)

இவ்வாறு அஷ்டமூர்த்திகளால் உலகை வியாபித்து உள்ள பரமேச்வரனே, சராசரபூதங்கள் அனைத்தையும், உலகத்தையும், தாங்குபவனும் போஷிப்பவனுமாவான், அவரையே வேதாந்திகள் பகவான் என்கின்றனர் என்று லிங்கபுராணம் கூறுகிறது.

அஷ்டமூர்த்திர் ஜகத்வி யாப்யஸ் திதோ அயம் பரமேச்வரர் I
சராசராணாம் பூதாநாம் தாதா விச்வமபராத்மக : I
பவச்சேத் யுச்யதே தேன் பகவான் வேதவாதிபி : II (லிங்கபுராணம்)

இவ்வாறு வேதாகம புராணாதி தர்ம நூல்கள் யாவுமே கூறும் சிவமாகாத்மியத்தையும், அவரை வழிபடத்தக்க சிவலிங்கமாஹாத்மியத்தையும், யாவரும் உணர்ந்து, சைவாகமநெறியில் தீட்சையும், மந்திரமும், லிங்கமும், குருவாயிலாகப்பெற்று, நித்தமும் சிவபூஜை செய்து, இகபரசுக பலானாகிய போகம்மோட்சம் இரண்டையும் பெற்று, உய்ய, சிவலிங்கபாவனையை எடுத்துரைக்கும் இக்கட்டுரை யாவர்க்கும் உதவிட, இறைவனை வேண்டி, வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து, நிறைவு செய்கிறேன். ஆகம அறிஞர்பெரு மக்கள் குறைகளை நீக்கி, குணங்களை ஏற்று, வாழ்த்திட வேண்டுகிறேன்.

சுபமஸ்து நித்யம்

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry